கோவை மாவட்ட

# வரலாற்றுக் கருத்தரங்கு



TNSDA
05444

5444
23 DEC 1976

ஆராய்ச்சிக் கட்டுரைகள்

# கருத்தரங்கு – நிகழ்ச்சிநிரல்

கருத்தரங்கில் வரலாறு, கல்வெட்டு, கலை, கட்டிடம் சமுதாயம், நாட்டுப்பாடல்கள், பண்டைய பொருளாதாரம் சமயம், இலக்கியம் என்னும் பொருள்கள் பற்றி எழுத்துரைகள் வாசிக்கப்படும். கீழ் கொடுத்துள்ள நிகழ்ச்சி நிரல்படி எழுத்துரைகள் படிக்கப்படும்.

*****

| | |
|---|---|
| டாக்டர் நாச்சிமுத்து<br>விரிவுரையாளர்,<br>தமிழ்த்துறை,<br>கேரள பல்கலைக் கழகம். | சேலூரில் கிடைத்த புதிய செப்புப் பட்டயம்.<br><br>கொங்கு நாட்டில் நடந்த குடிப்பெயர்ச்சிகள். |
| வித்துவான் ஐ. இராமசாமி,<br>தமிழாசிரியர்,<br>இக்கரை போளுவாம்பட்டி (அஞ்)<br>வழி (தொண்டாமுத்தூர்)<br>கோவை மாவட்டம். | வெள்ளியங்கிரிச் சாரலிலே (முட்டத்து நாகேசுரமும் பிற ஆய்விடங்களும்) |
| புலவர் ஆ. இராமசாமி, பி.லிட்.,<br>தமிழாசிரியர்,<br>கொ. செ. உயர்பள்ளி,<br>சென்னிமலை. | தொல்லெழுத்துக்களில் சென்னிமலை. |
| பி.எச். மைலாசலம்,<br>அரசுயர் பள்ளி,<br>துடுப்பதி (வழி) ஈரோடு. | நாட்டுப் பாடல்களும் நம்பிக்கைகளும். |
| புலவர் கு. வேலுசாமி, பி.லிட்.,<br>அரசுயர் பள்ளி பி.பெ. அக்ரகாரம்<br>ஈரோடு-5. | கொங்கு வேளிர்கள். |
| புலவர் திருமதி கு. ரோசிலி, எம்.ஏ.,<br>புனித திரேசன்னை உயர் பள்ளி,<br>553, Joki- mastrifline<br>பிங்கர் போஸ்ட்,<br>உதகமண்டலம்-6. | தோடர் படகர்களின் – நாட்டுப் பாடல்களும் நம்பிக்கைகளும் |
| P.Munirathinam Chetty,<br>Asst. Professor of History,<br>Sri Vasavi College,<br>Erode. | Kongu country under the Nayaks of Madurai. |
| எஸ். இராமகிருஷ்ணன், எம்.ஏ.,<br>உதவி பேராசிரியர்,<br>வரலாற்றுத் துறை,<br>ஸ்ரீவாசவி கல்லூரி, ஈரோடு. | பேரூர்பட்டீசுரர் திருக்கோயில். |
| ஆர். வசந்தகல்யாணி,<br>கல்வெட்டாய்வாளர்,<br>தொல்பொருள் ஆய்வுத் துறை,<br>சென்னை. | குளந் தொட்டு வளம் பெருக்கிய கோவை மாவட்டம். |
| கே. ஸ்ரீதரன்,<br>அகழ்வாய்வாளர்,<br>தொல்பொருள் ஆய்வுத்துறை,<br>சென்னை. | வரலாற்றுக்கு முற்பட்ட கோவை. |

| | |
|---|---|
| ஆர். பூங்குன்றன்,<br>பதிவு அலுவலர்,<br>கோயம்புத்தூர். | கோவை மாவட்டத்தில் சமயம். |
| புலவர் சு. வேலுச்சாமி, பி.லிட்<br>தமிழாசிரியர்,<br>தொழரப்பா செங்குந்தர் உயர்<br>பள்ளி, சென்னிமலை. | ஆனூர்ப் போரும் அதன் வெற்றிச்<br>சின்னமும். |
| டாக்டர் ஏ. அண்ணாமலை, பி.லிட்<br>59. ஈஸ்வரன் கோயில் தெரு,<br>ஈரோடு-1. | கொங்கு நாட்டு சமுதாய<br>வளர்ச்சி. |
| ந. வேலுசாமி,<br>தமிழ்த்துறை,<br>ஈரோடு கலைக்கல்லூரி,<br>ஈரோடு-9. | கோவை மாவட்டத்தில் பண்டைய<br>நீர்ப்பாசனத் திட்டங்கள். |
| கு. சோ. முருகன், பி.லிட்,<br>சர்வஜன உயர்நிலைப் பள்ளி,<br>கோயம்புத்தூர் - 641004. | பேரூர் - பச்சை நாயகியம்மன்<br>திருக்கோயில் - காலம். |
| புலவர் ச. மருதமுத்து,<br>ஸ்ரீ கன்னிகர பரமேஸ்வரி<br>உயர்நிலைப்பள்ளி,<br>உடுமலைப் பேட்டை-642126. | கொங்கு மணக்கும் கோவை<br>மாவட்டம். |
| த. தாமோதரன், எம்.ஏ.,<br>ஆசிரியர்,<br>என். எசு. ஐயா உயர்நிலைப்பள்ளி,<br>கேத்திப் பாலாடா அஞ்சல்,<br>நீலகிரி மாவட்டம்-643215. | நாட்டுப் பாடல்கள் பழமொழிகள்<br>காட்டும் நம்பிக்கைகள் நீலகிரி<br>மாவட்டம். |
| பி. சுப்பிலட்சுமி, எம்.ஏ., பிஎச்எல்<br>விரிவுரையாளர்,<br>நிர்மலா கல்லூரி,<br>கோவை மாவட்டம். | பாளையக்காரர் சிலரது<br>சிறப்புப் பணிகள் - கோவை<br>மாவட்டம். |
| கொடுமுடி ச. சண்முகன்இ<br>உதவிப் பொறியாளர்,<br>பொதுபணித்துறை,<br>திருச்செங்கோடு-637211. | தொன்று தொட்டு வரும்<br>தொழில்கள் - கோவை<br>மாவட்டம். |
| ஏ. பாண்டுரங்கன், எம்.ஏ.,<br>எல்.எல்.பி.,<br>முதல்வர்,<br>ஸ்ரீ வாசவி கல்லூரி,<br>(வழி) ஈரோடு ஆர்எம்எஸ். | கொங்குப் புலவர் பட்டயம். |
| பி.எம். கௌந்தசாமி,<br>பட்டதாரி ஆசிரியர்,<br>அரசுயர் பள்ளி,<br>நம்பியூர். | ஈரோடு கோவி வட்ட<br>வரலாறும் க்ஷயமும். |
| ஆ. வேலுமணி,<br>தமிழாசிரியர்,<br>அரசுயர் பள்ளி,<br>ஈரோடு-5. | திங்களூர்-அருள்மலை முருகன்<br>திருவருள் பெற்ற கவிஞர்<br>நஞ்சையன். |
| பி.Chinnian, M.A., B.T.,<br>Asst. Prof. of History,<br>Sri Vasavi College,<br>Erode. | Some remains of the British rule in Coimbatore District. |

| | |
|---|---|
| புலவர் செ. இராசு,<br>சி.எஸ்.ஐ. உயர்பள்ளி,<br>ஈரோடு. | கோவை மாவட்டமும் தமிழ் நூல்கள். |
| புலவர் பொ. முனியப்பன்,<br>காந்தி கல்வி நிலையம்,<br>உயர்நிலைப் பள்ளி,<br>கூவலூர்-638313. | கொங்கு நாட்டுக் கல்வெட்டுகள் காட்டும் கவின் தமிழ் வழக்கு. |
| க. கிருட்டினசாமி, | கோவை மாவட்ட நாட்டுப்புற பாடல்கள் - ஒரு பார்வை. |
| அ. இராசேந்திரன்,<br>கல்வெட்டாய்வாளர்,<br>தொல்பொருள் ஆய்வுத்துறை,<br>நன்னிலம். | உடன்கட்டை ஏறும் வழக்கம். |
| டாக்டர் சி. நாச்சிமுத்து &<br>இள. சுப்பிரமணியன்,<br>கேரள பல்கலைக் கழகம். | கொடுவாயில் கிடைத்த புதிய நடுகல்லும் சில வரலாற்றுக் குறிப்புக்களும். |
| திரு ம. நயினார்,<br>கேரள பல்கலைக் கழகம். | கேரளத்து நாடோடிப் பாடலில் கொங்கு நாட்டு வரலாற்றுக் குறிப்புகள். |
| திரு. வே. கேசவராஜ்,<br>கேரள பல்கலைக் கழகம். | நம்பியூரில் ஒரு புதிய நடுகல். |
| க. குழந்தைவேலன்,<br>கல்வெட்டாய்வாளர்,<br>தொல்பொருள் ஆய்வுத்துறை,<br>சென்னை. | கலை. |

******

# யார் இந்த கலிமூர்க்கர்கள்?

நடன. காசிநாதன், எம்.ஏ
பதிவு அலுவலர்,
தொல்பொருள் ஆய்வுத்துறை,
சென்னை-28.

****

கொங்கு நாட்டு வரலாற்றில் கி.பி. 10, 11-ஆம் நூற்றாண்டில் வீரசோழ கலிமூர்க்கப் பெருமாள் என்றும், கலிமூர்க்க விக்ரமசோழன் என்றும் இரு மன்னர்கள் சிறப்பானதொரு ஆட்சியை நிறுவி பல்வித அறக்கொடைகளைப் பாங்குடன் அளித்திருக்கிறார்கள் என்பது கல்வெட்டுகள் மூலம் தெரிய வருகின்றன.

வீரசோழ கலிமூர்க்கனின் கல்வெட்டுகள் மிக அருகியும் கலிமூர்க்க விக்ரம சோழனின் கல்வெட்டுகள் பெருகியும் காணப்படுகின்றன. குறிப்பாக வீர சோழன் கலிமூர்க்கன் கல்வெட்டுகள் அனைத்தும் வட்டெழுத்திலேயே எழுதப்பட்டிருக்கின்றன. ஆனால் கலிமூர்க்க விக்ரம சோழனின் கல்வெட்டுகள் வட்டெழுத்தில் சில ஊர்களிலும், தமிழ் எழுத்தில் சில இடங்களிலும் காணப்படுகின்றன.

வீரசோழ கலிமூர்க்கனி காலத்தவை என்று இதுவரையில் நான்கு கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டு படிக்கப்பட்டிருக்கின்றன. கொடு-வாயிலிருந்து ஒரு கல்வெட்டும் [1], பிரமியத்திலிருந்து இரு கல்வெட்டுகளும் [2] வள்ளி எறிச்சலிலிருந்து ஒரு கல்வெட்டும் [3] ஆகும்.

கலிமூர்க்க விக்ரமசோழனின் கல்வெட்டுகள் அன்னூர், [4] மூலனூர் [5], திங்களூர் [6], பிரமயம் [7], வள்ளி எறிச்சில் [8], வெள்ளலூர் [9] ஆகிய இடங்களிலிருந்து கிடைத்திருக்கின்றன. இவனது கல்வெட்டுகள் 2 ஆம் ஆட்சி ஆண்டிலிருந்து 42 ஆம் ஆட்சி ஆண்டு வரை காண முடிகிறது.

- - - - - - - - - - - - - - - - - - - - - - -

1. A.R.S.I.E. 1920, No.111.
2. Ibid. , No.204, 189.
3. Damilica Vol.I, Page
4. A.R.E. 591, 597, 593, 594 of 1922.
5. A.R.E. 215 of 1920
6. A.R.E. 614 of 1905.
7. A.R.S.I.E., 1920, No.183, 185, 187, 190
8. Damilica Vol.I, page
9. A.R.E. 144 of 1910.

...2

திங்களூரில் கிடைக்கும் கல்வெட்டு இவனது 40-ஆம் ஆட்சி ஆண்டைத் தருவதோடு சக ஆண்டு 967 என்றுந் தருவது இவன் எப்பொழுது ஆட்சிக் கட்டிலேறினான் என்று நிர்ணயிப்பதற்கு பெரிதும் உதவியாக உள்ளது. கலிநீர்க்க விக்ரம சோழன் 1005 ஆம் ஆண்டில் அரசாளத் தொடங்கினான் எ என்பது திட்டமாகத் தெரிகிறது.

கலிநீர்க்க விக்ரம சோழனுக்கு முன்பாகவோ அல்லது பின்-பாகவோ வீரசோழ கலிநீர்க்கன் ஆட்சி செய்திருக்க வேண்டும் என்று கூறிவிட்டு நிச்சியமாக முற்பாகத்தான் அவன் ஆண்டிருக்க வேண்டும் என்று கல்வெட்டறிஞர் திரு. கோ. வி சு. பபிரமன்ய அய்யர் அவர்கள் கருதியுள்ளார்கள். அதற்கு அவர்கள் கூறும் காரணம் வீரசோழ கலிநீர்க்கன் கல்வெட்டுகளில் காணப்பெறும் எழுத்தமைதி முந்தியதாகத் தெரிகிறது என்று கூறியுள்ளார்.[10]

பண்டைய அரசர்களில் ஒரு சிலர் தந்தையின் பெயரைத் தம்முடைய பெயருக்கு முன்னால் வைத்துக் கொள்ளும் மரபைக் கொண்டிருந்திருக்கின்றனர். அந்த வகையில் முத்தரைய மன்னர்கள் குறிப்பிடத் தகுந்தவர்கள். குவாவன் மகன் குவாவன் மாறன் என்றும், குவாவன் மாறன் மகன் மாறன் பரமேசுவரன் என்றும் சூட்டிக் கொண்டிருப்பதை நினைவு கூறலாம். அதே போன்று பார்க்கையில் வீரசோழ கலிநீர்க்கன் கலிநீர்க்கன் விக்ரமசோழன் ஆகிய இரு மன்னர்களில் திரு. கே.வி. சுப்பிரமன்ய ஐயர் அவர்கள் கருதிய கருத்து சரியெனப் படுகிறது. வீர சோழ கலிநீர்க்கன் பிற்பகுதியை கலிநீர்க்க விக்ரம சோழன் தன் பெயரின் முன்னால் பொருத்திக் கொண்டிருக்கிறான். இவ்வாறு பெயர் இட்டுக் கொள்ளும் முறையை சோழர் காலத்தில் பொது மக்களும் கையாண்டிருக்கி-றார்கள், என்பது, தஞ்சைப் பெரிய கோயில் கல்வெட்டுக்களினால் உறுதியாகின்றன.

அவ்வாறெனில் வீர சோழ கலிநீர்க்கன் முந்தியவனாகிறான். அவனது ஆட்சி 1004.5-ல் முடிவடைந்திருக்க வேண்டும். வள்ளி எறிச்சலிலிருந்து கிடைத்துள்ள வீரசோழ கலிநீர்க்கன் கல்வெட்டில் இவன் 38 ஆண்டுகள்

- - - - - - - - - - - - - - - - - - - - - - -

10. Epi.Indica.Vol.XXX, No.19, Page 100.

ஆட்சி செய்துள்ளான் என்பது தெரிகிறது.[11] அவ்வாறுயின் கி.பி. 967 லேயே இவன் ஆட்சிக்கு வந்தவனாகிறான்.

இக்கல்வெட்டுகளை வெளியிட்ட மத்திய தொல்பொருள் ஆய்வுத் துறையின் கல்வெட்டிலாகா இம்மன்னர்களைக் கொங்கு சோழன் என்று கூறியுள்ளது.[12] கல்வெட்டுகளை மாவட்ட வாரியகத் தொகுப்பித்த திரு. வி. ரங்காச்சாரியா அவர்களும் இவர்களைக் கொங்கு சோழர் என்றே குறிப்பிட்டுள்ளார்.[13] ஆனால் திரு. கே.வி. சுப்பிரமண்யர் அவர்கள் இம்மன்னர்களைக் கொங்கு சோழர்கள் என்பதை வன்மையாக மறுத்துவிட்டு 'கொங்கு கோனாட்டார்' என்றழைக்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.[14] அத்தோடு இம்மர்கள் தங்களைக் 'கோநாட்டார்' என்று கூறிக்-கொள்வதால் கோநாடாகிய புதுக்கோட்டைப் பகுதியிலிருந்து இவர்கள் வந்திருக்க வேண்டும் என்கிறார். மேலும் அப்பகுதியில் தந்திவர்மன் காலத்தில் கலிமூர்க்க இளவரையன் என்ற தலைவன் ஒருவன் இருந்திருக்கிறான் என்றும் வாதிடுகிறார். அந்த கலிமூர்க்க இளவரையன் மாற்படுவினார் என்னும் பேதியரையருக்கு அடங்கியவனாகக் கல்வெட்டு கூறுகிறது.[15]

கல்வெட்டறிஞர் திரு. கே. வி. சுப்பிரமண்ய அய்யர் அவர்களின் முடிவை நன்றாக ஆய்ந்து பார்க்கையில் ஒத்துக் கொள்ள வேண்டியதாகத் தோன்றுகிறது. அத்தோடு மேலும் பல விளக்கங்களைத் தரமுடியும் என்ற திடமும் ஏற்படுகிறது.

கோவீரசோழ கலிமூர்க்கனும், கோ கலிமூர்க்க விக்ரம சோழனும் தங்களைக் கோநாட்டான் என்று கூறிக்கொள்வதால் கோ நாட்டிலிருந்து அவர்கள் கொங்கு பகுதிக்கு வந்து ஆட்சி செய்தார்கள்

- - - - - - - - - - - - - - - - - - - - - - -.

11. தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு 'தமிழகம்' தொகுதி 1-இல் விக்ரம சோழ கலிமூர்க்கனின் பின்பு ஆண்டவனாக இவன் குறிக்கப்பட்டுள்ளான். முன்பு ஆண்டவனா, பின்பு ஆண்டவனா என்ற சந்தேகம் நிலவி வந்ததால் அவ்வாறு தற்காலிகமாக கொடுக்கப்-பட்டது.
12. A.R.S.I.E., 1920.
13. A Topographical list of the Inscriptions of the Madras Presidency by V.Rangacharya.
14. Epi.Indi. Vol.XXX, Page 100.
15.

என்று திட்டவட்டமாகக் கூறலாம். மாற்பிடுவிராயின பேரதியரையரின் அடியான் கலிமூர்க்க இளவரையனைக் காணச் செய்து அவனது தலைவனுக்கும் இம்மன்னர்களுக்கும் ஏதேனும் தொடர்பு இருக்குமோ என்று சூசகமாகத் தெரிவித்துள்ள கருத்து மேலும் சிந்தனையைத் தூண்டுகிறது.

கலிமூர்க்கன் என்பது கலிக்கு எதிரி என்று பொருள். அவ்வாறாயின் கலி என்பது யார் என்ற கேள்வி எழுகிறது. வேள்விக்குடிச் செப்பேடு களப்பிர மன்னனை 'களப்பிரனென்னும் கலி அரைசன்' என்று கூறுகிறது.[16] எனவே கலிமூர்க்கனில் வரும் 'கலி' என்னும் சொல் களப்பிரர்களைக் குறிப்பதாகக் கொள்ளலாம். ஆதலால் கலிமூர்க்கன் என்ற பட்டப்பெயர் களப்பிரர்களை வென்றதற்கு அடையாளமாக இம்மன்னர்கள் சூட்டிக் கொண்டனர் என்று கொண்டால் தவறாக இருக்க முடியாது.

கொங்குப் பகுதியில் முத்தரையர்கள் இருந்திருக்கிறார்கள் என்பதை கொங்கு மண்டல சதகமும், தமிழறியும் பெருமாள் கதையும் தெரிவிக்கின்றன. இன்றும் கொங்குப் பகுதியில் முத்தரைய மக்கள் வாழ்கின்றார்கள். ஆகவே மேலே குறிப்பிட்டுள்ள மன்னர்கள் முத்தரைய மன்னர்களாக இருக்கலாம் என்று நம்பலாம்.

- - - - - - - - - - - - - - - - - - - - - - - -

16. பாண்டியர் செப்பேடுகள் பத்து, வேள்விக்குடிச் செப்பேடு வரி.40.

********

# வெள்ளியங்கிரிச் சாரலிலே

(முட்டத்து நாகேச்சரமும் பிற ஆய்விடங்களும்....)

(மறைந்த நகரங்களைப் பற்றியது).

**

திருமான். ஐ. இராமசாமி,
தமிழாசிரியர்,
சர்க்கரைபோளுவாம்பட்டி (அஞ்)
வழி. தொண்டாமுத்தூர்,
கோவை-641109

***

தோற்றுவாய்:

கொங்கின் மேற்கெல்லையே வெள்ளியங்கிரிச் சிவாலயம். இங்கிருந்தும் தோற்றிடும் பஞ்சநதிகள் உள்ளிட்ட காஞ்சியாறு கொங்கின் மேல்பகுதியை வளப்படுத்துகின்றது. வில்லென வளைந்த மலைத்தொடர்களில் உறைவது பஞ்சமுக லிங்கங்களும்*, மகேசுர முகமாம் வெள்ளியம்பலத்தில் பஞ்சபூத லிங்கங்களும் உள்ளன. உமையவள் வேண்ட இறைவன் திருநடம் புரிந்த இடம் இதுவே. தென் கயிலை எனப்படும் தலமும் இதுவே. அத்திருத்தலத்தின் கீழ் அடிவரையில் சங்ககாலம் தொட்டுச் சிறந்து விளங்கிய பழமையான நகரங்களைப் பற்றி ஆய்வதே இதன் நோக்கமாகும்.

2. <u>பழங்கோயில்களும், சுற்றுப்புறங்களும்:</u>

பஞ்ச கிரிகளுக்கிடையே வயல் சூழ்ந்த பகுதியில் அக்காலம் நகரங்களிருந்தன; பண்டைய நாகரிக மக்கள் வாழ்ந்த பகுதியில் கோயில்களும், கோட்டையும், அகழியும் இருந்தன. வெற்றி செய்திகள்[1] பழங் கணக்குகளில், 1830க்குப் பின்பே இப்பகுதி மக்கள் கவனத்தை ஈர்த்தது. இங்குள்ள வரலாற்றுச் சின்னங்களுக்குக் காப்பாகக் கானல் காடுகள் மிக்கிருந்தன. அவை அழிந்து போகவே கோயில் குளங்களும் அழியத் தொடங்கின. 1910-க்குப் பின்பு பல பகுதிகள் விளை நிலமாயின.[2] சுமார் 130 ஆண்டுகளின் முன்னர் இப்பகுதியில் விளங்கிய கோயில் கோட்டைகளின் உயர்ந்த கற்களும், தூண்களும் கோவை நகரத்தை அழகுபடுத்தவும், நகரின் முன்னேற்றத்திற்காகவும் அரசினரால் கொண்டு செல்லப்பட்டன என்பர்.[3] கோவைச் சாக்கடையில் கூட பூச்சின்னங்கள் காணப்படுகின்றன. உயர்ந்த இடங்களிலும் சில உள்ளன. பற்பல கற்கள் சுற்றுப்புறங்களில் மண்ணுள்

---

1*. சோழன் பூர்வபட்டையம் - டி.நெ.2981

2. நில அடங்கல்கள் பழையன.

3. இதுவோ எங்கள் கோவை - கோவைகிழார்.
E.B. Thomas (1849-62) அல்லது J. Thomas (1830-32) கலெக்டர்கள் காலத்தில் என்பர்.

3. கோவை -இராச வீதி -பத்திரப்பதிவகத்தின் எதிர்ப்புறம் கீழே கிடக்க.

கோவைச் சாக்கடைகளில் கூட இச்சின்னங்கள் காணப்படுகின்றன. உயர்ந்த இடங்களிலும் சில உள்ளன. பற்பல கற்கள் சுற்றுப் புறங்களில் மண்ணுள் மறைந்துள்ளன. தோண்டிய கிணறுகளில்[4] கட்டடச் சிதைவுகள் பல இப்பகுதியில் உள.

அமரபுயங்க சதுர்வேதிமங்கலமான முட்டத்து நல்லூர்:

இக்கரை போளமாம்பட்டியில் உள்ள இப்பகுதி முன்பு[5] நாகபட்டினம் முட்டத்து நல்லூர் எனப் பலவாங்கு பெயர்பெற்று விளங்கிய இப்பகுதி தெற்கே நல்லூர் வயல்வரை பரந்திருந்தது. மலைகளின் அமைப்புக்கு ஏற்ப வடகிழக்கேயிருந்து[6] தென்மேற்கு வரை நீண்டு கிடந்தது. இப்பரப்பில் விளங்கிய அக்காலத்து நகரங்களை இன்று காண இயலாதெனினும் பெயர்கள் அழியாதுள்ளன. முட்டத்துறை ஆறு[7], முரசம்பூர் ஆறு, கூடுதுறை[8], நாகபட்டினம் கோட்டை, முட்டத்து நல்லூர், நல்லூர் வயல், முட்டத்து வயல் என்ற பெயர்கள் பண்டைய வரலாறுகளை இயம்புவனவாயுள்ளன. இங்கு இன்று நமக்கு ஏற்படுவன சில கோவில்களே. கோவில்களில் கல்வெட்டுக்கள் பலவுண்டு.

முட்டத்து நாகேசுரர் கோயில்:

தன்னுள் மூழ்குவாரது பாவம்போக்கும்[9] 'பாநாசினி' என்ற தனிக்காஞ்சியாற்றுக் கரையில், ஒரு ஏக்கர் பரப்பளவில் உள்ளே திருமுத்துவாளியம்மையார் கோவிலைச் சார்ந்து விளங்கும் இக்கோவில் இறைவர் நாகலிங்கர்கோடிதேவர் என்ற பெயரும் உண்டு. சுற்றுப்புறம் நெடுகில் வளைந்து காணும் கோட்டைமேடுகளின் சில பகுதிகளே இன்றுள்ளன. ஏனைய பகுதிகளும் அகழியின் பள்ளங்களும் சற்றுமுன் உழவர்களால் தூர்க்கப்பட்டன. அம்மையான திருமுத்துவாளி யென்ற நாகேசுவரியம்மையார்[10] (நாகதேவி), மற்றும் இறைவன் கோயில் முன்பு மேலே பிளந்து நிற்கும் கட்டடத்தின் கீழ் வைக்கப் பெற்றிருக்கும் தட்சிணாமூர்த்தியாம்[11]

---

4. கோவிலுக்குத் தெற்கே உள்ள கிணற்று மேட்டில் காண்க.
5. இக்கிராமம் போளமாம்பட்டியுடன் இணைக்கப் பெற்றது.
6. அக்கரை போளமாம்பட்டிப் பகுதிகள்.
7. முண்டந்துறை, மச எறம்பு ஆறுகள்.
8. கோட்டை எல்லை பழைய அடங்கல்களில் உள்ளது.
9. பழைய வரைபடத்தில் இப்பெயர் உண்டு (1872)
10, R.Noநெ.439 ( d )of T.T.M.Library,Madras. நாகார்ஜுனதேவனது 'நாட்டியல்பு' என்ற நூலில் 'பனைநாகதேவி' பெயர் உள்ளது.
11. List of Archaeological Photo-Negatives of the Madras Presidency Page.5. (1929)

ஆலமர் முதல்வன் இவர்கள்சிலைகள் மத்திய தொல்பொருளாளரால் நிழல்படமெடுக்கப்பெற்றுள்ளன. கட்டடத்தின் சிதைவுகள் பற்பல முடம் பெற்ற நந்தியம் பெருமான்களுடன் ஒதுக்கப்பட்டுக் கிடக்கின்றன. முந்து விநாயகர் சிலையும் உண்டு. ஆற்றுப்படிக்கற்கள் இருந்தன. கோவில் சுற்றுப்புறத்தில் உள்ள கல்வெட்டுக்கள் ஏற்கனவே படியெடுக்கப்பட்டுள்ளன. 40 ஆண்டுகட்கு முன்னமே பார்த்த கண்களுக்கு இப்போது ஆங்காங்கே விளைநிலங்களுக்கெனக் கோட்டை மதில்கள் அகற்றப்பட்டிருப்பது தெரிகின்றது.[12] இன்றுவரை உழவர்கள் செய்த அகழ்வாராய்சிகள் வெளியாகவில்லை.

[13]அம்மையார் சிலையழகி, அணிமேகலையழகி:

இந்த வடிவில் இதுபோன்ற சிலை உலகில் வேறு எங்கும் இல்லையெனலாம்.

"எவரும் தன்னை விட்டு நீங்க இயலாத கருணை முகம், வலக் கையில் தாமரைமலர், விரல்களில் மோதிரம், கால்களில் தண்டைகள், கழுத்தில் அணிகள், மார்பில் அணிகள், முடியில் தண்மதியும், கதிரவனும், உயர்ந்த முடி; ஆங்காங்கே அணிகள் அணைத்தும் மாட்டுதற்குத் துவாரங்க கையில் ரேகை, இடையில் மேகலை பொருத்திய ஏழு துவாரங்கள், மார்பில் அணியைப் பொருத்தும் துவாரம், முத்துக்களாலான காதணிகள், சடையில் லை, மூக்கிலும் அணியினை மாட்டத் துவாரம் இவற்றில் முன்னும், பின்னும் நின்று பார்த்தாலும் உள்ளத்தை அள்ளும் அழகியாக இம்மையார் காட்சி தருகின்றார்.

மதுரை மீனாட்சியம்மையாரை வடித்த சிற்பிதான் இதையும் வடித்தானும்.[14] வெள்ளியம்பலத்தில் இறைவன் ஆடிய ஆட்டங்கண்டு நிற்கும் ஆடலழகி (நடனமாது) போன்று அம்மையார் காணப்படுவதை எவரும் மறக்க இயலாது. நல்ல ஒப்பனைக்குப் பின் அன்னையாரை நடனமாது என்றே கூறலாம். இடைவளைந்து நிற்கும் நிலை கண்டாரை ஈர்க்கவல்லதே! அம்மையாரைத் தொல்பொருள் கழகத்தார் படம் எடுத்துள்ளனர். ஆனால் இத்தகு சிற்பக் கருவூலம் இன்று நிலைபெயர்க்கப் பெற்றது அசையுமாறு நிற்கின்றது. உள்ள இடத்திற்குப் பூட்டு கூட இல்லாமல் பாழ்மண்டபத்தே வைக்கப் பெற்றது ஏனோ? கோடிகோடி

---

12. கோட்டை வெளிகள் அனைத்தும் பட்டா நிலங்களாதலால்
13. திருமுத்துவாளி என்ற பெயர், வெள்ளிமலைக் கட்டளைக் கவித்துறை அந்தாதியில் உள்ளது. மலையரசன் ஈன்ற சேயே, மங்கையே திருமுத்து வாளிநாயகியே" (பழையபாடல்).
14. திருப்பேரூர்ப் புரான வரலாறு. செவிவழிச் செய்திகள்.

மக்கள் பார்த்துக் களிக்கும் சிலையல்லவோ இது! தமிழகத்தின் மேல் கோட்டில் மலையருகேயுள்ள இச்சிலை விரைவில் காக்கப்பெறவேண்டும். கீழ்க்கோட்டில் உள்ள அனைவரும் இதைக் காணவும்வேண்டும்.

[15]தமிழர் மறந்த தலைநகரோ!

இன்றைய நிலையில் முட்டத்து நாகேசுரம் எனும் கோவில் சூழ்ந்த இப்பகுதியில் கோவில்களில் உள்ள சுவர்களின் இடையில் செங்கற் சுவர்களும் வெளியே கருங்கற்களும் சார்ந்து காணப்படுகின்றன[16]. இது மிகவும் பழமையைக் காட்டும். தெற்கே (கோட்டைக்குள்) உள்ள பள்ளமான பகுதி முன்பு தெப்பக் குளமாய் இருந்தது. அதன் படிக்கற்கள் இன்றும் மண்ணுள் மறைந்துள்ளதாகக் கூறுகின்றனர். குளத்தில் முன்பு கற்சுவர்களும், அதன் துவாரத்தில் சங்கிலி ஒன்றும், கல்லெருத்தும் இருந்தனவென்று முன்னையோர் கூறக்கேட்டேன். அப்பள்ளம் பிற்காலம் தூர்க்கப் பெற்று விளைநிலமாயிற்று. கோட்டையுள் கிணறு வெட்ட அவர்க்குக் கட்டடச் சிதைவுகள் கிடைத்துள்ளன. அருகில் ஒரு கல்தொட்டி இன்றும் உள்ளது. அங்கும் இங்கும் பற்பல சிற்பச் சிதைவுகளை பழைய 1872 வரைபடங்களில் சின்னக்குட்டை, திருப்பதியம்மன்குட்டை (திருப்பால் கின்னியம்மன் குட்டை) என்ற பெயர்கள் உண்டு. வடக்கே உள்ளது, நாககாளியென்ற[17] கரியகாளியாம் எல்லைத் தெய்வம். இவையனைத்தும் இங்கு காணப்படுகின்றன. பூண்டி ஊத்துமேட்டில் கிடந்த அழகிய[18] காளி சிற்பமும் இப்பகுதியினதேயாம்.

தற்சமயம் முட்டத்து நல்லூர்ப் பகுதி விளைநிலமாக மாறி வருவதால் சரிதச் சான்றுகள் பல இன்று வரை அழிந்து வருகின்றன. இப்பகுதி மேடுகள் இன்றுவரை பெயர்க்கப்பட்டும் வருகின்றன. ஆற்றோரம் முட்டத்தூராயர் கோவில் உண்டு. பூண்டிக்குத் தெற்கே வீரகாளி கோவில் உள்ளது. அதுவரை இப்பகுதியைச் சார்ந்திருந்தது. எனவே, பழங் காலத்தில் இப்பகுதியில் சிறந்த நகரங்கள் இருந்தன வென்றறிகிறோம்.

கல்வெட்டுச் செய்திகள்:[19]

ஒரு சில கல்வெட்டுக்கள் பிரதி செய்யப் பெற்றன. மற்றும் பல மண்ணுள்ளும், கட்டடத்தின் கீழேயும் உள்ளன. கீழே

---

15. Indian Architecture P. 13

16. இதன் பழைய சிலை இன்று காணப்படவில்லை.

17. பூண்டியினின்றும் அகற்றப்பட்டு இப்போது ஒதுக்கி வைக்கப்பட்டது, சிதைந்து விட்டதால்.

18. E.P.I. Report No. 150-157 of 1910
407-410 of 1958-59
236-238 of 1961-62

தோண்டினால் சுவர்விழும் என்ற அச்சம் உண்டு. 11 முதல் 13 நூற்றாண்டுக்கால கல்லெழுத்துக்கள் இங்கேயுண்டு. பெரும்பாலான கொங்குச் சோழர் காலத்தவையே. ஒன்றிரண்டு பாண்டியர் ஒய்சளர் நாளையில் எழுந்தனவாம்.

கல்வெட்டுச் செய்திகள்: 1. விக்கிரமசோழன்: (1004-1045) ஸ்ரீ அமரபுஙக சூர்வேதி மங்கலமான மும்மம் சிற்பது-பகுமுக்த சக்கரவர்த்தி சம்பந்தப் பெருமாள் கணபதிக்கு நிலம் தானம் செய்தது - கானிப் பெம்மான் என்பவர் கொடியேற்ற விழாவுக்கு நிலதானம் செய்தது ஆகிய பல உரைக்கும் கல்வெட்டுக்கள் உண்டு.

2. இராசாதிராசன் (1110-1117) முட்டத்து வியாபாரி[19] தனபாலன் விழுமிபட்டியான் செய்த தானங்கள், வியாழன் துலாத்தில் நிற்கும்போது கார்த்திகைத் திருநாள் நடத் நிலதானம் விட்டமை பற்றிய செய்திகள் உள்ளன.

3. வீரராசேந்திரன் (1207-1225) இவன் கல்வெட்டுக்களைப் புதுப்பித்தான். பண்டு சேரமன்னர் காலத்தில் இப்பகுதி இரவிவர்ம சதுர்வேதிமங்கலம் எனப்பட்டது. சோழர் அருண்மொழிதேவி சதுர்வேதி மங்கலம் எனப்பட்டது.

4. சிதைந்துபோன கல்வெட்டுக்களால் அறியும் பெயர்கள்.

உத்தமசோழன் வாய்க்கால் (நீலி வாய்க்கால்) சிவப்பாட்டன் மகன் விழுமி பட்டியான், ஏலிவார்குழலியென்ற் தேவரடியாள், கவான் குட்டன் என்ற வணிக சக்கரவர்த்திகள் உலகுடைய பெருமாள் என்ற இராசர்கள் மாதவன் என்ற பெயர்களும், அரசன் விழுமி யென்ற விசப்பாட்டன் மன்றுடி செய்த தானங்களும், ஆருத்திரா தரிசனம், மார்கழித் திருவாதிரை ஆனித்திருமஞ்சனம் போன்ற விழாக்களைக் கொண்டாடியமையும், இந்நாடு மூலைநாடு, இறைவன் பெயர் கோடிதேவர் என்பனவும் அறியலாகும் செய்திகள்.

5. பாண்டியர் சாசனம்: சுந்தரபாண்டியன் திருநாள் நடந்தது. அதற்கு நிலம் விட்டமை.

6. ஒய்சள வீரவல்லாளன் சாசனத்தால் வடவயல் கிராமம் திருநாகேசுர நல்லூர், அமரபுயங்க நல்லூர் பேரூர் நாடு, மேவ நாடு என்ற பெயர் உண்டு.

---

19. பேரூர் இறைவன் கோவில் முன் தூண் ஒன்றில் இப்பெயர் உண்டு.

7. கோட்டைக்கு வெளியே உள்ள அமரபுயங்க நல்லூரில் காணும் வெங்கடேசுர விண்ணகரம்"[20]. என்ற கோவில் இருகல்வெட்டுக்களைக் கொண்டுள்ளது. விளக்குதானம் செய்த செய்திகள் கூறும்.

8. அமரபுயங்க சதுர்வேதி மங்கலம்[21]

சதுர்வேதிமங்கலம் என்பது நான்குபுறமும் மதில்கள் சூழ்ந்த நகர் என்றும், சதுரர் என்ற அறிஞர் திறமுடையோர், நகரப்பகுதியோர் வாழும் இடம் என்றும், வேதங்களில் வல்ல அந்தணர் முதலியோர்க்குத் தருமதானம் செய்த இடம் என்றும், பல சிற்றூர்களைத் தன்னுள் கொண்ட ஒன்றும் கூறப்படுகின்றது. அமரபுயங்கள் - தேவநாகள்- தேவநாகளால் தொழப்பெற்ற தலமும் ஆகலாம். இடைக்காலப் பாண்டியருள் நெடுஞ்சடையன் பராந்தகன் (765-790) திருப்பேரூரில் "காஞ்சிவாய்ப் பேரூர்" புக்குத் திருமாலுக்கமர்ந்துறையக் குன்றமன்னதோர் கோயில்" ஆக்கினர், இவன் காலத்தில் இங்குள்ள வெங்கடேசுவர விண்ணகரம் சிறப்புற்றிருக்க வேண்டும். பாண்டியருள் வீரபாண்டியன் கி.பி. 960 வரை ஆண்டனன். அவனுக்குப் பின்பு அமரபுயங்க பாண்டியன் ஆண்டான். கி.பி. 985ல் பட்டமேறிய இராச ராச சோழன் இவனைக் கொங்கு நாட்டில் தடுத்துப் போர் செய்தான். கொங்கு நாட்டை வென்றான் என்ற செய்தியால் அமரபுயங்கனுக்கு இந்த இடம் தொடர்- புடையதாகுமா என ஆய்தல் வேண்டும்.

இராசராசன் வள்ளுவ நாட்டிலுள்ள முட்டம் என்ற ஊரை மும்முடிச் சோழ நல்லூர் எனும் பெயர் மாற்றி வைத்த செய்தியை திருநந்திக்- கரைக் கோவில் கல்வெட்டுக் கூறுவதால், ஒரு காலம் பேரூர்க்கு மேற்கில் உள்ள முட்டம் வள்ளுவ நாட்டுடன் இணைந்திருந்தது என்றும் அறிகின்றோம். வெள்ளிமலைக்கு மேற்கே உள்ளது வள்ளுவ நாடு தாலுகா.

'யாண்டு பதினெட்டாவது இராசராசத் தென்னாட்டு
வள்ளுவ நாட்டு முட்டம் முட்டமென்னும் பேர் தவிர்ந்து
மும்முடிச் சோழ நல்லூ ரென்று பேராக்கி" என்ற இராசகேசரிவர்மன் இராசராசன் கல்வெட்டுக் காண்க.

வீரகேரள அமரபுயங்க வர்மன் என்ற சேரமன்னன் கல்வெட்டு ஒன்று பழனியில் உள்ளது. கன்னியாகுமரிக் கல்வெட்டு ஒன்றில் இராசேந்திரசோழன் 1 காலத்து உடன் கூட்டத்து அதிகாரி ஒருவர் "மதன சடகோபன் அரமபுயங்கனான ராசராச வெள்ளப்ப நாடாழுவான்" எனக் கூறப்பெறுகின்றனர். எனவே அமரபுயங்க சதுர்வேதிமங்கலம் என்ற பெயரை மேலும் ஆராயவேண்டியுள்ளது.

9. மூலைவழித்தடம்: வெள்ளிமலைத் தொடரில் அயன்வரை (பிரமகிரி) அருகே கோவைக்கு மேற்கே உள்ள பச்சைப்பள்ளி என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டில் காணும் இராசகேசரிப் பெரும்பாதை இராசராச சோழன் 1 காலத்தியதாக இருந்தால் அமரபுயங்கனென்ற ஒருவனை இராசராசன் இந்த இடத்தில் போரிட்டு வென்று சென்ற பாதை எனவும் கருத இடமுண்டு. இத்தகு பெரும் பாதைகள் பல இப்பக்கம் உள்ளன. கொங்கு நாட்டுத் திருப்பணி செய்த கரிகாலனும் சேர மன்னனும் சமயமுதலிகளும் வெள்ளிமலைச் சார்பில் உள்ள பாதை வழியாகவே கொச்சி என்று வரை அடைந்தவர் என்றும் இடையில் ×வானியாற்றில் இரவு பரிவாரங்களுடன் தங்கினர் என்றும் கூறப்பட்டுள்ள பூர்வ பட்டைய வரலாற்றின்படி, வெள்ளிமலைக்கு நாகதாம்பிரமலை என்ற பெயர் உண்மையும் பட்டையம் கூறுகின்றது. முட்டக்கோடி 360 சிவாலய வைணவ ஆலயங்களைக் கட்டி முடித்த கரிகாலன் முதலியோர் கோவில்களுக்குரிய செப்புப் படிமங்களுக்கேற்ற தாமிரத்தை வெள்ளிமலைச் சார்பில் உள்ள வானியாற்றில் கரையில் திரட்டினார்கள் என்றும் கூறப்படும் பூர்வபட்டையை வரலாறு காண்க. இம்மலையில் அத்தகு தாதுப்பொருள்கள் இருப்பது உண்மையே. சோழன் சேரன் முதலியோர் சென்ற வழி (பரிவாரங்களோடு) பெருவழியாகும். இதுவே போளமாம்பட்டிக் கணவாய் எனப்படும். சேரமான் பெருமானும் சுந்தரரும் கைலைமலையாம் வெள்ளியங்கிரிக்குச் சென்று இப்பெரும்பாதையும் இதுவே எனக் கூறுதலை பொருந்தும். சேர நாட்டின் மேற்குப் பகுதிக்கு வழிகள் இவையே.

<u>சோழன் பூர்வபட்டைய வரலாறு:</u>

நாகேசுரத்தில் கரிகாலன் திருப்பணி செய்த காலம் கலி. 3556 (கி.பி. 454) [illegible] தொடங்கி முட்டக்கோடி 32 அணைகளைக் கொங்கு நாட்டில் கட்டியவன். முட்டத்து நாகேசுரம் ஈருக 360 ஆலயங்களைக் கட்டியவன், நாகேசுரத்தில் இவன் காலத்துக்கு முன்பே கோவில் [illegible]. [illegible]

---

(×) பேரூர் இறைவன் [illegible] இப்பெயர் உண்டு.

P இக்கோயில் பட்டா நிலத்தில் உள்ளது. சுற்றிலும் மண்ணை அணைத்து விட்டனர்.

× வெள்ளூர்க் கல்வெட்டில் இப்பெயர் உண்டு.

புதுப்பித்து அங்குள்ள மற்றைய காடு வகுந்தியங்களை அழித்து பேட்டையும் கோட்டையும் கட்டி மக்களைக் குடியேற்றினன். கோயிலதிகாரம், நாட்டதிகாரம் மணியம், கணக்கு தாசிமுதன்மை இவற்றுக்கெல்லாம் ஆள்நியமித்து 50 முடா விரைப்பும் புன்செய், நன்செய் 500 பொன் கிராமம் 50 பொன் சுவர்க்கத் தீர்வை இறையிலி மானியமாக விட்டான். பட்டயத்தின் இவ்வரலாறு சிறக்க அமைந்துள்ளது. கரிகாலன் கட்டிய கோயில்கள் செங்கல்லால் ஆனவை. அவை இன்னும் உள்ளன. வெளியே அமைக்கப்பெற்ற (ஒட்டியிருக்கும்) கருங்கற்கள் சோழர் பாண்டியர் காலத்தியவையாம். திருப்போரூர்ப் புராணத்தின், காமதேனு என்ற தெய்வப்பசு வந்து நாகீசரை வழிபட்ட செய்தி கூறப்படுகின்றது.

11. <u>சமயப்பெரியார்கள்</u>: 1. இத்தலத்துக்குத் தேவாரப்பாடல்கள் இல்லையெனினும் அப்பாடல்கள் இதுவரை கிடைக்கவில்லையென்றே கூறலாம். திருநாவுக்கரசர் சேத்திரக்கோவையில் பேரூரைக் குறித்தார். சுந்தரர் பேரூர்க்கு வந்து சென்றார். "பேரூர்ப்பிரமபுரம் பேராவூரும்" என்றும் 'மீகொங்கிலணி காஞ்சிவாய்ப் பேரூர் பெருமான்" என்றும் வருவன அவர்தம் வாக்கின் எழுந்தவை. இவர்கள் அண்மையில் உள்ள நாகேசுரத்துக்கும் வந்து பாடியிருப்பர் அல்லவா? "திருப்பேரூர்க்கு மேலதிகமான வட்டம்" என்பது பட்டயத்தின் மொழியாகும். மெய்யடியார்கள் கயிலைமலையானை எளக்கு அமைந்ததலம் வெள்ளியங்கிரியேயாம். ' தில்லைவாழந்தணர் திருப்பேரூர் நீ[illegible] கைலையைத் தொழுதார்கள்.

<u>மறைந்துபோன முட்டத்து நல்லூரின் பண்டைக்காலம்.</u>

1. இப்பகுதி மக்களிடம் வீரராயன் காசுகள் இருக்கக்கண்டோம். இக்காசுகள் பல குறியீடுகளுடன் உள்ளன. 2. ஏராளமான மாட்டார் குழிகள் (முதுமக்கள் தாழிகள்) இப்பகுதியில் இருந்தன. இன்றும் சில [illegible] உள்ளன. 3. அவற்றிலிருந்து ஒருவர் எடுத்த மண்பாண்டங்கள் அழகாகவும், ஒரு சில சந்தனக் கிண்ணம் போலவும் இருந்தன. 4. கோட்டைப் பகுதிகளில் பழமையான கலயங்கள் உழவரால் கண்டெடுக்கப்பெற்றன. 5 * வெள்ளலூர் பகுதியில் ரோமானியர் காசுகள் கண்டெடுக்கப் பெற்றதால்

---

* Museum Plates of Jalavarnali.-
. பல்லவர் வரலாறு ப. 87 [illegible]
P. Travancore Archaeological Series Volume I. Page 272
Tamil Mozhi 2-3.
5. Travancore State Manual - P. 191.
. [illegible]

அவர்தம் வாணிகம் பேரளமாம்பட்டுக் கணவாய்வழியே அக்காலம் இருந்த பெருவழியில் நடந்திருக்கவேண்டும். 6. வெள்ளிமலைப்பகுதியில் மலைவடு பொருள்கள் மிக்கிருக்கின்றன. 7. இப்பகுதி விளைவுக்கேற்ற நல்ல வயல்கள் சூழ்ந்தது. 8. கோவிலில் இடையே சுடுமண் சுதையால் சுட்டப்பட்ட சுவர்கள் மிகப் பழைமையைக் காட்டுகின்றன. 9. மண் கோட்டை, உள்நகர், புறநகர் அகழி என்ற பழைமையான நகல் அமைப்பை உடையது. 10. கி.மு. நூற்றாண்டுகளிலேயே 'ஈழவர்' என்ற சேரர் இப்பகுதியில் கோட்டை கட்டி ஆண்டதாக 'ஈழவர் இதிகாசம்' என்ற நூலில் கூறப்பட்டிருப்பதாக ஒருவர் சொன்னது.
11, பதிற்றுப்பத்து 5. ஆம்பத்தில் செங்குட்டுவனைப் பரணர் பாடிய 'பேரெழில் வாழ்க்கை' என்ற பகுதியில் 'தீம்புனல் ஆயமாடும் காஞ்சியம் பெருந்துறை மணலினும் பலவே" என்ற தொடரால் காஞ்சியாறு மக்கள் பழக்கத்துக்குரியதாய், எல்லாரும் ஆடும் தன்மையதாய் அரிய தன்மை வாய்ந்ததாய் இருந்ததால் அதன் மணலினும் பலவே என்று வாழ்த்தினார்! இவ்வாறு செங்குட்டுவனுல் போற்றப்பட்டதால் வேண்டும். ஆயம் தீம்புனலாடும் என்றதனுல், செங்குட்டுவன் காலத்து நகரங்கள் இங்கு இருந்தனவென்றும், அந்நகரமக்களே காஞ்சியின் மணலில் ஆடினர் என்றும் கொள்ளவேண்டும். எனவே நலிக் காஞ்சி நதி இங்குள்ளதால் இப்பகுதியில் வாழ்ந்த மக்களும் பண்டைய நாகரிக மக்கள் என்பதில் ஐயமில்லை. 12. சுற்றும் சுற்றிலும் மலைகள், உள்ளே நகர்கள், ஆங்காங்கு வெளியே செல்லக் கணவாய்கள் இருப்பதும் மலை ஓரங்களில் "புரை நாழி", சுற்கள் இருப்பதும் கண்கூடு.
13. ஆற்றின் கரை ஊர்களில் சேரநாட்டார், சோழர் நாணயங்கள் கிடைக்கின்றன. படிகமணிக் கற்கள் போன்றவை பலரால் கண்டெடுக்கப்படுவதால் இப்பகுதி கி.மு. நூற்றாண்டுகளிலேயே சிறந்து விளங்கிய பண்டைய நாகரிக மக்கள் வாழ்ந்த இடம் என்பதில் ஐயமில்லை.

---

X பூர்வபட்டையம் - 172

5 " -141- 169

7 முடிசைப் புராணம்- நடைசைக் கிழவர் முன்னுரை காண்க.

• திருப்போரூர்ப்புராணம்.

*

வித்வான் க. இராமசுவாமி

சங்க காலத்திற் சிறந்து விளங்கிய முட்டத்தின் பகுதியானது இடையில் சிறைக்காடாகியது என்றும், சேரர்கள் இப்பகுதியைச் சரிவரக் கவனிக்காததால் அழிந்துபோன கோவில்குளங்களைக் கரிகாலன் என்பான் இடைக்காலத்தில் கட்டினான் என்பதும், அதன்பின்பு பிற்காலச் சோழர் காலத்திலும், பாண்டியர், கொங்குச் சோழர் ஒய்சளர் காலம் வரை மிகச் சிறந்து விளங்கியதென்றும் அறிகின்றோம். கோவில் கட்டடம் பிற்காலச் சோழருடையதே. அம்மையார் கோவில் முதலே, மீன் வடிவங்கள் உள்ளதால் அது பிற்காலம் நாயக்க மன்னர் காலத்துத் திருப்பணியென்பதும் பலர் பிரித்துப் பிரித்துக்கட்டும் போது கல்வெழுத்துக்கள் தாறுமாறாக அமைந்தனவென்பதும் அறிகின்றோம். அம்மையார் சிற்பத்தை இடைக்காலப் பாண்டியர் நிறுவியிருக்கவேண்டும். பூர்வபட்டயத்தில் அம்மையார் பெயர் கூறப்படவில்லை. ஏட்டுப் பிரதிகளில் கிடைத்த நாட்டுப் பாடல்களால் அம்மையார் திருமுத்துவாணி என்பதை அறிகின்றோம்.× இப்பெயர் குருநமசிவாயர் சரிதத்திலும் காணப்பெறும் நல்லூர் நாகேசுரர் என்ற நாட்டுப் பாடல்கள் உண்டு.

13. முட்டத்தின் பகுதியில் தொல்பொருளார் ஆய்வு செய்யவேண்டுவன.

1. மிகச் சிறந்த சிற்பங்களான திருமுத்து வாணியம்மையாரும், ஆலமர் செல்வன் தட்சிணாமூர்த்தியும், கட்டிடங்கள் இடிந்து விழுமுன்பே காக்கப்பெறல் வேண்டும்.
2. நிலைபெயர்க்கப்பெறற்கும் தொண்டப்பெறற்கும் எளிதுடையதாகவும் உள்ள அம்மையார் சிலை பூட்டு இல்லாத கோவிலில் உள்ளதால் மிக விரைவில் காக்கப்பெறவேண்டும்.
3. சுற்றுப்புற மண்மேடுகளை அழித்துவிட்டனர். இப்போது உள்ள மேடுகளை அழியாமல் பாதுகாக்கவேண்டும், தொல்பொருள்துறையினர் அகழ்வராய்ச்சியை மேற்கொள்ளவேண்டிய இடம் இதுவாகும்.
4. கோவிலின் சுற்றுப்புறத்தில் [illegible] முதலியன [illegible] உள்ளனவென்று [illegible] [illegible]டு.

---

× Madras Journal of Literature and Science XIII-212. Coimbatore District Manual Vol. II. P.353. (1898)

மலையாள [illegible] உள்ளதால்.

மலையடிவாரம் [illegible] உள்ளன.

'சுடுமண் [illegible] காஞ்சி: 461 மணி மலர் [illegible] 340-405 காண்க.

× குருநமசிவாயர் சரிதம் [illegible]
தாயிருக்கப்பிள்ளை, [illegible].

5. சுற்றுப்புறத்தில் 1. தெப்பக்குளம் இருந்த இடம் 2. கோவில் சுற்று [illegible] சில கல்வெட்டுகள், சுரங்கம் முதலியவை குறித்தும் அறிந்துகொள்ளலாம். கோவிலுக்குச் செல்லும் வழிகள் பட்டா நிலத்தில் உள்ளதால் உரிய வழிகளை விட்டுவிட ஆணை பிறப்பிக்கவேண்டும்.

14* சுற்றுப்புற ஊர்களிலுள்ள ஆய்விடங்கள்

1. நரசிபுரம் பாதை வெள்ளருக்கம்பாளையம் அருகே வேட்டைக்காரன் திட்டில் (மலையில்) குகையில் சித்திரங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. இதை விசாரித்ததில் மலை மேல் உள்ள இடத்திற்கு வேனில் காலத்தில் தான் செல்லவேண்டும் என்று கூறப்படுகிறது.

2. சித்திரைச் சாவடி அருகே ஒரு குடைவரைச்சிற்பம் உள்ளது (நாயக்கர் காலம்)

3. மரதம்பட்டி மாரியம்மன் கோவிலில் ஒரு நடுகல் (விசயநகரத்தார் காலம்)

5. மேற்கேத் துங்கச்சேரிக் காடுகளில் நடுகற்கள், சிலைகள் உண்டென்பதும் ஓட்டுக்க கல்வெட்டுக்கள் உண்டெனவும் கேள்விப்படுகின்றோம்.

5. சாடிவயல் அருகே ஒரு குகை இருப்பதாகக் கேள்விப்படுவதும் உண்டு.

6. அய்யாசாமி மலை என்ற இடத்தில் உள்ள கோயில்வெளி, வெள்ளல்முடி கூத்தாடித்திடர் போன்ற இடங்களில் ஆய்வு நடத்துதல் வேண்டும்.

7. பரமேசுவரன்பாளையம்–வெங்கடேசப்பெருமாள் கோவிலில் நிலவறை இருப்பதாகக் கேள்விப்படுவதால் அதையும் அவ்வூரில் சுமார் 500 ஆண்டுகளுக்கு முற்பட்ட செப்புத்திருமேனிகளையும் ஆய்வு செய்தல் வேண்டும். இவை இவ்வட்டத்தில் மேலும் செய்யவேண்டிய ஆய்வுகளாம்.

15. முடிவு:

இப்பகுதி பேரூர் நாட்டைச் சார்ந்ததாகும். வெள்ளிமலை பேரூரின் மூலத்தானம். பேரூரின் மேற்கே பண்டை நாளில் சிறந்த நகரங்கள் இருந்தன வென்பதும், அவை மூவேந்தர் காலத்திற்கு முன்பும் பின்பும் சிறந்து விளங்கின வென்பதும் தற்சமயம் அவை விளை நிலங்களாக மாறின என்பதும் அறியப்படும் செய்திகளாகும். இவைபற்றி மேலும் பல ஆராய்ச்சிகளை அறிஞர் பெருமக்கள் தொடங்கிச் செய்வார்களாக!

---

× தொல்பொருள் [illegible] நடராசன், எம். [illegible] அவர்கட்கு அறிவிக்கப்பட்டுள்ளது. விரைவில் இவைகளை ஆராயத்திட்டம் உள்ளது. இவை கேள்விப்படுவனவே.

[redacted]
மலை.

(புலவர். ஆ. இராமசாமி, பி.லிட்
தமிழாசிரியர்,
கொ. செ. உயர்பள்ளி,
சென்னிமலை).

**

**அமைவிடம்:**

கோவை மாவட்டத்தில் ஈரோட்டிலிருந்து பெருந்துறை வழியாகத் தாராபுரம் செல்லும் பாதையில் 20 மைல் தொலைவில் தெற்கில் சென்னிமலை அமைந்துள்ளது. நொய்யலாற்றின் வடகரையில் 2 மைல் தொலைவில் அமைந்த இவ்வூரின் தற்போதைய மக்கள் தொகையின் எண்ணிக்கை 25,600.

கொங்கு நாட்டின் ஒரு பகுதியாகிய பூந்துறை நாட்டின் மேற்கு எல்லையாக விளங்குவது இச்சென்னிமலை. இதனை,

"உள்ளிய தென்றில் காஞ்சி, உயர்நதி வடக்கு வாளி,
பொலன்மா நதியே கீழ்பால், புகன்றிடும் மேற்குத்
திக்கில் சென்னிமா மலையே யாகும், சிறக்குப்பத் திரண்டூர்
மிக்கமேல் எல்லையாய்க்கொண்டு விளங்குபூந் துறைநன்னாடு"

என்னும் பழம் பாடலால் அறியலாகும்.

**தொன்மை:-**

சங்க காலப் புலவர்களால் இச் சென்னிமலை பெரிதும் சிறப்பாகக் குறிக்கப்படுகிறது. எட்டுத் தொகை நூல்களுள் ஒன்றாகிய குறுந்தொகையும் மதுரையாசிரியன் கோடங்கொற்றன்,

"கழிய காவிரி குற்றம் கடல
வெண்டலைப் புணரி யாடியு நன்றே
பிரிவி லாய முரிய தொன்றயர
இளமைப் பருவம் ஒல்லாள் பழிவழிப்
பலர்பாற் படுப்பச் சென்றனள் மாதோ
செல்மழை தவழும் சென்னி
விண்ணுயர் பிறங்கல் விழுமலை நாட்டே"

—குறுந்தொகை 144.

எனக் கூறுவர். இதில் 'சென்னி விண்ணுயர் பிறங்கல்' என்று கூறப்படுவது இச்சென்னிமலையே ஆகும். இதில் பரல்கற்கள் நிறைந்திருப்பதும், மேகங்கள் தவழப் பெறுவதும் ஆகிய செய்திகள் கூறப்

பட்டுள்ளன. இதனை இன்றும் கண்டு மகிழலாம்.

மேலும் புலவர் முதுகூற்றனார் என்போர் நற்றிணை 28-ம் பாடலில் இதன் அழகைச் சுட்டுகிறார். அப்பாடல்,

"என்னைக் கொண்ட தன்கண் ஒற்றியும்
தன்கைக் கொண்டென் நன்னுதல் நீவியும்
அன்னை போல இனிய கூறியும்
கள்வர் போலக் கொடியன் மாதோ
மணியென இழிதரும் அருவிப் பொன்னென
வேங்கை தாய ஓங்குமலை அடுக்கத்து
ஆடுகழை நிவந்த பைங்கண் மூங்கில்
ஓடுமழை கிழிக்கும் சென்னிக்
கோடுயர் பிறங்கல் மலைகிழ வோனே" - என்பது.

மணி போன்ற நீர் பாய்ந்து ஓடும் அருவி சூழ்ந்தது; பொன் வண்ண வேங்கைகள் பாய்ந்து மூடும் அடுக்கங்களை மலைத் தொடர்களை உடையது; உயரமாக வளர்ந்து கணுக்கள் நிறைந்த மூங்கில் மரங்கள் நிறைந்துள்ளது; மழைமேகங்களைக் கிழிக்கின்ற சென்னிக்கோடு என்று இம்மலையழகு சுட்டப் படுகிறது.

இதுபோல் பண்டைக் காலத் தமிழ்ப் புலவர்கள் எல்லாரும் இம்மலையைப் போற்றிப் புகழ்ந்துள்ளனர் என்பது போதரும். இனி இந்நகரின்கண் உள்ள கல்வெட்டுச் செய்திகளை நோக்குவோம்.

<u>கல்வெட்டுச் செய்திகள்:</u>

1. சென்னிமலை அடிவாரத்தில் செங்கத்துறைப் பூசாரியார் கோயிலுக்கு முன் ஒரு கல்வெட்டு மிகவும் சிதைந்த நிலையில் உள்ளது. அது கோமாறவர்மன் சுந்தர பாண்டியன் காலத்தது. சுமார் 800 ஆண்டுகட்கு முற்பட்டது.. அதில் மேல்கரைப் பூந்துறை நாட்டவர்கள் முருங்கைப் பெருந்தொழு கிராமத்தில் சென்னிமலை வேலவர்க்கு மானியக்காடு கொடுத்த செய்தி கூறப்படுகிறது.

2. சென்னிமலையை அடுத்த பிடாரியூர்த் திருமுகமலர்ந்தார் கோயில் மண்டபத்தின் வெளிப்பக்கத்து நிலவு வாயில் வடபுறச் சுவர்த்-தலத்தில் அடிக்கல்லில் வெட்டப்பட்டுள்ள கல்வெட்டு ஒன்று உள்ளது. அது பாடற் சாசனமாக வெண்பா யாப்பில் அமைந்துள்ளது.

"எங்கும் சமைப்புரம் திருவிருக்கும், மாபுரம்
சேர்க்கின்ற காளிநகர் சென்னிநகர் - யார்க்கும்
கமலா லயர் திரு முகமலர்ந்தார், காளி
கமலிநகர் சென்னி நாதர்"

என்பதே அச்சாசனமாகும். அதில் இத்தலத்திற்குரிய நான்கு பெயர்களும், அவற்றிற்குரிய மூர்த்தங்களின் பெயர்களும், நிரல்நிறை அணி அழகுடன் அமையப் பெற்றுள்ள அழகு கண்டு மகிழற் பாலதாகும்.

3. சென்னிமலை மீதுள்ள முருகன் கோயில் கர்ப்பக் கிரகத்தின் இடது புறநிலவு வாயிற் சுவர்த்தலத்திலுள்ள கல்வெட்டின் செய்தியாவது:-

"ஸ்வஸ்திஸ்ரீ மகாமண்டலேசுவரன் கலியுகம் அஜசகக்கு மேல்
செல்லாநின்ற விபசம்வத்சரத்து பங்குனி ம[illegible] ரு ஆம் தேதி
சென்னிமலை வேலவர்க்கும்.....வள்ளிக்கும் திருக்கோயில்
காரியம்"

இதில் மலைமீதுள்ள முருக[illegible] செய்யப்பட்ட திருப்பணி குறிக்கப்பட்டுள்ளது.

4. சென்னிமலை மலைமீதுள்ள முருகப் பெருமான் சன்னதியின் நுழைவாயில் விதானத்தில் உள்ள கல்வெட்டுச் செய்தியாவது:-

"சோபகிருது வருஷம் [illegible] மாதம் ய ஆம் தேதி தேவராச உடையார் காரியத்துக்குக் கர்த்தரான முத்து ....ஐயங்காரிகள் நாளில் பூந்துறை வேலத் தட்டான் மகன் பழனித்தட்டான் சதரசேவை" என்பதாகும்.

இது மைசூர் அரசர் காலத்தில் செய்யப்பட்ட தேர்த்திருப்பணி முதலியவற்றைக் குறிப்பதாகக் கருதுதல் வேண்டும்.

இவ்வாறு நான்கு கல்வெட்டுக்கள் சென்னிமலை பற்றிய செய்தியைக் கூறுகின்றன.

<u>சாவான் கோயில்:</u>

மலைப்படிகளின் வழியே நடந்து இரண்டு மண்டபங்களைக் கடந்து சென்றால் வழியின் தென்புறத்தே சிறிய கோயில் ஒன்றைக் காணலாம். அதன் கண்ணுள்ள உருவம் ஒன்று தன் தலையைத் தானே வாள் கொண்டு அரியும் கோலத்தில் இருப்பதைக் காணலாம். இதைச் சாவான் கோயில் என அழைப்பர்

சோழன் கரிகாலன் காடுகெடுத்து நாடாக்கினான். அப்போது காடுகெழு தேவதைகட்குச் சாந்தி செய்யும் பொருட்டு நரபலி இடப்பட்டது. இவ்வாறு சென்னிமலையிலும் தலையரிந்து நரபலி இடப்பட்ட செய்தியை ஒரு சிலை தெளிவிக்கிறது. அதுவே, "பால[illegible]மரன் என்பான் திருமஞ்சன மாடுவித்து, பாலசனமிருவித்துப், பரிமளகளப கஸ்தூரிகள் பூசி, வீரசந்தனம் [illegible], பாக்கு வெற்றிலை கையில் கொடுத்து, வீரகொம்பு, வீரகாளம், [illegible]மல்லாரி, சீரசிகண்டி, வலம்புரிச் சங்குடனே [illegible] வாத்தியம் [illegible], பஞ்சவர்ணக் குடை, பஞ்சமுகத் தீவட்டி, [illegible] புலிக்கொடியுடனே, நடைபாவாடை மேல் நடந்து, சங்கீத ராக மேள வாத்தியம் முழங்க வர நாலு வீதி மெரமனையும் வலம்வந்து......தம் தலை அரிந்தனராம்[2]

---

2. மேற்படி விளக்கம்.

எனவும் பட்டயச் செய்தியால் அறியலாம். இங்கு பாலகுமரன் எனப்-படும் இளைஞன் எல்லையற்ற உவகையோடு தன் தலையை அரிந்து வன-தேவதைக்குப் படைத்த வீரவிளையாட்டைக் கருதி அவனையும் வழிபடும் நோக்கில் சாவான் கோயில் அமைந்துள்ளது.

புக்கானன்:

1800-ம் ஆண்டு நவம்பர் 5-ஆம் நாளில் புக்கானன் என்ற வரலாற்றாசிரியன் இங்கு வந்து இந்நகரில் இரும்பு உருக்கும் தொழில் நடைபெறுவதையும், மாரியம்மன் பண்டிகை விழாவைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளான்.

அருணகிரி வாக்கில் சென்னிமலை:-

அருணகிரியார் பாடியதாகச் 'சிரகிரி' என வரும் திருப்புகழ்ப் பாடல்கள் இந்நகர்க்குரியனவேயாகும்.[3] (சிரம்-சென்னி, கிரி-மலை, சிரகிரி - சென்னிமலை).

"அடுதலை" எனத் தொடங்கும் திருப்புகழ் 332 ஆம் பாடல்,

"கவிமத சீகாழி மாமுனி
சிவசிவ மாதேவ காவென வந்துபாடும்
திருவுடையாய் நதிலாதவர்
உமையொரு பாலான மேனியர்
சிரகிரி வாழ்வான் தேவர்கள் தம்பிரானே"

என்று முடிகிறது. இதிலிருந்து திருஞான சம்பந்தன் சென்னிமலை முருகனைத் தன் சேவடிகள் நோவ நடந்து வந்தே வழிபட்டார் என அறிகிறோம். இதைப் பெரிய புராணம் பாடிய சேக்கிழார் சுவாமிகள்,

"அப்பாலைக் குடபுலத்தில் ஆறணிந்தார் அமர்கோயில்
எப்பாலும் சென்றேத்தி" - (திருஞானசம்பந்தர் 1

புராணம் ********************, என்று குறிப்பாகச் சுட்டுகிறார். மேலும் சென்னிமலையில் திருப்புகழ் பாடிய அருணகிரி நாதருக்கு முருகப் பெருமான் படியில் பொற்காசளித்துப் பெருமைப்படுத்தினார்.

இத்தலத்தின் சிறப்பைக் குறிக்கும் நூல்கள்:

நெசவுத் தொழிலால் உலகெங்கும் தன்பெயரைப் பறை-சாற்றி வரும் இவ்வூரின் தெய்வீகச் சிறப்பைக் குறிப்பிடும் நூல்களான:-

1. சென்னிமலைத் தலபுராணம்
2. மேழி விளக்கம்
3. கொங்கு மண்டல சதகம்
4. பந்துறைப் புராணம்
5. சென்னிமலையாண்டவர் பிள்ளைத்
6. சென்னிமலையாண்டவர் காதல்
7. சென்னிமலையமக அந்தத் தமிழ் அந்தாதி
8. சென்னிமலை ஆண்டவர் பதிகம்
9. சென்னிமலை தண்டபாணி கடவுள் தோத்திரப் பதிகம்
10. சென்னிமலைப் பதிகம்
11. சென்னிமலை இரட்டை மணிமாலை.
12. சென்னிமலையாண்டவர் செந்-தமிழ்ப் பாமலர்
13. சென்னிமலை ஆண்டவர் ஆற்றுப் படை.

<u>பிறசெய்திகள் :</u>

இம்மலையின் உச்சியில் உயரத்தை அளக்கும் அறிகுறி அமைக்கப்பட்டுள்ளது. இம்மலை கடல் மட்டத்திலிருந்து 1746 அடி உயரத்தில் உள்ளது. இங்கு முருகன் சன்னதியின் முன்பும், மலை மீதுள்ள நஞ்சியப்பன் கோயில் முன்பும் பழைய ஞானி முனிவர் கோயிலும் வேலை வைத்து வழிபடும் பழக்கம் இருந்து வருகிறது. இதைக் கண்ணுற்ற வரலாற்றறிஞர் திரு. மயிலை. சீனி. வேங்கடசாமி அவர்கள், "வேல் கோட்டம்" என்று சிலப்பதிகாரத்தில் குறிக்கப்படும் கோயிலுக்கு இது சிறந்த எடுத்துக் காட்டாகும் என்று கூறினார்.

<u>முடிவுரை :</u>

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றாலும் சிறப்புற்று விளங்குவது இம்மலையாகும். இதன் வடபால் இரண்டு கல் தொலைவில் அமைந்துள்ள பிடாரியூர் நத்தமேட்டில் இன்றும் சங்கு வளையல்களும், மிகப் பழங்காலத்திய ஓடுகளும் கிடைக்கப் பெறுகின்றன. மேலும் இங்கு நடுகற்களும், வாள்பொறித்த கல்லும் இருக்கக் காண்கிறோம். இதனை அகழ்வாராய்ச்சி ஆய்வாளர்கள் எடுத்துக் கொண்டால், சென்னிமலையின் வரலாற்றுச் செய்திகள் மிகப் பல கிடைக்கப்பெறும் என்பது திண்ணம்.

**

# நாட்டுப் பாடல்களும் நம்பிக்கைகளும்

(பி.எச். மெலாச்சலம்,
ஆசிரியர்,
அரசு உயர்நிலைப் பள்ளி,
திருப்பதி(638057)
(வழி), ஈரோடு.

..

முன்னுரை:

பாடப்படுவனவெல்லாம் பாடல் எனப்படும். அவை பல வகைப்படும். அவைகளில் குழந்தைப்பாடல்கள், தாலாட்டுப் பாடல்கள், தேசியப் பாடல்கள், தெய்வப் பாடல்கள், பக்திப் பாடல்கள், சமயப் பாடல்கள் என இன்னும் எத்தனையோ வகைப் பாடல்கள் உள்ளன. அதில் நாம் எடுத்துக் கொண்டது நாட்டுப் பாடல்கள்.

நாட்டுப்பாடல்கள் என்றால் என்ன?

நாட்டுப் பாடல்கள் என்பது பெரும்பாலும் புத்தகங்கள் இடம் பெறாதவை எனலாம். மக்களில் ஒருவர் பாடுவதை மற்றவர் கேட்டு அதன்படி பாடுவதே நாட்டுப்பாடல்களாகும். இது பரம்பரை பரம்பரையாகத் தொடர்ந்து பாடப்பட்டு வருகிறது. இவற்றில் இலக்கணப் பிழைகள் எழுத்துப் பிழைகள் இருக்கும். இப்பாடல்களில் அவைகள் முக்கியமாக எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. பாடலும், பாடலின் இசையும், கருத்துமேதான் முக்கியமாகக் கருதப்படுகிறது. இவைகள் சில ஆண்டுகளாகத்தான் ஆராயப்பட்டு ஒருசில, புத்தகங்களில் அச்சடிக்கப்பட்டு வந்துள்ளன.

நாட்டுப்பாடல்களின் வகைகள்:

நாட்டுப்பாடல்களில், தாலாட்டுப்பாடல்கள், கும்மிப்பாடல்கள், மழைப்பாடல்கள், தொழில்பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள் எனப் பலவகைகள் உள்ளன.

நாட்டுப்பாடல்களில் உள்ள நம்பிக்கைகள்:

இப்பாடல்களில், பாட்டிலுள்ள கருத்துக்களை எடுத்துக் கொண்டோமானால், அவை மக்கள் எதிர்காலம் எப்படி இருக்கும் என்று நினைத்த எண்ணத் தெளிவிக்காட்டுகிறது. ஒரு எண்ணக் கருத்தையே பாட்டாகப்பாடுகிறார்கள். அதனால் பாட்டின் கருத்து அவர்களுக்கு நம்பிக்கையை ஊட்டுகிறது. எனவே, ஒருவர் பாடும் பாடல்களை அவர்கள் எழுத்தே தெரியாமல் விட்டுவிடுகிறார்கள். ஏதாவதொரு தொழில் செய்துவரும்போது கூட்டமாகப் பெண்கள்

இருந்தால் முதலில் பாட்டுத் தெரிந்த பெண் முதலில் பாட மற்ற பெண்கள் பின்னால் பாடுவார்கள். 'கற்றலின் கேட்டலே நன்று' என்ற சொல்லிற் கிணங்க கேட்ட பாட்டுக்களை மனப்பாடம் செய்து கொள்கிறார்கள். இவ்வாறே ஒவ்வொருவரும் பாட, மற்றவர்கள் கேட்டுத் தெரிந்து கொள் கிறார்கள். இதனால் அவர்களிடத்தில் ஒரு நம்பிக்கை ஏற்படுகிறது. எவ்வா றெனில் தாங்கள் அழிந்துபட்டாலும் தங்களால் பாடப்பட்ட பாடல்கள் அழியாது என்ற நம்பிக்கையும் அவர்களுக்கு உண்டு. பாடல்களிலும் அவர்கள் கருத்து எடுத்துக்கொள்ளப்படுகிறது. எடுத்துக் காட்டாக தாலாட்டுப் பாடல்களை எடுத்துக் கொள்வோமானால்,

"கண்ணு இரண்டு யாலைக்குத் தங்கநிறம்
கருவிழி அம்மாக்குத் தாமரையே
தாமரையே ஆயாளுக்குக் கொண்டுவந்து
தாருகின்ற அம்மாவும் தகப்பே"

என்ற தொட்டில் ஆட்டும்பொழுது பாடுகிறார்கள். பாட்டுப் புரியாவிட்டாலும், அதைப்பாடும் இசையிலே குழந்தை தூங்கிவிடுகிறது. அப்பாடலில் கருத்து நிறைந்திருக்கும்.

கும்மிப்பாட்டை எடுத்துக் கொள்வோமானால், கடவுளைப் பற்றிப் பாடப்பட்ட பாடலில்,

"சத்திரியின் குதன் அத்தம் காடுப்பதி
ஏகமே வேத பிராண சரஸ்வதி
தத்திமித்தோம் என்று பாடும் கணபதி
சதத்தம் உன்பாதம் காண்போமே"

என்று அதில் உள்ள அனைத்துக் கடவுளைப் பற்றியும் பாராட்டப்பட்டுள்ளது. மாமாமார்களைப் பற்றியும், அண்ணனைப் பற்றியும் கும்மியடித்தல், மாமாவுக்கு,

"அந்த இந்த நிலாவுக்கு யார்யார் வருவாங்கோ
எங்க மாமனும் வருவாங்கோ
எல்லா மாமனும் வருவாங்கோ
என்ன [illegible]"

அண்ணனுக்கு,

"இந்த இந்த நிலாவுக்கு யார் யார் வருவாங்கோ
எல்லா அண்ணனும் வருவாங்கோ
எங்க அண்ணனும் வருவாங்கோ, என்ன சேதி ஆக்கலாம்?

இதேபோல,

ஒரு ஆனை வெள்ளானை பட்டம் கட்டின கொம்பானை
கொம்பானை மேலேறி வாராரய்ய தெருவு"

2, ஒரு மரிக்கொழுந்து சாத்திரிக்க
ஒரு ஊர் மன்னர் வந்திருக்க
எப்படித் தங்கம் நீ வந்தாய்

3. ஒரு இரட்டா மஞ்சள் வெட்டி
ஊர் சுத்தி தண்ணியிலே ரசங்கலக்கி
சாத்திப் போட்டு எங்க மணக்கும்.

4. ஓடம்பலில் கனை வெட்டி
ஒன்பது மாசத்தில் தேர் எடுப்பி
தேருக்குள் இருக்கிற தேவ கன்னி
என்ன வந்து கேப்பாளோ?" என்ற பாடல்கள் தம்பியின் பெருமையை விளக்குகின்றன.

ஒப்பாரியை எடுத்துக்கொண்டால் அவைகளில் எத்தனையோ மாதிரிப் பாடல்கள் உள்ளன. தாய்க்கு, தகப்பனுக்கு, உடன் பிறப்புகளுக்கு, சித்தி, சித்தப்பா, மாமன், அத்தை, பாட்டி இவ்வொருவருக்கும் இவ்வொருவிதமான பாடல்கள் உள்ளன. அவைகள் அவர்களுடைய பெருமைகளாகவே பாடப்பட்டுள்ளன.

தாயக்கு,

1. வாசலிலே மல்லிகைப்பூ என்னை வளர்த்தவ தாய் வெச்சபூ"

2. வடக்கே மலையிலே வான் மரப் பெட்டியிலே"

இதில் இரண்டு வகைகள் உண்டு.

3. நான் பிறந்த சீமையிலே கையால் மடம் தொறந்து"

தகப்பனுக்கு,

1. "ஊசி சுத்தியிக்கோ சரஸ்வதியே கோபுரக்கோ
2. "கடம்பக்கா கடலோட சிங்காரச் சோலையிலே
3. பத்து ஊரி மலிக்கும் [illegible] பட்டு [illegible].

உடன்பிறப்புகளுக்கு.

"பச்சைக்கரை மல்வேட்டி பத்தாம மடிச்சுதாரு"

புருஷனுக்கு.

"மலையோரம் காத்தாலே என் மாளிகை எங்கும் பூமாலை

பாட்டிக்கு,

1. கருணமலை மேலே காந்தம் எரியுதின்னு

2. பொரியே பொரிச்சு வெச்சு,

ஆயாடிக்கு,

"அருணமலை மேலே தீபம் எரியுதின்னு"

சிட்டிக்கு,

அந்த நன்னி பச்சகுடி கோர்ட்டு

என்ற பாடல்கள் பெரும்பாலும் நம் கோவை மாவட்டத்திலே பாடப்பட்ட பாடல்களாகும்.

பாட்டின் வளர்ச்சி:

இவை தொடர்ந்து, தொன்று தொட்டுப் பாடி வருவதால் இன்னும் நிலைத்து நிற்கிறது. இவைகளைப் பாட்டாகப் பாடுவதைக் காட்டிலும், புத்தக வடிவில் அமைத்தால் உலகம் உள்ள மட்டும் அழியாமல் இருக்குமென்பது என் எண்ணம். ஏனெனில் இக்கால மக்கள் அப்பாடல்களை அநாகரிகமென்று பாடாமல் வானொலிப் பாடல்களையே அதிகமாக விரும்புகிறார்கள். எனவே நாட்டுப் பாடல்களை புத்தகமாக்குவது ஆராய்ச்சியாளரின் கடமையும், அறிவை ஊட்டும் ஆசிரியரின் கடமையுமே ஆகும்.

முடிவுரை:

பாடல்களில் வண்டி ஓட்டி உழவைத்தல், நெசவு நெய்தல், நெல் புதைத்தல் போன்ற தொழில் செய்யும்போது களைப்புத் தோன்றாமலிருக்கப் பாடுகிறார்கள். அவைகளும், நாட்டுப் பாடல்களாகவே வளர்ந்திருக்கிறது என்பது தெளிவாகிறது. இந் நாட்டுப் பாடல்களிலிருந்து நம் மூதாதையர் பாடிய பாட்டுக்கள் எவ்வளவு கருத்தாழம் கொண்டிருக்கின்றன என்பதையும், அவைகளைக் கையாண்ட முறையும் நமக்கு நன்கு விளங்குகிறது. இதற்காக அவர்கள் தனியாக சிரத்தை எடுத்துக் கொள்ளாமல் அன்றாட வாழ்விலேயே கடைபிடித்து வந்தார்கள் என்றும், தொழில் செய்யும்பொழுது அவைகளைப் பரப்ப வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்பதும் புலனாகிறது. எனவே, இப்பாடல்கள் அழியா வண்ணம் நாமும் [illegible] இப்பாடல்கள் இம்மாவட்டத்துக்குப் பயன்படும் என்றும் அதனால் செல்வங்களாகப் பாதுகாக்கப்படுவது அவசியமாகத் தெளிவாகும் எனக் கூறி முடிக்கிறேன்.

******

# கொங்கு வேளிர்கள்

புலவர். கு. வேலுசாமி,
அரசுயர் பள்ளி,
பி. பெ. அக்கிரஉறாரம்,
ஈரோடு-5,

கொங்குநாடு 24 நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு நாட்டிற்கும் வேளாளர் குலத் தலைவர்களில் ஒருவர் காணியாட்சியாய் ஆண்டு வந்தனர். அவர்கள் சமுதாய ஒழுங்கையும், நாட்டுக் காவலையும் கவனித்து வந்தனர். மூவேந்தர்களின் படைத் தலைவர்களாயும், அமைச்சர்களாயும் இருந்தவர்கள் கொங்கு நாட்டில் குறுநில மன்னர்கள் போலப் பட்டம் புனைந்தும், அரசர்களுக்குரிய அரச சின்னங்களைத் தரித்தும் வரி வாங்கும் உரிமையும், பல்வேறு சமுதாய மக்களைக் காக்கும் பொறுப்பையும் உடையவர்களாய் ஆண்டு வந்தனர். இவர் பட்டம் பெற்ற முறைகளை கீழ்வரும் தனிப்பாடல்கள் தெளிவாக உணர்த்தும்.

வேணுவுடையான் வெள்ளோடு உலகுடையான்
ஆனூர்க்குச் சர்க்கரை மன்றாடி - வேணுபுகழ்
நாவேந்த பூந்துறைசை நன்னாவுடையார்க்கே
மூவேந்தர் சூட்டும் முடி ( தனிப்பாடல்)
கொங்கினில் கலியுக சகாத்த நாளாயிரத்து
இருநூற்று எழு பத்தில்
துங்கோத்துங்க சோழனும் சேரனும் பாண்டியன்
குமைத வகுக்கும் நாளில்
மங்கை மணி சாத்தந்தை உலகில் மன்றாடிக்கு
வரிசைப்பட்டந் தரித்தே (தனிப்பாடல்)

என்ற தனிப்பாடல் போன்றவற்றால் நன்கு அறியலாம். இவ்வாறு பட்டம் புனைந்து ஆண்டவர்களில் புகழுக்குரியவர்களாய்த் திகழ்ந்த-வர்கள் காங்கேய மன்றாடியார் - பழைய கோட்டைப் பட்டக்காரர் சங்கரண்டாம்பாளையப் பட்டக்காரர் - வாலிபகுராயர், சமத்தூர் பட்டக்காரர் - வெள்ளியங்கிரி போன்றோர் ஆவர்.

<u>காங்கேய மன்றாடி:</u>

தொண்டை மண்டலத்துப் 60,000 குடும்பங்களில் 8,000 புகழ் வாய்ந்த குடும்பத்தினர் கொங்கு வந்தனர். சேர மன்னன் காணியாட்சி நல்கினான். காங்கேயன் [illegible] குமார புரத்தில் இருந்து [illegible]. [illegible] மறை சென்று இறைபக்தியில் மூழ்கி விட்டான்.

இவன் சந்ததியில் தோன்றிய ஒருவன் கால்நடைகளை மேய்த்துக் கொண்டு இருக்கும்போது ஒரு ஊனமடைந்த வேளாளப் பெண்ணை மணந்தான். 4 ஆண் குழந்தைகள் பிறந்த பின்னர் இறந்து விடுகிறான். இவன் மனைவி முஸ்லீம் பழக்கத்தை மேற்கொண்டு தன் குழந்தைகளுக்குக் காது குத்தினாள். (காரணம் மணந்து கொண்ட பெண் வெள்ளை நிறமாக இருந்தாள். இத்தகைய பெண்ணைத் திருமணம் செய்வது கூடாது என்று சமுதாயத்தினர் எதிர்த்துப் போரிட்டனர். அவள் நாட்டை விட்டு ஓட முஸ்லீமால் ஆதரிக்கப்பட்டாள். அந்நன்றிக்காகத் தன் குழந்தைகளுக்கு ஆடி மாதம் பிறை கண்டு ஐந்து நாள் விழா நடத்திக் காது குத்தினாள். இது முதற்கொண்டு இவர்கள் முடக் காதன் கூட்டம் என்று அழைக்கப்பட்டனர். இன்றும் இவ் வழக்கம் அக்கூட்டத்தாரிடம் அமைந்திருக்கிறது).

இவனுடைய மூத்த மகன் கால வர்ணக் கவுண்டன் செகநாதபுரத்திற்கு அரசனான உடையார் திராவிட நாட்டை அழிக்க பெரும் படையுடன் வந்தான். கால வர்ணக் கவுண்டன் அப்படையை நாட்டூர் என்ற இடத்தில் போரிட்டுத் துரத்தினான். இதனால் மகிழ்ந்த பாண்டியன் காங்கேயத்திற்கு ஜாகீர் ஆகவும், 24 நாட்டின் 1/10 பங்கு வரி வாங்கும் உரிமையும், அவன் கலைத் திறமையை மகிழ்ந்து "சகல கலை காங்கேய மன்றாடி" என்ற பட்டத்தையும் வழங்கினான். "கார்த்திகேயன் உரிச் சொல் நிகண்டு" இவனால் செய்யப்பட்டதே.

33 மன்றாடியார் 499 வருடங்கள் ஆண்டனர். 33வது பட்டக்காரர் வரி செலுத்தாமைக்காக திப்பு கைது செய்து சிறையில் அடைத்தான். அங்கேயே இறந்து போனார்.

<u>சங்கராண்டாம்பாளையம் (வேணாவுடையார்)</u>

கரிகாலனின் மாமன் இரும்பிடர்த் தலையார் வழியில் தோன்றியவர்கள் என்று இவர்களின் மரபுப் பட்டயம் கூறுகிறது. இவர்களின் மெய்க்கீர்த்தி அழகிய நடையினையுடையது. அ[illegible] பாண்டியனை இம்மரபினர் வென்றதாகக் கூறப்படுகிறது.

குலோத்துங்கன் ஆட்சியில் காவேரி பட்டணத்தில் சங்கு நாராயண செட்டியின் மகள் [illegible]. அந்நகரத்தார் அவளுக்குத் தண்டம் (அபராதம்) பணம் [illegible]. சங்கு நாராயண செட்டி அரசனிடம் முறையிட்டான் [illegible]. அமைச்சன் "அர்த்தநாரி வேணாவுடையாரை" அனுப்பினான். அவர் சென்று

சண்டையிட்டு 500 வணிக குடும்பத்தினரைக் கைதிகளாகக் கொண்டு வந்தார். அரசன் மகிழ்ந்து 4800 குடும்பங்களை ஆள்வது மட்டுமின்றி ஏர் வரியாக 1 பணமும் தலைக்கட்டு வரியாக 6 பணமும் வசூலிக்க உரிமையளித்தான்.

இவ்வாறு 27 தலைமுறையினர் வரிசையாக தென்கரை நாட்டை ஆண்டு வந்தனர். இவர்கள் பெரிய முத்தூர் எனப்படுவர். இவர்களில் மூத்த பெண் குழந்தைக்குப் பொன்னூச்சல் ஆடலும், பொற்றேரில் செல்வதையும் இன்றியமையாத சடங்காக இன்றும் செய்து வருகின்றனர்.

<u>பழைய கோட்டைப் பட்டக்காரர்:</u>

இவர்கள் நல்ல சேனாபதி, உத்தமக் காமிண்டன், சக்கரை, மன்றாடியார் என்ற பட்டங்களையுடையவர்கள். காரையூர் நாட்டை ஆளும் உரிமை பெற்றவர்கள். (காணியாட்சி) இவர்களின் குல முதல்வன் "அழகன் சர்க்கரை உத்தமக் காமிண்டன் மன்றாடியார்" என்ற மரபுப் பட்டயம் தெரிவிக்கின்றது.

இரண்டாம் விக்கிரமன் (1118-1135) கொங்கு நாட்டை ஆண்ட பொழுது அவன் அமைச்சனாகிய கரியான் சக்கரை வரி கொடுக்க மறுத்த வெங்கல மடராயன் என்ற வேட்டுவத் தலைவனை வென்று தலையை வெட்டி வந்து அரசன் முன்னர் வைத்தமையால் அரசன் அகமகிழ்ந்து "உத்தமசோழன்" என்ற பட்டத்தையும் அரசச் சின்னங்களையும் அளித்துப் பாராட்டினன்.

நஞ்சராயர் என்பவர் [illegible]ராபுரத்திற்கு வருகை தந்த சமயம் தெள்ளிமலையில் வாழும் கொங்கராயன் காங்கேய நாட்டில் புகுந்து எதிர்த்தாரை கொன்றுவிட்டு, மாடு [illegible]களை ஓட்டிக் கொண்டு சென்றுவிட்டான். [illegible] சக்கரை உத்தமக் காமிண்டனை [illegible] போரிட அனுப்பினர். அவர் சென்று கோட்டையை [illegible]கையிட்டு கொங்கராயனுடன் போர் செய்து கொன்று [illegible] தலையை நஞ்சராயர் முன் கொண்டு வந்து வைத்தான். நஞ்சராயர் 24 [illegible]ட்டங்களையும் [illegible] காரையூர் நாட்டையும் மற்ற நா[illegible] தலைமையும் பெறும் செப்பேடு எழுதி அளித்தார். [illegible] காரையூர் செப்பேடு எனப்படுகிறது. இச்செப்பேட்டில் [illegible] நடையினை உடையது, அது,

மதியுணர்ந்து உலகை முழுதாண்டு
மும்மூர்த்தியும் முத்தமிழ் விநோதன்
சரிபுட தாங்கும் ஞான விநோதன்
ஆலிக்குச் சந்திரன் ஆர்த்தத்துக்கு மன்னி
சொல்லினில் தருமன் தோளில் வீமன்
வில்லினில் விசயன் வாளினில் அபிமன்
பரிதனில் நகுலன் கரிதனில் ஜயன்
புகழில் போசன் போகத்தில் இந்திரன்
இன்சொலால் இனி தளித்து
வன் சொலால் மறங்கடிந்து
அருங் குழந்தைக்கு அன்புடைத் தாய் போல
அனைத்துயிர்க்கும் இனி தென
உலகத்துக்கு உரை நான்கும்
வள்ளுவர் உரைத்த முப்பால்
மொழியும் படியே அறமே அறிந்து
அல்லவை கடிந்து நல்லவை நாட்டி
ஆறிலொன்று கடமை கொண்டு
செங்கோல் நீதி வழுவாமல் நடந்து

என்று வருகின்றது. இதில் வள்ளுவர் குறளை முப்பால் என்று கூறி வள்ளுவர் கூறும் அறவழி நடந்து ஆறிலொரு கடமை பெற்றனர் என்று குறிப்பிடுகிறது. பெருவேந்தர்கள் வெளியிடும் மெய்க் கீர்த்தி போன்று இவர்களும் பட்டயங்களும், சாசனங்களும் வெளியிட்டார்கள் என்பதை உணரலாம். இவர்கள் பயிர குலத்தை சார்ந்தவர்கள். 21 தலைமுறை பட்டங்கட்டி ஆண்டனர்.

<u>காலிங்கராயன்:</u>

பூந்துறை நாட்டிலுள்ள வெள்ளோட்டில் சாத்தந்தை குலத்தினர் வாழ்ந்து வந்தனர். இவர்களின் காணியாட்சி காவடிக்கா நாடு. இவர்களில் காலிங்கராயன் என்பான் வீரபாண்டியனின் அமைச்சராய்த் திகழ்ந்தனர். இவர் தன் பெயரை சுந்தர பாண்டியன் காலிங்கராயன் என்று குறித்துள்ளார். (கொடுமுடிக் கல்வெட்டு).

இவரைப் பற்றிக் கொங்கு நாட்டின் பல்வேறு இடங்களில் அமைந்துள்ள கோயில்களில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்களால் நன்கறியலாம்.

இக்கல்வெட்டுக்களில் [illegible] பட்டது கம்மாளருக்கு அளித்த உரிமை [illegible] கூறுகிறது. அதில் கம்மாளர் தங்கள் வீடுகளுக்கு வெள்ளை பூசிக் கொள்ளவும், குடைபிடித்துக் கொள்ளவும், இரட்டைச் சங்கும், குழலும் நல்லதற்கும்

கெட்டதற்கும். வாசித்துக் கொள்ள உரிமையளித்தான். காலிங்க-ராயன் அளித்த இவ்வுரிமையால் கம்மாளர் நன்மை பெற்றனர். இதிலி-ருந்து அன்று சமுதாயத்தில் ஒரு பிரிவினர் உரிமையின்றி இருந்தனர். ஒரு சில சீர்திருத்தக்காரர்கள் அவ்வுரிமை வழங்கவும் செய்தனர்.

இவர் பவானி கூடலில் ஒரு அணை கட்டினான். அவ்வணை காலிங்க ராயன் அணை என்றும், அவன் வெட்டிய கால்வாய் காலிங்கராயன் கால்வாய் என்றும், அணைப் பகுதியில் உள்ள ஊர் காலிங்கராயன் பாளையம் என்றும் அழைக்கப்படுகிறது.

பின்னர் ஊமைலேக்குப் பக்கத்தில் உள்ள காவடிக்கா என்ற நாட்டிற்குச் சென்று தன் மாடு கன்றுகளுக்கு ஊற்றுப்பறித்து ஊர் அமைத்து வாழ்ந்து வந்தனர். ஊற்றுப் பறித்ததால் அவ்வூர் ஊத்துக்குளி என்று வழங்குகிறது. இவன் பரம்பரையினர் 23 தலைமுறை ஆண்டனர்.

<u>வெள்ளியங்கிரிக் கவுண்டர்:</u>

இம் முடிமுத்தன் வேல் மணிகண்டர கோபண மன்றாடியார் என்பவர் வெள்ளியங்கிரியில் வாழ்ந்து வந்தவர். இவர் மதுரை சொக்கலிங்க நாயக்கரின் அமைச்சர் அழகாத்திரி நாயக்கரின் விருப்பப்படி பட்டீசுவரம் கோயிலைக் கட்டினார். நாயக்கரின் எதிரிகளை அழித்தார். அதனால் இவர்களுக்கு இவர் ஆண்ட பகுதி சர்வமானியமாக வழங்கப்பட்டது.

அமீன் சாயபு என்பவர் திப்புவின் படைகள் பாலக்காடு செல்லமுடியாமல் கணவாயை அடைத்துவிட்டார். மன்றாடி படை செல்வதற்கு புதுவழி கண்டுபிடித்துக் கொடுத்தார். அதனால் திப்புவின் படை வெற்றியடைந்தது. அதனால் திப்பு 100 ஏக்கர்க்காடு வாகைத் தொழுவிற்குப் பக்கத்தில் மானியமாக அளித்தான்.

<u>சமத்தூர் பாளையக்காரர்:</u>

நரையபாரி நாட்டைக் காணியாட்சியாய் வாணகக் கவுண்டர் என்பவர் ஆண்டு வந்தார். ஐயாபுரி நாட்டை ஆண்ட பாலராசா என்பவர் இவருடன் போரிட்டுத் தோற்கடித்தார். இவர் நல்லருக்கா நாட்டுக் காட்டிற்குச் சென்று மறைந்து வாழ்ந்தார்.

பின்னர் பெது கொண்டா ராயரிடம் சென்று தன் திறமையைக் காண்பித்தார். அவர் இவரை சமத்தூர் பாளையப்பட்டாய் நியமித்து வணங்காமுடி வாணராயன் என்ற பட்டமும் அளித்தார். இவர் பரம்பரையினர்

புலவர். ஐ. வேலுசாமி

6

24 தலைமுறையாக 596 வருடம் ஆண்டனர்.

இவர்கள் கொங்கின் 24 நாடுகளையும் வேளாளர் குடியினர் காணியாட்சியாக ஆண்டு வந்தனர். இன்றும் அவர்கள் தங்கள் குடியின் பெருமையைக் கூறும்பொழுது தாங்கள் இந்தக் காணியாட்சியைச் சார்ந்தவர்கள் என்ற பெருமையாகக் கூறிக்கொள்கின்றனர். கொங்கில் முக்கியமான முடிவுகள் மேற்கொள்ளும்பொழுது 24 நாட்டவர்களும் கூடியே மேற்கொண்டனர். வேட்கோவர்களுக்கு உரிமை அளித்த மடக்கரைச் செப்பேட்டில் 24 நாட்டவரும் கையொப்பமிட்டுள்ளனர். இந்த இருபத்து நான்கு நாட்டவரையும் கேளாமல் காலிங்கராயன் கம்மாளருக்கு உரிமை வழங்கியதால் வெள்ளோட்டிலிருந்து காவடிக்கா நாடு சென்று வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனை காலிங்கராயன், வம்சா வழி பூந்துறை நாட்டவர் உரிய மரியாதை கொடுக்காத காரணத்தால்தான் தன் காணியாட்சியாகிய காவடிக்க நாடு செல்வதாக கூறுகிறான்.

ஆகக்கொங்கு, வேளிர் புகழுடனும், திறமையுடனும் கொங்கு நாட்டை ஆண்டு வந்தனர். சமுதாய மக்கள் சிறப்புடன் வாழ அவ்வப்பொழுது சபை கூடி அறங்களை வரையறுத்தனர். சட்டங்களை மீறுபவர் யாவராயினும் எல்லோரும் ஒரு சேர எதிர்த்தனர். கூ (காங்கைய மன்றாடியை எதிர்த்தமை) அறம் வழுவாமல் ஆட்சி செய்து சிறந்தனர்.

**

ரா. ஆ.

# தோடர், படகர்களின் நாட்டுப் பாடல்-களும், நம்பிக்கைகளும் [1]

புலவர். திருமதி. கு. ரோகிணி, எம்.ஏ.,
(புனித திரேசன்னை உயர்பள்ளி),
553, ஜோகிமாஸ்டிரிலேன்,
உதகமண்டலம்-6 (பிங்கர் போஸ்ட்)
நீலமலை மாவட்டம்.

**

கடல் மட்டத்தைக் கடந்து, பல்லாயிரம் அடிகள் உயர்ந்து, கவினுறக் காட்சிதரும் கோலமிகு நீலமலையில் கொஞ்சிடும் எழில் அழகியது. அதைக் காணவும், இளவேனிலின் இளஞ்சூட்டை- அது தரும் இன்பத்தை நுகரவும் வரும் மக்கள் சிலுசிலுக்கும் ஊசிச்சாரல் உடலைத்துளைக்கத் தொடங்கிய பின் வந்த சுவடு தெரியாமல் கலைந்து விடுகின்றனர்.

மக்களின் மனங்கள் மாறி மாறி உணர்ச்சிகளைக் காட்டுதல் போலவே பருவ காலங்களை மாறிமாறிக் காட்டக் கூடிறய நீல-மலையின் பண்புக்குப் பாலமமைத்துக் கொடுத்தவாறு அங்கு நிலைத்து வாழும் பழங்குடியினருள் தோடர், படகர் ஆகிய இரு குரஙமமதததுஙன் நம்பிக்கைகளில் சிலவற்றையும் அவ்வினத்தாரின் நாட்டுப்பாடல்கள் ஓரிரண்டினையும் இக்கட்டுரையில் எடுத்தியம்ப விழைகின்றேன்.

பஞ்சபாண்டவரின் வழிவந்தவர்கள் என்று தங்களைப் பெருமையுடன் கூறிக்கொள்ளும் தோடர்கள் 'புல்ஆர்ஸ்' எனப்படும் புற்கூரை வீடுகளில்- 'மந்துகள்' என்றழைக்கப்படும் கிராமங்களில் கூடி வாழ்கின்றனர். இன்று புற்கூரை வீடுகளுக்குப் பதிலாகச் செங்கல்லும், சிமேண்டும் கலந்து பழைய் வடிவத்தில் கட்டப்படுகின்ற வீடுகளைக் காணும்போது- போற்றிப் பாதுகாக்கப்படவேண்டிய பழஞ்சின்னங்கள் அழிந்து வருகின்றனவே! என்ற உறுத்தல் உள்ளத்தின் ஒரு ஓரத்தில் எழுகின்றது.

மனித இனத்தின் மூன்று படிகளான பிறப்பு-கலப்பு- இறப்பு எனும் மூவகைப்பட்ட நிலையிலும் தோடர்களின் நம்பிக்கைகள் நிலைபெறு மாற்றை வகைக்கு ஒவ்வோர் எடுத்தக்காட்டால் காண்போம்.

முதலில் அமைவது பிறப்பு! குழந்தை பிறந்த ஏழாவது அல்லது ஐந்தாவது நாளில் தாய்க்கும், சேய்க்கும் நிழலாக மூட்செடிக் குடையைப் பிடித்து அழைத்து வந்து கிராமத்துப் புல்வெளியில் அமரச்செய்து இலையில் செய்யப்பட்ட பாலாடையில் எருமைப்பாலை முகந்து இருவருக்கும் புகட்டு கின்றனர். காலை முதல் மாலை வரை அப்புல் வெளியில் அவர்கள் தங்கிய

பின்னர் வீட்டுக்கு அழைத்துச்செல்லப்படுகின்றனர். இன்றும் மகப்பேறு மருத்துவ மனையில் நடந்தாலும் இச்சடங்கு நடைபெறத் தவறுவதில்லை. காற்றுக்கும் வெயிலுக்கும் தாக்குப்பிடிக்கும் திறன் வரவேண்டுமென்ற நம்பிக்கையின் அடிப்படையே இச்செயலுக்குக் காரணம் எனலாம்.

ஆண் குழந்தையானால் இருப்பின் ஆரவாரத்துடன் மூன்றும்மாதம் மந்தில் அமைந்த பாண்டவர் கோவிலுக்குக் கொண்டு சென்று பாலும்! வெண்ணெயும் நிவேதனமாக அளித்துப் பெயர் சூட்டப்படுகின்றது.

முத்திலேன், தருமன், பேணிகேர், பொன்நீதி

என்பது போன்ற பெயர்கள் அறிமுகமானவை.

பெண்குழந்தையாயின் -------!

பெயர் சூட்டு விழா வீட்டோடு நிறைவு பெறுகிறது.

வாசமல்லி, அதிஉஷ்டமல்லி, மீட்ராணி, பூமுத்து என்ப பெண்பாற்பெயர்களில் பெரும்பான்மை இடங்கொண்டவை.

பிறப்பைத் தொடர்ந்து வருவது கலப்பு! ஆணும் பெண்ணுமாக அமைந்த இல்லற வாழ்க்கைக்கு ஒரு வீட்டில் உள்ள உடன் பிறப்புகளை மட்டும் சகோதரர்களாக எண்ணுகின்ற நாகரிக உலகில்- தன் மந்தில் உள்ள அனைவரையும் உடன்பிறப்புக்களாக நம்புகின்றனர் தோடர். அவர்களுக்குள் திருமண உறவு வைத்துக்கொள்வது இல்லை. வேறு மந்தில் உள்ள பெண்ணொருத்தியை மனைவியாகத் தேர்ந்து எடுக்கின்றனர். அவள் வயிற்றில் இல்லறத்தின் கனிதோன்ற ஆரம்பித்த ஏழாவது மாதத்தில் திருமணம் நடைபெறுகின்றது!

தனது சக்திக்குத் தகுந்தாற்போல மணமகன் எருமைகளைப் பெண்ணுக்குச் சீதனமாக அளிப்பான். புத்தாடை போர்த்திக் கொண்ட மணமகள் விளக்கின் முன் அமர்ந்து சுடரை வெறித்துப் பார்த்தவாறு இருப்பாள். கண்களில் நீர் வடிந்ததும் திருமணம் நிறைவு பெற்றதாகக் கருதப்படும். இணைந்த இணைகள் விரும்பினால் மணவிலக்கும் செய்துகொள்ளலாம். அதற்கு அவர்கள் சமுதாயம் இடமளிக்கிறது. கணவன் இறந்தபின் மனைவி மறுமணமும் செய்து கொள்ளலாம். வயது வந்த பிள்ளைகள் இருந்தாலும் கூட மனம் நாடினால் வேறு ஒருவனுடன் புது வாழ்க்கைத் தொடங்கலாம். ஆனால் சீதனமாகப் பெற்ற எருமைகளைத் திருப்பித்தரவேண்டும்.

பாண்டம் வழிவந்தவர் என்று கூறுதற்கிணங்க, ஒரு சகோதரன் மறைந்தால் அவன் மனைவியையும் மனைவி மறுமணம் செய்து கொண்டால் அவன் பிள்ளைகளைப் பாதுகாப்பதும் மற்ற சகோதரர்களின் பொறுப்பாகிறது.

காலத்தின் மாறுதலால் சிலர் மதம் மாறுவதலும், வேற்று [illegible] திருமணம் செய்து கொள்ளுதலுமான நிகழ்ச்சிகளும் இடம்பெறுகின்றன. வேறு இனத்தில் மணம் புரிந்து கொண்டவர்களையும், மதம் மாறியவர்களையும் பொதுவாகத் தங்கள் இனத்திலிருந்து விலக்கி விடுகின்றனர். ஆனால் இனத்துமக்கள் கல்வி பயிலவும், பணிபுரியவும் தடை ஏதும் இல்லை. முன்னேற்றம் வரவேற்கப்படுகிறது.

'குடும்பநலத்திட்டத்தில்' இவர்கள் ஆர்வம் காட்டுவது இல்லை. காரணம்? இனப்பெருக்கம் தேவை என்ற ஒரே எண்ணம் தான். அருகி வருகின்ற தங்கள் மக்கள் தொகையினை விரிவாக்கவேண்டும் என்ற கடமையும் காரணமாக அமைகின்றது.

தோடர் இனத்துப் பெண்கள் கட்டுடல் வாய்ந்தவர்கள் 'மட்கேள்' என்றுரைக்கப்படும் முறையில் சடை, சடையாகத் தங்கள் தலைமுடியைச் சுருட்டிக் கொள்கின்றனர். 'பூத்குளி' எனப்படும் பூவேலை செய்யப் பட்ட சால்வைகளைத் தைக்கின்றனர். 'பூத்குளி' புகையிலையைக் குதப்பிக்கொண்டு, திறந்வெளியில் அமர்ந்து விரைவாகப் பூவேலை செய்வார்கள். அப்போது அவர்கள் அதரங்கள் இசைக்கும் நாட்டுப் பாடல்கள் எத்தனையோ! எத்தனையோ!

பூவ் ஒய்துர் கொட்குர் வீய் ஆ ---- ஆ ----
நெஞ்சிலே நிம்மிதி ஒட்தி ஆ ---- ஆ ----
போன்ஞர் வாது வோர்பினி -----
பாட்ட பாடிப்பிணி நின்ன மறனி
நின் அன்பு மறனி -- ஆ-- ஆ- ஆ---

இந்த நாட்டுப் பாடல் ஒரு காதலி தன் காதலனை நாடிப் பாடுவதாக அமைந்தது.

(அன்பே! நீ தந்த புதுக்கைக்குட்டை கட்டியபிறகு
நெஞ்சிலே நிம்மதி இல்லை.
வானத்திலே பறப்பேன்.
பாட்டைப்பாடுவேன் உன்னை மறவேன் உன்னுடைய அன்பை மறவேன்.)

அவன் தந்த ஆடையை அணிந்தபின் அவள் மனதின் நிம்மதி சென்றுவிட்டது என்கிறாள். உன்னை - உன் அன்பை மறவேன் என்கிறாள்.

எக்குலத்தில் பிறந்தவராயினும், ஏற்றமிகு நற்கல்வி கற்றவராயினும், பாமரராயினும் மனிதமனத்தினை ஒரே முறையில் ஆட்டுவிக்கும் சக்தி வாய்ந்தது அன்பு மட்டும்தான். இம்மை மாறி மறுமையாகினும் நான் உன் நெஞ்சில் வாழவேண்டும் என்கிறாள் சங்க காலத்தலைவி! அக்கருத்தையேதான் இந்த நாட்டுப்பாடலும் விளக்குகிறது.

நெஞ்சம் - என்ற சொல், அன்பு என்ற சொல் இரண்டும் தமிழில் இருந்து தோடமொழிக்குச் சென்று உயர் தனிச் செம்மொழியின் மாண்பினையும் திராவிட மொழிகளின் இணைப்பையும் காட்டுகின்றன.

பெரியமந்துகளில் - அதாவது ஆலயம் இருக்கும் கிராமங்-களில் மாமிசம் சமைப்பது இல்லை. அதேபோல் எருமைகள் இல்லாத மந்துகளில் பால்சோறு ஆக்குவதும் இல்லை. மறுமணம் செய்யவும், மண விலக்கு பெறவும் உரிமை பெற்ற பெண்ணினம் கோவிலுக்குள் செல்லக் கூடாது என்று தடுக்கப்பட்டதும் வியப்பைத் தருகிறது.

இறப்பு என்பது உலக இயற்கை தானே! தோடர் குலத்தில் யாராவது இறந்தால் பூவேலை செய்யப்பட்ட 'பூக்குளி'யைப் போர்த்துவார்கள். கால்கட்டை விரல்களைக் கருப்புக் கயிற்றால் இணைப்பார்கள்! நெற்றியில் பழைய ஒரு ரூபாயை வெள்ளிப் பணமாக வைப்பார்கள். அட்டையில் கருப்பு நூலால் பூவேலைப்பாடு செய்து இடையிடையே மணிகள் பதிக்கப்பட்டக் 'கல்லு' எனப்படும் கற்பூக்களைப் பிணத்தின் கட்டிலில் தொங்கவிட்டு அழகுபடுத்துவார்கள். இடுவதும், சுடுவதும் தொன்றுதொட்டு வழங்கும் பழக்கம்தானே! அதில் சுடும் முறையைத் தோடர் பின்பற்றுகின்றனர். கட்டிலோடு-இறந்தவர் பயன் படுத்திய பொருட்களையும் போட்டு எரிப்பர். இன்றும்கூட எருமையைப் பலிகொடுக்கும் வழக்கம் இருக்கின்றது. செத்தவருக்கு எருமைப் பலி கொடுக்காவிட்டால்-சொர்க்கவாசல் திறக்காது என்ற நம்பிக்கையே காரணமாக அமைகின்றது.

பெயர்சூட்டல், திருமணம், கோவில் விழாபோன்ற -வைகளில் கூட்டமாச இணைந்து அவர்கள் பாடி, ஆடும் நடனங்கள் புகழ் வாய்ந்தவை.

கார்புள்ச் வோர்க்கிலுல் நின்
மொன்சார் போர்பினிஸ் இன்
உஞ்சுர் திக்கோட்னு ர் இன்
ஒர்க் ஓஸச் எகோலான் .....

(கரும் பறவையைப் போல நீ பறந்து சென்றபின்னுல் உன்
மனதார நீ இச்செயலைச் செய்து முடித்தபின்னுல் இப்போது
எண்ணி, எண்ணி ஏங்கினுல் யாரிடம் சொல்வது தோழி).

இப்பாடலில்—
எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவ மென் திழுக்கு — என்ற வான் புகழ் வள்ளுவனின் தேன் குறள் மணம் வீசவில்லையா? கல்தோன்றி மண்தோன்ருக் காலத்தே முன் தோன்றி மூத்த குடியினரின் பண்புகளும், சொற்களும் இப்பழங் குடியினரின் பாடல்களில் சமழக் காணலாம். புள் — எனும் பறவையைக் குறிக்கும் சொல் கார்புள் — கருப்பறவை என்று எடுத்தாளப்பட்டுள்ளது. மனது என்னும் சொல் மொன்சு — என்று சிதைந்து வழங்குகிறது.

காலவேகத்தால் புதிய பண்புகளை, மரபுகளை பழக்க வழக்கங்களை ஏற்றுக்கொண்டு தயங்காது முன்னேறிவிட்ட இனம் படகர் இனம். பயிரிடப்படாத புதுமண்ணில் விளைக்கப்பட்ட விதைகள் விரைந்து செழித்து வளர்வது போலக் கல்வியில் — கைத் தொழிலில், அரசியலில் சமூகத்தில் நல்ல இடத்தைப் பெற்று விட்டார்கள். அவர்களது நாட்டுப் பாடல்களில் நல்ல கருத்தைக் கொண்ட ஒன்றினைக் காணபோம்.

"ஒத்தோடி பாரி ஒன்னுக உறண
கத்துக கட்டி நிங்க உங்கரமணி
கத்து சீமெ எல்லா சுத்திஉறகி
ஒந்தின பீயலி ஒசகெய நீ"
விரைந்தோடி வா! பெண்ணுக்குப்
பரிச பணம் கொண்டுவா!
மோதிர வடிவான கழுத்தணியை அணிவித்து
பல ஊர்கள் சுற்றி
ஆடிப்பாடி வருவோம் வா!

என்னும் கருத்துக் கொண்டது பாடல்—
பெண்வீட்டாரைக் கசக்கிப் பிழிந்து வரதட்சிணை வாங்கும் வழக்கம் ஒழியவேண்டும் என்று புரட்சி செய்து வருகின்ருேம். ஆனுல் அன்றைய பழங்குடி மக்களிலே பெண் சிறந்தவளாகக் கருதப்பட்டாள். அன்றும், இன்றும் நூறு ரூபாய் பெண்ணுக்குப் பரிசமாக அளிக்கப்

பட்டு வருகிறது. எனும் புதிய கருத்து இப்பாடலில் பொதிந்து நிற்கிறது. தாலி அணியும் பழக்கம் இன்றுதான் பிற்பற்றப்படுகிறது. ஆனால் அந்நாளில் மோதிர வடிவில் அமைந்த வளையம் கழுத்தில் கோர்த்து அணியப்படும் என்று அறிகிறோம்.

நீலமலையின் பழங்குடியினரின் நாட்டுப் பாடல்களும், நம்பிக்கைகளும் புதுமையானவை! சில, காலத்தால் மாற்றப்பட்டு வருகின்றன. சில, காரணம் தெரியாவிட்டாலும் பின்பற்றப்பட்டு வருகின்றன. காலத்தால் மாறிவிட்ட கருத்துக்கள் எவை? மாறாதவை எவை? ஏன் அவை மாறவில்லை? என்பன போன்ற கருத்துக்கள் பொறுமையுடன் ஆராயவேண்டியவை. கடலில் மூழ்காத சில துளிகள் இவை. மக்களின் தொடர்பற்ற, மறைவிடங்களில் வாழும் பழங்குடியினரின் நம்பிக்கைகளை எழுதுவது எளிது. ஆனால் பன்னாட்டு மக்களும் வந்துசெல்கின்ற - வாழ்ந்து நிற்கின்ற நீலமலையின் பழங்குடியினரின் நாட்டுப் பாடல்களும், நம்பிக்கைகளும் பழமைக்கும், புதுமைக்கும் பாலமாக அமைந்தவை. முயற்சி எந்த அளவில் வெற்றி பெறும் என்பதற்குக் காலந்தான் விடை கூறவேண்டும்.

⁂

கட்டுரை படிக்கப்படும் வாய்ப்பு கிட்டினால் செய்முறையாக விளக்கக்கூடிய செயல்கள்.

1. பூல் ஆரிச் என்னும் கடிலின் மாதிரி.
2. பூக்குளி என்னும் சால்வை.
2. கவ்வு என்னும் மலர்கள்.
ச. எடுத்துக்காட்டப்பட்ட பாடல்களை அவர்களைப் போலவே இசையுடன் பாடுதல்.

⁂

ரா. ஆ.

# K O N G U C O U N T R Y U N D E R T H E N A Y A K S
# O F M A D U R A I .

P.Munirathinam Chetty,M.A.,
Asst. Prof. of History,
Sri.Vasvi College,
Eorde.

The birth of Vijayanagar Empire was a terrible menaace to the Muslims. They sent expeditions to attack the Muslim possessions. The Southern expedition was taken by Kumana Kampana, the brother of Harihara I. He crushed the Muslim Suban of Madurai between 1343 and 1356. Ultimately the Muslim Power in Madurai ended. Kampana conquered the Kongu Country, consisted of Coimbatore and Salem Districts. He rebuilt the Kuraiyur Temples. Inscriptions of Harihara II, Devaraya I and Devaraya II found in Kongu country testifies the existence of the rule of the Vijayanagar Kings in Kongu country.

During the rule of Devaraya II, two Viceroys, Aakkana and Madana were ruling over the Tamil country. They had their head quarters at Madurai and Thanjavur respectively. Lakkana extended the power over Kongu country. After their rule, Kongu country was separated because of the conflict with the Muslims of the Deccan. During the rule of Krishna Deva Raya (1509-1529) the Kongu country was again brought under the rule of the Vijayanagar Empire.

Krishna Deva Raya conquered the Kongu country, the Madurai and the Thanjavur terrotories. The Kongu country became a part of the Madurai country and came to be ruled by the Nayakas of Madurai, the rulers appointed by the Vijayanagar Emperors. Kongu country remained under the Nayakas for about 270 years from 1530 to about 1700. During this period, the history of the Kongu country became the history of the Nayakas of Madurai.

Nayaka Kingdom of Madurai:

Krishna Deva Raya founded the Nayaka Kingdom of Madurai. He came to South India about 1520 and appointed Vira Narasimha as the Governor of the Chola country of Nagama as the Governor of the Madurai country. In 1529, both these divisions were made one and Viswanatha, son of Nagama was appointed as the Nayaka of Madurai.

Viswanatha Nayaka (1529-1564)

He was a great warior and a statesman. He constructed the fort of Madurai with 72 vastions. He cleared the jungles of thieves and robbers on both the sides of Cavery. He fortifie Trichi and subdued the Pandiya Princes of Tiruneveli. His terriotios extended to Modern districts of Madurai, Ramanathapuram, Tiruneveli, Trichi, Coimbatore and Salem and some parts of Kerala State. He devised all the territories, with the help of Ariyanatha, a system called the 'PALAYAM SYSTEM'. He divided the territories into 72 palayams and placed each of them in change of a local Chieftain called a "PALAYAKAR" OR "POLLIGHR". Two such palayars were established in the Kongu country. One representing the GETTY MUDALIARS of Omalur and TARAMANGALAM. The second representing the chieftains of SENDAMANGALAM. All poligars were to maintain proops for the defence and the carry on civil administration.

They had to pay 1/3 of theland revenue collected as tribute. They had to restore peace and Order in their respective terriotires and to improve agricultu e. This system sometimes had in it the seeds of misurle. The palayakara might appeess and tyrannise the people. But at the same time it had the seeds of very good administration. The palayakars of Viswanatha Nayaka had done much for th he country by founding villages, building dams, constructing tanks and erecting temples. Viswanath Nayaka renovated the temples of Tiruchi and Srirangam.

Krishnappa Nayaka (1564-1572)

Viswanatha Nayaka was succeeded by Krishnappa Nayaka. He suppressed the revolt in Paramakudi Palayam. He led a strong expedition to Ceylon. He defeated the king of Ceylon and appointed his brother-in-law as the king of Ceylon. He sent his troops and aids to Vijayanagar during the Battle of Talikota in 1565.

Virappa Nayaka (1572-1592)

Virappa was the son and successor of Krishnappa Nayaka. Virappa Nayaka gave peace and prosperity to his kingdom. He suppressed as a Pandyan Rebellion. Like his successors, he also remained loyal to Vijayanagar Empire. He improved the Fort of Triuchi and byilt walls of the Chidambaram Temple. Many manyams were granted to Chidambaram Temple by him. He improved the Minakshi temple at Madurai.

Krishnappa Nayaka II

He was the son of Virappa, Nayaka. He ruled the country for only few years from 1595-1601.

Muttu Krishnappa Nayaka (1601-1609)

He was the son of Visvappa brother of Krishnappa. He put down the political power of Portuguese. During his time Robert de Nolili came to the Madurai Mission and launched his missinary activities in Kongu country of Madurai. Robert second greater influences in Kongu country. He secured friendly relations with Ramachandra Nayaka of Sendamangalam and Selapti Nayaka of Salem the two tributaries of the Nayakas of Madurai. Kongu country enjoyed peace and free from foreign invasion.

Muttu Virappa Nayaka (1609-1623)

He was the son of Muttu Krishnappa. The foreign invasion over Kongu country had started Ja-

ggaraya, the emperor's brother in law revolted in Vijayanagar and invaded Tamil country togather strength. Muttu Virappa did not like to interfere in the Emperors and joined with Jaggaraya. But in the latter of Toppur (1616) he was defeated and Jaggarava was killed.

Tirumalai Nayaka (1623-1659)

Kongu country became worse during t e rule of Tirumalai Nayaka. He was the younger brother of Muttu Virappa Nayaka. Tirumalai was the greatest among Nayakas of Madurai. He raised on army of 30,000 men. He shifted his capital from Tiruchi to Madurai. He refused to pay tribute to Vijayanagar.

When the Vijayanagar emperor Sri.Rnga who had by now bost everything save a small territory around Vellore, came to attack him. He made alliancew with other Nayakas and when the Nayakas failed to help him, he induced the sultan of Golkonda to attack Vijayagar and thereby ccompelled Sri.Ranga to rush to the north. The ruler of Mysore conquered some parts of the Kongu country but Tirumalai Nayaka could not drive away the Mysore forces. Tirumala was a very good stateman and by his immortable passion for all that is, beautifyl and boble in art, architecture and religious, he left an imperishable name behind. His splendid moments, such as his palace, are the artistic wonders for all ages. He frequently tour his kingdom to redess the grievances of the people.

Chokkanatha Nayaka (1659-1682)

He was oonly 16 years of age when he became the Nayaka. During his rule, the Mysore kingdom occupied large parts in Kongu country. From about 1670, the inscriptions of Devaraya Wodayar and Chokka are found in the Coimbatore and Salem district. Chokkadeva Raya fought against him in the battle at Erode and large part of the territories were concured.

Ranga Krishna Muttu Virappa Nayaka (1682-1689)

He had great diffulcty in re-establishing his authority in his Kingdom. He managed to enjoy some parts of Kongu country. After him, Rani Mangammal, the wife of Chokkanatha Nayaka became the ruler the regent of the minor king. During this period, Aurangazib despatched his generals to the South. The maratha also despatched the lightning expeditions to the South. The queen had to face all troubles from both the Muslims and Manathas. Chokkadeva of Mysore invaded her territories in Coimbatore and Salem. In spite of all troubles, she proved to be a benevolent ruler.

Vijayaranga Chokkanatha (1706-1732)

After the death of the Rani Mangammal Vijayaranga Chokkanatha became the ruler. Madurai now entered into Marava politics Dodda Krishna Raja of Mysore came and occupied entire Kongu country. During the reign of Minakshi (1732-1736) the wife of Vijayaranga, nothing was left for her to govern in the Kongu country. Muslims invaded Madurai. Minakshi committed suicide and the whole of Madurai kingdom passed into the hands of the Muslims.

Kongu Country under Nayaka Rule:

For about two centuries from the time of Viswanatha to the time of Vijayaranga Chokkanatha, the Kongu country was under the rule of Nayakas of Madurai. The Nayaka, was autocratic. He was the head of the army the executive and Judiciary. His was wad law. All the nayakas draw to ride rough-shod over Hindu traditions sanctioned by the Sastras.

The Nayaka was assisted by the advice of a council of high officers of ministers. This council consister of the Dalavay, the Pradhani, the Rayasan the

Kannakkan and the Stannati.

| | | |
|---|---|---|
| The Dalavay | - | The P.M. or the com ander in cheif powerful in Military and Civil Administration. |
| The Pradhani | - | The finance Minister |
| The Rayasam | - | The chief Secretary, thehead of the whole administrative machinery. |
| The Kankkan | - | The Accountant in change of the audit department. |
| The Stanpati | - | The Foreign Secretary. |

Under the Dalavay there were provintial governers, each in charge of province consisting of two or more palayams. The kingdom was protected from invasion by a number of forts wellbuilt and well-garrisond at strategic places like Dindigul, Dharapuram, Coimbatore, Satyamangalam, Erode, Karur, and Attur and Namakkal, Sendamangalam, Salem, Melur. Besides these forts t ere are famous fortresses of Madurai and Tiruchi.

Each fort was in charge on com ander and all commanders were under the control of the Dalavay.

The army of the Nayakas consister of the infantory, the cavelry and the lephants. The artillery was fast becoming popular. Gums. Swords, lances, bows and arrows and shields formed their chief weapons.

Each pvovince or palayam was divided into a number of Nadus Seemais or Maghanams. The smallest division is the village. The village was called in various names as the Gramam, the Mangalam, the Samudram, the Kudi, the Ur., the Puram, the Kulam, the Kurichi, the Patti. We do not know the officers in charge of each of these divisions. The village assembly still played a vital part. Maniyakaran of Kankkan Pillai were the village Officers. The chief source of revenue of the Nayakas was land. Agriculture was encouraged, the large tracts of waste lands were undertaken. The assessment was fixed ~~on the~~ village and

that the ryots shared it among themselves.

The palayakaras paid tributes to the Nayaka. various profession taxes, import and export duties, transit duties, recipts from fines and royalties formed other sources.

The Nayakas collected these source and utilised the surplus revenues for the renovations of old temples, building of new temples, and on irrigation. The Palayakars also maintained the army. The civil and Military Officers were paid mostly in Maniums.

The Nayakas did very little to encourage towards trade. They had no navy. The foreign trade was in the hands of the portuguse and the Dutch. The roads were generally unsafe and infested thieves and robbers. In the field of religion, the Nayaks did all their best to place Hinduism on a firm footing. They showed benefactions equally on both the Saivites and the Vaishnavites. They encouragedseveral Telugu communities such as the Kammalars, the Kaikolars, the Reddis, the Sourashtras etc. to come and settle in Tamil country No religious or communal quarrel or disturbances took place during their rule.

Telerations were extended to Christians and Muslims alike. Education was taught in hundrds of temples amd Muths. They endowed by royal Grant. The Nayakas encourages Sanskrit, Telugu and Tamil.

****-

# குளம்தொட்டு வளம்பெருக்கிய கோவை மாவட்டம்

(ஆர். வசந்தகல்யாணி,
கல்வெட்டாய்வாளர்,
தொல்பொருள் ஆய்வுத் துறை,
சென்னை-28).

***

கோவை மாவட்டம் என்று சிறு அளவில் உள்ள இந் நிலப்பரப்பு முன்பு கொங்கு நாட்டின் பகுதியாய் அமைந்திருந்தது. இம்மாவட்டத்தில் சங்கம் தொட்டு இன்று வரை பல ஆறுகளும், குளங்களும் நிறைந்து இப் பகுதியை ஓரளவு செழிப்பாக்குகிறது. இப்பகுதி நீர்ப்பாசன வசதிபற்றி ஆராயப் புகுவதற்கு முன்பு திரு. உறட்சன் என்பாரின் 1807-ம் ஆண்டு செப்டம்பர் 10-ம் நாள் கோவை மாவட்ட வருவாய் பற்றிய அறிக்கை-யிலிருந்து சில குறிப்பு நோக்கத்தக்கது.

"பரந்து காணப்படும் இம்மாவட்டத்தில் எவ்வளவு சிறிய நிலப்பகுதி நெல்விளையும் பகுதியாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. 1,045,116 காணி நிலத்தில் 37,807 காணி நிலம் மட்டுமே நஞ்சை நிலம். அதாவது மொத்தத்தில் மூன்று விழுக்காடு மட்டுமே இந்த நஞ்சை நிலமும் கிணறு, ஆற்று நீரையே பெறுகின்றன. நிலமெல்லாம் மழையையே நம்பி இருக்கின்றன. மழை அதிகமாயின் பயிர் அபரிமிதமாகவும், மழை குறைந்தால் பயிர் குறைவாயும் விளையும் நிலை" என்கிறார். இவ்வாறு இயற்கையால் புறக்கணிக்கப்படும் நிலையுணர்ந்து மன்னவர்களும், மற்றவர்களும்,

"காடுகொன்று நாடாக்கிக்
குளம்தொட்டு வளம் பெருக்கி"

இப்பகுதியைச் செழிப்பாக்கினர் என்பதில் ஐயமில்லை.

ஆறுகள்: இம்மாவட்டத்தின் ஆறுகளில் முதன்மையானது காவிரி மைசூர் மாநிலத்தில் தலைக்காவிரியில் தோன்றிய காவிரியாறு சேலம் மாவட்டத்திலுள்ள ஒகனேக்கல் என்ற இடத்தில் தமிழ்நாட்டில் புகுந்து மேட்டூர் அணையை நிரப்பிய பின் கோவை மாவட்டத்திற்கு வருகிறது. இம்மாவட்டத்தில் 180 மைல் பாய்ந்து, பின் திருச்சி மாவட்டத்திற்குள் நுழைகிறது. கேரளத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையில் தோன்றிய பவானி ஆறு அவிநாசி வட்டத்தில் காவிரியில் இணைகிறது. கோவை

பக்கம் உள்ள வெள்ளியங்கிரி மலையில் தோன்றிய நொய்யல் ஆறு கோவை பல்லடம், தாராபுரம் வட்டங்கள் வழியே பாய்ந்து திருச்சி சென்று காவிரியுடன் கலக்கிறது. கேரளத்திலுள்ள மூன்னாறு என்ற இடத்திலிருந்து புறப்பட்டு அமராவதி ஆறு உடுமலைப்பேட்டை, தாராபுரம் ஆகிய வட்டங்களில் பாய்ந்து திருச்சி மாவட்டத்தில் காவிரியுடன் கலக்கிறது. பொள்ளாச்சி வட்டத்தில் தோன்றும் ஆளியாறு கேரளத்தில் உள்ள பாரதப் புழா என்ற நதியோடு இணைந்து விடுகிறது. உடுமலைப் பேட்டை வட்டத்தில் தோன்றிப் பாய்கிறது பாலாறு. இவை தவிர சிற்றாறுகளும் காட்டாறுகளும் இம்மாவட்டத்தில் பாய்ந்து வளம் சேர்க்கின்றன.[1]

மேற்கூறிய ஆறுகளில் காவிரி, ஆன்பொருநையான அமராவதி, காஞ்சிநதியான நொய்யல் ஆகியவை சங்கப் பாடல்களில் புகழப்படுகின்றன.

"தீம்புனல் ஆயமாடும் காஞ்சியம் பெருந்துறை"
(பதிற்றுப்பத்து-48)

என்று காஞ்சி மாநதி குறிக்கப்படுகிறது.

" குலவுசினைப் பூக்கொய்து தண்பொருநைப் புனல்பாயும்
விளைவொரு புகழ் விறல்வஞ்சி" ( புறம் 11)

" செறியரி சிலம்பிற் குறுந்தொடி தெற்றியாடும்
தண்ணான் பொருநை" (புறம் 36)

" புல்லிலை வஞ்சிப் புறமதில் அலைக்கும் கல்லென் பொருநை"
(புறம் 387)

என்றும் பொருநையாறு புகழப்படுகிறது. நீர் குறைவாக இருப்பின் கல்லென் ஒலிவராது. ஆயின் பொருநையாறோ வஞ்சியின் புறமதிலை அலைத்துக் கல்லென்ற ஒலியுடன் ஓடிப்பாய்கின்றது. ஆறுகள் பாய்ந்து ஓடிய கொங்கு நாட்டிலும் நீருக்குப் பஞ்சம் இருக்கவே செய்திருக்கிறது என்பதைப் பதிற்றுப்பத்துப் பாடல் வரிகளால் அறிந்து கொள்ளலாம்.

" பொன்செய் கணிச்சித் திண்பிணி யுடைத்துச்
சிரறு சிலவூறிய நீர்வாய்ப் பத்தற்
கயிறு குறு முகவை மூயின மொய்க்கும்.
ஆகெழு கொங்கர் நாடு[2]

1. தமிழ்நாடு மாவட்டக் குறிப்புகள் தே.ப.பெருமாள்.
2. பதிற்றுப்பத்து. 22.

இங்கு குறிக்கும் உவமைகளை நோக்கின் எந்த அளவு நீர் பற்றுக்குறை இருந்தது என்பது புலனாகும்.

தமிழ் நாட்டில் மற்ற மாவட்டங்களைப் போல் அல்லாமல் கோவை மாவட்டத்தில் மழை குறைவு. பெரும்பாலான நிலங்கள் வானத்தைப் பார்த்தே விளைய வேண்டியவை. எனவே கொங்கு நாட்டை ஆட்சிபுரியத் தொடங்கும் ஒவ்வொரு அரசனும் நீர்ப்பாசன வசதிகளை செய்யத் தவறவில்லை.

கி.பி.5ஆம் நூற்றாண்டு தொடங்கி ஆட்சி புரிந்த கங்கர்கள் காலத்தில் பவானி, நொய்யல், அமராவதி நதிகள் மூலம் நீர்ப் பாய்ச்சல் வசதிகள் செய்யப்பட்டன. பல அணைகள் கட்டி வாய்க்கால் வசதியாக ஆற்று நீரைப் பாய்ச்சினார்கள். மேலும் பல காட்டாறுகளைத் தேக்கிக் குளங்களும் குட்டைகளும் உண்டாக்கினார்கள்." என்று தாம் எழுதிய "கொங்கு நாட்டு வரலாறு" நூலில் ம.ராமச்சந்திரன் செட்டியார் குறிப்பிடுகிறார். ஆயின் கல்வெட்டு ஆதாரங்கள் இல்லை.

கங்கர்களுக்குப்பின் கி.பி.பதினோராம் நூற்றாண்டு முதல் சிறப்பாக ஆட்சிபுரிந்தவர்கள் கொங்குச் சோழர்கள். இவர்கள் காலத்தில் நீர்ப் பாசன வசதி மிகவும் உன்னத நிலையை அடைந்திருந்தது என்பதற்கு ஏராளமான கல்வெட்டுகள் சான்று தருகின்றன. பேரூருக்கு அருகே நொய்யல் ஆற்றின் கரையில் சோழன் படித்துறை என்றே இன்றும் வழங்கப்படுகிறது. எனவே வரலாற்று அறிஞர்கள் இது சோழன் பூர்வபட்டயம் புகழும் கரிகாலன் கட்டியதாக இருக்கலாம் என்று கருதுகின்றனர்.[3] மற்றும் கோயில் வழிபாட்டிற்காகவும் பொது மக்களுக்காகவும் பல கிணறுகளும் குளங்களும் வெட்டப்பட்டன.

கோயிலுக்குக் கொடுக்கப்பட்ட குளங்களும் கிணறுகளும்:-

விக்ரம சோழனின் ஐந்தாம் ஆட்சியாண்டில் (1009 கி.பி) பாட்டாலி என்ற ஊரைச்சேர்ந்த மக்கள் ஒரு நந்தவனத்தையும் நீர்ப் பாசனக்கிணற்றையும் கோயிலுக்கு விற்றுக் கொடுத்தனர் என்று

3. Kongu History by M.Arokiyasamy.

அரசன் பாளையம் பல்லவனீஸ்வரசாமி கோயில் கல்வெட்டு குறிக்கிறது. தாராபுரம் வட்டம் பறஞ்சேர்வள்ளி என்ற ஊரில் மத்யபுரீஸ்வரர் கோயில் கல்வெட்டு விக்ரம சோழ தேவன் 'காங்கய நாட்டுப் பறஞ் சேரு வள்ளி பிடாகையார் கொடிபாடியம் மலைவரையில் கொளமும்' கொடுத்தான் என்று கூறுகிறது.[5] தாராபுரம் வட்டம் கீரனூரில் உள்ள சிவன் கோயில் கல்வெட்டு குளமொன்றை தேவதானமாகக் கொடுத்ததைக் குறிக்கிறது. கோவிராஜாதிராஜ தேவர்க்கு ஆட்சியாண்டு மூன்றுவது காங்கய நாட்டுக் கீரனூர் ஆளுடையார் ஆதி நாதீஸ்வரமுடையார் மகா தேவர் கோயிலில் தேவகன்மிகளுக்கு அரசன் கொடுத்த ஓலைப்படி இவ்வூருக்கு வடக்கு மணங்காட்டுக் கொளமும் கொளக்கீழ் நிலமும் இறையிலி தேவதானமாகக் கொடுக்கப்பட்டது.[6]

கொடுவாய் விண்ணிறைந்த பெருமாள் கோயில் கல்வெட்டு இராஜாதி ராஜ வீரசோழன் (1117-1135) கோயிலில் ஒரு தீர்த்த கிணறு தோண்டியதைக் குறிக்கிறது.

தாராபுரம் வட்டம் பறஞ்சேர்வள்ளி என்ற ஊரில் மத்யபுரீஸ்வரர் கோயில் கல்வெட்டு

"ராஜாதிராஜ வீரநாராயண வீரசோழதேவற்கு செல்லா நின்ற யாண்டு ஒன்பதாவது காங்கிய நாட்டில் பறஞ்சேருவள்ளியில் மாதேவர் நட்டூர் அமர்ந்தார்க்கு பல நிமந்தப் படிக்கும் தீபாராதனைப் படிக்கும் இவ்வூரார் பிடாரியூர்க்குப் போம் வழிக்கு கீழ்பாகம் கொளம் குடுத்தோம். இக்கொளத்துக்கு வீரசோழவளநாட்டில் உத்தம சோளசதுர்வேதி மங்கலத்தில் வாய்க்கால் நீர் பாயதாகவும், யிதக்குநெலம் அரைக் கடவதாகவும் பறஞ்சேருவள்ளியில் நெலத்திலே புஞ்சை நீக்கி நஞ்சையில் குடுத்தோம்"[7] என்று குறிக்கிறது.

கருவூரில் உள்ள கருணாகரப் பெருமாள் தேவதானத்தில் உள்ள ஒரு கல்வெட்டு கோனேரின்மை கொண்டானின் 20-ம் ஆட்சியாண்டில் " வடபரிசார நாட்டுப் பளங்கருவூரில் வீரசு சேந்திர விண்ணகரப் பெருமாள் கோயிலில் ஸ்ரீகார்யம் செய்கிறவர்களுக்குக்குடுத்தபரிசாவது'

---

4. A.R.E.258/1920.
5. தென்னிந்திய கோயிற் சாசனங்கள் பாகம் 1 சாசனம் 318.
6. தென்னிந்திய கோயிற்சாசனங்கள் பாகம் 1 சாசனம் 301.
7. தென்னிந்திய கோயிற் சாசனங்கள் பாகம் 1 சாசனம் 301.

இவ்வெம்பெருமானுக்கும் அமுதுபடிக்கும் பலபடி நிமந்தங்களுக்கும் குடுத்த குளமாவது கருவலூர் புஞ்சன்குளம்" இக்குளம் பழுதுபார்க்கப்பட்டு அக்குளத்து நீரைச் கோயில் நிலங்களுக்குப் பாய்ச்சி அதனால் வரும் வருவாய் கோயில் வழிபாட்டிற்கும், விளக்கெரிக்கவும் கொடுக்கப்பட்டது.[8]

கோபிசெட்டிபாளையம் வட்டம் பாரியூர் விடங்கேஸ்வரர் கோயில் கல்வெட்டு கோனேரின்மை கொண்டான்" அரையன் குளம்" என்ற குளத்தைப் பாரியூர் அமரவிடங்கேஸ்வரப் பெருமானுக்கு தேவதானமாக அளித்ததைக் குறிக்கிறது.[9]

அடுத்து கோனேரின்மை கொண்டான் என்று குறிக்கப்படும் பல கல்வெட்டுக்கள் சிறந்த நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுக்கப் பட்டதைக் குறிக்கிறது. திரிபுவன சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டா-னின் 17ஆம் ஆட்சியாண்டில் ஆணையொன்று விடுக்கிறான். புகழிடங் கொண்ட சோழ சதுர்வேதிமங்கலத்துச் சபையாரும், பேரூர் ஊரவரும் வேண்டிக் கொண்டபடி தேவசிறை என்ற அணையை அவர்கள் கிராமத்து எல்லையில் கட்டவும், அவ்வணையின் நீரைக் கோனூர் என்ற அணைக்கு இடைஞ்சலின்றிக் கொண்டு சென்று புதிதாகப் புகழிடங்கொண்ட சோழ நல்லூர் என்ற கிராமத்தை அமைக்கவும் அனுமதி தருகிறான். இந்த ஆணையில் இராஜேந்திர பிரம்ம மாராயன் என்பவன் கையெழுத்திட்டிருக்கிறான்.[10] சேரமன்னன் இரவிகோதையின் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டொன்று ஈரோட்டைச் சேர்ந்த வஞ்சி வெண்தாழி என்னும் தென்னவன் பொறையன் என்பான் தென்னூர் மக்களிடமிருந்து நிலம் பெற்றுக் கொண்டதையும் தன்னுடைய பெயரால் தாழிஎரி என்ற ஏரியை வெட்டுவதற்காக ஈரோட்டுச் சபையாரிடன் ஐம்பது கழஞ்சு பொன் அளித்ததையும் குறிக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு ஒரு கலம் நெல் வட்டியாகப் பெற்று அக்குளத்தைப் பராமரிக்க வேண்டுமெனவும் குறிக்கிறது.[11]

13-ம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் பாண்டிய மன்னர்களின் பிரதிநிதிகள் கொங்கு நாட்டில் ஆட்சி புரிந்தனர். வீரபாண்டியன்

8. தென்னிந்திய கோயிற்சாசனங்கள் பாகம் 1 சாசனம் 206.
9. தென்னிந்திய கோயிற் சாசனங்கள் பாகம் 1 சாசனம் 294
10, A.R.E. 1958-59.
11. Damilica Vol.I.

சுந்தரபாண்டியன் என்ற இருவரின் கல்வெட்டுக்களும் அவர் காலத்தில் நீர்ப் பாசன வசதியில் எத்தகையதொரு மேம்பாடு இருந்தது என்பதைக் காட்டுகிறது. கி.பி. 1270-ம் ஆண்டு (அரசனின் ஐந்தாம் ஆட்சியாண்டு) ஒரு ஆணை பிறப்பிக்கிறான். அதன்படி விசியமங்கலத்து ஆறும் ஆருளிகளுக்கும் அங்களுடைய வாகைப்புத்தூரில் வடக்கு வாசலில் வாணக்குளம் நெடுநாள் பாழ்பட்டு கிடைச்சுதாக கேட்டோம் இக்குளம் நங்களூர் நாயனார் திருநாகீசுவர முடையார் திருக்கரம கோட்டத்தாளுடைய நாச்சியார்க்கு அமுதுபடி சாத்துபடி உள்ளிட்ட வெஞ்சினம் பலபடி நிமந்நிவத்துக்கு, இக்குளம் வீரபாண்டிய பேரேரியெனவும், இக்குளமும் இக்குளக்கீழ் நிலமும் நீர்யேற யிடமெல்லாம் யிறையிலி தேவதானமாக ஈட்டும் விடுகறெனத் தொண்டுவாரம் குடுக்கும் போதவார்களாக, இக்குளக்காலுள்ள அளிவு சோர்வு தாங்களே செய். வார்களாக.[12] இவ்வாறு ஏரிகள் பலபழுது பார்க்கப்பட்டுப் பாசன வசதிக்குக் கொண்டுவரப்பட்டன.

கி.பி.1288ம் ஆண்டு வீரபாண்டிய தேவன் வடபரிசார நாட்டில் ஒட்டாரான பெரும்பழனத்துச் சபையாருக்கு ஆணையொன்று இடுகிறான். அவ்வாணையின்படி அவரைப்பள்ளம் என்ற இடத்தில் உள்ள குளம் அழிவுபாடான நிலையில் இருந்ததைச் சீர்செய்து கரையும், தூம்பும் அமைக்கப்பட்டது. இதற்கான செலவைத் தனிப்பட்டோர் ஏற்றுக் கொண்டனர். எனவே அக்குளத்து நீர்ப்பாய்ச்சலால் விளையும் பொருட்களை அவர்கள் முதல் நான்கு ஆண்டுகள் முழுவதுமாக அனுபவித்துக் கொள்ளவும், பின்னர் மூன்று ஆண்டுகளில் கால்பகுதியைச் சபையாருக்குக் கொடுக்கவும் இறுதியில் ஒரு பாதியைச் சபையாருக்குக் கொடுக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது.[13]

அடுத்து சுந்தரபாண்டியன் காலத்துக் கல்வெட்டு அவன் காலத்தில் சீரிய முறையில் நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்கப்பட்டதை விளக்கி நிற்கிறது. கொங்குப் பாண்டியனான சுந்தரபாண்டியன் காலத்தில், அவனால், அவன் பெயரில் சூரனூர் என்ற சுந்தரபாண்டிய நல்லூர் என்ற ஊரே ஏற்படுத்தப்பட்டது. இந்த ஊர் வாயிரக்கா நாட்டில் உள்ளது. கி.பி. 1307-ல் அதே சூரனூரில் இருந்த ஏரிப்பாசனத்தைச் சரிவர நடத்திவர

---

12. தென்னிந்திய கோயிற் சாசனங்கள் பாகம் 1 சாசனம் 267.
13. தென்னிந்திய கோயிற் சாசனங்கள் பாகம் 1 சாசனம் 336.

ஆணையிட்டான். அவ்வூரில் ஒரு அணைக் கட்டிலிருந்து கால்வாய் வழியாகத் தண்ணீர் கொண்டு வந்து ஒரு பெரிய ஏரி நிரப்பப்பட்டது. அணை, கால்வாய், ஏரி இவைகளை மேற்பார்வையிட ஆளை நியமித்தான். அவன் செய்ய வேண்டிய கடமைகள் என்று அரசன் ஆணையிட்டிருந்தான். பேரூர் நாட்டிலுள்ள வெள்ளலூரைச் சேர்ந்த பிள்ளையான் என்ற ஒரு செம்படவனுடன் ஊராரும் கோயில் அதிகாரிகளும் ஒப்பந்தம் செய்து, அவனுக்கு ஊதியமும், சில உரிமைகளும் தந்து அவைகளுக்காக அணையையும், கால்வாயையும் கவனித்துக் கொள்ள வேண்டும் என்றும் தண்ணீர் அணையிலிருந்து சிதறிப் போகாமல் ஏரிக்கு விட வேண்டும் என்றும், ஏதாவது குற்றங்குறை நேரிட்டால் கிராமத்தார்களுக்கும், கோயில் அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்த வேண்டும் என்றும், ஆணையிட்டான். மேலும் சூலூர் கோயில் குடிகளிடமிருந்து வாய்க்கால் பாட்டம், பாசிப்பாட்டம், (மீன்வரி) இவைகளைப் பிள்ளையான் வசூலிக்க வேண்டும் என்றும் ஆணையிட்டான்.[14] இச்சிறப்பு மிக்க கல்வெட்டு சர்க்கார் பெரியபாளையம் சுக்ரீவர் கோயிலில் இருக்கிறது. நீர்ப்பாசன வசதி எத்தனை முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்பட்டு, அரசனே நேர் முகமாக ஆணையிட்டு சிறப்பாக செயல் படுத்தினன் என்பதற்கு இக் கல்வெட்டு ஒன்றே சாலும் சான்று.

பின்னர் வந்த விஜயநகர மன்னனான அச்சுத மகாராயன் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட குளம் ஒன்று பற்றி அவிநாசி கல்வெட்டு கூறுகிறது. அச்சுத மகாராயன் லிங்கண உடையாருக்கு ஆணை ஒன்று இடுகிறன். இவ்வாணைக் கல்வெட்டில் இரண்டு ஏரிகள் பற்றி குறிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டிற்கு தடாக நிர்ணய சாசனம் என்று பெயர். இதன்படி,

"லிங்கண உடையார் தேவர் குடுத்த தடாக நிர்ணய சாசனம் குடுத்தபடியாவது. இத்தனுள் அவிநாசி கிராமத்துக்கு வடக்கு, முன்னுள் பழைய குளம் வாலஞ்ச உடையார் பொன்னிட்டுக் கட்டி வைத்து, தம்முட பேரால் வால சமுத்திரமென்று கட்டின அந்தவால சமுத்திரத்துக்கு, தென்கீழ் மூலையில் இலிங்கண உடையார் தேவர் தம்முடபேரால் தம்முட தன்மமாக சரலிங்க சமுத்திரமென்று ஒரு குளம் கட்டக்

---

14. A.R.E. 304 of 1909.

கடவராகவும், கட்டுமிட்டதில் ருட்டின பொன் தம்முட கையிலிட்டுக் கூடக் கடவராகவும், அந்தகலிங்க சமுத்திரத்தின் கீழே நீர்ப் பாச்சல் நெலம் உள்ளதில் பயிர் நஞ்சை நெல் விளைச்சல், கமுகு, தென்னமரம், வெத்திலை, வாழை, மத்தமுண்டான வீர்பயிர், சகல சுவாம்மியங்களில், உண்டான சகல ஆதாயத்தில், கோவில் பண்டாறத்துக்குப் பாதியும், லிங்கன உடையவர் சிங்காசனத்துக்குப் பாதியுமாக சந்திராதித்தவரைச் செல்லக் கடவதாகவும்", எனவரும் இக்கல்வெட்டின் மூலம் நீர்ப் பாசனத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு அதிலும் குறிப்பாக பயிர்கள் விளைவிப்பதற்கு சிறப்பான பல முறைகளைக் கொண்டு அரசனே நேரடியாக இதற்கு சிறப்புத்தந்து குளம் வெட்ட ஆணையிடுகிறான்.[15]

விஜயநகர அரசிற்குப் பின் வந்த உம்மத்தூர் அரசருள் முதல் அரசனாக வருபவன் வீரநஞ்சராயர். இவ்வரசன் பெரியபாளையத்தில் ஒரு பெரிய குளத்தை வெட்டுவித்தான். அதற்கு நஞ்சராயன் குளம் என்று தற்போதும் பெயர் வழங்கப்படுகிறது[16]

சக்க பொம்ம நாயக்கன் 1431ல் பாளையப் பட்டு உரிமைகளைப் பெற்ற மக்களுக்காக குடக ஆற்றில் கரையமைத்தான்.[17] தாராபுரம் வட்டம் மருதுறை என்ற ஊரிலுள்ள கல்வெட்டு மைசூர் அரசன் சிக்க தேவராய உடையார் காலத்தது. இக்கல்வெட்டில் கொண்டம நாயக்கன் என்பவனுடைய தம்பி ராஜ பட்டியப்பருக்கும், ஆலால சுந்தர பாண்டித நாயனருக்கும் நொய்யல் ஆற்றுக்கு வடகரையில் குளமும், முதன்மையில் சுதந்திரமும் கல்லணை நீர்ப்போக்கி அக்கரையில் மாவடை மரவடை ஒன்று பாதி ஆலால சுந்தரருக்கும் பட்டியப்பருக்கும் ஊரவர் கொடுக்கின்றனர்.. ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் உட்பட்ட நிலத்திலும் தோட்டத்திலும் மாவடை மரவடை தரி குறை, பட்டடை போன்ற யாவும் இருவருக்கும் பாதிப்பாதியாக சந்திராதித்தவரைச் செல்லும்படி ஊரவர் கொடுக்கின்றனர்.[18]

ரெட்டையம்பாடி என்ற பகுதியை இருபத்திரண்டு பாளையக்காரர்கள் 482 ஆண்டுகள் ஆண்டனர். அவர்கள் காட்டுப் பகுதியைத்

15. தென்னிந்திய கோயிற் சாசனங்கள் பாகம் 1 சாசனம் 204.
16. Coimbatore district Gazeteer P.277.
17. Mackenzies Manuscript.
18. தென்னிந்திய கோயிற் சாசனங்கள்.

திருத்தினர். நீர்ப் பாசனத்திற்காக குளங்களை வெட்டினர். கிராமங்களை ஏற்படுத்தினர். மக்கள் அமைதியாக வாழ எல்லா வழிகளையும், வசதிகளையும் செய்து கொடுத்தனர்.[19] காலிங்கராயன் என்பார் நொய்யல் ஆற்றின் மீது ஒரு அணைகட்டி, அணையிலிருந்து கொடுமுடிவரை கால்வாய் வெட்டினார். அவை நானூறு ஆண்டுகளுக்கு முன் கட்டப் பட்டது என்றும் ம.ராமசந்திரன் செட்டியார் குறிப்பிடுகிறார். மெகன்சியின் கைப்பிரதியிலும் குறிப்பு வருகின்றது.

" வரை கொண்ட பூந்துறை நன்றுடு வாழ அவ்வானிதனைக்
கரை கொண்டடைத்தவன் ஸ்ரீ வெள்ளோடைச் சாத்தந்தை
காலிங்கனே.[20]

" மூவருக்கும் அகத்திய முனிவருக்கும்
அரசிருந்த முன்னேயோர்க்கும்
தேவருக்கும் திரும்பாத காவிரியை
கொங்கேற்றித் திரை கொண்டாயே.
பூவிருக்கும் உரமாயன் கடலடைத்தான்
அவன் வேடம் புனைந்த வாறே
யாவருக்கும் இளையானே அல்லாள
திருமலையா ஈகையானே". 21

கொங்கு நாட்டில் வடகரை.ஆற்றூரில் வாழ்ந்த வேட்டுவத் தலைவன் அல்லாள திருமலையான் 17-ஆம் நூற்றாண்டின் இடையில் வாழ்ந்தவன் என்றும் வடமுக நின்று வருகாவிரியின் வளத்தையென்றும் திடமுற கொங்கிலும் பாசனமாகச் செலப்பிரித்தவன் என்றும் கூறுவர்.[22]

18ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தளவாயாக இருந்த நஞ்சராயன் கொடுவேரியில் ஒரு அணைகட்டினான். அனுப்பர்கன் கோட்டையில் லிங்கையன் என்பான் அணையொன்று கட்டினான்.[23]

18ம் நூற்றாண்டில் நீர்ப்பாய்ச்சல் ஏரி, குளம், குட்டை, ஆறு, கால்வாய் அணை முதலியவற்றை ஒழுங்குபடுத்தித் தண்ணீர் பாய்ச்சலுக்குத் திட்டம் வகுத்து எல்லோருக்கும் நீர் உரிமைகளை வழங்குவதற்காக ஒரு இலாகா ஏற்படுத்தப்பட்டது.

---

19. Mackenzies Manuscript No.5.
20. நெடுந்தொகை 1345
21. நெடுந்தொகை பக்கம் 12.
22. நெடுந்தொகை பக்கம் 12.
23. கொங்குநாட்டு வரலாறு ம.ராமசந்திரன் செட்டியார் பக்கம் 408.

பல ஆறுகளும் குளங்களும் இருப்பினும் குறித்த பருவத்தில் மழை இல்லாவிடில் பஞ்சம் தான் ஏற்படும் 1877-78ல் நிகழ்ந்த பஞ்சம் மிகவும் கொடுமையானது. ஈஸ்வர வருடப்பஞ்சம் என்றால் அது ஒரு பழமொழியே ஆகிவிட்டது. பஞ்சத்திற்கு நிவாரணமாக அணைபோடுவது சிறப்பென்று பாரூர் திட்டம் என்ற பாய்ச்சல் வசதியை 1877ல் தொடங்கி 1888 ல் முடித்தனர். இதைப்போல வேறு திட்டங்களும் வகுக்கப்பட்டன ஆனால் செயல் முறையில் வரவில்லை. அவ்வாறு வந்திருந்தால் பஞ்சம் வராமல் நிறுத்தியிருக்கலாம்.[24]

20ம் நூற்றுண்டு தொடக்கமுதல் பல திட்டங்கள் செயல் பட்டு வருகின்றன. சிறுவாணிதிட்டம் பொள்ளாச்சியில் சும்பராம் பாளையத்து ஆற்று நீர்த் திட்டம், ஈரோட்டில் காவேரிப் பேச்சிப்பாறைத் திட்டம், திருப்பூர் கோயில் வழிபோன்ற பல திட்டங்கள் கோவை மாவட்டத்திற்கு நீர்ப்பாசன வசதி செய்து தருவதோடு குடிநீர்ப் பிரச்சிலைகளையும் ஓரளவு தீர்க்கின்றன.

---

24. தமிழ் நாடு மாவட்டக் குறிப்புகள். தே.ப.பெருமாள்.

******

# வரலாற்றுக் காலத்திற்கு முந் கோவை

திரு. கே. ஸ்ரீதரன்

அகழ்வாய்வாளர்

தொல்பொருள் ஆய்வுத்துறை

மனித வரலாற்றை இரண்டு வகையாக பிரிக்கலாம். எழுத்துக்கள் தோன்றாத காலத்தை வரலாற்றுக்கு முந்திய காலம் ( Pre History ) என்றும், எழுத்துக்கள் தோன்றி வரலாற்றை அறிந்து கொள்ள உதவும் காலத்தை வரலாற்றுக் காலம் என்றும் ( Historical period ) என்றும் அழைக்கலாம்.

கோவை மாவட்டத்தின் வரலாற்றுக்கு முந்திய காலத்தைப் பற்றி இனிக் காண்போம். வரலாற்றுக்கு முந்திய காலத்தில் மனிதன் கற்களை ஆயுதங்களாக உபயோகப்படுத்தி வந்தனர். எனவே இக்காலத்தைக் கற்காலம் என்று அழைக்கின்றோம். இக்காலத்தில் கிடைக்கும் கற்களின் உருவ அமைப்பைக் கொண்டு பழைய கற்காலம், இடைக்கற்காலம், புதிய கற்காலம் என்று மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். பழைய கற்காலத்தில் கல் ஆயுதங்கள் கரடு முரடாக செய்யப்பெற்றிருக்கும். இடைக்கற்காலத்தில் கற்கருவிகள் சிறிய வடிவில் செய்யப்பட்டு விளங்கியது. புதிய கற்காலத்தில் அவைகள் வழுவழுப்பாகவும் செம்மையாகவும் செய்யப்பட்டு விளங்குகிறது.

கோவை மாவட்டத்தில் புதுப்பத்தூர் (அமராவதி ஆற்றின் கரையில் ) கோவில்பாளையம் ஆகிய ஊர்களில் தொல்லியல் ஆய்வின் போது கிடைத்துள்ளன. இத்தத்தவிர கோவைக்கு அடுத்துள்ள மாவட்டங்களான தர்மபுரி, சேலம் மாவட்டங்களில் சேர்வராயன் மலைத் தொடரிலும் வட ஆற்காடு மாவட்டத்தில் ஜவ்வாது, ஏலமலைத் தொடரிலும் ஏராளமான அளவில் கிடைக்கின்றன. வட ஆற்காடு மாவட்டத்தில் (பையம்பள்ளி என்ற இடத்தில் அகழ்வாய்வு செய்ததின் காரணமாக புதி

கற்கால மக்களின் வாழ்க்கைப்பற்றி அறிய முடிந்தது. இங்கு அவர்கள் மலைச்சரிவுகளில் வீடுகள் கட்டிக்கொண்டனர். வேளாண்மைத் தொழிலை செய்து வந்திருக்கின்றனர். மட்கலங்கள் செய்ய தெரிந்து கொண்டனர். ஆடு மாடுகளை பழக்கி வளர்க்க தெரிந்து கொண்டனர். பழைய கற்காலத்தில் உணவு சேகரிக்கும் நிலையிலிருந்த மனிதன் புதிய கற்காலத்தில் உணவு உற்பத்தி செய்யும் நிலைக்கு மாறிவிட்டான். ஓரிடத்தில் நிலையாக தங்கி வாழத் துவங்கினான். அவ்வகழ்வாய்வில் கிடைத்த பொருட்களை கொண்டு அக்கால மக்களின் வாழ்க்கை எவ்வாறு இருந்தது என்பது பற்றி ஒருவாறு அறிய முடிகிறது.

ஆகவே புதிய கற்காலத்திலிருந்து தான் கோவை மாவட்ட வரலாறு துவங்குகிறது. பையம்பள்ளி அகழ்வாய்விலிருந்து அங்கு மக்கள் கி.மு. 2000– 1000 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் மக்கள் வாழ்ந்திருக்காலம் என அறிய முடிகிறது. கோவை மாவட்டத்தில் கற்குழிகளைத் தவிர வேறு சான்றுகள் கிடைக்கவில்லை. பையம்பள்ளி அகழ்வாய்வு ..னை கொண்டு கோவை மாவட்டத்திலும் அதே காலத்தில் இங்கு மக்கள் வாழ்ந்திருக்கலாம் என்க் கருதலாம்.

இரும்புக்காலம்:-

புதிய கற்காலத்தை அடுத்து வருவது உலோகக் காலமாகும். இதனை இரும்பு காலம் என அழைக்கலாம். இக்காலத்தில் இறந்தவர்களின் எலும்புகளை புதைத்த இடத்தில் பெரிய கற்களைக் கொண்டு எடுக்கப்பட்ட ஈமச் சின்னங்களை பெருங்கற்சின்னங்கள் என்று அழைக்கப்படுகிறது. ஆகவே இக்காலம் என்று சிறப்பாக அழைக்கப்படுகிறது. இந்த ஈமச் சின்னங்களில் பலவகையுண்டு. அவையாவன. 1. கல்லறை (cist)
2/ (எ) கல்திட்டை (dolmenoid cist) (பி) கல்பதுக்கை (slab cist)
(2) மண் குவை (barrow) (3) கல்குவை (Cairn) அதைச் சுற்றி கற்களை வட்ட வடிவமாக வைத்தால் கல்வட்ட (Cairn circle) )
(5) கல்வரிசை (menhir) (6) தொப்பிக்கல், குடைக்கல்-

7) குடைவரை தாழ்வரை (Rock cut Cave )

8) தாழிகள் (Urn). இவைகள் தற்பொழுது மக்களால் குரங்குப் பட்டடை (பாண்டவக்குழி, முதுமக்க தாழி என்றெல்லாம் பெயரிடப்பட்டு அழைக்கப்படுகின்றன. இவற்றில் கல்திட்டை, கல்பதுக்கை, தாழிகள் ஆகியவை கோவை மாவட்டத்தில் கோவை, தாராபுரம், பொள்ளாச்சி பல்லடம், அவிநாசி, ஈரோடு, கோபிசெட்டிபாளையம் ஆகிய வட்டங்களில் அதிக அளவில் காணப்படுகின்றது. இல் வரிசைகள் (menhir) ஈரோடு வட்டத்தில் நீச்சம்பாளையம் என்ற ஊரில் காணப்படுகின்றன. இந்த ஈமச் சின்னங்கள் பொதுவாக கேரள பகுதியில் அதிக அளவு காணப்படும்.

கோவைக்கு அருகில் உள்ள செட்டிப்பாளையம் நஞ்சுண்டபுரம் ஆனைமலையலி மாகும்பொழில் என்ற இடங்களில் கல்பதுக்கைகள் அகழ்வாய்வு செய்யப்பெற்றன. இவற்றின் அமைப்பு பற்றி காண்போம். சவக்குழியின் நான்கு பக்கங்களிலும் செங்குத்தான கற்பலகைகளைக் கொண்டு ஒரு சிறு அறை போன்று தடுக்கப்பட்டிருக்கும். ஒரு பக்க கல்லில் ஒரு சிறு துவாரம் இருக்கும். அந்த அறைக்குள் [illegible]பொருள்களைப் போடுவதற்கு அது பயன்பட்டிருக்கலாம். ஈமப் பொருட்களை அதனுள் போடப்பட்டு அவ்வறையின் மேலே நீளமான பாறை கூரையாக போடப்பட்டிருக்கும். பின்னால் அதன்மேல் கூழாங்கற்கள், மண் முதலியன பரப்பப்பட்டு மேடு எழுப்பப்பட்டது. பிறகு அதைச் சுற்றி கல்வட்டமும் உண்டாக்கப்பட்டது. ஆனைமலையில் நடந்த அகழ்வாய்வு வாயிலாக இக்கல்பதுக்கைகள் எவ்வாறு கட்டப்பெற்றன என்று அறியமுடிகிறது.

மேலே கூறப்பட்ட அறைக்குள் மட்கலங்கள், எலும்புகள், இரும்புப்பொருட்கள், வேறு உலோகங்களால் செய்யப்பெற்ற பொருள்கள், மணிகள் ஆகிய ஈமப்பொருட்கள் இருக்கும். மட்கலங்களில் நான்கு வகைகள் காணப்படுகின்றன. கருப்பு, சிவப்பு மட்கலம், கருப்பு மட்கலம், சிவப்பு மட்கலம், செம்பழுப்பு மட்கலம் (Russet Coated ware — ) கருப்பு சிவப்பு மட்கலவகைகளில் பல வடிவங்கள் காணப்படுகின்றன. கிண்ணம், சட்டி, கூம்பு அடிப்பகுதியை உடைய கிண்ணம், நான்கு கால்களை உடைய ஜாடி ஆகியவை. கழுத்துப்பகுதியில் ஒரு

மடிப்பும் இருக்கும். பல பகுதிகள் நீண்டு அல்லது வெளியே தள்ளிக் கொண்டிருக்கும் பலவகையான விளிம்புகளும் இருக்கும். இளம்பழுப்பு மட்கலத்தின் உடலில் முழு நீறமும் சிவப்பாக இருக்கும். வெளிப்புறத்திலுள்ள செங்காவி பூச்சுக்கு மேலே வெள்ளை கோடுகள் தீட்டப்பட்டிருக்கும். கோவை மாவட்ட பெருங்கற் சின்னங்களில் மட்கலங்கள் அதிக அளவில் கிடைக்கின்றனர். இது இம்மாவட்டத்திற்கு உரிய ஒரு சிறப்பு அம்சமாகும். மற்ற மாவட்டங்களில் இருப்பது போல் மங்கலங்களில் பானைக்குறிகள் இல்லை. சிவப்பு மட்கலம் பெரிய உருவங்களை உடையதாகவும், ஓடுகள் தடித்தும், சுரசுரப்பாகவும், சரியாக சுடப்படாமலும் இருக்கும். இவைகள் ஈமப்பொருட்களை இடுவதற்காக பயன்பட்ட பெரிய தாழிகள், ஜாடிகள், ஈமத்தொட்டிகள் ஆகியன. சிவப்பு மட்கலங்களாகவே உள்ளன. பெரிய சட்டிகளுக்கு அடிப்பகுதியில் மூன்று கால்கள் உள்ளன. தாழிகளில் கழுத்துப் பகுதியில் திட்டாக மண்ணை அப்பிச் செய்யப்பட்ட சித்திர வேலைப்பாடும், குச்சியைக் கொண்டு புள்ளிகள் குத்திச் செய்யப்பட்ட சித்திர வேலைப்பாடும், இம்மட்கல வகைகளில் காணப்படுகின்றன. கோவை மாவட்டத்து தாழிகளின் கழுத்துப்பகுதியில் இரு கோடுகள் குறுக்காக போடப்பட்ட வேலைப்பாடுகள் (Rude Cross Pattern) அதிக அளவில் காணப்படுகின்றன.

மட்கலங்களுக்கு அடுத்தபடியாக ஈமத்தில் இரும்புப் பொருட்கள் அதிக அளவில் காணப்படுகின்றன. அம்பு முனைகள், ஈட்டிகள், வேல்கள், வாள்கள், வேளாண்மைக் கருவிகளான அரிவாள்கள், பட்டையான கோடரிகள், ஆணிகள் ஆகியன கிடைத்துள்ளன.

நீலகிரிப் பகுதியில் பெருங்கற்சின்னங்களில் வெண்கலப் பொருள்கள் கிடைத்துள்ளன. இவைகள் சிறந்த வேலைப்பாடு கொண்டவை. பாத்திரங்கள் வார்க்கப்பட்டவை அல்ல. தகடுகளைத்தட்டி செய்யப்பட்டவையாகும். இப்பொருட்கள் மத்தியதரைக்கடல் பகுதிகளில் கிடைக்கும் ரோமானியப் பொருட்களை பெரிதும் ஒத்துள்ளன. நீலகிரிப் பகுதியில் கிடைக்கும் மற்ற பொருட்கள் இவ்வளவு சிறந்த வேலைப்பாடு பெற்றிருக்கவில்லை. ஆகவே இவை வாணிகம் மூலமாக நீலகிரி பகுதிக்கு சென்றிருக்கவேண்டும்.

கோவையிலிருந்து 12 மைல் தொலைவிலுள்ள செட்டிப் பாளையத்தில் நடந்த அகழ்வாய்வில் செம்பால் ஆன ஒரு பாத்திரம் கிடைத்தது. மூடிப்பகுதியில் மான் அல்லது ஆடு போன்ற நின்று கொண்டிருக்கும் வண்ணம் செய்யப்பட்டுள்ளது.

பெருங்கற்சின்னங்களில் மட்கலம், இரும்பு பொருட்களுடன் மணிகளும் கிடைத்துள்ளன. சங்கு, கார்னீலியன், அகேட், ஜாஸ்பர் போன்ற ஒரு வகை கற்களால் செய்யப்பெற்ற மணிகள் கிடைத்துள்ளன. இம்மணிகள் காரமடைக்கு அருகில் உள்ள ஒரு பெருங்கற்சின்னத்திலும், சூலூர், பெருந்துறை, சிறுமுகை, வெள்ளலூர் ஆகிய இடங்களிலும் 7 ஆ கிடைத்துள்ளன.

மட்கலங்கள் நல்ல முறையில் காணப்படுவதால் இத்தொழிலில் மிகவும் தேர்ந்தவராய் இருந்திருக்கின்றனர். வேளாண்மைக் கருவிகள் கிடைத்திருப்பதால் அத்தொழிலையும் செய்திருக்கின்றனர். இம்மாதிரியான பெருங்கற் சின்னங்களை ஒருவரே அமைக்க இயலாது. நிறைய பேர் சேர்ந்து அமைத்திருக்கவேண்டும். இதனால் அவர்கள் கூட்டாக வாழ்ந்திருக்கின்றனர் என்று தெரிகின்றது.

---

இறப்புக்கு பின் உள்ள வாழ்க்கையில் நம்பிக்கை கொண்டிருந்தனர். மிகுந்த உழைப்போடு உருவாக்கப்பெற்ற கல்லறைகளும், அவைகளுக்குள்ளே இடப்பட்ட பல பொருள்களும் அதை புலப்படுத்துகிறது.

<u>கால எல்லை</u>:-

பெருங்கற்காலம் எந்த நூற்றாண்டிலிருந்து எந்த நூற்றாண்டு வரை இருந்ததென்று உறுதியாக சொல்ல முடியவில்லை. கர்நாடக மாநிலத்தில் பிரம்மகிரி என்ற இடத்தில் அகழ்வாய்வு நடத்திய சர்மார்டிமர்வீலர் இது கி.மு. 200 லிருந்து கி.பி. 50 வரை நிலவியது என்று கணக்கிட்டார். பையம்பள்ளி அகழ்வாய்வு ஏறக்குறைய கி.மு. 3ம் நூற்றாண்டிலிருந்து பெருங்கற்காலம் நிலவியதாக காட்டுகிறது. கோவை மாவட்டத்தில் பல்லடம் வட்டத்தைச் சேர்ந்த சாவடிப்பாளையத்திலிருந்து ஒரு பெருங்கற்சின்னத்திலிருந்து முத்திரை குத்தப்பெற்ற காசுகளும்

(Punchmarked Coins) ரோமனிய காசும் எடுக்கப்பெற்றன. கோவைக்கு அருகிலுள்ள குளாரன் என்ற இடத்தில் ஒரு கல் பதுக்கையிலிருந்து கி.மு. 3ம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு காசு கிடைத்தது. இம்மாவட்டத்திலேயே இன்னொரு இடத்திலிருந்து ஈமச்சின்னத்திலிருந்து ரோமானிய காசு (அகஸ்டஸ் காலத்தைச் சேர்ந்தது) ஒன்று கிடைத்தது. நீலகிரியில் ஒரு புதை மேட்டில் கி.பி. 4ம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு ரோமானிய நாணயம் கிடைத்தது. அங்கு கிடைக்கும் மட்கல வகைகளைப் பார்க்கும்பொழுது நீலகிரிச்சின்னங்கள் மற்றப் பெருங்கற் சின்னங்களுக்கு பிற்பட்டவையாக தோன்றுகின்றன. ஆதலால் அதை விட்டு விட்டு கி.மு. 3ம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 2ம் நூற்றாண்டு வரை பெருங்கற்காலம் நிலவியதாக கொள்ளலாம். இதற்கு சங்க இலக்கியங்களும் சான்றுகள் தருகின்றன.

ஆகவே கோவை மாவட்டத்தின் வரலாற்றுக்கு முந்திய காலம் புதிய கற்காலத்திலிருந்து 2000 தொடங்கி பெருங்கற்காலம் 1000 முதல் 3000 என்ற கால எல்லைக்குள் அடங்கும் எனக்கொள்ளலாம்.

---

1. தமிழ்நாட்டு வரலாறு – தொல்பழங்காலம்.
2. Indian Archaeology – A Review 1964-65.
1967-68.
3. --do-- 1960-61.
4. --do-- 1961-62.
5. --do-- 1962-63.
6. Kongu country – M. Arokiasamy.
7. Annual report of Archaeological survey of India – 1930-34.
8. --do-- 1934-36.
9. The Megalithic culture in S. India – Dr. B.R. Gururaja Rao.

# கோவை மாவட்டத்தில் சமயம்

## பண்டைக்காலமுதல் கி.பி. 1900 வரை

திரு. ஆர். பூங்குன்றன்.
பதிவு அலுவலர்.
தொல்பொருள் ஆய்வுத்துறை
கோவை.

பண்டைய தமிழகத்தில் சமய சிந்தனைகள் தோன்றி வளர்ந்தன. பல்வேறு வகையான தெய்வ வழிபாடுகள் மக்களிடையே வழக்கத்தில் இருந்தன. இந்திர வழிபாடு, வருண வழிபாடு, முருக வழிபாடு, மாயோன் வழிபாடு ஆகியவற்றைத் தொல்காப்பியர் நாநிலவழிபாடுகளாகக் கொள்வார். சங்க இலக்கியங்களில் துறக்கம் பற்றிய சிந்தனை உருவாகிவிட்டது. மறுபிறவி, வினை, நிலையாமை பற்றி பாட்டும் தொகையும் விவரிக்கின்றன. சங்க இலக்கியங்களில் சமயக் கோட்பாடுகள் முனைப்பாக வலியுறுத்தப்படவில்லையாயினும் அவை ஆங்காங்கே ஊடாடுவதைக் காணமுடியும். சைவ வைணவ சமயங்களின் தனிப்பெரும் தெய்வங்களான சிவன், திருமால் ஆகியோர் பற்றிய குறிப்பு மிகுதியும் உண்டு. நாட்டு மக்களிடையே வழக்கத்திலிருந்தவை சிறு தெய்வ வழிபாடுகள், கொல்லிப்பாவை, கந்திற்பாவை, கொற்றவை போன்றவை. பொதுமக்கள் வழிபடும் தெய்வம். நடுகல் வழிபாடு மிகவும் போற்றிக் கைக்கொள்ளப்பட்டது.

பண்டைய கொங்கு நாட்டில் கோவை மாவட்டம் முழுமையும் அடங்கும், இதுமட்டுமின்றி மதுரை மாவட்டத்தில் பழனிவட்டம், திருச்சி மாவட்டத்தில் கரூர் வட்டம், சேலம் மாவட்டத்தில் ஓமலூர், திருச்செங்கோடு, நாமக்கல் போன்ற வட்டங்கள் கொங்கு நாட்டின் எல்லைப்பகுதிகள். கொங்கு நாட்டைச் சுற்றி உயர்ந்தோங்கிய மலைகள் உண்டு, காவிரியும் காஞ்சி மாநதியும் பாய்ந்தோடுகின்றன. சங்க இலக்கியம் இந்நாட்டவரைக் கொங்கர் என்று குறிப்பிடும்.

பண்டைய கோவை மாவட்டத்தில் வாழ்ந்த மக்கள் பெருங்கல் (                    ) சின்னங்களை விட்டுச் சென்றுள்ளனர். அவை இங்குள்ளவர்களால் பாண்டவர் குழி என்றும் பாண்டியர் குழி என்றும் வழங்கப்படுகின்றன. இப்பெருங்கற்சின்னங்கள் மாண்டவர்களைப் புதைத்த இடங்கள் என்பது தெளிவான விஷயம். பண்டைய மனிதன்

தன் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவன் மாண்டுவிட்டால் இவ்வுலகத்தைவிட்டுப் போய்விட்டான் என்று கருதுவதில்லை. மாண்டவர்க்கும் தனக்கும் உள்ள உறவு அறுந்துவிட்டதாகக் கருதவில்லை. அவர்கள் தன்னுடன் இருப்பதாகவே கருதுகின்றான். அதனால் மாண்ட மனிதர்களுக்கு ஈமச்சடங்கு விரிவாகவும் சிறப்புடனும் செய்யப் பட்டது. மாண்டார்க்குச் சிறப்பு செய்யும் சடங்காகவே பெருங்கற்சின்னங்கள் அமைந்திருக்கவேண்டும். அவை முன்னோரைப் போற்றும் மரபு என்று கொள்ள லாம். அவர்களின் வாழ்க்கைப் பற்றியோ, சமயக் கோட்பாடுபற்றியோ நமக்கு எதுவும் தெரியாது. ஆனால் முதாதை வழிபாட்டைக் கைக்கொண்டிருந் தனர். கோவை மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் பெருங்கற்சின்னங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவை கி.மு.5 ஆம் நூற்றாண்டிலிருந்து வழக்கத்தில் உள்ளன. சங்க இலக்கியங்களில் பெருங்கற்சின்னம் கற்பதுக் கை என்றும், கல்லரண் என்றும் குறிக்கப்படும்.

கிருத்து அப்தத்திற்கு முன் கோவை மாவட்டத்தில் வழக்கத்திலிருந்த சமயம் பற்றி ஏதும் அறிந்து கொள்ள முடியவில்லை. சங்க இலக்கியத்தில் கொங்கு நாட்டைப்பற்றிய குறிப்பு சில இடங்களில் வருகிறது. ஆயினும் இங்கு வாழ்ந்த மக்களுடைய சமயம் பற்றிய குறிப்பு ஏதும் கிடைக்கவில்லை. நாட்டு மக்களிடையில் நடுகல் வழிபாடு சிறப்புப்புற்றிருந்தது. சிவ தெய்வ வழிபாடு மிக்கிருந்திருக்கும்.

<u>சமணம்</u>

கொங்கு நாட்டில் சமண சமயம் தான் நீண்ட காலமாக வழக்கில் இருந்துள்ளது. கி.மு. 4-3 ஆம் நூற்றாண்டில் சமணம் தென்னிந்தியா நோக்கிப் பரவியது. தெற்கே மைசூர் மாநிலத்தில் உள்ள சிரவணபெல்லிகுளம் என்ற ஊர் சமணர்களின் தலைமைப்பீடமாக விளங்கியது. அங்கிருந்து சமண முனிவர்கள் தமிழ்நாட்டிற்கு வந்து சமயப்பிரச்சாரம் செய்தனர். தமிழ்நாடு நோக்கிப் புறப்பட்ட சமண முனிவர்கள் கொங்கு நாடு வழியாகவே தம் பயணத்தை மேற்கொண்டிருக்கவேண்டும் என்று ஒரு சாரார் கருதுவர். இக்கருத்துக்குத் தற்போது வலிமையான ஆதாரம் ஏதுமில்லையாயினும் ஓரளவு ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கிறது. சிரவணபெல்லி குளத்திலிருந்து தமிழ்நாட்டின் பிற பாகங்களுக்குச் செல்ல வேண்டுமாயின் கொங்கு நாடுதான் வழி. ஆனால் கி.மு. 3 ஆம் நூற்றாண்டிலிருந்து முதல் நூற்றாண்டு வரை சமண முனிவர்கள்

கோவை மாவட்டத்தில் வாழ்ந்ததற்கான சான்று எதும் நமக்கு கிடைக்கவில்லை. இலக்கிய சான்றுகளோ தொல்லியல் சான்றுகளோ இதுவரை கிடைக்கவில்லை.

கிறிஸ்து அப்தத்தின் தொடக்கத்தில் சமண முனிவர்கள் கொங்கு நாட்டில் தங்கிப் பிரச்சாரம் செய்ததற்கான சான்றுகள் நமக்குக் கிடைக்கின்றன. கொங்கு தேச ராசாக்கள் கதை என்ற நூலில் இதற்குச் சான்று கிடைக்கின்றது. கி.பி. 1 ஆம் நூற்றாண்டிலிருந்து இங்கு சமண சமயம் பரவிச் செழிப்புற்றது. சக ஆண்டு 4 (கி.பி. 82 ல்) ஆட்சி செய்த ரெட்ட குல மன்னன் கோவிந்தராயன் என்பவன் அரிஉட்டன்னன் என்ற சமண சமயத்தவர்க்கு பூமியைத் தானம் அளித்துச் சிறப்பித்தான். இந்தப் பூமி கொங்கணி வருமம் பேஸ்திக்கு அளிக்கப் பட்டது. இந்தப் பேஸ்தி (கோயிலின்) பூசாரிதான் அரிஉட்டன்னன். அரிஷ்டன்னன் அரிஷ்டநேமி என்பதன் திரிபாக இருக்கலாம். அவனுடைய குருவான பிரஞாபருசாரி ஸ்ரீ காரே விருக்ஷ மூலத்தில் வசிக்கிறவன் என்றும் கூறப்படுகிறான். ஸ்ரீஊரி காரமடையாக இருக்கக்கூடும். கோவிந்தராயனுக்குப்பிறகு ஆட்சிக்கு சார்ப்புசகன்ரதேவ சக்கரவத்தி காலத்தில் சமண சாத்திரம் பயின்ற மூன்று புலவர்கள் வாழ்ந்தனர். அவர்களுடைய குரு நாக நந்தி என்பவன். இவன் ராஜாக்களுக்குச் சமண சமய கோட்பாட்டை விளக்குபவன். ரெட்ட குல மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் சமணம் பரவியதற்குச் சான்றாக அறச்சலூர் அசைக்கல் வெட்டுடன் உள்ள சமணப்படுக்கையைக் கொள்ளலாம். இக்கல்வெட்டு கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று கொண்டால் கொங்கு தேச ராசாக்கள் கதை கூறும் சமண வரலாறு உறுதியானது என்று கொள்ளலாம்.

ரெட்ட குல மன்னர்களுக்குப் பின் கொங்கு நாட்டை ஆண்டவர்கள் கங்கர்கள். கங்க குலம், சிம்ம நந்தி என்ற சமண முனிவராலேயே உருவாக்கப்பட்டது. ஆகையால் இக்குலத்தைச் சேர்ந்த மன்னர்களில் பலர் சமண சமயத்திற்குப் பேராதரவு தந்தார்கள். அவ்வாறு ஆதர வளித்தவர்களில் குறிப்பிடத்தக்கவன் அவிநீதன் என்ற மன்னன். இவன்

கொங்கு நாட்டில் சமணம் சிறப்புடன் விளங்கியது. துர்விநீதன் அரசனாக மட்டுமின்றி பன்மொழிப்புலவனாகவும் விளங்கினான். பைசாச மொழியில் குணாட்டியர் எழுதிய பிருகத் கதை என்ற நூலை வடமொழியில் பெயர்த்தவன். இவனுடைய மகன் தீவிர பிராமண துவேஷங்கொண்டிருந்தான் என்று கொங்கு தேச ராசாக்கள் கதை கூறுகின்றது. ஆகவே இவன் புறச்சமயத்தவனாக இருந்திருத்தல் வேண்டும். கி.பி. 9ம் நூற்றாண்டில் இராசமல்லன் என்ற கங்கமன்னன் சசிபூஷண மகா முனிக்கு வீரஹள்ளி என்ற கிராமத்தைத்தானமாகக் கொடுத்தான்.

கொங்கு நாடு சோழ மன்னர்களின் ஆட்சிக்குட்பட்டபின்

கொங்குச் சோழர் என்ற அரச மரபினர் கி.பி. 11ம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 14 ஆம் நூற்றாண்டு வரை ஆட்சி செய்தனர், இவர்களில் விக்கிரம சோழன், குலோத்துங்க சோழன், வீரராஜேந்திரன் போன்றவர்கள் சமண சமயத்திற்குப் பேராதரவு தந்துள்ளனர். கோவை மாவட்டத்தில் விஜய-மங்கலம் பண்டைக்காலம் முதல் சமண சமயத்தின் தலைமைப் பீடமாக இருந்து வந்துள்ளது. இங்கு கி.பி. 10ம் நூற்றாண்டில் கட்டப்பட்ட சமணக்கோயில் உள்ளது. இங்கு கருநாடக அமைச்சன் ஒருவனின் தங்கை ஒருத்தி சல்லேகனை விரதமிருந்து உயிர்நீத்ததைப் பற்றி ஒரு கல்வெட்டு உள்ளது. உயிர்நீத்த பெண்ணின் உருவம் கல்வெட்டுடன் செதுக்கப்பட்டுள்ளது. "ஸ்வஸ்தி, ஸ்ரீ சாமுண்ட ராயன் தங்கை புள்ளியம்மை நிசீதிகை கல்" என்று அக்கல்வெட்டு கூறுகிறது. இங்குள்ள ஒரு கல்வெட்டு தீர்த்தங்கரரை 'அணியாத அழகியார்' என்று குறிப்பிடுகின்றது. இவ்வூரில்தான் பெருங்கதை ஆசிரியர் கொங்கு வேளிர் வாழ்ந்தார். விஜய மங்கலத்தில் ஒரு தமிழ்ச்சங்கம் இருந்தது பற்றிய பழங்கதைகள் உள்ளன. 'விஜயமங்கலத்தில் 'வீர சங்காதபெரும்பள்ளி' என்ற பெயரில் ஒரு பள்ளி இருந்தது. இங்குள்ள கோயிலில் ஆதிநாதரர் வரலாறு முழுமையும் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன. இங்கு பண்டைய ஓவியங்களும் உள்ளன. விஜயமங்கலத்திற்கு அருகில் சீனபுரம் என்ற ஊர் உள்ளது. இங்கு ஆதிநாதர் கோவில் ஒன்றும் இருக்கக் காணலாம். இவ்வூரில் தான் நன்னூலாசிரியர் ஸ்ரீ பவணந்தி முனிவர் வாழ்ந்தார். இங்குள்ள ஆதிநாதார் பவணந்தியால் வழிபடப்பட்டது. சீனபுரத்திற்கு விஜய மங்கலத்திற்கு இடையில் நிரம்பை என்ற ஊர் உள்ளது. இவ்வூர் அடியார்க்கு நல்லார் வாழ்ந்த ஊர் ஆகும். ஈரோடு வட்டத்தில் உள்ள திங்களூர் என்டைய குறும்பு நாட்டைச் சேர்ந்தது. இங்கு புஷ்ப நாத தீர்த்தங்கரர் கோயில்

உண்டு. வெள்ளோடு, பூந்துறை, ஈரோடு போன்ற ஊர்களில் சமண சமய சிற்பங்கள் உள்ளன. பொங்கலூர்ப்பள்ளி தாராபுரம், பெரிய பட்டி (உடுமலை) பரமேச்சுரபள்ளி, வேளும்பாளையம் (பொள்ளாச்சி) பெரியகளந்தை, அம்மன் கோயில்பதி, சர்க்கார் சாமக்குளம், திருமூர்த்தி மலை ஆகிய ஊர்களில் சமண தீர்த்தங்கரர் சிற்பங்கள் உள்ளன. ஆனைமலையில் ஆளியார் அணை அருகில் சமண தீர்த்தங்கரர் உருவம் படுக்கை உள்ளன.

சமண கோயில்களில் மட்டுமின்றி பிற சமயத்தார் கோயில்களிலும் சமணர் பற்றி குறிப்பிருப்பது சிறப்புடைய அம்சமாகும். ஈரோடு வட்டம் சர்க்கார் பெரியபாளையத்தில் உள்ள கோயில் கல்வெட்டு ஒன்றில் சமணசந்தியுள்ளிட்ட' என்ற வாசகம் கூறப்படுகின்றது. பல கல்வெட்டுக்களில் 'பள்ளிச்சந்தம் நீக்கி' என்று குறிக்கப்படுகின்றது, அவிநாசி வட்டம் சேவூர் வாலீஸ்வரர் கோயிலில் உள்ள ஒரு கல்வெட்டு "சிவத்தலம் விட்ணுதலம் குமாரசுவாமி தலம் அமணீசுவரசுவாமி தலம் வணங்கிக்கொண்டு வருகையில்" என்று வேறுபாடற்றுக் கூறப்பட்டுள்ளது. தாராபுரம் வட்டம் மறவாம்பாளையம் சிவாலயத்தில் உள்ள கல்வெட்டில் "தீங்கு செய்தான் மூசென்மத்துக்கும் ஏழெட்டுச் சமணரைக் கொன்ற பாவத்திலேயும்" என்று கூறப்படுகின்றது.

கோவை மாவட்டத்தில் பல ஊர்கள் பள்ளி என்ற சொல்லுடன் முடியும். இவை அனைத்தும் சமண சமயத்துடன் தொடர்பு கொண்டவை. ஆளியார் அருகில் ஜைன கல்தர்க்கம் என்ற பெயர் உள்ள ஒரு இடம் உள்ளது. இங்கு கி.பி. 11-12 ஆம் நூற்றாண்டுகளில் சீயக்கி என்ற காசு வழக்கத்தில் இருந்தது பற்றி கல்வெட்டுக்கள் கூறுகின்றன. சீயக்கி என்பது ஸ்ரீயசஷிஎன்பதன் திரிபு ஆகலாம். கி.பி.19 ஆம் நூற்றாண்டில் இங்கு எழுபது சமணப்பதிகள் இருந்துள்ளன.

சமணத்தை ஆதரித்தவர்கள் பெரும்பாலும் அரசர்களும் சிற்றரசர்களும் தான். வணிகப் பெருங்குடியினரின் பேராதரவும் அதற்கிருந்தது. சமயக்குரவர்கள் தலைமை தாங்கிய பக்தி இயக்கத்தின் காரணமாக தமிழ்நாட்டின் பிற பகுதியில் சமணம் செல்வாக்கிழந்தபின் சமணப் பெரியார்கள் கொங்கு நாட்டைப் புகலிடமாகக் கொண்டனர் ~~[illegible]~~

இங்கு அவர்களுக்குச் சமயப் பணியும் இலக்கியப் பணியும் செய்யும் வாய்ப்பு நிறைய இருந்தது. அவர்களுக்கு ஆதரவும் இருந்தது. ஆகையால் தமிழ் நாட்டின் பிறபகுதிகளில் சமணம் அழிந்த பின்பும் ஓரளவு செல்வாக்குடன் இருந்தது.

**புத்தமதம்:**

கோவை மாவட்டத்தில் புத்த சமயம் இருந்ததற்கான வரலாற்றுச் சான்று ஏதும் இதுவரை கண்டறியப்படவில்லை. ஆனால் கொங்கு தேச ராசாக்கள் கதையில் அரிவர்மன் என்ற மன்னன் காலத்தில் ஒரு புத்த சன்னியாசியுடன் பிராமணர் சமயவாதம் செய்தார் என்று கூறப்படுகின்றது. அரிவர்மனின் காலம் கி.பி. 3-ம் நூற்றாண்டு. கி.பி. 1895-ல் வெளியிடப்பட்ட கோவை மாவட்ட மானியுவலில் மக்கள் தொகை கணக்கெடுப்பு அறிக்கையில் அறுபத்தியெட்டுப் பேர் பௌத்தர்கள் என்று கூறப்படுகிறது.

**சைவமதம்:-**

கோவை மாவட்டத்தில் அப்பர் ஞான சம்பந்தர் வருகையுடன் சைவம் பிரவேசித்தது என்று கொள்ளலாம். ஆனால் கொங்கு தேச ராசாக்கள் கதையில் கி.பி. 3-ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு கங்க மன்னன் ஈசுவர பத்தனைத் தலவன் புரத்திலே சில சிவலிங்கத்தைப் பிரதிட்டை பண்ணினான் என்று கூறப்படுகின்றது. கி.பி. 6-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த இராசகோவிந்தராயன் என்பான் சைவ சமயத்தை ஆதரித்தான். இவனுக்கு நந்திவர்மன் என்ற பெயரும் உண்டு. கி.பி. 6-ஆம் நூற்றாண்டு வரை சைவ சமயம் கோவை மாவட்டத்தில் பரவி வளர்ப்பெற்றதற்கான வரலாற்றுச் சான்று ஏதும் கிடைக்கவில்லை. ஆனால் கி.பி. 786-ம் நூற்றாண்டிலிருந்து மேன்மை கொள் சைவ நீதி இங்கு பரவி வளர்ப்பெறத் தொடங்கியது. நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன் கொடுமுடி, பவானி, குரக்குத்தளி, அவிநாசி, திருமுருகன்பூண்டி, பேரூர் ஆகியவை வைப்புத்தலங்களாகக் கொள்ளப்பட்டன. கி.பி. 8-9-ம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த சுந்தரம் கொங்கு நாட்டு வழியாகச் சேர நாட்டிற்குச் சென்றுள்ளார். அவர் திருமுருகன்பூண்டி, பேரூர், அவிநாசி ஆகியத் தலங்களைத் தரிசித்துச் சென்றுள்ளார். மாணிக்கவாசகர் அவிநாசி வட்டம் சேவூர் அருகில் உள்ள மொக்கணீச்சுரம் பற்றி பாடியுள்ளார். கி.பி. 8-ம் நூற்றாண்டில் வாழ்ந்த பாண்டிய மன்னன் ஒருவன் கொடுமுடி பசுபதி என்னும் பரம பாதம் பணிந்தேத்தினான் என்று வேள்விக்குடி செப்பேடு செப்பும்.

கொங்குச் சோழர்கள் ஆட்சியில் சைவ சமயம் மேலும் சிறப்புற்று விளங்கியது. சோழன் பூர்வ பட்டயத்தில் கரிகால சோழன் முப்பத்தி-யாறு சிவாலயங்களைக் கட்டினான் என்று கூறும். இவனுக்குப் பின் வந்த கொங்குச் சோழ மன்னர்கள் சைவத்திற்குப் பேராதரவு தந்தனர். தேவார வைப்புத்தலங்கள் மட்டுமின்றி சோழர்கள் காலத்திய கோயில்கள் ஐம்பதுக்கு மேல் உள்ளன.

சோழர் ஆட்சியில் கோயில் நிர்வாகம் சீரமைக்கப்பட்டு முறைப்படுத்தப்பட்டது. இவர்கள் காலத்தில் கோயில்கட்கு நிறைய நிவந்தங்கள் வழங்கப்பட்டன. அரசர்களேயன்றி அமைச்சர்களும், அரசியரும், அதிகாரிகளும், பொதுமக்களும் கோயில்களுக்கு நிவந்தமளித்-தனர். கோயில் சமூக வாழ்க்கையின் மையப் பகுதியாக உருவாகி விட்டது. கோயில் அதிகாரிகள் பொது நிர்வாகத்தில் முக்கிய பங்கு கொண்டனர்.

இங்கு பல்வேறு மடங்கள் இயங்கின. கி.பி.12-ம் நூற்றாண்டில் அன்னூரில் திருஞானசம்பந்த நம்பி மடம் என்பெரு மடம் இருந்தது. சுந்தரர் பெயரில் ஒரு மடம் இருந்துள்ளது. மணிவாசகர் மடம் ஒன்றும் இருந்தது. கல்வெட்டில் வரும் பல பெயர்கள் சைவப் பெயர்களாகவே அமைந்துள்ளன. சேரமான் தோழன், ஆளுடைய பிள்ளை, மணிவாசகன், சிவபாத சேகரன் ஆகிய பெயர்களைக் குறிப்பிடலாம்.

சைவத்தின் உட்பிரிவுகளான காபாலிகம், காளாமுகம் போன்ற சமயங்கள் இருந்ததற்கான சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை. ஆனூர் அறிசிவட்டம், சேவூரில் உள்ள சிவன் கோயில் கல்வெட்டுக்களில் கபாலீச்சுரம் என்ற பெயர் கூறப்படுகின்றது.

சைவ நாயன்மார்களில் சுந்தரர் கண்ணப்பர் ஆகியோருடைய திருமேனிகள் பல கோயில்களில் வைக்கப்பட்டுள்ளன. சுந்தரர் அவிநாசியில் நிகழ்த்திய அதிசயம் பல கோயில்களில் சிற்-பங்களாக வடிக்கப்பட்டுள்ளன. சுந்தரர் கொங்கு நாட்டிற்கு இரண்டு முறை வந்துள்ளார். ஆகையால் அவருடைய சிற்பங்கள் கோவை மாவட்டத்துக் கோயில்களில் வைக்கப்பட்டுள்ளன. கண்ணப்பர் வேட்டுவ மரபினைச் சேர்ந்தவர். கோவை மாவட்டத்தில் பண்டைக் காலத்திலிருந்து வேட்டுவ மரபினர் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் தங்கள் குலத்தைச் சேர்ந்த கண்ணப்பனை போற்றி வழிபட்டதில் வியப்பொன்றுமில்லை.

விஜய மன்னர்கள் காலத்திற்குப் பின் வீர சைவம் கோவை மாவட்டத்தில் சில ஊர்களில் பரவி நிலைபெற்றது. பேரூர் சாந்த லிங்க அடிகளார் மடம் வீர சைவ மரபினைக் கொண்டது. சரவணம் பட்டி அருகில் உள்ள கௌமார மடாலயமும் சமீபகாலத்தில் தோன்றியது.

<u>வைணவ சமயம்:</u>

கங்க மன்னர்களில் விஷ்ணு கோபன் என்பான் விஷ்ணு பக்தனாக இருந்தான். இவன் கி.பி. 3-4-ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்தவன். இவன் காலத்தில் பல இடங்களில் விஷ்ணு கோயில் கட்டியதாக கொங்கு தேச ராசாக்கள் கதை கூறுகிறது. கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த பாண்டியன் பராந்தக நெடுஞ்சடையன் பேரூரிலே திருமாலுக்குக் கோயில் கட்டி மகிழ்ந்தான். இது குறித்து அவனுடைய சீவர மங்கல செப்பேடு இவ்வாறு குறிப்பிடுகிறது.

"கொங்கப் பூமியடிப்படுத்துக் கொடுஞ்சிலைப்பூட்டி மகிழ்வித்துப்
பூஞ்சோலை புறவிறந்தி காஞ்சிவாய்ப் பேரூர்புக்குத்
திருமாலுக்கமர்ந்துறையக் குன்றமன்னதோர் கோயிலாக்கியும்"

கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரியாழ்வார்,

கொங்கும் குடந்தையும் கோட்டியூரும் பேரும்
எங்கும் திரிந்து விளையாடும் என்மகன்"

என்று குறிப்பிடுகின்றார். இங்கு கொங்கு என்று குறிப்பிடுவது கொங்கூர் என்று கொள்ளலாம்.

கோவைக்கருகில் சிங்க நல்லூரில் உள்ள திரிவிக்கிரம அவதாரத்தின் செப்புத் திருமேனி கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. கொடுமுடியில் உள்ள திருமாலின் செப்புத் திருமேனி கி.பி. 9-10-ம் நூற்றாண்டு என்று கொள்ளலாம்.

சோழராட்சியில் கர்நாடக நாட்டிற்குச் சென்ற வைணவ ஆச்சாரியார் இராமானுஜர் கொங்கு நாட்டு வழியாகச் சென்றார். இங்குசில காலம் தங்கிய பின் கர்நாடகம் சென்றார் என்பர். கி.பி. *14-ம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்று கருதப்படும் வேதாந்த தேசிகர் கோவை மாவட்டத்தில் உள்ள சத்தியமங்கலத்தில் நீண்ட காலம் வாழ்ந்தவர். அவர் வைணவம் பற்றி நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அவை தமிழிலும் வடமொழியிலும் எழுதப்பட்டுள்ளன. வீர சைவம் வைணவத்தை எதிர்த்தபோது அதனுடைய செல்வாக்கு குறையத் தொடங்கியது.

**கிறித்துவ சமயம்:**

கிருத்துவ அப்தத்தின் முன் பின் நூற்றாண்டுகளில் ரோமானியர் கோவை மாவட்டத்தின் வழியாக தமிழகத்தின் பிற பாகங்களுக்குச் சென்றுள்ளார். அவர்கள் வாணிபம் கருதியே இங்கு வந்தமையால் தங்கள் சமயத்தைப் பரப்பும் பணியைக் கைக்கொள்ளவில்லை. ஆனால் அவர்கள் இங்கு தங்கியிருக்கிறபோது தங்கள் சமய ஒழுக்கங்களைக் கடைப்பிடித்தொழுகியிருப்பர் என்பது உண்மை. ஆனால் கோவை மாவட்டத்தில் கிருத்துவ சமயம் பரவத் தொடங்கியது கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் எனக் கொள்ளலாம். பிரான்சிஸ் சேவியர் என்பவரால் மதம் மாற்றப்பட்ட மலையாளக் கிருத்துவர்கள் கோவைக்கருகில் உள்ள [illegible] சௌரிப்பாளையத்தில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் குடியேறினர் என்ற கருத்து உண்டு. தாராபுரத்தில் கி.பி. 1608-ல் ஒரு கிருத்துவ கோயில் இருந்தது. இந்த மாவட்டத்தில் மதுரையிலிருந்து வந்த கிருத்துவ சங்கத்தார் முதன் முதலில் சமயப் பணியைச் செய்தனர். ராபர்ட்டி நொபிலி அவர்கள் சத்திய மங்கலத்தில் ஒரு கிருத்துவ சங்கத்தை நிறுவினார். இவரைப் பல கிருத்துவர் சங்கங்கள் தொடர்ந்தன.

சத்திய மங்கலத்தில் இருந்த பாளையக்காரர் 1647 வரை கிருத்துவ சங்கத்தை ஆதரித்தார். அவர் இறந்தபின் கிருத்துவர்களுக்குப் பல துன்பங்களும், தொல்லைகளும் நேர்ந்தன. கிருத்துவ சமய பிரசாரகர்கள் பலமுறை காட்டிற்குத் துரத்தப்பட்டனர். அங்கு அவர்கள் பல கஷ்டங்களை அனுபவித்தனர். 1658-ல் நிலைமை திருந்தியது. எமானுவல் அவர்கள் பல துன்பங்களுக்கிடையில் முப்பத்தியொரு ஆண்டுகள் சமயப்பணி செய்தார். 1652-ல் சத்தியமங்கலம் பகுதியில் பதினைந்து கோயில்கள் ஏற்படுத்தப்பட்டன. நான்கு ஆண்டுகளில் நூற்றிமுப்பது கிராமங்கள் கிருத்துவத்திற்கு மதம் மாறின. இக்காலங்களில் மைசூர் அரசர்கள் கிருத்துவத்துக்கு ஆதரவாக நின்றனர். கருமத்தம்பட்டியும், ஆண்டியூரும் தலைமையிடங்களாக விளங்கின.

மராட்டியர் மதுரையை நோக்கிப் படையெடுத்த போது இந்த மாவட்டத்தின் வழியாகச் சென்றனர். அவர்களால் இப்பகுதியில் நாசமும் கொள்ளையும் நிகழ்ந்தன. இந்தப் படையெடுப்பினால் கிருத்துவத்திற்கு ஏற்பட்ட கதி பற்றி எதுவும் தெரியவில்லை.

1739-ல் மதம் மாறிய கிருத்தவர்களுக்குப் போப்பிடமிருந்து ஒரு ஆணை வந்தது. அவர்கள் அதுவரை கடைப்பிடித்து வந்த இந்து சம்பிரதாயங்களைக் கைவிட்டுவிட வேண்டும் என்பதே அந்த ஆணை. இதனால் இங்குள்ள கிருத்தவர்கள் அதிருப்தியுற்றனர். கோவை மாவட்ட கிருத்தவ சங்கங்களுக்குக் கொச்சியிலிருந்து உதவி வந்தது. அப்பி துபாயிஸ் என்பார் இப்பகுதியில் 1790-லிருந்து 1843 வரை பணியாற்றினார். ஆனால் இங்கு நிலவிய பாதுகாப்பற்றத் தன்மையும், நாயக்கர்களுடைய கொடுமையும், ஐதர் திப்புசுல்தான் படை-யெடுப்பும் கிருத்தவ மத வளர்ச்சியைத் தடுத்தன. 1845 வரை ஐரோப்பிய உதவி இல்லாமல் கிருத்தவ சங்கங்கள் இயங்கின.

1930-ல் லண்டன் கிருத்தவ சங்கம் இங்கு தன் பணியைத் துவங்கிற்று. டபிள்யு. பி. அட்டிஸ் என்பார் திருவாங்கூரிலிருந்து வந்து மதப்பணியைத் துவக்கினார். 1866 வரை பணியாற்றினார். கிருத்தவ கல்வி நிலையங்களைத் துவக்கினார். 1856-ல் லிப்சிக் கிருத்தவ சங்கம் துவக்கப்பட்டது.

<u>இஸ்லாம்:</u>

இஸ்லாம் மதம் 18-19-ம் நூற்றாண்டுகளில் இங்கு வந்தது. சுல்தான் காலத்தில் மசூதிகள் கட்டப்பட்டன. இஸ்லாம் பற்றி வேறு செய்திகள் எதையும் அறிந்து கொள்ள முடியவில்லை.

⁂

# ஆனூர்ப் போரும் வெற்றிச் சின்னமும்

(புலவர். சு. வேலுச்சாமி, பி.லிட்.,
தமிழாசிரியர்,
கொமாரப்பா செங்குந்தர் உயர்பள்ளி,
சென்னிமலை).

அறிமுகம்:

"கூடலர்கோன் வரகுணன் குறைகழற்கோச் சடையன்
சேயாகி வெளிப்பட்ட செங்கண்மால் வல்லபன்
மெய்போயந் தொளியர்கலி [illegible]ந்தியாகர உதிரன்யகர்ப்ப
குன்னவல மாவெள்ளம் குரைகடல்புக் கொண்டும்
விண்ணுள விவ்வாற்று விரிந்த விடைகொடுத்தும்
காடவரும் கடலானூர்ப் பீடழியப் பின்னின்றும்
குடபட்டுவர் குணசோழர் தென்கொங்கர் வடபுலவர்
அடலழிந்து களஞ்சேர அமர்வல்லான் ....."

என்பது தளவாய்புரச் செப்பேட்டில் சீமாறன் சீவல்லபன் பற்றி வரும் பகுதி. பாண்டியன் சீவல்லபன் பல்லவனை அடல்மிகு ஆனூரில் பெருமை யழிந்து தோற்றோடும்படி செய்த செய்தி கூறப்படுகிறது.

ஆனூர்ப் போருக்குக் காரணம்:-

மூன்றாம் நந்திவர்மன் தன் தந்தை நந்திவர்மன் பாண்டியரிடம் இழந்த தொண்டை நாட்டுத் தென்பகுதியை மீட்கப் படையெடுத்தனன். தெள்ளாற்றில்[1] சீமாறன் சீவல்லபன் பல்லவனை எதிர்க்கின்றான். கி.பி. 854-ல் பெரும்போர் நிகழ்கின்றது.[2] இப்போரில் நந்திவர்மன் வெற்றி பெற்றான். அவனைத் 'தெள்ளாறெறிந்த நந்திவர்மன் என நந்திக் கலம்பகம் போற்றுகிறது. வெற்றி கண்ட நந்திவர்மன் பாண்டியன் வலிமையை மேலும் குறைக்கவும் கொங்கு நாட்டைக் கைப்பற்றவும் கருதிக் கொங்கின் மீது படையெடுத்து வருகின்றான். "பல்லவர்க்கும் பாண்டியர்க்கும் நடந்த போருக்குச் சிறந்த காரணம் கொங்கு நாட்டின் உரிமையே யாகும்"[3] சீமாறன் கொங்கு நாட்டில் பாண்டியர்க்குரிய வலிமிகு கோட்டையாகத் திகழ்ந்த ஆனூரில் நந்திவர்மனை எதிர்க்கின்றான். ஆனூர்ப் போர் கி.பி. 854-859-க்கிடையில் நிகழ்ந்திருக்கவேண்டும்.

ஆனூர் எது?

கோவை மாவட்டத்தில் ஈரோடு [illegible] பெருவழியில் நொய்யலாற்றங் கரையில் உள்ள பழைய [illegible] ஆனூர் என்ற

---

1. தெள்ளாறு வடஆர்க்காடு மாவட்டம் [illegible] ஊராகும். பேராசிரியர் [illegible] வரலாறு பக்கம் - 153. (2). பல்லவர் [illegible] -டி.வி. சதாசிவ பண்டாரத்தார் - பக்கம் 65. (3) பாண்டியர் வரலாறு - டாக்டர்.மா.இராசமாணிக்கனார் - பக்கம் 161.

தொன்மையான ஊர் உள்ளது. இதுவே போர் நிகழ்ந்த இடமாக இருக்கலாம். 'ஆனூர் - ஆனூர்-கொங்கு நாட்டில் நொய்யலாற்றங் கரையைச் சார்ந்தது' (பெருந்தொகை-பக்கம் 612)[4] பழைய கோட்டைக்கு ஆனூர்க் கோட்டை என்பதே பழம் பெயர். ஆனூரில் கோட்டை இருந்ததற்கு அடையாளங்கள் உள்ளன. "ஆனூர் அம்மன் கோவில்" - என்ற அம்மன் கோவிலும் அங்கு உண்டு. ஆனூர்க் கோட்டைக்குப் பழைய கோட்டைப் பட்டக்காரரது முன்னோர்கள் பல நூற்றாண்டுகளாகத் தலைவர்களாக இருந்து வந்திருக்கின்றனர். பாண்டியனது தானைத் தலைவராக இருந்து பகைவனை வெல்ல உதவி செய்து சிறப்புப் பட்டங்கள் பெற்றுள்ளனர். அதுபற்றி வரும் பழம் பாடல்கள்:

இத்தரை மீதினிற் சேனைபதி யாயிருந்து வெற்றி
ஒத்தவரப் பெற்றதற்கா தனக்கு இங்கு உறு பெயராம்
உத்தம சோழனென்பு அப்பாற் தரப்பெறும் நேர்பட்ட
வர்த்தனன் வாழ்வுறு ஆனூர்திகழ் கொங்கு மண்டலமே"

- கொங்கு மண்டல சதகம் - 87 முத்துச்சாமிக் கோனார் பதிப்பு)

"ஆனூர் புரக்கவும் விக்கிரமக் கோட்டை அழிக்கச் சொட்டை
வீனூர் புரக்கவும் உத்தம சோழனை வென்ற வென்றி
தானூர் புரக்கின்ற சர்க்கரை பாண்டியன் தந்த பட்டம்
வானோர் புரக்கக் கவிதந்தான் கொங்கு மண்டலமே

(வால சுந்தரக் கவிராயர் கொங்கு மண்டல சதகம்).

"காரை ஆனூர் மாபழங் கோட்டையில்
கதித்தமுடி மேவுக
களிவுடன் கொள்கிளைக் காத்து நீடூழியாய்க்
களிப்புடன் வாழுமெங்கள் - 5,

"பட்டக்காரர் மரபினர் வழிவழியாகச் சர்க்கரை, உத்தமகாமிண்டன், மன்றாடியார் என்ற பட்டங்களைக் கொண்டு விளங்குகின்றனர். இக்குடி முதல்வன் காரியான் சர்க்கரை என்பவன். அவன் உத்தம சோழனை வென்றதற்காகப் பாண்டியன் மகிழ்ந்து அளித்த பட்டம் 'உத்தம காமிண்டம்' என்பதாம்". *6. இங்கு கூறப்படும் உத்தம சோழன் நந்திவர்மனது தானைத் தலைவருள் ஒருவனாக இருக்கலாம். ஆனூர்ப் போரில் அவனை வென்றதற்காக மகிழ்ந்த பாண்டியன் 'உத்தம காமிண்டன்' என்ற பட்டம் தந்திருக்க வேண்டும். உத்தம காமிண்டன் என்ற பட்டம் பற்றி பின்வரும் பாடல் தெரிவிக்கிறது.

---

4. பல்லவர் வரலாறு - டி.வி. சதாசிவ பண்டாரத்தார் - பக்கம் 65.
5. பட்டக்காரர் முன்னோர் [illegible] பட்ட விழாப் பற்றிய பழம்பாடல்.
6. புலவர் குழந்தை - கொங்கு நாடு - பக்கம் 166.

"ஓங்கு செட்டைக் காரர் கண்டன்
உத்தம காமிண்டன் என்கோன்" - *7

எனவே தளவாய் புரச் செப்பேட்டில் கூறப்படும் ஆனூர், நொய்யலாற்றங் கரையில் உள்ள ஆனூரே. 'அடல்மிகு ஆனூர்' என்பதில் அடல் என்பது காவல் வலிமையைக் குறிக்க வந்த அடைமொழியாம்.

ஆனூர்ப் போர் முடிவு:

பல்லவர் பாண்டியர்க்கிடையே போர் நிகழ்ந்த இடம் செங்குருதி படர்ந்து செங்களமாகக் காட்சி தந்திருக்கிறது. இன்று அவ்விடம் செங்குளம் என அழைக்கப்படுகிறது. போரில் சிதறுண்ட பல்லவர் படை நொய்யலாற்றைக் கடந்து வடமேற்காக ஓட, துரத்திச் சென்ற பாண்டியர் படை பல்லவர் படையை அரச்சலூர் மலையின் மேற்கு முனையில் ஆனூரில் இருந்து நான்கு கல் தொலைவில் அழித்து வெற்றி கண்டிருக்கிறது. பல்லவர் பாண்டியரிடம் தோல்வியுற்ற செய்தியைப் 'பாண்டியனிடம் முன்பு தோல்வியுற்ற செய்தியைப் 'பாண்டியனிடம் முன்பு தோல்வியுற்ற படை அரசன் அருளால் (நிருபதுங்கவர்மனது போர்த் திறமையால்) அவனையும் பிறரையும் அரசலாற்றங்கரையில் முறியடித்தது' - என்ற பாகூர்ச் செப்பேட்டுப் பகுதியால் அறியலாம்.

வெற்றிச் சின்னம்:

ஆனூர்ப் போரின் வெற்றிச் சின்னமாக ஆனூரில் வெற்றித் தெய்வத்திற்குக் கோயில் எழுப்பப்பட்டிருக்கலாம். அக்கோவிலே 'ஆனூர் அம்மன்' கோவிலாகும். ஆனூர்க் கோட்டைக்குத் தனக்கு வெற்றிக்கு உதவிய கரியான் சர்க்கரையைத் தலைவராக்கியிருக்கலாம். 'ஆனூர் அம்மன்' - பட்டக்காரர் மரபினது குல தெய்வமாக இன்னும் விளங்குகிறது.

பாண்டியர் படை பல்லவர் படையை முற்றும் அழித்த அரச்சலூர் மலையின் மேற்கு முனையில் வெற்றித் தெய்வமாகிய கொற்றவைக்குக் கோயில் எடுப்பித்துள்ளனர். அது 'வாகைத் தொழு அம்மன்' கோயில் என வழங்கப்படுகிறது. *8. இக்கோவிலுக்கு வடக்கேயுள்ள முருங்கத் தொழு

---

* 7. நல்லதம்பி சர்க்கரை மன்றாடியார் காதல்.
* 8. வாகைத் தொழு அம்மன் கோவில் சென்னிமலை அரச்சலூர் வழியில் சென்னிமலையிலிருந்து 4வது மைலில் உள்ளது.

பிரம்மேஸ்வரமுடையார் திருக்கோயிலின் கர்ப்பக் கிரகத்தின் கிழக்குப்-புறக் குமுதப் பட்டையிலுள்ள சுந்தர பாண்டியன் கல்வெட்டில் இக்கோவில் 'பிடாரி கோவில்' எனக் குறிக்கப்படுகிறது. *9 - அங்கு வாழும் வேளான்குடிப் பெருமக்கள் வாகைத்தொழு அம்மனைத் தங்கள் குல தெய்வமாகப் போற்றி வழிபட்டு வருகின்றனர்.

<u>ஆய்வுச்சாரம்</u>:

மேலே கண்டவற்றால் மாறன் சீவல்லபன் தெள்ளாறெறிந்த நந்திவர்மனை ஆனூர்ப் போரில் வென்றான். அவ்வானூர் கோவை மாவட்டத்தில் நொய்யலாற்றங்கரையைச் சார்ந்த, இன்று பழைய கோட்டை என்று வழங்கப்படும் ஆனூரே ஆகும்.

"இதே ஆனூரில் சங்க காலத்தில் ஆலூர் காவிதிகள் சாதேவனார் என்ற புலவர் வாழ்ந்திருக்கின்றார். அவரது பாடல் அகநானூற்றில் 159ஆம் பாடலாக இடம் பெற்றுள்ளது. இப்புலவரது பெயர் ஆலூர் காவிதிகள் சாதேவனார் என்றும் ஆமூர் கவுதமன் சாதேவனார் என்றும் சில பதிப்புக்களில் காணப்படுகிறது. இவ்வூரில் கொடுமுடி என்ற சிற்றரசன் வாழ்ந்து, வாளவன் ஒருவனை வெற்றி கண்டிருக்கிறான்". * 10.

எனவே தொடர்ந்து அமர்கள் பல கண்டு, செங்குருதி படிந்த வீரத் திருநகராக இவ்வானூர் திகழ்ந்திருக்கின்றது.

- - - - - - - - - - - - - - - - - - - - - -

*9 கோயில் சாசனங்கள்

*10 அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆய்வுக் கோவை - இந்தியப் பல்கலைக்கழகங்கள் தமிழாசிரியர் மன்றம்.

****

# கொங்கு நாட்டு சமுதாய வளர்ச்சி

டாக்டர் புலவர் அ. அண்ணாமலை, பி.லிட்.,
59. ஈஸ்வரன் கோவில் வீதி,
ஈரோடு - 638001

*********

கொங்கு நாட்டில் வரலாற்றுக்கு முற்பட்ட கற்காலத்தின் இறுதியில் கையாளப்பட்ட பொருள்கள் சில கிடைத்துள்ளன. ஆகவே வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலேயே கொங்கு நாடு நாகரீகம் பெற்றது.

சேலம் மாவட்டத்தில் சேகரிக்கப்பட்ட கற்காலக் கருவிகள் 70 உளிகளும் 5 சுத்திகளும் 3 உரை கற்களும் லிங்க வடிவில் கல் ஒன்றும் சென்னை கண்காட்சிச் சாலையில் வைக்கப்பட்டுள்ளன. உரை கல் துணிகளுக்கு மெருகு ஏற்றுவதற்காக பயன்படுத்தும் கல் ஆகும். எனவே கற்காலத்திலேயே ஒரு வகையான நெசவு நடைபெற்றது என்பது புலனாகிறது. மேற்கூறிய கற்காலக் கருவிகள் சேலம் மாவட்டத்தில் பருகரில் மிகுதியாகக் கிடைத்தமையால் பருகரில் ஆயுதக் கிடங்கோ அல்லது கோவிலோ இருந்திருக்கலாம். சேர்வராயன் மலையில் சில பானைத்துண்டுகள் கிடைத்துள்ளன.

இரும்புக்காலம்:

கொங்கு நாட்டில் இரும்புக் காலத்தைச் சேர்ந்த பாண்டவர் குழிகள், கல்வெட்டம், வீரக்கல், மாஸ்திக்கல் கிடைத்துள்ளன. நல்லாம்பட்டி, கண்டியன் கோயில், கஞ்சப்பள்ளி, நாட்டுக்கல் பாளையம் ஆகிய ஊர்களில் பாண்டவர் குழிகள் காணப்பட்டன. பாண்டவக் குழிகளில் பெரிய சாடிகளில் மனித எலும்புகளும் சிறு பாத்திரங்களும் இரும்புக் கருவிகளும், நகைகளும் கிடைத்து இருக்கின்றன. பேரூர், வெள்ளலூர் எல்லைப் பாளையம் ஆகிய ஊர்களில் பாண்டவர் குழிகள் உள்ளன. கில்துவேன் (                ) முத்துக் கோனூர் பட்டியிலும் பூண்டியிலும் கிடைத்துள்ளன.

கல்வட்டம் மேட்டுப் பாளையத்திற்குப் பக்கத்திலும் தாராபுரத்திற்கு அருகிலும், வீரக்கற்கள், மாஸ்திக் கற்கள் பல கிராமங்களிலும் கிடைத்துள்ளன.

...2

மணிமேகலையில் சாத்தனார்

"சுடுவோர் இடுவோர் தொடுகுழி படுப்போர்
தாழ்வயின் அடைப்போர் தாழியில் கவிப்போர்"

என விளம்பியதற்கு ஏற்பவும்,

"தேவர் உலகம் எய்தினன் ஆதலின்
அன்னோற் கவிக்கும் கண்ணகன் தாழி"

என்று புறநானூறு புகல்வதற்கு ஏற்பவும் கொங்கு நாட்டில் முதுமக்கள் தாழியும் பாண்டவர் குழிகளும் கிடைத்துள்ளன. சங்க காலத்திலேயே கொங்கு நாடு நாகரிகம் உற்றது என்பது புலனாகிறது. கொங்கு நாட்டில் வீரக்கற்களும் மாஸ்திக் கற்களும் கிடைத்திருப்பதால் கொங்கு நாட்டு மக்கள் வீரத்திலும் கற்பில் பெண்களும் சிறந்து விளங்கினர் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்குகிறதன்றோ!

கொங்கு நாட்டில் மலைவாணர்கள் மிகுதியாக உள்ளனர். இன்னும் பண்படாத மொழிகளைப் பேசும் பல்வேறு வகுப்புப் பழங்குடியினர் மலைகளில் வசிக்கிறார்கள். இருளர், மலசர், தோதர்கள், படுகர்கள், மலையாளிகள், முதுவர், காடர், புலையர் முதலிய வகுப்பினர் வசிக்கிறார்கள். கொங்கு நாட்டில் தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு மொழி பேசும் மக்கள் கலந்து உடன்பிறந்தாரைப் போல் வேற்றுமை இன்றி நீண்ட காலமாக வாழ்கிறார்கள்.

வேட்டையாடியதால் வேட்டுவர் என்று பெயர் பெற்ற மக்கள் பின்பு உழவுத் தொழிலைச் செய்த போதும் வேட்டுவர் என்றே அழைக்கப்பட்டார்கள். நெடுங்காலமாக உழவுத் தொழிலைச் செய்தோர் கொங்கு வேளாளர் எனப்பட்டனர். கொங்கு வேளாளரை அண்டி வாழ்வோர் கொங்கு நாவிதர், கொங்கு வண்ணார், கொங்குக் குயவர், கொங்குப் பள்ளர் எனப்பட்டனர். இதனால் மற்ற நாட்டு மக்களிலிருந்து கொங்கு நாட்டார் பிரித்து அறியவும் தனித்தன்மை அறியவும் ஏதுவாக வாழ்ந்தனர். சமண மதமும் புத்த மதமும் பரவியதற்குச் சான்றாக கரூர் அருகே ஆறு நாட்டார் மலையில் சில குகைகள் உள்ளன. இக்குகைகளில் சமண, பௌத்தத் துறவிகள் இருந்திருக்கலாம். ஐவர் மலை, திருமூர்த்தி மலை, திருச்செங்கோடு மலை ஆகியவற்றில் படுக்கைகள் காணப்படுகின்றன. ஆகவே சமண மதமும் கொங்கு நாட்டில் பரவியிருந்தது புலனாகிறது.

உரோமானிய உறவு:

எகிப்து இந்தியாவுடன் செய்து வந்த வாணிகம் சீசர் அலெக்சாண்டிரியாவைக் கைப்பற்றியதும் உரோமர் கைக்குச் சென்றது. உரோமாபுரிக்கு கொங்கு நாட்டில் கிடைத்த ரத்தினங்கள் உரோமானிய சீமாட்டிகள் விரும்புபவை. படியூரில் கிடைத்த ரத்தினங்கள் ரோமாபுரிக்கு ஏற்றுமதியாயின. அகஸ்டசுக்குப் பிறகு ரோமானிய தமிழர் வாணிபம் பெருகிறது. கிரேக்கர்களை அயோனியன் எனத் தமிழர் வழங்கினர். அயோனியன் என்பது தமிழில் யவனர் எனத் திருத்தமாக மதுரைக் காஞ்சியிலும் கொங்குவேள் மாக்காதையிலும் இயம்பப்படுகிறது. சான்றுக உரோமானிய நாணயங்கள் ஏராளமாகக் கொங்கு நாட்டில் கிடைத்துள்ளன. கி.மு. 44 முதல் கி.பி. 323 வரை உள்ள ரோமானிய நாணயங்கள் கிடைத்துள்ளன.

சங்ககாலம்:

அதிகமானின் முன்னோர் தேவலோகத்திலிருந்து கரும்பைக் கொணர்ந்ததாகக் கூறப்படுகிறது. அதனால் சங்ககாலத்தில்கரும்பு வேளாண்மை சிறப்பாக நடைபெற்றது தெளிவு.

கோசர்:

கோசர் மீது படையெடுத்த மோகூர் மன்னர் கொங்கு நாட்டவராக இருக்கலாம். மோகூர் கொங்கு நாட்டு எல்லையில் மைசூர் பகுதியில் உள்ளது.

எகிப்து தேசத்தில் கல்லறையில் சேர்த்து இரும்பு எஃகு செய்வதற்கு தமிழரைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது என்று கிரீசு, உரோமப் புலவர்கள் கூறி உள்ளனர். ஆகவே எகிப்தில் பிரமிடு கட்டுவதற்கு முன்பே கொங்கு நாட்டு எஃகு ஏற்றுமதி ஆகி உள்ளது. பிரமிடுகள் காலம் கி.மு. 10,000 ஆகும். ஆகவே கி.மு. 10,000-இல் கொங்கு நாடு நாகரிகம் பெற்று விளங்கியது.

கி.மு. 326-ல் அலெக்சாண்டரிடம் புருஷோத்தமன் 38 பவுண்டு சேலம் உருக்கை பரிசாகக் கொடுத்தான் என்பது வரலாறு. எனவே, வடநாட்டோடு கொங்குநாடு வாணிபம் செய்தது புலனுகிறது.

...4

கங்கர்கள் கொங்கு நாட்டை ஆளுகையில் ராஜகோவிந்தராயன் காலம் முதல் வீர சைவம் கொங்கு நாட்டில் பரவியது.

கொங்கு நாட்டு வேடுவர்களை சோழர்கள் வென்றனர். வேடுவர்களுக்கும் வேடுவருக்கும் பூசல் போராக மாறியதை கள்ளழகர் அம்மானை நாட்டுப் பாடல் மூலம் அறியலாம்.

ஜைனர்களின் முக்கிய இருப்பிடம் விஜயமங்கலம், திங்களூர் வெள்ளோடு, பூந்துறை முதலியனவாம். இவ்வூர்களில் பல சமண சின்னங் களும் கோவில்களும் உள்ளன.

அப்பர், சம்பந்தர், சுந்தரர் வருகையால் சைவ சமயம் வளர்ந்தது. சைவ சமயக் கோவில்களுக்கு விளக்கு வைக்கத் தானங்கள் கொடுக்கப்பட்டன.

சங்க காலத்தில் நொய்யல் ஆற்றில் 32 அணைகள் இருந்ததாகத் தெரிகிறது. அதனால் வேளாண்மை சிறப்புற்றது. காவிரி, பவானி, நொய்யல், அமராவதி ஆறுகளால் வேளாண்மை சிறந்து விளங்கியது சங்க காலத்தில் தொடங்கிய சலகை என்ற முகத்தல் அளவை இன்று வரை கொங்கு நாட்டில் வழக்கத்தில் உள்ளது. சலகை என்பது 4 மூட்டைகள் ஆகும். பல்லவருக்குப் பின் கங்க பல்லவர்கள், முளம்ப பல்லவர்கள், பாணர்கள் என்ற குறுநில மன்னர்கள் அரசாண்டனர். பின்பு இராட்டில கூட அமோகவர்ஷன் காலத்தில் சிற்றரசராக கங்கர் ஆண்டபோது 9ஆம் நூற்றாண்டில் 3 முறை சுந்தரர் பிரயாணம் செய்து இருக்கிறார். அப்போது அமைதி நிலவியது.

பின்பு முளம்பர் புரட்சி செய்தனர். சேரர் ஆட்சி ஏற்பட்ட பின்பு சோழர் ஆட்சி ஏற்பட்டது. பின்பு கொங்குச் சோழர் ஆட்சி ஏற்பட்டது. கொங்குச் சோழ மன்னர் 1004 முதல் 1304 வரை ஆண்டனர்.

கொங்குச் சோழர் காலத்தில் அமைதி நிலவியது. அவர்கள் காலத்தில் வாழ்ந்த வகுப்பினர் புலிஷி, மலையர், மாடை, பையர், கருந்தோழி, சேவாயர், கொற்றந்தை, சேட்டார், மயிலார், முட்டை ஊரார் முதலிய குடிப்பெயர் கொண்ட மக்கள் வாழ்ந்தனர். கொங்குச்

சோழர்கள் சிற்றியம், இலவை, ஒடவை, மன்றுபாடு, தண்ட குற்றம், வேண்டுகோள், எடுத்திறை, சுமை சுற்றம், சாரிகை, இவை கொங்கு நாட்டுக்கு உரியவை.

பொதுவாக தறிவரி, குயவரி, மீன்பாட்டம், நிலவரி, கொங்கு சோழர் நாணயங்கள். வராகன், அச்சு, கழஞ்சு, பொன் நாணயங்கள். யானை, காட்டுப் பன்றி, இயக்கி உருவம், நாணயங்களில் இருந்தன. கழஞ்சும் அச்சும் சம மதிப்புள்ளவை. 8 வராகன் கொண்டது அச்சு. விளக்கு எரிக்க வராகன், பணம், கொடுத்ததாகக் கல்வெட்டு கூறுவதால் பண்டமாற்று ரூபாய் நாணயம் வழக்கில் இருந்தது.

கோயமுத்தூர் பெயர்க்காரணம்:

சென்னை அரசாங்கக் கையெழுத்து நிலையத்தில் சோழன் பூர்வ பட்டயம் என்ற ஒரு பிரதி உள்ளது. கோவன் என்ற இருளர் தலைவன் இருளர் பதி கட்டிக் கொண்டு வாழ்ந்தான்; கோனியம்மன் வனதேவதையை வழிபட்டு வந்தான். அதற்குக் கோவன்பதி என்ற பெயர் வந்தது. சோழன் சமய முதலி, சேரமான் பெருமாள் நாயனார் முதலி-யோர் வந்து காடுவெட்டி ஊர்க்கட்டினதாகவும் கோவன் பெயரால் கோவன் புத்தூர் என்ற பெயர் ஏற்பட்டது என்றும் அந்நூல் கூறுகிறது. அவன் பெயரால் கோவன்புதூர் ஏற்பட்டு இருக்கலாம்.

12-ஆம் நூற்றாண்டில் திருமுருகன் பூண்டியில் உள்ள கல்வெட்டில் மருதமலை நாயகன் பெயர் வந்துள்ளதால் மருதமலை 12-ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே சிறப்புற்றது அறியலாம்.

பிற்காலத்தில் முகலாயர் படை எடுப்பு ஏற்பட்ட பின் இந்துக்கள் முகம்மதியராக மதம் மாறினர். ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்ட பின் இந்துக்கள் கிறித்தவராக மதம் மாறினர். கொங்கு நாடு கேரளம், மைசூர், தமிழ்நாடு மூன்றுக்கும் எல்லையில் இருப்பதால் மலையாளம், கன்னடம், தமிழ் பேசும் மொழியினரும், ஆந்திரர் படையெடுப்பின் போது ஆந்திரர் குடியேறியதால் தெலுங்கும் முகம்மதியர் படையெடுத்ததால் உருது மொழியும் மிகுதியாகப் பேசும் மக்கள்

வாழ்கிறார்கள். மதம் மாறிய முகம்மதியருக்குத் தாய்மொழி தமிழ். ஆனால் முகம்மதியராக உள்ளனர். கொங்கு நாட்டில் பருத்தி பஞ்சாலைகளும் நெசவாலைகளும் வேறு பல தொழிற்சாலைகளும் இருப்பதால் மக்கள் தொழில் துறையிலும் வேளாண்மையிலும் முன்னேறி வருகிறார்கள். எதிர் காலத்தில் கொங்கு நாடு தொழில் துறையிலும் வேளாண்மைத் துறையிலும் சிறந்து விளங்கும் என்பதில் ஐயமில்லை.

******

பானு**

# கோவை மாவட்டத்தில் பண்டைய நீர்ப்பாசனத் திட்டங்கள்.

- ந. வேலுசாமி, எம்.ஏ.,
தமிழ்த்துறை,
ஈரோடு கலைக்கல்லூரி,
ஈரோடு-9.

*****

தமிழகத்தில் உள்ள வறண்ட மாவட்டங்களில் ஒன்றாகக் கருதப்படுவது கோவை மாவட்டம். இம்மாவட்டம் கொங்கு மண்டலத்தைச் சார்ந்தது. முன்பு இப்பகுதியில் இருந்தவர்கள் 'இது வானம் பார்த்த பூமி' என்று வாளாவிருந்து விடாமல் விவசாயத்திற்காகப் பல நீர்ப்-பாசனத் திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். அவர்கள் பெருமுயற்சி கொண்டு,

" காடு கொன்று நாடாக்கி
குளம் தொட்டு வளம் பெருக்கி "

இப்பகுதியைச் செழிப்புறச் செய்தார்கள். இதை, இலக்கியங்களும் கல்வெட்டுக்களும் நமக்கு அறிவிக்கின்றன.

## சங்க நூலில் கொங்குநாடு:

'கயிறு குறு முகவை" என்ற 22-ஆம் பதிற்றுப் பத்து கொங்கு நாட்டில் ஏற்பட்ட நீர்ப் பஞ்சத்தைக் கூறுகிறது. கொங்கு நாட்டில் நீர் இல்லை. பசுக்களோ அதிகம். அவைகளைத் தாகம் வாட்டுகிறது. பக்கத்தில் இருக்கும் ஒரு பாறைக் கிணற்றுக்கு ஓட்டிச் செல்கிறார்கள். அதில் ஆழத்தில் நீர் இருக்கிறது. மிகவும் துன்புற்று அந்தச் சிறிதளவு நீரையும் எடுத்து மேட்டில் மாடுகள் நீர் அருந்த அமைத்துள்ள பந்தலில் ஊற்றுகிறார்கள். அவர்கள் ஊற்று முன்பே மாடுகள் தாகம் தாங்காமல் மோதிக் கொள்கின்றன.

" பொன் செய்கணிச் சிதர்ப்பிளி உடைத்துச்
சிரறு சில ஊறிய நீர் வாய்ப்பத்தர்
கயிறு குறு முகவை மேயின மொய்க்கும்
ஆகெழு கொங்கர் நாடு "

என்பதே அச்செய்திகள் அடங்கிய சித்திரம்!

## காடு கொன்று நாடாக்கிய காலிங்கராயன்:

மேற்குத் தொடர்ச்சி மலையில் தோன்றிக் கிழக்கு நோக்கி

ஓடிக் காவிரியில் கலக்கும் நதிகள் மூன்று. அவை நொய்யல், அமராவதி பவானி. பவானியில் தொடங்கி ஆவுடையா பாறை வரை பாய்ந்து 57 மைல் ஓடி 13,000 ஏக்கரைப் பொன் கொழிக்கும் பூமியாக மாற்றும் காலிங்கராயன் வாய்க்காலுக்கு 700 ஆண்டுகள் ஆகின்றன. கொங்கரின் தெய்வமாகப் போற்றப்படும் காலிங்கராயனின் வரலாறே தனிச்சிறப்பு வாய்ந்த ஒன்றாகும்.

பூந்துறை நாட்டின் நாட்டாருள் வெள்ளோட்டில் குடியிருந்த காலிங்கராயன் தன் மகனுக்கு மணம் செய்ய, பண்ணை குலத்தாரிடம் பெண் கேட்கச் சென்றான். அன்றிரவு பண்ணை குலத்தார் வீட்டில் தங்கியிருக்க, அவர்களது சமையல்காரர் விருந்து செய்ய எந்த வகை அரிசி போடுவது என்று கேட்க பண்ணை குலத்தார் 'அரிசியைப் பற்றியே தெரியாத சாத்தந்தை குலத்தாருக்குப் பழைய அரிசியே போதும்' என்று கூறினார். இதை அறிந்த காலிங்கராயன் 'என் புன்செய்யை நெல் விளையும் நன்செய் ஆக்கிய பின்பே இங்கே சம்பந்தம் கொள்வேன்' என உறுதி பூண்டு, தன் இருப்பிடம் வந்தான். அவன் கனவில் தோன்றிய ஒரு உருவம் பாம்பு செல்லும் வழியே கால்வாயை வெட்டிக் கொண்டு போகுமாறு ஆணையிட்டது.

மறுநாள் விடிந்ததும் பாம்பு ஒன்று முன்னால் இருக்கக் கண்ட காலிங்கராயன் பாம்பு செல்லும் வழியே அடையாளம் போட்டுக் கொண்டே சென்றான். கொடுமுடி தொடங்கி, பவானிக் கூடல் வந்ததும் மேல் புறத்தில், அப்பாம்பு குறுக்காகப் படுத்துக் கொண்டது. அந்த இடத்திலே அணை கட்டப்பட்டது. பவானிக்கும் கொடுமுடிக்கும் இடையே வாய்க்காலும் வெட்டப்பட்டது.

இவ்வாறு தோன்றியவையே காலிங்கராயன் வாய்க்காலும், கலிங்கராயன் அணையும். அப்போது கொங்குப் பகுதியை ஆண்டவன் வீரபாண்டியன். அவனது நன்மதிப்பைப் பெற்றதால் அவன் உதவியும் காலிங்கராயனுக்குக் கிடைத்தது. இவ்வாறாக 12 ஆண்டு கால முயற்சிக்குப் பின்னரே காலிங்கராயன் கால்வாய் தோன்றியது.

நொய்யலில் கலக்கும் இவ்வாய்க்கால் வளைந்து வளைந்து செல்வதால் வெள்ளத்தினால் ஏற்படும் அழிவு தடுக்கப்படுகிறது. இது காலிங்கராயனின் பொறி இயல் திறத்தைக் காட்டுகிறது.

...3

" வாளிலிங்கே சுரர்வேத நாயகியம்மன்
வந்து முன் காட்சி செய்ய
வாய்த்த புகழ் சாத் தந்தை காலிங்கராயர் அணை
வரத்திலே கட்டி வைத்தார்
வாணி முதல் ஆதி கடூர் அறு காதமும்
வெகு சனங்கள் பிழைக்கவே தான் "

என்று ஒரு தனிப்பாடல் கூறுகிறது. அம்மட்டோ? பவானிக் கருகில் உள்ள ஊராட்சி மலைக் கோட்டையும் அங்கிருந்து அணை கட்டுமிடம் வரையில் உள்ள வழியையும் ஆயிரம் ஆயிரம் பொன்னுக்கு வாங்கி, அங்கிருந்து கற்களை உடைத்து எருமை வண்டியில் அவற்றைக் கொணர்ந்து கட்டினன். இதை 'மலை ஆயிரம் தடம் ஆயிரம்' என்ற பழமொழி நமக்கு இன்றும் நினைவூட்டுகிறது.

காலிங்கராயன் அணையையும் கால்வாயையும் பற்றி, கொடுமுடிக் கோயிலின் அர்த்த மண்டபக் கல்வெட்டு, திருக்கடூர் அழகப் பெருமாள் கோயில் கல்வெட்டு, விஜயமங்கலம் நாகேசுவரசுவாமிக் கோயில் கல்வெட்டு, நெருந் அக்னீசுவரர் கோயில் கல்வெட்டு, எலத்தூர் சோளீச்சுவரர் கல்வெட்டு, சர்க்கார் பெரியபாளையம் சுக்ரீவேசுவரர் கல்வெட்டு போன்றவை குறிப்பிடுகின்றன. மற்றும் பிற நாட்டறிஞர்களான லீவர்டீல் பாதிரியார், டாக்டர் புக்கானன், மெக்கன்சி, ராட்டன், ஹல்லுன், வெட்டர் பான், அருண்டேல் போன்றவர்களும் குறிப்பிடத் தவறவில்லை.

காலிங்கராயன், காலிங்கராயன் கால்வாய், காலிங்கராயன் அணைக்கட்டு தவிர விஜயமங்கலத்தில் உள்ள வாகைப் புத்தூர் வாணக் குளத்தையும் பழுது பார்த்தான்.

" எற்று திரைப் பொன்னி கடுழுவானி இடை - மடங்க
வெற்றி மிகுந்த அதிவீர பாண்டிய வேந்தனமச்சன்
கற்ற அறிவினன் காலிங்கராயன் செய்கால் கழி - நீர்
உற்ற வரளத்தை உறுவயலாக உயர்த்தியதே "

என்று போற்றுகிறது மற்றுமோர் தனிப்பாட்டு.

தடப்பள்ளி -- அரக்கன் கோட்டைக் கால்வாய்கள்:

இவை இரண்டு கால்வாய்கள். ஒவ்வொன்றிற்கும் பல கிளைக் கால்வாய்கள் உண்டு. 1. தடப்பள்ளிக் கால்வாய்: இதற்கு நஞ்செய் புளியம்பட்டிக் கிளைக் கால்வாய் சிங்கியன் கிளைக் கால்வாய்,

....4

தடப்பள்ளிப் பக்கக் கால்வாய், கூகலூர்க் கிளைக் கால்வாய், மேவாணி நீர் வழங்கு கால்வாய், கூகலூர்ப் பரிசோதனைக் கால்வாய், அம்மா பாளையம் கிளைக் கால்வாய், செரயாம்பாளையம் கிளைக் கால்வாய் போடி சின்னம்பாளையம் கால்வாய், அக்கிராகரக் கரைக்கால்வாய், பெருந்தலையூர்க் கால்வாய் என்பவை கிளைக் கால்வாய்கள் ஆகும்.

உ 2. அரக்கன் கோட்டைக் கால்வாய்: இதற்கு வாணிப்புத்தூர் கிளைக் கால்வாய், வாணிப்புத்தூர் விரிவுக் கால்வாய், பெருமுகை அத்தாணி என்பன கிளைக் கால்வாய்கள்.

<u>கொடிவேரி அணை:</u>

கொங்குவில் உள்ள 24 நாடுகளில் ஒன்று ஆறை நாடு. அதில் வரலாற்றுப் புகழ் பெற்றது 'கொடிவேரி' என்னும் ஊர். அதன் பெயர் கொண்டு அமைக்கப் பெற்றது இவ்வணை. 1680-ஆம் ஆண்டு அணை கட்டப்பட்டு, முன்பு குறிப்பிட்ட தடப்பள்ளி அரக்கன் கோட்டை என்ற இரட்டைக் கால்வாய்களாக, ஒரே கால்வாயாக இருந்தது பிரிக்கப்பட்டது. கோபியிலிருந்து 10 அமைல் மேற்கிலும் சத்திய மங்கலத்திலிருந்து 4 மைல் கிழக்கிலும், பெரிய கொடிவேரி, அக்கரைக் கொடிவேரி ஆகியவற்றுக்கிடையில் மலையிலிருந்து கொணர்ந்த கற்களையும் இரும்பையும் இணைத்து இவ்வணை கட்டப்பட்டது. அணையின் நீளம் 496 அடி. போர்களால் சிதைந்து போயிருந்த இந்த அணையைக் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர்களாகிய மேக்லியாட்டும், துரூரியும் செப்பனிட்டனர். அணைமூடும் காலம் பிப்ரவரி 15 முதல் ஏப்ரல் 15 வரை.

<u>கோவை மாவட்ட நீர்ப்பாசனம் பற்றிய பிற செய்திகள்:</u>

'கொங்கு விளைந்தால் எங்கும் விளையும்' என்பது பொன்மொழி. கொங்கு விளைய அக்காலத்தில், 17-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அவிநாசி வட்டம் கஞ்சப் பள்ளியில் புதுக்குளம், தட்டான் குளம், முருகன் குளம் என்ற முக்குளம் இருந்தன. இன்று ஒன்றுமில்லை; ஈரோடு வட்டம் முருங்கத் தொழுக் கல்வெட்டில் 'குளத்தில் நீர் இருந்தால் நெல் (நன்செய்ப் பயிர்) கொடுப்போம். நீர் இல்லாவிட்டால் தினை (புன்செய்ப் பயிர்) கொடுப்போம்' என்ற குறிப்பும் உண்டு. பவானி

வட்டத்தில் எண்ணமங்கலத்திலிருந்து ஆப்பக்கூடல் வரை 7 குளங்கள் சங்கிலித் தொடர்போல் இருந்ததாக வரலாறு உண்டு. இவை போன்ற பிற செய்திகளும் அறியக் கிடக்கின்றன.

கோவை மாவட்ட நீர்ப்பாசனம் பற்றி கொங்கு மண்டல சதகம் சென்னிமலை ஆண்டவர் பிள்ளைத் தமிழ், ஈரோடு ஐயனாரப்பன் பள்ளு போன்ற இலக்கியங்களும் தனிப் பாடல்களும் பரக்கப் பேசுகின்றன. கொங்கு நாட்டில் உள்ள ஆறுகளை எல்லாம் தொகுத்துப் பின்வருமாறு கொங்கு மண்டல சதகம் கூறுகிறது.

" திருமணி தொப்பை பூங்காவேரி வானியும்
செய்யநதி
தருமணி காஞ்சி பொருநை நள்ளாறு
சண்முகமும்
குருமணி பாலை நதி வாழை காரி
குடவநதியும்
வருமணி சண்பகம் சிற்றாறு சூழ்கொங்கு
மண்டலமே "

எனவே, இவ்வளவு நதிகளைக் கொண்டுள்ள கொங்குவின் கோவை மாவட்டம் நீர்ப்பாசனத் திட்டங்களை முன்பு நன்றாகவே நடத்தியிருக்கிறது என நம்ப இடம் இருக்கிறது.

******

# பேரூர் பச்சை நாயகியம்மன் திருக்கோவில்.

கு.கோ.முருகன், பி.லிட்.;
சர்வஜன உயர்நிலைப்பள்ளி,
கோயமுத்தூர்-641004

**

இருபத்திநான்கு பகுப்புக்களைக் கொண்ட கொங்கு நாட்டின் 'ஆறை நாட்டு' உள் நாடுகளில் ஒன்றாகக் கல்வெட்டால் குறிக்கப் பெறுவது, மூன்று யோசனை பரப்புள்ள 'பேரூர் நாடு'. 'பேரூர் நாட்டுக் கோவன் புத்தூர் என்றும், சீரகேரளநல்லூர்' என்ற குமரலிங்கக் கல்வெட்டுத் தொடர் நோக்குதற்குரியது.

இப்பேரூர் 'பட்டீஸ்வரர்' திருநாமம் 'திருவான்பட்டி உடையார்' எனத் தூய தமிழ்ப் பெயராய்க் கல்வெட்டில் காணப்படுகிறது. அக்கோவில் இறைவியின் பெயர் 'பச்சை நாயகி'. இறைவி பற்றிக் கல்வெட்டில் எச்செய்தியும் அறியப்படுவதில்லை.

இறைவன் சுயம்புலிங்கம் ஆதலால், இறைவன் ஆலயம் தோன்றிய காலம் முதலே இறைவியின் உருவும் தாபிக்கப்பட்டிருக்கும் எனல் இயலாது. பிற்காலத்தில்தான் அமைக்கப்பட்டிருக்கும். அது எக்காலமாயிருக்கலாம் என ஆய்வதே இக்கட்டுரை.

## தாபித்தவர் யார்?

அம்பிகையின் திருஉருவைக் கொண்டே இவ்வாய்வு நிகழ்கிறது. இவ்வம்பிகையின் திருவுருவை நோக்கின் இவ்வுரு பாண்டியர் காலத்தமைந்ததே என்பதை அறியலாம். அம்பிகை, இருதிருக்கரங்களுடன், ஒரு கரம் மலர்ச் செண்டுடனும், மறுகரம் கீழ்நோக்கித் தொங்கிய நிலையிலும் அமைந்துள்ளன. இவ்வாறமைந்த உருவம் பாண்டிய நாட்டுத் திருக்கோவில்களிலேயே காணப்படுவது.

சோழநாட்டுத் திருக்கோயில்களிலோ, தொண்டை நாட்டுத் திருக்கோவில்களிலோ ஏன் இக்கொங்கு நாட்டிலும் கூட இத்தகைய அமைப்புடன் காணல் அரிது. அங்குள்ள மூர்த்தங்கள் நான்கு கரங்களுடன், முன்னிரு கரங்கள் அபயமும் வரதமும் காட்டிப் பின்னிரு கரங்கள் அங்குச பாசம் அல்லது மலர் ஏந்தி விளங்குவன.

இப்பேரூரில் உள்ள மற்றொரு சிவாலயத்தில் கூட அம்பிகையின் திருவுரு நான்கு திருக்கரங்களுடன் காட்சிதர 'பச்சைநாயகி' மட்டுமே இரு கரங்களுடன் பாண்டி நாட்டமைப்பில் காட்சி தருகிறாள்.

எனவே, இவ்வமைப்பின் திருவுரு, இங்கு பாண்டியர் ஆட்சி பெற்றிருந்த காலத்தில் அவர்களால் தாபிக்கப்பட்டதே என்பதை அறியலாம்.

## தாபித்த காலம் யாது?

இனி எக்காலத்தில் தாபிக்கப்பட்டிருக்கலாம் என்பதைக் காலச்சூழல் கொண்டு ஆராய்வோம்.

பாண்டி நாட்டில் ஆறும் நூற்றாண்டுவரை நீடித்திருந்த களப்பிரர் ஆட்சியில் சமணமும், புத்தமும் தழைத்து சைவம் வலி குன்றியிருந்தது. அதன்பின் 'பாண்டியன் கடுங்கோன்' ஆட்சி முதல் மீண்டும் தமிழ்க் கலாச்சாரமும், சைவமும், தமிழும் செழித்திடலாயின. அவன் முதலாக வந்த பாண்டியருள், சேர, சோழ, பல்லவ, கொங்கு நாடுகளை வென்று அடிப்படுத்தி வீரமுடன் திகழ்ந்த மன்னர்கள், 'மாறவர்மன் அரிகேசரி' முதல் 'வரகுண மகாராசன்' மகன் 'சீமாறவல்லபன்' உள்ளிட்டோர் எனலாம்.

இப்பாண்டியர் அனைவருமே சைவ சமயப்பற்றுடையவர்கள். இவர்களுள் 'நெடுஞ்சடையன் பராந்தகன்' மட்டும் 'பரம வைணவனும்' விளங்கினான். இவன் பெயரில் 'திருமாலுக்குக் கற்றமன்ன கோயில்' ஒன்றை எடுத்தான் எனவும் செப்பேடுகளால் அறிகிறோம். எனவே இவன் காலத்தில் பேரூர் இறைவியின் கோவில் அமைந்திட நியாயமில்லை.

இவனுக்குப்பின் வந்த 'வரகுணன்', அவன் மைந்தன் 'சீமாற வல்லபன்' ஆகியோர் சைவப்பற்று மிக்கவர்களே. ஆனால் அவர்கள் காலத்தில் பல்லவரை வென்றிடவும், ஈழநாட்டின் மேல் போர் தொடுத்திடவும் எனப் பலபோர் நிகழ்ந்ததால், அவ்விருவரும் கொங்கு நாட்டுப் பக்கம் வந்ததாக அறிய வரலாறு துணை செய்வதில்லை. சேரரோடு செய்த போரும், தெற்கே 'விழிஞத்'தில் நிகழ்ந்ததால் அவர் இப் பகுதி வந்திரார் என உறுதியாக எண்ணலாம்.

முன்கூறிய [illegible] சடையவர்மனுக்கு முன்னைய பாண்டியர்கள் கொங்கு நாட்டை வென்று அடிப்படுத்திய செய்திகளைச் சாசனம் முதலியவற்றால் அறிகிறோம்.

ஞானசம்பந்தரால் வெப்புநோய் நீங்கப்பெற்ற சைவனை 'மாறவர்மன் அரிகேசரி'யின் மைந்தன் 'கோச்சடையன் ரணதீரன்' என்பவன் கேர, சோழ, பாண்டிய, கொங்கு நாடுகளை வென்றவன், என்பது வரலாற்றாசிரியர் 'சதாசிவ பண்டாரத்தார்' கூற்று. சோழமன்னன் இவனது அரண்மனையில் மருமகனாய்த் தங்கியிருந்தபோது, சேரமான் பெருமாளும், சுந்தரரும் மதுரை வந்தனர். இப்பாண்டியன் அவ்விருவரும் பாண்டிநாட்டுத் தலங்களைத் தரிசிப்பதற்கேற்ற ஏற்பாடுகளைச்

செய்து உடன்செல்லுமாறு அதிகாரிகட்கு ஆணையிட்டான் என திரு.க.வெள்ளை வாரணர் மொழிவர். இச்செய்திகள் இவர் பெருவீரமும் நிலவுலகம் தன்கீழ்க் கொண்டாண்ட பேரரசன் என்பதையும் சிவபத்தன் என்பதையும் காட்டும். இவன் காலம் 670-710.

இவன் மகன் 'அரிகேசரி பராங்குச வர்மன்' 710 முதல் 765 வரை அரியணையில் வீற்றிருந்தான். பேராற்றல் மிக்கவன். 'மழ கொங்கு நாட்டை'க் கைப்பற்றியவன். கொங்கு நாட்டின்மேல் படையெடுத்து வந்தபோது 'திருப்பாண்டிக் கொடுமுடி' என்னும் கொங்கு நாட்டுத் தலத்தில் இறைவனைத் தொழுது பொற்குவியலும் நவமணித் திரளும் அளித்தான் என வேள்விக்குடிச் செப்பேடு செப்பும்.

இங்கு கூறிய இவ்விரு அரசர்களும் கொங்கு நாட்டை வென்றவர்கள் என்பதையும் சிவநேயச் செல்வர்கள் என்பதையும் மனதிற் கொண்டு, இவனுக்கு அடுத்து அரியணை ஏறியவன் 'பரமவைணவன்' என்பதையும், அவனுக்குப் பின்னுள்ளோர் இப்பகுதிக்கு வந்திரார் என முன் கண்டதையும் மனதில் கொண்டு ஆராய்ந்தால், கோச்சடையன் ரணதீரன், அரிகேசரி பராங்குச மாறவர்மன் ஆகியோர் காலத்தில், பேரூர் பச்சைநாயகியின் திருவுரு தாபிக்கப்பட்டிருக்கலாம்.

மேலும், வைணவனை 'சடையவர்மன்' திருமாலுக்குக் கன்றமன்ன கோயிலைக் கொங்கு நாட்டில், அதுவும் பேரூரில் எடுத்தது ஏன் என எண்ணிப்பார்க்கவேண்டும்.

இவன், தன் தந்தையர் காலத்தில், அதாவது முன்கூறிய பாண்டியர் காலத்தில், அவர்கள் பேரூரில் புதிதாக அம்மையின் திருவுருவைத் தாபித்துச் சிறப்பு வழிபாடு செய்தமையைக் கண்டதால், தன் இறைவராய 'திருமாலுக்கு' மலைபோன்ற கோவிலை அதே பேரூரில் எடுத்திடவேண்டும் என விரும்பியிருக்கலாம். அவ்வாறே எடுத்தும் இருக்கலாம்.

அவன் அவ்வாறு,

"காஞ்சிவாய்ப் பேரூர்புக்குத்
திருமாலுக்குப் புக்குறையக்
குன்றமன்னதோர் கோயிலாக்கியது" கி.பி. 770-ஆம்

ஆண்டு என செப்பேட்டால் அறிகிறோம்.

எனவே, பேரூர் இறைவியின் திருவுருவம் இதற்கு முன்பாகவே பாண்டியரால் 7-ஆம் நூற்றாண்டினை ஒட்டித் தாபிக்கப்பட்டிருக்கவேண்டும் என்பதை அறியலாம்.

## முன்மண்டப காலம்:

இவ்வம்மன் கோயில் முன் மண்டபம் இதற்கும் பிற்காலத்தில் ஏற்பட்டிருக்கவேண்டும். அதன் காலம் பற்றியும் ஆய்வோம்.

அம்மன்கோவில் முன்மண்டப வடபக்கச் சுவரின் வெளிப் பகுதியில் இரண்டையின் ஒன்று எதிர்த் திசையில் பார்க்குமாறு அமைந்துள்ளன. அவற்றுள் வலப்புற மீனின் தலைப்பகுதி மட்டுமே காணப்படுகிறது. எஞ்சிய பகுதி தொடர்ந்திருக்கவேண்டும். ஆனால் அவ்வரிசையில் எவ்வடிவும் இல்லாத வெறுங்கல் சேர்த்துக் கட்டப்பட்டுள்ளது. இதை நோக்கும்போது சிதை-வுற்ற ஒரு கட்டிடத்தின் கற்களைப் பயன்படுத்தியதால் ஏற்பட்ட விளைவு இது என எண்ண இடமுண்டு.

முன்பு குறிப்பிட்ட 'குன்றமன்ன திருமால் கோவில்' இன்று பேரூரில் இல்லை. கி.பி.770-ல் கட்டப்பட்ட அக்கோயில் 13-ஆம் நூற்றாண்டு வரை இருந்தது என்பதை மூன்றாம் வீரவல்லாளனின் கல்வெட்டால் அறிகிறோம். அக்கோயில் 'லட்சுமி நாராயணம் பெருமாள் திருவிடையாட்டம்' என அக்கல்வெட்டில் குறிக்கப்படுகிறது.

15-ம் நூற்றாண்டில் பிற்பகுதியில் அமைச்சராயிருந்த "மாதையன்" என்பவன் பேரூரில் திருக்குளம் ஒன்றைக் கட்டித் தன் பெயரை அக்குளப்படிகளில் பல இடங்களில் செதுக்கியுள்ளான்.

இக்குளப்படிகளை, அக் "குன்றமன்ன திருமால் கோவிலின்" இடிந்த கற்களைக் கொண்டே இவன் கட்டினான் என்று கூறுவர் முன்னோர். இச்செய்தி உண்மையாயிருக்குமானால் 13-ஆம் நூற்றாண்டு வரை நன்னிலையில் இருந்ததாக அறியப்படும் அக்கோவில், நாளடைவில் கீழ்நிலை அடைந்து சிதைவுற்று 15-ஆம் நூற்றாண்டில் முற்றிலும் அழிந்தது எனலாம்.

அவ்வாறு அழிந்த நிலையில், விழுந்து இடந்த கற்களை இவ்வம்மன் கோயில் முன்மண்டபச் சுவருக்குப் பயன்படுத்தியிருக்கலாம்.

இரட்டைமீன் பாண்டியர் இலச்சனையாகையால் பாண்டியன் எடுத்த அத்திருமால் கோவிலில் மீன்வடிவம் இருந்திருக்க வாய்ப்புண்டு. அதில் ஒருகல் காணமலோ அல்லது உடைந்தோ போயிருக்-கலாம். அதனால்தான் இருமீன்களில் வலப்புற மீன் உருவம் முழுவடிவின்றிக் காணப்படுகிறது.

எனவே, அம்முன்மண்டபம் 15-ஆம் நூற்றாண்டினை ஒட்டியோ சிறிது முன்னாகவோ கட்டப்பட்டிருக்கலாம்.

சுவாமி கோவில் அர்த்த மண்டபம் மகாமண்டபங்கள், இராசேந்திரதேவன் காலத்தில் அதாவது 11-ஆம் நூற்றாண்டில் பலரால் கட்டப் பட்டதென கல்வெட்டுத் துணை கொண்டு 'கோவைக்கிழார்' அவர்கள் கூறியுள்ளார். அதுபோல் கல்வெட்டுத்துணை இக்கோயிலின் காலம் அறிய இல்லை. எனவே ஆய்வாளர்கள் தக்க சான்றுடன் இதன் காலத்தைக் கூறும் வரை, இக்கால வரையறை ஏற்புடையதாகலாம் என எண்ணுகிறேன்.

முடிவினை அறிஞர் கருத்து விட்டுவிடுகிறேன்!

நன்றி!

வணக்கம் !

******

OFFICE OF THE DIRECTOR OF ARCHAEOLOGY
5444
23 DEC 1976
GOVT. OF ... MADRAS

## கொங்கு மணக்கும் கோவை மாவட்டம்.

புலவர் சு. மருத முத்து,
ஸ்ரீ கன்னிகா பரமேஸ்வரி உயர்நிலைப்பள்ளி
உடுமலைப்பேட்டை.
642126.

****

தேனும், பூந்தேனும் மணம்பரப்பும் நாடு!
தென்தமிழ் நன்னாடு எங்கள் கொங்கு நாடு
ஆன்பொருநை காஞ்சியொடு அழகிய பூவானி
வான்குறிஞ்சி வளம்கொழிக்கும் வண்டமிழ் நாடு!

மலைசூழ்ந்த மாவட்டம்!
எங்கும் கொங்கலர் பூம்பொழில்கள்!
அடர்ந்த காடுகள்! ஆங்காங்கே சிற்றோடைகள்!
கோட்டைகள்! கொத்தளங்கள்!!

இஃது அன்றைய நாள் கொங்குக் கோவையின் படப்பிடிப்பு.

### வரலாற்றிலே:

வரலாற்றுக் காலத்தினை 2500 ஆண்டுகளுக்கு உட்பட்ட காலமென்றும், அதற்கு முற்பட்ட காலம் என்றும் இருகூறாகப் பகுக்கலாம். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் 'கொங்கு நாடு' இருந்தது. ஆனால் கோவையோ? கேள்விக் குறிதான் விடையா? கோவை நகரம் அக்காலத்தில் இல்லை. ஆனால் இன்றைய கோவை மாவட்டத்தின் பல பகுதிகள் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலேயே வளமாகத் திகழ்ந்து உள்ளன.

### புதைபொருள்களிலே:

புதிய கற்காலத்தைச் சேர்ந்த கற்களால் செய்யப்பட்ட உளி, சுத்தி, ஆட்டுக்கல் போன்ற பொருட்கள் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் புதைபொருள்களாகக் கிடைத்துள்ளன.

வீரக்கல், முதுமக்கள் தாழிகள், பாண்டவர் குழிகள் ஆகியன கோவைக்கு அருகிலுள்ள வெள்ளலூர், அன்னூர், எல்லைப் பாளையம், உடுமலை வட்டத்திலுள்ள பூளவாடி, தளி முதலிய ஊர்களில் அகழ்ந்தெடுக்கப் பட்டுள்ளன.

...2

மேலை நாட்டு வாணிகத்திலே:

ரோம், எகிப்து, கிரேக்கப் பேரரசுகளுடன் கோவை மாவட்டத்தார் வாணிகம் செய்தமைக்குப் பல சான்றுகள் உள்ளன.

கி.மு. 44 முதல் கி.பி. 14 வரை ஆண்ட அகஸ்டஸ் மன்னனின் பொற்காசுகளும், கி.மு. 41 முதல் 51 வரையாண்ட கிரேக்க மன்னன் கிளாடியஸின் நாணயங்களும், வெள்ளலூரிலும், அகஸ்டஸ் மன்னனின் பொற்காசுகளும், ரோமானியப் பேரரசன் சீசருடைய நாணயங்களும் கரூரிலும் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

அவிநாசியில் கிரேக்க, எகிப்திய நாட்டுக் கலையழகுடன் கூடிய வெண்கல ஜாடிகள் கிடைத்துள்ளன. என்ற செய்திகள் வரலாற்றுக் காலத்துக்கு முன்னரும், வரலாற்றுத் தொடக்க காலத்திலும் கொங்கு நாடு சீரும், சிறப்புமாகத் திகழ்ந்தமைக்குச் சான்றுகளாகும்.

சங்க காலத்திலே:

'கொங்கலர் பூம்பொழில்' என்று குறுந்தொகையும்,

'கொங்கில் குறும்பில் குறுக்குத் தளியாய்' என்று தேவாரமும்,

'கொங்கு புறம்பெற்ற கொற்ற வேந்தே' என்று சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் கருவூர் எறிந்தானைக் கோவூர் கிழார் பாடிய புறமும்,

'கொங்கர் குடிகடலோட்டிய ஞான்றை' எனவரும் புறநானூற்று வரிகளும், அன்றைக் கொங்கு நாட்டினை நினைவு படுத்துகின்றன.

குறிஞ்சிக் கொற்றவைகள்:

ஐவகை நிலங்களில் கோவை மாவட்டம் குறிஞ்சிவளம் மிக்கது. இந்நில மக்களாகிய எயினர், வேட்டுவர், குறும்பர் முதலிய இனத்தவர் கோவை மாவட்டத்தின் முதற்குடிகள் ஆவர். இங்குள்ள காளி கோயில்கள் அவர்கள் வணங்கிய கொற்றவை கோயில்கள் ஆகலாம்.

'மழவர்' என்றும், 'கோசர்' என்றும், 'கொங்கர்' என்றும் சங்கப் பாடல்கள் கூறும் மக்கள் கொங்குக் கோவையில் வாழ்ந்தவர்களே! கோவர்கள் கொங்கு நாட்டிலே ஆங்காங்கே மலைக் கோட்டைகளைக் கட்டிக் கொண்டு ஆண்டு வந்தார்கள். இவர்கள் சிறந்த மறவர்கள்.

...3

புலவர் ச. மருதமுத்து
( 3 )

OFFICE OF THE DIRECTOR OF ARCHAEOLOGY
23 DEC 1976
GOVT. ... MADRAS

"வெல்கொடித் துனை காலன்ன
புனை தேர்க் கோசர்" என்று அகநானூறு கோசர்களைச் சிறப்பாகக் கூறும்.

சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குப் படிமம் அமைத்து வழிபாடு செய்த பொழுது வந்து வணங்கிய மன்னர்களுள் கொங்கு கோசரும் ஒருவர்!

தலைக்கொடை தந்த தலைமையோன்:

சங்ககால வள்ளல்களுள் ஒருவனான குமணன் உடுமலைப்பேட்டையின் தென்கிழக்கில் 16 கி.மீ. தொலைவில் உள்ள கொழுமம் என்று வழங்கப்படும் குழுமூரை நடுநாயகமாகக் கொண்டு ஆண்ட குறிஞ்சிக் கோமான்!

அகநானூற்றில் குறிக்கப்படும் குதிரையாறும், அவ்வூருக்குத் தெற்கேயுள்ள குதிரைமலை எனத் திரிந்து வழங்கப்படும் முதிர மலையும்,

"நட்டோர் நட்ட நல்லிசைக்குமணன்
மட்டார் மறுகின் முதிரத் தோனே! "

என்ற புறம் 160-ஆம் பாடலும்,

தேன்வடியும் தெருக்கள் நிறைந்த முதிரம் என்ற தலைநகரப் பெயரும்,

பெருஞ்சித்திரனார்க்கு நல்ல உணவளித்து, நலம் பலவும் செய்வித்து, யானைப் பரிசிலுடன் புலவர் தன் ஊர்க்குச் சென்ற செய்தியும்,

பெருந்தலைச் சாத்தனார்க்குத் தலைக்கொடை அளிக்க முன்வந்த வரலாறும் கோவை மாவட்டத்திற்குச் சீரும் சிறப்பும் தரும் செய்திகளாகும்.

கோயமுத்தூர்:

கோயமுத்தூர் என்ற பெயர் சங்க காலத்தில் ஏற்பட்டிருந்தது என்பதற்கு யாதொரு சான்றுமில்லை. பழைய புராணங்களில் கோவை உண்டா?

...4

அந்நாளில் இன்றைய சிற்றூராக விளங்கும் பேரூரும் அதனைச் சூழ்ந்த ஊர்களும் 'பேரூர் நாடு' என்ற பெயரில் திகழ்ந்தன. 'பேரூர்ப் புராணத்திலும் கோயமுத்தூர் பற்றிய செய்திகள் இல்லை.

<u>செவிவழிச் செய்திகளாக:</u>

செவிவழிச் செய்திகளாகக் கோயமுத்தூர் பற்றிய பெயர்க் காரணங்கள் உள்ளன.

(1) 'கோயன்' என்ற அரசன் இப்பகுதியை ஆண்டு கொண்டி-ருந்தான். அப்பொழுது 'வாலாங் குளம்' என வழங்கப்படும் பெரிய குளத்தில் முத்து விளைந்தது. கோயன்-முத்து-ஊர்.

கோயமுத்தூர் ஆயிற்று.

(2) இவ்வூர்க் கிராமத் தேவதை கோனியம்மனின் பெயரால் ஊர் 'கோனியம்மன் ஊர்' என்று ஆயிற்று. இப்பெயர் மருவிக் கோயமுத்தூர் என விளங்குகிறது.

(3) கோவன் இவ்வூரை ஆண்ட தலைவன். இத்தலைவனின் பெயரால் அமைந்த புதிய ஊர் கோவன்புத்தூர்.

ஆக, 14-ஆம் நூற்றாண்டுக்கு முன்பே கோவன் என்னும் பெயருடைய ஒரு சிற்றரசன் அல்லது தலைவன் இங்கே ஆண்டான் எனவும், அவன் தன் பெயரால் ஏற்படுத்திய 'புது நகரம்' எனவும் அறிகிறோம்.

<u>இரட்டரின் ஆட்சியிலே:</u>

இரட்டர் என்ற வம்சத்தார் கொங்குக் கோவையை ஆண்ட பொழுது 'ஸ்காந்தபுரம்' அவர்களுடைய தலைநகரமாக விளங்கியது. அது தற்போதைய தாராபுரம் ஆகலாம். கரூர் எனவும் கருதுவார் உளர்.

வீரராயச் சக்கரவர்த்தி ரெட்டி குலத்தில் சிறப்புடன் ஆண்ட ஏழு மன்னர்களில் முதல்வர். இவர் தம் பெயரால் ஒரு சிறிய தங்க நாணயத்தை வெளியிட்டார். 'வீரராயன் பணம்' என்ற பெயருடைய அக்காசு ஒரு சவரனுக்கு 21 எண்ணிக்கை கொண்டது. 4 குன்றிமணி எடையுள்ளது. அண்மைக் காலத்தில் தாராபுரம் நிலங்களை உழும்போது இத்தகைய காசுகள் கிடைத்து உள்ளன.

# எல்லீசனின் கல்வி, சமுதாயத் தொண்டு

அண்மையில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை சென்னை மாநகர் இராயப்பேட்டையில் கிணற்றில் ஒரு கல்வெட்டைக் கண்டு பிடித்தது. இக்கல்வெட்டு மிகவும் வரலாற்றுச் சிறப்புடையது. வள்ளுவப் பேராசானின் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த எல்லீஸ் என்ற பெருமகன் சென்னை மாநகரில் 27 கிணறுகள் மக்களின் நன்மைக்காகத் தோண்டி வைத்திருக்கிறான். குறள் கூறியுள்ள வழியில் நின்று, நீர் நிலைகளை நாட்டிற்கு இன்றியமையாத அங்கம் என இக் கிணறுகளைத் தோண்டி, அவற்றிற்கு இந்து சமய மரபுப்படி புண்யாக வாசனம் செய்துள்ளார். அதைக் குறிக்கும் இக்கல்வெட்டு அழகிய தமிழ்ச் செய்யுளாகவே திகழ்கிறது. இதில் 'இரு புனலும்' என்று தொடங்கும் குறள் அப்படியே முழுமையும் எழுதப்பட்டுள்ளது மற்றொரு சிறப்பாகும். இந்த கிணறுகள் 1818-இல் தோண்டப்பட்டன. அடுத்த ஆண்டே திண்டுக்கல்லில் இப்பெருமகன் உயிர் நீத்தான். அவன் இறந்த இடத்தில் கட்டப்பட்டிருக்கின்ற கல்லறையில் உள்ள கல்வெட்டு அவனுக்குக் குறளில் இருந்த ஈடுபாட்டையும் சென்னையில் கிணறு தோண்டியதையும் குறிக்கிறது. அவன் தோண்டிய கிணறும் கல்வெட்டும் இப்பொழுது தான் முதன் முதலில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையால் கண்டு பிடிக்கப்பட்டது. அக்கல்வெட்டுப் பாடலும் கல்லறைப் பாடலும் இங்கு தரப்பட்டுள்ளன.

கிணற்றுக் கல்வெட்டு

பாரெலா நிழற்று பரியரிக் குடையோன்
வாரியுஞ் சிறுக வருபடைக் கடலோன்
ஆர்கடலதிர வார்த்திடுங் கப்பலோன்
மரக்கல வாழ்வின் மற்றொப் பிலாதோன்
தனிப் பெருங் கடற்குத் தானே நாயகன்
தீவுகள் பலவுந் திதி பெறப் புரப்போன்
தன்னடி நிழலிற் றங்கு பல்லுயிர்க்குந்
தாயிலு மினியன் தந்தையிற் சிறந்தோன்
நய நெறி நீங்கா நாட்டார் மொழி கேட்
டுயர் செங்கோலும் வழாமை யுள்ளோன்
மெய்மறை யொழுக்கம் வீடுறு தளிப்போன்
பிரிதஞ்னிய சுகோத்திய விபானிய மென்னு
மும் முடி தரித்து முடிவிலாத
திக்கனைத்துந் தனிச் சக்கர நடாத்தி
யொரு வழிப்பட்ட வொருமையாளன்
வீர சிங்காதனத்து வீற்றிருந் தருளிய
சோர் சென்னு மூன்று மரசற்கு ருஎம் ஆண்டில் ·||·
காலமுங் கருவியுங் கருமமுஞ் சூழ்ந்து
வென்றியொடு பொருள் புகழ் மேன்மேற் பெற்ற
கும்பினியார் கீழ்ப்பட்ட கனம் பொருந்திய
யூ. வெலயத் தென்பவ னுண்டவனை
சேர சோழ பாண்டியாந்திரங்
கலிங்க துளுவ கன்னட கேரளம்
பணிக்கொடு துரைத்தனம் பண்ணும் நாளில் ·||·
சயங்கொண்ட தொண்டிய சானுறு நாடெனும்
ஆழியி லிழைத்த வழகுறு மாமணி
குணகடன் முதலாக குடகடலளவு

(திருப்பவும்)

நெடுநிலந் தாழ நிமிர்ந்திடு சென்னப்
பட்டணத் தெல்லீச னென்பவன் யானே
பண்டார காரிய பாரஞ் சுமக்கையிற்
புலவர்கள் பெருமான் மயிலையம் பதியான்
தெய்வப் புலமைத் திருவள்ளுவனார்
திருக்குறடன்னிற் றிருவுளம் பற்றிய +
இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற் குறுப்பு +
என்பதின் பொருளை யென்னுளாய்ந்து

ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாஹன சகாப்த
௲ ௭௱௪௰ ௫ச் செல்லா நின்ற
இங்கிலிஷ ௲ ௮௱௰௮ ம் ஆண்டில்
பஹுதான்ய ஸம்வத்ஸரம் மேற் சொல்லா நின்ற
வைகாசி மாஸத்தில் வார திதி
நக்ஷத்ர யோக கரணம் பார்த்து
பக்ஷ திநத்தி லிதனோ டிருபத்தேழு
துரவு கண்டு புண்யாஹ வாசனம்
பண்ணுவித்தேன்.
1818

கல்லறைக் கல்வெட்டு

"மிக்கப் புகழ் மணந்து விரிந்து தழைத்து
திக்கனைத்தும் படர்ந்திடு மிங்கிலீசு,
குலப்பூக் கொடிக்கொரு கொழுமல ரொப்போன்
கல்வியறிவிலாக் காரிருளிரியச்
செல்வச் சங்க செழுங்கதிர் விரித்தருள்,
எல்லீசனென்றும் மியற்பெயருடையோன்,
இத்தேயத்திலியன்ற பல சொற்களில்,
முத்தமிழாரிய முதற்பல கசடறக்,
கற்றறிந்தவற்றுள் கலைபல வுணர்ந்தோன்,
புத்தமிழ்தெனத் தமிழ்ப் பொழி திருவாக்கினன்,
மனுமுதனூல்களில் வழக்கு நெறியனைத்தும்
இனமுறத் தொகுத் திங்கிலீசில் விரித்தோன்,
திருவள்ளுவப் பெயரத் தெய்வஞ் செப்பி
யருள் குறணூலுளறப் பாலினுக்குத்,
தங்கு பல நூலுதாரணங் கடலைப்பெய்
திங்கிலீசு தனிலிணங்க மொழிபெயர்த்தோன்,
இந்நிலக் குடிமையு மிறைமையு முணர்த்
தொன்மை செய்கற் பொறிசொற் செப்பேடு,
நன்னராய்ந்தவற்றையு நன்கு மொழி பெயர்த்தோன்,
புறைசய் வெற்கடம் புக்கவோர் காலத்
தரசுபுரி சென்னையிலாங் காங்கிருபத்தேழ்
கூவல்களோடறக் குளமுந் தொட்டோன்,
இளையபெருங் குணமுடையோன்,
தென்றிசை யாத்திரைச் செலவழி முகவையில்
சாலிவாகன சக மாயிரத் தெழுநூற்று
நாற்பத் தொன்றினுக்குக் கிரிஸ்துவின்,
ஆயிரத் தொண்ணூற்றுப் பத்தொன்பதாமாண்டில்,
ஏயமார்ச்சி யொன்பதினிற் சடுதியில்,
அந்தோ நிலமகளழுது தலைவிரிக்க
அறமுதற் கடவுளடிப் பெருநிழல்பெற்
றுறு மிளைப்பாறியு வகையுற்றனனே.

திரிவிக்கிரம தேவன் இவ்வம்சத்துக் கடைசி அரசன் ஆவான். இவர்கள் காலத்தில் நாடு மிகச் செழிப்பாக விளங்கியது. இம்மன்ர்கள் சமண சமயத்தைச் சார்ந்தவர்கள். ஏழாம் மன்னனாகிய திரிவிக்கிரம தேவன் சைவனாக மாறினான். முடிசூடிய இம்மன்னர்கள் கோயில்களைக் கட்டியும், சமண சைவ சமயங்களை ஆதரித்தும், நாட்டியம், இசைக் கலைகளைப் போற்றியும் ஆட்சி செய்துள்ளனர்.

தங்கமும், மணிகளும், முத்தும், துணியும் ரோமானிய நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

கங்கரின் ஆட்சி:

கி.பி. 405-இல் கங்கர்கள் கொங்கு நாட்டை ஆண்டனர். முதல் மன்னன் கொங்கணிவர்மன்.

இவன் மிக வலிமை வாய்ந்தவன்.

போருக்குச் செல்லுமுன்... தன்னுடைய கத்தியினால் ஒரு கல்லைத் துண்டித்துக் காட்டிப் 'பகைவர்களின் உடலை இவ்வாறு துண்டிப்-போன்' என்று சபதம் செய்து போருக்குச் சென்று வாகை சூடினான்.

இவன் கொங்கு வேளாளரின் முன்னோர் ஆகலாம்.

கொங்கு மண்டலம் கி.பி. 482-ல் துர்விநீதனின் ஆட்சியின் கீழ் வந்தது. இவன் காலத்தில் கலை, கல்வி சிறந்திருந்தன. இவன் பைசாச மொழிப் பிருகத் கதையை வடமொழியில் எழுதினான். கொங்கு வேள் இதனைப் 'பெருங்கதை'யாக ஆக்கியுள்ளார்.

கங்கர்களின் சிறப்பு:

அரசியல் முறைக்காக அரசு பல நாடுகளாகப் பிரிக்கப் பட்டது. ஒவ்வொரு நாட்டிலும் நகரங்களும் கிராமங்களும் உண்டு. கிராமாதிகாரிகள் வரி வசூலித்து மன்னருக்குரிய பாகத்தை அளிக்கபவர்கள்.

சமணம் சீர் பெற்று விளங்கியது.

விசய மங்கலம் சமணத் தலமாகத் திகழ்ந்தது.

# நாட்டுப் பாடல்கள் - பழமொழிகள் காட்டும் நம்பிக்கைகள்

(த. மேகராஜன், ஐ.,
ஆசிரியர்,
என். எச். உயர்நிலைப்பள்ளி,
கேத்திப் பாலடா அஞ்சல்
நீலகிரி மாவட்டம்.

**

நம்பிக்கை வாழ்வின் அடிப்படை. உலக நாடுகள் அனைத்தும் நம்பிக்கையின் அடிப்படையில் தான் வாழ்வினை அமைத்து வருகின்றன. தனி மனிதனும் நாளை [illegible] என்ற நம்பிக்கையில்தான் நாளை ஓட்டுகிறான். நம்பிக்கை இழந்த நிலை அழிவுக்கு அறிகுறியாம். 'கற்றறிந்த சிலர் பழையனவற்றை மூடநம்பிக்கை என்று ஒதுக்கிய போதும் பூண்டிட்ட, துன்புற்ற நேரங்களில் தம்மை அறியாமலேயே பழைய நம்பிக்கைகளில் அதன் கோட்பாடுகள் உள்ளம் செலுத்துகின்றனர். பழமொழிகளையோ, மரபுச் சொற்களையோ கூறி ஆறுதல் அடைகின்றனர். நிறம், மொழி, இனம், நாடு மாறினும் மக்கள் நம்பிக்கையின் அடித்தளம் இறையே. * இறைவன் மேல் பாரத்தைப் போட்டு அமைதி கொள்கிறவரே அதிகம். அவனும் 'யாமிருக்கப் பயமேன்' என்று அபயம் அளிக்கவே இருக்கின்றான்.

நம் முன்னோர் தம் வாழ்வில் பட்ட அனுபவக் கூறுகளை, பட்டறிந்து கூறிய மொழிகளை என்று பழமொழிகளாகவும், மரபுச் சொற்களாகவும், பாடல்களாகவும் நமக்குக் கிடைக்கின்றன. அவற்றில், இன்றைய நோக்கில் தவறு தென்படினும் அவை வெறும் கற்பனை என்று ஒதுக்கித் தள்ள இயலாது. ஏனெனில் அவை அறிவியல் முறையில், பலமுறை நுணுகி ஆய்ந்து கண்டவை. அந்த நம்பிக்கையின் தொடர்புதான் இன்றைய வளர்ச்சி. "தொன்மையாவும் எனும் எவையும் நன்றாகா இன்று தோன்றிய நூல் எனும் எவையும் தீதாகா' என்று கொள்ளல் ஆகாது. ஏனெனில் இன்று தோன்றியவை நாளை பழையதாகலாம்.

அண்மைக் காலத்தே வாய்மொழி இலக்கியங்களும் அச்சில் ஏறி ஆய்வுக்கு உரியதாய் கல்லூரிகளிலும் படிக்கப்பட்டு ஆராயப்பட்டு வருகின்றன. அப்பாடல்கள் நம் தமிழகத்தின் தொன்மை, வாழ்வு போன்ற பிறவற்றை அறியும் நிலை இன்று ஏற்பட்டுள்ளது.

நம்பிக்கைகள், நாட்டுப் பாடல்களில் மலிந்து கிடக்கின்றன. பாடல்கள் உணர்ச்சி மயமான ஒரு நேரத்தே தோன்றுவன; தடைகளுக்கு * அஞ்சி மறைந்து நிற்பதில்லை. உள்ளத்து உணர்ச்சிகள் ஒலிவடிவம் பெற்று, கல்லா மக்களிடத்து, அவரவர் குழுவுக்கும், அனுபவத்திற்கும் ஏற்ற

முறையில் அமைந்து இருக்கக் காணலாம். கற்றவர் அமைக்கும் செயற்கை அமைப்போ, இலக்கண விதிகளோ அமையாது இருப்பினும், எதுகை, மோனை, அமைப்புகள் செறிந்து சூழலுக்கு ஏற்ற உவமை நயங்கள் பொருந்தி, அத்துடன் இசையும் பொருந்தி கேட்போரைக் கழிபேரு-வகையில் ஆழ்த்தும்.

நீலகிரி மாவட்டம், தமிழ்நாட்டுள் இணைந்தே இருப்பினும், பேசும் மொழி "படுகு" பழந்தமிழுடன் பல சொற்கள் ஒத்திருப்பதும், கருத்தும் இணைந்தே வருவதும் ஆய்வோருக்கு சுவையான (அழியா) விருந்தாம்.

இறை நம்பிக்கை மனித வாழ்வின் அடிப்படை. 'கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பர் நம் தமிழ் மூதாட்டி. நீலகிரி கிராமங்களில் கோயிலில்லா ஊர்களை காண இயலாது. எல்லா ஊர்களிலும், 'ஹெறெஹெடையா' பிறையை உடைய ஐயன்' கோயில் உண்டு. தொழில் செய்யுமுன் வணங்கி எல்லா மக்களுக்கும் நன்மை புரிய வேண்டுவர்.

"மண்டெநலெ இப்ப மாளிகையா
மக்க மரிய காப்பாத்தய்யா
ஹெறடத்லெ இப்ப உதிரியொடையா
சிரிய நந்த சிங்கார மாடய்யா'

"தலைமேல் இருக்கும் ஐயனே, மக்களையும், குழந்தைகளையும் காப்பாற்றும், இடப்புறம் இருக்கும் பிறையுடை ஐயனே" என்று வேண்டுதல் தொடங்கப்படுகிறது.

அம்மை வணக்கமும் நீலகிரி முழுதும் பரந்தே காணப்படுகின்றது. எத்தே, காளி, மாரி என்று பல பெயர்கள் இருப்பினும் 'எத்தே (மூத்தத் தாய், பாட்டி) வணக்கம் கவுடர் இனமக்கள் அனைவரிடத்தும் காணப் படுகிறது.

பேசகெயா பிசிதோகே - எத்தே
பெள்ளிய கொடைய நாலிடித்து
சித்திரையா திங்குதோகெ - எத்தே
சின்னதா கொடைய நாலிடித்து
சீமெ பூவ பந்திதாரெ - எத்தே
ஒள்ளெய பரவா இதரளே யக்கு

என்ற பாடலில் "கோடை வெயிலில், சித்திரை மாதத்தில் பொற்குடையில்

நிழல் பிடித்து, வெள்ளிக்குடையில் நிழல் பிடித்து, வந்திருக்கும் மக்கள் அனைவருக்கும் நல்ல வரத்தைத் தரவேண்டும்" என்று விழாவில் பாடுகின்றனர். இன்னொரு சுவையான அம்சம், பழைய பெரியோர்கள் செய்யும் பூசையில் தமக்கு என்று எந்தவரமும் கொள்வதில்லை.

இன்று, 'குருத்த மலைக்குச் சென்று குமரனைக் கண்டும், மருத மலைக்குச் சென்று மயிலவனைக் கண்டும், பழனிமலைக்குச் சென்று வேலவனைக் கண்டும்' வரவேண்டுமென்று பாடப்படும் பாடல்கள் ஏராளம். அத்துடன் காளியம்மனுக்கும், மாரியம்மனுக்கும் பலிகொடுத்து வரம் கேட்பதும் உண்டு.

'மனசில்லையோ மாரியம்மா
கவவு இல்லையா காளியம்மா'

என்ற பாடல் அதனை விளக்கும் (கவவு-அன்பு) இன்று பெருவழக்காய் உள்ள பேய்ப்பயம், 'கார்த்திகை மாதத்தில் கருப்புத்தாளி நடுவில் சுற்றிப் போகும்' பாடல்களில் பெருவழக்காய் பயில்கின்றன.

இறைவன் அருள் அடிப்பின் யாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம்' என்று பாடலாம். ஆனால் படுகர் குறும்பர்களுக்கு அஞ்சுவது போல் யாருக்கும் அஞ்சுவது இல்லை. ஏன் இன்றும் கூட குறும்பர் என்று சொன்னால் இரவில் வெளியே வர அஞ்சுபவரும் உண்டு. 'தெவ்வா' என்ற ஒரு திருவிழாவில் சாம்பிராணி அளித்து முதல் பூசை பெற்றுப் போகும் வழக்கம் இன்றும் உண்டு. பணமும் பெறுவது உண்டு. அக்குறும்பர்கள் பில்லி, சூனியம், உருமாற்றம் போன்ற கலைகளில் வல்லவர். மதம் யானைக்குப் பிடிப்பது போல பிடித்து கண்ணுக்குத் தென்படுபவரைக் கொல்லவிடலை எடுத்துச் சாப்பிட்டு விடுவர் என்பர். சில பச்சிலைகளால் குடலை வெளியில் கொட்டாமல் மறுபடியும் ஒட்டவைத்து குறிப்பிட்ட நாளில் இறப்பினை மாறு வேடத்தே வந்து பார்ப்பர் என்பர்.

நீலகிரியில் நடைபெறும் நாடகங்கள் அனைத்தும், கதைகளும் அவர் கொடுமையையே குறிக்கின்றன. பிறரை அழிக்கவேண்டும். ஒருவர் நினைத்தால் அவருக்கு வேண்டும் பொருள் வாங்கிக் கொடுத்தால் போதுமானது. 'பேலமாத என்னும் நாடகப்பாட்டில் குறுமன் பாடுகிறான்.

காணி குறும மன்றுள எந்தலே
அட்டிய ஜன எல்லா அஞ்சனே பேக்கு'

'காணி குறுமன் நான் வந்தால் ஊரில் உள்ள மக்கள் எல்லாம் அஞ்சவே வேண்டும்' என்கிறான். அவன் கேட்டதைக் கொடுத்தே தீரவேண்டும்.

'காரெ கென்னெ' எனும் நாடகப் பாடலில் ஒரு பகுதி. காளி என்பது குறமர் ஊர். காண குறுமன் அவள் கணவனைக் மைத்துனன் ஏவலால் கொன்று விட்டு, அவளையும் குழந்தையையும் அவனையும் கொல்ல வருகிறான். அவள் அஞ்சி கை கால் கழுவ நீர் கருகிறாள். அவனை, தனக்குக் குளிப்பாட்டி விடுமாறு வேண்டுகிறாள். அவள் தன் மூன்றுமாதக் குழந்தையை என்ன செய்வேன் என்று அழுகிறாள். அவள் பேசிய அச்சொல் அவனுக்குப் புரிந்து விடுகிறது. அவள் பாடுகிறாள்.

"காளி குருமக எரெ ஆதனே
மூறு திங்குள மோரெ ஜோதில
தார கையிக கொட்டுட்டு ஹோறாலே"

எந்த வீடு அவனுக்குக் கப்பம் கட்டவில்லையோ அதை அழித்தே தீருவான். ஓர் ஒருவர் தன் பெற்றோரை உடன் பிறந்தோரை அழித்தவனை அழிப்பதும் உண்டு. சாறு வெகுக் குறைவு.

வாழ்க்கை செம்மை பெற, வளமை ஏற மழை வேண்டும். மழை பெய்யும் குறியினை அவர்கள் அறிந்து வைத்திருந்தனர் என்பதை இப்பழமொழிகள் கூறும்.

"முப்பட்டு மிச்சிலெ இட்டு முந்தே மே' கிழக்கில் மின்னல் உண்டு கை கழுவுமுன் மழை வருமாம். விதை போடும்போது, 'ஹொறாத்த நோடி பித்தாக்கு' என்பர். சூரியனைப் பார்த்து விதை எறிகின்றனர். இடி இடித்தால் தான் மழை வரும் என்பதில்லை. 'குடுகலேர்று மே காத்ராவா? அதிகம் இடியிருந்தாலும் மழை இருக்காது என்பதை 'கோடை குடுகி கெட்டா' என்பர், கோடையில் மேல் காற்றுடன் வரும் மழை காலத்து இடித்தால் மழை இல்லை என்பர். அஃது இன்றும் உண்மையே.

தாலாட்டு, தாயின் உடன்பிறப்பு. அன்புயின் அவலமும் சேரின் தாலாட்டின் சுவை உச்சத்தை எட்டும். குழந்தை பாடலைக் கேட்குமோ இல்லையோ தாலாட்டைக் கேட்பவர் அவலத்தால் அழுதே விடுவர். படுக சமுதாயத்தே தொட்டிலில் இட்டுத் தாலாட்டும் வழக்கம் பண்டு இல்லை. மார்புடன் அணைத்துக் கொண்டே பாடுவர். அதனால் பாடல்கள் மிகுதியும் இல்லை.

இளம் வயதில் கைம்பெண் ஆன ஒருத்தித் தன் குழந்தையுடன் அண்ணன் வீடு வருகிறாள். அண்ணிமார் எல்லோரும் கொடுமை நிறைந்தவர் என்ற நம்பிக்கை எங்கும் 'நல்லதங்காள்' கதை மூலம் வேரோடியிருக்கும் போலும். இப்பாடலில் விதியின் கொடுமையை விதியின் மேல் நம்பிக்கை வைத்திருந்ததை நாம் உணரலாம். வெளியேற்றப்பட்ட அவள் குழந்தையுடன் மழையில் நனைந்து காட்டு வழியாகச் செல்லும்பொழுது குழந்தை விழிக்கப் பாடுகிறாள்.

மேஹரது மிச்சிர என்னராஜா
நீ எல்லி சிரிச்சிரெ என்ன நடராஜா
சிரு ஊரு கேரு என்ன ராஜா
நீ ஈக்கி எக்க பிரிசிரெ என்ன நடராஜா
நெத்திய பரெய கந்தமகனே-என்ன் சொந்தமகனே
நொந்த கதையா உறிந்தை ஆ ரக ஹேறகுவே
அத்திகெ நன்னது சாபஉறாக்கி
கோபமாடி பாபிமாடி கேகிட-கந்தா
நெத்திய பரத பெரெய மகனே
எத்தெ மாடி தீருவே மகனே

மழை பெய்து மின்னல் பாயும் நேரம் என் ராஜா-நீ எங்கே கதறுகிறாய் நடராஜா - அடைமழை செய்து (வழி) நிரம்பி வழிகிறது. நீ என் கதறுகிறாய். நெற்றியில் எழுதிய கதையை பின்பு நான் யாரிடம் சொல்வேன். என் அண்ணியும் சாபம் இட்டு, கோபித்து, பாவி யாக்கி அனுப்பினாள். நெற்றியில் எழுதிய எழுத்தை எப்படித் தீர்ப்பேன் என்று பாட அவள் கண்ணீர் மழையும் கலந்து செல்வதைப் பார்க்கலாம் அன்றோ?

சகுனத்திலும் மக்களுக்கு நம்பிக்கை உண்டு என்பதை சில பழமொழிகள் மெய்ப்பிக்கின்றன.

'தாரங்கல்லுதோ கொத்தி கால சுத்திரா' வாயிற் படியில் பூனை காலைச்சுற்றி வந்தால் செயல் வெற்றியடையாது என்பது எல்லோரும் நம்புவர். 'கெம்புக் கண்டேனே கெட்டது கண்டேனே' - செம் போத்து தீ சகுனம் என்பர். ஆனால் என் மகாரட்டிர நண்பர் செம்போத்தினைக் கண்டால் நல்லது என்பார். நம்பிக்கைகள் நாடுதோறும் வேறுபடுவதைக் காண் கிறோம். இங்கும் 'கும்ப உறித ஹேயு குல காக்கெ ஹேறத ஹேயு குல' - ஆந்தை அலறினும் தீது காக்கை எச்சமிட்டாலும் தீது என்பர். நற்சகுனமும் உண்டோ நீர் நிறைந்த யாரேனும் வரினும், எதிரே திருநீற்றினை அணிந்து வரினும் நல்லது என்பர்

நாளிலும் கோளிலும் மக்கள் மிக்க நம்பிக்கைக் கொண்டுள்ளனர். பழங்காலத்தே நூல் அறிவு கிடைக்க இயலாத நேரத்தே சூரியன் உதயத்-திற்கு முன் எல்லா செயல்களையும் முடித்துவிடுவர். திருமணம் நடைபெறுவது அதிகாலை நேரந்தான். நல்ல செயல்கள் அனைத்தும் வளர்பிறையிலேயே செய்வர்.

பெள்ளிய ஜாமயே பெவரமாடி
ஹொறாத்தின ஜாமய பந்தெ ஹொறாராசு கடெ'

என்பர். வெள்ளிமீன் உதிக்கும் நேரத்தே செயல்களை முடித்து வெளியில் சென்றுவிடு என்பர். வால்மீன் தீமை தரும் என்பதை வாழ்வில் கண்டறிந்தனர் போலும். 'பாலா மீது ஹூராட்டி பதக்கு கெட்டுத்து'-வால்மீன் தோன்றி வாழ்வு கெட்டதாம். கிரகத்தின் தன்மையை-கோளின் அமைப்பை' கிரக பந்தலெ நிமிசக பயிதரா' என்பர். தீமை வரின் நிமிடத்தில் எல்லாம் அழிந்து விடும். அதனை 'அனாதை பையன் மொட்டையடித்தால் கல்மழை பெய்யும்' என்ன 'நப்பரி மன்டெ பீசிலெ ஆலிக்கல் மே ஹூரதரா' என்பர். நெற்றியின் எழுத்தை செதுக்கினும் அழியாது என்ன' நெதிய பரெய கெத்திலெ ஹோரவா' என்பர்.

மருந்திடலில் நம்பிக்கை அதிகம் உண்டு. பூட்டின் பித்தெடுப்பேன், மச்சி- அந்தரத்தில் மன் எடுப்பேன்' என்ற வரி நினைவுக்கு வருகிறது. மெஞர் சீமைக்கு வாணிகம் செய்யப் போன கணவன் மயக்கபடுகிறன். திரும்பி வந்த அவன் மனைவியையும், குழந்தையையும் மறந்து தன் போக்கில் செல்கிறன். காலம் வந்தால் கட்டெறும்பும், கல்தாக்கும் அடிப்பதற்கு என்கிறள் அவள். 'கால பந்தலெ கட்டிபப்பு கல்எத்திரெ' திரும்பி வந்த கணவன் பார்க்காமல் போபல் அவள் நிலை?

'ஹூண்ட பகுதக்கு அட்டலேன
மெஞரு சீமகோத மண்டரெ கார
மக்கத கேள இல்லதெ
மார முச்சிண்டு ஹோன
கால ஒல்லத கால பந்து
காலியாகி குலிதாத்து

'ஹண்ட சொத்து புதைந்தால் என்ன? மெஞர் சென்ற தலைப்பாகை அணிந்த (நின்) தந்தை மக்கள் நினைவின்றி மார்பினை போர்வையால் போர்த்துச் செல்கிறார். காலம் நமக்கு மாறுபட (காலியாகி) அழிந்து நாம் அமர்வதாயிற்றே' என்கிறள்.

உழவர் வாழ்விலே என்றும் தொல்லைதான். 'உழுபவன் கணக்குப் பார்த்தால்' என்று சொல்வோம் அல்லவா? அதே தம்பம் இங்கும் உண்டு.

காசட்டலே அல்லி காசில்லெதோ
ஹெறால்லதா அக்கிகு அப்பா பெலெ
உலக ஈக ஒள்ளங்கில்லெதோ
ஓலங்க எல்லா ஈக நங்கில்லெதோ

கிழங்கு (உருளை) இருந்தால் காசுகுறைவு. தேயிலை விளைந்தால் விலை குறைவு. தோட்டத்திலும் உணவுப் பயிர்கள் விளைவதில்லை. மோசமான அரிசிக்கும் நிறைய விலை. உலகம் இப்பொழுது நன்று இல்லை. உண்மை தானே? உழவர் வாழ்வு என்று அமைதியடையுமோ? அந்த நேரத்தே மனைவி உழைத்து கொடுத்த பணத்தை அவன் வீண் செலவு செய்கிறன். மனைவி துன்பம் பொறுக்க இயலாது அந்த கணவனே வேண்டாம் என்ற வெறுப்புக்கு ஆளாகிறள்.

கலியுக காலவ எந்து கழிப்பே
இத்தவ கண்டது கள அத்தவ உண்டையுகள
பேக்காத செலவ ஈசி பா எம்பளெக அம்
பெத்தலை உறாக்கி ஹெறாகெய புட்டு பள்ளை
சீட்டி பட்டெய ஈசி பாளெம்பனே-அம
சீட்டாடி சிக்கு கெட்டு மனெக மன்னை
சந்(தொத்)துக் இட்டு ஈசி பா எம்பனே-அம
சாராய குடுத்து உண்டடெக மன்னை

அவள் என்ன செய்வாள் பாவம். 'இந்தக் கலியுகக் காலத்தை எப்படி கழிப்பேன். இந்த மாதிரியான கணவனும் வேண்டாம். நல்ல களியுடன்டையும் வேண்டாம். செலவு வாங்கி வரச்சொன்னால் வெற்றிலைப்போட்டு புகை பிடித்து வருகிறன். சீட்டித்துணி வாங்கி வரச்சொன்னால் சீட்டாடி மானம் கெட்டு வருகிறன். மாலை உணவுக்கு வேண்டும் என்றால் சாராயம் குடித்து சண்டைக்கு வருகிறன்' என்கிறள். குடியின் கொடுமை அவள் பாட்டியே பளிச்சிடுகிறது.

இன்பமும், துன்பமும் வாழ்வின் இயற்கை. துன்பத்தே இன்பம் காண விழைகிறள். மக்கட் செல்வம் இல்லை. நல்ல நேரத்தே அவன் கோயில் குளம் சென்று வரம் பெற்று வர அழைக்கிறன். குடிகாரன் ஆயினும் அன்பில் சிறந்தவன். குழந்தை வரம் வேண்டி இறைவனை வணங்கி வரம் பெறுவது இந்திய பெருநாட்டில் தொன்று தொட்டு வருவது.

'ஓ ஹெறண்டே கிரிலி குந்தெ ஹெறண்ணெ பாலி
நங்க எரடா குடிக ஹெறாகி பப்போ பாலி
காய உறண்ண எத்தி கூட்டு பாலி
முந்தாடு நாகு நடதென ஹெறண்ணே
பூஜெய ஒந்தல கொட்டுபயோ பாலி

'ஓ பெண்ணே கிரிஜா, குந்தா பெண்ணே வா. நாம் இருவர் கோயில் சென்று வரலாம். காயும் பழமும் எடுத்துக்கொள். நான் முன்பு நடக்கிறேன். பூசை கொடுத்து வரலாம் வா' என்று அழைக்கிறன்.

இறைவன் அருளால் குழந்தை பிறக்கிறது. முதல் முடியை முருகனுக்கோ, மாலுக்கோ, காளிக்கோ காணிக்கையாக்கி தன் நன்றிக் கடனைத் தெரிவிக்கும் நம்பிக்கை மக்களிடத்தே வேரோடிக் கிடக்கிறது.

வாழ்வின் முடிவில், இறப்பில் செய்யும் சடங்குகள் புறநானூற்றுக் காலத்தை நினைவுபடுத்துகின்றன. வாய்க்கரிசி போடும் சடங்கில் முறையாக வரும்பொழுது முதல் வருபவர் அரிசியும் தலைக்குமேல் கத்தியைத் தூக்கி வந்து கட்டிலைச் சுற்றி பின் வைப்பார். இது,

"குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்
ஆள் அன்று என்று வாளின் தப்பார்" என்ற புறப்பாட்டில்

சேரமான் கூறும் வழக்கு சற்றே திரிந்தது உளதோ என்று எண்ணத் தோன்றும். மற்றும் அவர் செய்த பிழைகளுக்குக் கழுவாயாக கன்று ஒன்றினை அருகில் வைத்து பாபத்தை அதன்மேல் ஏற்றி அனுப்பும் வழக்கம் உண்டு. பூவண்ணன், அக்கன்று சிவபெருமான் வாகனமாதலால், அறக்கடவுள் பாவத்தை ஏற்று மன்னிக்கும் என்ற நம்பிக்கை வளர்கிறது.

பாவங்களைக் கூறுவது அறநூல்களை ஓதுவது போல இருக்கும். அச்செயல்களை மற்றவர் கேட்டு அழியும் இந்த உடல் இவ்வளவு ஏன் செய்யவேண்டும் என்ற எண்ணம் உண்டாகட்டும் என்று போலும் கூறுகின்றனர்.

இதுபோலும் நாட்டுப்புறத்தே எண்ணற்ற நம்பிக்கைகள் புதுமை கண்ட பின்பும் மறையாது நின்று வாழ்விற்கு வழிகாட்டி உயர்த்துகின்றன. இத்தகைய நம்பிக்கைதான் சமுதாய வாழ்வின் அடிப்படையாக அமையவேண்டும். அவ்வாறு அமையா நிலையால்தான் நாடும் உலகமும் எங்கோ அல்லலை நாடி ஓடுகின்றன' என்பர் அ.மு.பரமசிவானந்தம். அந்நம்பிக்கை வாழ்வின் வளர்ச்சியில் பங்குக் கொண்டு நாட்டினை உயர்த்துவதாக அச்சம் நீங்கி அஞ்சாமை வளரட்டும். உயர்வு பெருகட்டும்.

***

# பாளையக்காரர் சிலரது சிற்பப் பணிகள்

(ந. சுப்புலெட்சுமி
விரிவுரையாளர்,
நிர்மலாக் கல்லூரி,
கோயமுத்தூர்).

விசய நகரப் பேரரசின் வேந்தர் கிருஷ்ணதேவராயரால் தென்னகம் போந்த, விசுவநாத நாயக்கர் முதல் மீனாட்சி அரசி வரை, மதுரையில் நாயக்கராட்சி 250 ஆண்டுகள் நிலவிற்று. இவர்களுள், திருமலை நாயக்கர் (1623-1659) முழுவுரிமை மன்னராக வெற்றி கண்டதால், அவரும், பின் அழுவரும் மதுரைப் பெருநாட்டுக்குத் தன்னுரிமை பெற்ற வேந்தர்களானார்கள். அவர்களது நாட்டுப் பரப்புள், கோவை, சேரம் மாவட்டங்களும் அடங்கின. கால நிலைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்பப் பாளைய முறை விசுவநாதரால் புகுத்தப்பட்டது. கொங்குநாட்டில் பழனி, விருப்பாட்சி, ஆய்க்குடி, இடையகோட்டை, தளி, ஊற்றுக்குழி முதலான ஊர்களில் பாளையக்காரர்கள் இருந்தனர். திருமலை நாயக்கர் காலத்தில் மேற்கூறியவற்றோடு புரவிபாளையம், இராமப்பட்டணம், மைவாடி, நெகமம், நாமக்கல் பாளையப் பட்டுகளும் சிறந்திருந்தன. நாடுகாவலுக்காக அவர்கள் திண்டுக்கல், தாராபுரம், கோயமுத்தூர், தலைநாயக்கன் கோட்டை, சத்யமங்கலம், சங்ககிரி முதலான இடங்களில் கோட்டைகளை அமைத்துக்கொண்டனர். கீழ்கொங்கில், சேந்தமங்கலம், இராமச்சந்திர நாயக்கனும், தாராமங்கலம் கெட்டி முதலியாரும் வலிமை பெற்றிருந்தனர்).

விசயநகரப் பேரரசு, மதுரை நாயக்கர் ஆட்சி இரண்டிலுமே தமிழகம் கலைமலிந்த கோயில்கள் நிறைந்த பொன்னகம் ஆயிற்று. அரசாங்கம் சமயப்பற்று உடையதாகவோ பிரதானி முதலான ஆட்சியாளரும், பெரிய, சிறிய பாளையக்காரர்களும் தெய்வபக்தியும், கலை ஆர்வமும் கொண்டனர். "சிவம் முயன்றடையும் தெய்வக் கலைகளைத் தெய்வத்துக்கே பயன்படுத்தினர். அதனால் கோயில்கள் அளவில் பெரிதாயின. பெருங் கோபுரங்களும், மண்டபங்களும், நீண்ட வாயில்களும் அங்கு எழுந்தன. வானளாவ உயர்ந்த இராய கோபுரங்களில் சுதையால் உருவங்கள் அமைக்கப்பட்டன. மண்டபங்களில் ஓவியங்கள் வரையப்பட்டன.

கல்லில் கலையழகை வடித்துக் கொடுத்த பெருமக்கள் மறைந்தாலும் சிற்பங்கள் இன்றும் நம்மோடு பேசுகின்றன. பேரூர், தாரமங்கலம், பெரியபாளையம், தாடிக்கொம்பு ஆகிய ஊர்களில் உள்ள

கோயில்கள் ஒரே காலத்தில் ஏற்பட்ட ஒத்த அமைப்பு உடைய சிற்பக் கருவூலங்கள்.

சிற்பிகள் செயல் பற்றி ஒரு செவி வழி செய்தி! அதில் அவர்கள் உடன்படிக்கை எழுதிக் கொடுக்கும் வழக்கம் அறியப்படுகிறது. "திருவலஞ்சுழிப் பலகணி, திருவீழிமிழலையில் காணும் வௌவால்நெத்தி மண்டபம், ஆவுடையார் கோயில் கொடுங்கை எனும் கூரைப் போலவும் தாரமங்கலம், தாடிக்கொம்பு ஆகிய ஊர்களிலும் உள்ள சிற்பங்களைப் போலவும்செய்ய எங்களால் இயலாது. மற்றவற்றைப் போலச் செய்வோம். என எழுதிக்கொடுப்பார்களாம். ஆயின், குறிப்பிட்ட அச் சிற்பங்களின் உயர்வு விளங்குகின்றதல்லவா!

அவற்றின் சுவை கொஞ்சம் காண கோவைப் பகுதியாண்ட திருமலை நாயக்கரின் பிரதானி (1623-59) அளகாத்திரி நாயக்கரும், பாளையக்காரரான் கட்டி முதலியார்களும் செய்த அரும்பணிகள் மட்டுமே இக்கட்டுரையில் தருகிறேன்.

கோவைக்கு 4 கல் தொலையில் உள்ள பேரூர் என்பது, சிற்றூராயினும் பேரூராக சிறந்த ஊராகும். இது கொங்கு ஏழ் தலங்களில் ஒன்று. இங்கும், தில்லையும் போன்று திருவாதிரை நாள் இங்கு சிறப்பாகக் கொண்டாடப் பெறும். "அணி காஞ்சிவாய்ப் பேரூர்" என்று நம்பியாரூரர் அருளியவாறு போல் காஞ்சி நதிக்கரையில் உள்ளது. தில்லைக்குச் சென்றபோதும் அவர் "பேரூரர் பெருமானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தே பெற்றாம்" என்று நினைந்து பாடித் திளைத்த பெருமை உடையது இத்தலம். அவருக்குப் பொன் கொடுக்க மறுத்த வெள்ளியம்பலக் கூத்தப்பிரான் "நின்பாட்டிற்கு நடாட்டமே பரிசில்" என்றியம்பினன். இம் முத்திறமொழியால் மேலைச் சிதம்பரமான இதற்கு 11-ம் நூற்றாண்டில் இராசேந்திர சோழர் மகா மண்டபமும், அர்த்த மண்டபமும் அமைத்தார்.

இப்பேரூர்க் கோவிலுக்கு பிரதானி அளகாத்திரி நாயக்கர் ஐந்து அடுக்கு உடைய கம்பீரமான இராசகோபுரமும், நடராசருக்குச் சிற்பமும் கச்சிதமாகக் கனகசபையும் உருவாக்கிக் கொடுத்துள்ளார். கோபுரவாயிலின் வழியாக முன்மண்டபத்தில் நுழைந்து நிமிர்ந்தால், விதானத்தில் பெரிய புராண வரலாற்றுப் படங்கள் கண்ணைக் கவர்கின்றன.

"மதுரை நாயக்கர்கள் காலச் சிற்பங்கள் பொதுவாகப் பெரியனவாகவும், அற்புத வேலைப்பாடுகளோடு உயிரோட்டம் உள்ளனவாகவும் கருத்துக்கள் உணர்த்துபவனவாகவும், கண்ணும் கருத்தும் கவர்வன

ஆகவும், பொலிவையோடு செதுக்கப்பட்டன ஆகவும் இருப்பவை. அச்சம் தரும் நிலையில் அவை அமைந்துள்ளன" என்பர் வரலாற்றறிஞர். இதன் உண்மை, அக்கனகசபையுள் நுழைந்து கண்டால் நன்கு விளங்கும்.

கனகசபையின் முன்பகுதி நீண்ட மண்டபம். இதில் வரிசைக்கு 4-ஆக 7 வரிசைகளில் 28 தூண்கள். நடுவில், இரு வரிசையான 14 தூண்கள் நம்மை ஈர்க்கின்றன. முதன் அழையாளியில் இரு தூண்களில் துப்பாக்கி ஏந்திய வீரர் காட்சியளிக்கின்றனர். மண்டபநடை ஏறியதும் முதல் இரண்டு தூண்களில் யானைப் போரிடும் வீரர்கள். யானையின் மீது அமர்ந்த வீரன் ஈட்டி எறிந்து போரிட யாளியோ யானையின் துதிக்கையைப் பிடித்துக்கொண்டு அதன் மீதே நிற்கிறது.

அடுத்திருப்பது யானையுரி போர்த்த மூர்த்தி. இது, ஒரே கல்லை முழுமுப்பாகவும், வட்ட வடிவு ஆகவும், குடைந்து செதுக்க அமைந்தது. ஒரு காலைத் தூக்கி, மதயானை யானையின் தலையில் ஊன்றி, அதன் உடலால் தன்னைப் போர்த்தியவாறே மூர்த்தி நிற்கிறார். எட்டுக் கரங்களுடன் எடுப்பாய், மிடுக்குடன் அவர் திகழ, யானையின் கால்கள் போர்வையிட்ட அதன் உடலுடன் நான்கு பக்கங்களிலும் தொங்குகின்றன. பாவம்! மூர்த்தியின் முகத்தழகும், வார் காதுகளில் உள்ள தோடுகளும், அணி வகைகளும், இடுப்பிலிருந்து தொங்கும் தலைமாலையின் தனித்தோற்றமும் நம்மை வியப்பிலாழ்த்தும். ஏன்! யானையின் காதில் உள்ள [illegible]களும், மூர்த்திகையில் நகங்களும் கூட நம் கவனத்தைத் தப்பா [illegible]. இச் சிற்பத்தின் மாதிரி வரைபடம் போலச் சிறியது ஒன்று, வெளியே வீதி மண்டபத்தின் 2-ம் தூணில் இருக்கின்றது.

அடுத்த தூணில் கிழக்கு நோக்கி நிற்பவர் அக்கினீர பத்திரர். தலைக்கு மேல் நீட்ட தன் குடைத்தால் அரக்கன் மண்டையில் அவர் குத்துகிறார். அப்போது பொங்கும் வீரம் முழுதும் செறிந்து காணப்படும் முகம், வெற்றிச் சிறப்புடைய கண்கள், அழகு மிளிரும் திரு.அங்கங்கள். சபாஷ்! அதோ! தேள் ஒன்று. இறைவன் பொன்மய திருச்சடையில் தேள் உண்டு என்றியம்பும் ஒரு உபநிடதம். அதனைக் கற்றோ, கற்றோர்வாய்க் கேட்டோ அமைப்பான் போலும் சிற்பி!

ஊர்த்துவ தாண்டவர், பக்கத்தில் நிற்கிறார், தலைக்கு மேல் காலைத் தூக்கி நடும் நிலையில், காளியை நாணக் குனிந்த வண்ணம் ~~தன்~~ தோல்வியைப் பெண்மை ஏற்புக் கொள்ளச் செய்த பெருமிதத்தை அவரது திருமுகத்தில் விளங்கக் காணலாம். முயலகனின் முதுகில் ஊன்றி உள்ளது ஒரு

பாதம். கைகளோ பதினாறு. அழகுக்கும், திருமாலும் முறையே
கைகட்டியும், உடுக்கைத் தட்டியும் ஓரத்தே நிற்கிறார்கள். அவர்கள்
நடுவில், மூர்த்தியின் எடுத்த திருவடிக் கீழ் அம்மை நிற்கிறார். "பிறவா
யாக்கை வேண்டும். இன்னும் வேண்டும், நான் மகிழ்ந்துபாடி, அறவா!
நீ ஆடும்போது உன் அடியின் கீழ் இருக்க" என்று வரம்வேண்டிப்
பெற்றவராக. "தாழ்சடை எட்டுத் திசைகள் வீசி அங்கம் குளிர்ந்து
அனலாடும் எங்கள் அப்பன்" என மூர்த்தியின் நடம்போற்றி நம்மிடம்
மூத்த நற்பதிகம் கூறுவார் போல அடக்கமாய், அமைதியாய்,
ஆனந்தத்தில் ஆழ்ந்தவராய் அவர் நிற்கிறார். சிற்பியின் பக்தியும்,
நாவறிவும் பற்றி வியக்காமல் இருக்க உங்களால் இயலுமா?

**மேற்கு நோக்கிய திருவுருவமான ஆலங்காட்டுக் காளியும்-**
**ஐயை இருந்து நோக்குகின்றாள். நடமாடும் நல்ல திருக்கோலம்.**
**இடையைச் சுற்றி உள்ள அக்னித் திரமும் கபாலமாலையும் எட்டுக் கரம்**
**அமர் கருவிகளும், மடிப்பு உடைய உடையும் மணிமகுடமும் சிலம்பும்,**
**தண்டையும் அழகுக்கு அழகு செய்கின்றன.** மூர்த்தியின் தோற்றம்
நோக்கிய முறையில் நாணத்தால் தலைகவிழ்ந்து புரிகிறது. இதோ அவரை
ஓரக் கண்ணால் உற்று நோக்குகிறாளே! ஒரு மூலையிலிருந்து நாம்
பார்க்க அவள் முகத்தில் நாணமும் சாந்தமும், மறு மூலையிலிருந்து நோக்க
அதோ முகத்தில் சீற்றம், சினமும் நமக்குப் புலப்படுகின்றன. அம்மையின்
அமைப்பு அத்தகைய நேர்த்தி! என்னே சிற்பியின் கைவண்ணம்!

அக்னி வீரபத்திரர்க்கு எதிரே அகோர வீரபத்திரர்
அவரது முன்னிற்கவே பயந்துவிடுவோமும் உள்ளர். அரக்கனின் நெஞ்
சிற்பினும் வாள், அவனது நெஞ்சுறுதியையும், வீரத்தையும் அறிவிக்கிறது.
அண்மைக்கு உரிய வடிப்பும் அதில் அமைந்து செய்துவிட்டான் சிற்பி.
முறுக்கான மீசை; மிடுக்கான பார்வை, தலையில் அணிந்த திருமுடி,
கைகளில் திகழும் போர்க் கருவிகள், பாத குறடுகள் அனைத்துமே
நவிற்றலியே கூறத் தக்கவையே. அவரைக்கண்டு அஞ்சுவதேன்?
"கோரம் யாவும் நீக்கும் அகோர மூர்த்தி உண்டு தஞ்சம், நீ
அஞ்சல் என்ன நெஞ்சமே" என்று தேற்றிப் பின் தேறிய நெஞ்சால்
வாரத்தோடு அவரை வணங்கி, நகரலாமே,

பெரிய தென்கள் மதுரை எல்லாம் பிச்சதேற்றிய
(மயக்கிய) பெம்மான் பிச்சை ஏற்கத் திகம்பரராய்த் திரிந்த
பிச்சாடன கோலத்தைக் காண்போம். கண்மணம் வாய்ந்த நா...

கரைந்துருகிநல்தாருகவன முனி பத்தினிகள் மனம் மருண்டதில் என்ன வியப்பு! துள்ளிவரும், யாக சாலைமாடுக்கு உணவளிக்கிறார். திருவோட்டில் சோற்று உருண்டைகளை வைச் சுமந்து நிற்கும் பூதம்! அதற்குத் தான் என்ன புன்னகை என்ன பொலிவு. வர் எல்லாம் அட்ட சோற்றைச் சுமந்து எத்தனை நாள் தான் இப்படி நிற்பது என்ற எண்ணம் எள்ளளவும் இல்லையே. மாறாக, நிறைவும் இறைவனுடன் இணங்கி, அதுவும் அருகில், அணுக்கத் தொண்டனாய் நிற்கும் பெருமிதமும்தான் முகத்தில். பிச்சாடன உருவத்தின் மற்றைய முப் பக்கங்களிலும், முனி பத்தினிமார் நிலைகுலைந்து கலைசோரக் கரண்டியுடன் நிற்கின்றனர்.

பாங்காய் வலது காலைத் தூக்கி முயலகத்தின்மீது ஐங்கரக் கடவுள் ஆடிக்கொண்டு இருக்கும் தோற்றம் அழகானது. அவரது துதிக்கை வலதுபக்கம் சுருண்டு நிற்கிறது. அவருக்கு எதிரே அறுமுகன் பன்னிருக்கை-களுடன் மயில் ஏறிய மாணிக்கமாக, இடதுகாலை மடக்கி அமர்ந்த நிலையில் அருளுகிறார்.

இச்சிற்பங்கள் ஒவ்வொன்றும் தனித்தனியே ஒரே கல்லால் ஆனவை. ஒவ்வொன்றையும் மும்மூன்று பூதங்கள் தம் தலையிற் சுமந்து இருப்பதுபோல அமைக்கப்பட்டுள்ளன. நடனமாடும் தெய்வங்களின் மற்றைய மூன்று புறங்களிலும் நாட்டியத்திற்கு ஏற்ப மத்தளம் கொட்டும் சிற்பம் முதலான தொடர்புடைய சிற்சிறு வடிவங்கள் உள்ளன.

தேவ, மனித உருவங்கள் நிறைந்த இம்மண்டபத்தை அண்ணாந்து பார்த்தால் அட்ட வீரட்டங்கள் பற்றிய புராண விளக்கமான ஓவியங்கள் பிற்காலத்தன உண்டு. அவற்றின் நடுவில் ஒரு கல்லாலியன்ற சுழல் தாமரையும் இரும்புச் சங்கிலியோ என ஐயுறத்தக்க தொங்கும் கற்சங்கிலிகள் எட்டும் உண்டு. சங்கிலிகள் எட்டு பாம்புடல்களின் நடுவே பிணைக்கப்பட்டுத் தொங்குகின்றன. எட்டு உட்சதுரங்களில் எட்டுத் திசைக் காவலர்கள். நடுவில் உள்ள தாமரையைச் சுற்றியும் எட்டுக்கிளிகள் சமதூரத்தில் வட்டமாக அமர்ந்துள்ள காட்சி இனியது. அச்சதுரத்தின் மேற்கில் மன்மதனும் கிழக்கில் இரதியும், தலையைச் சாய்த்து இறக்கி சுற்றியும் நோக்க, நடன மாதர்கள், இசைக் கருவிகள் அக்கால நடை, உடை, அணி அறியக் காட்டுவன ஏராளம்.

மண்டபத்திற்குள் நல்மாடம். அதில் தான் சிவகாமசுந்தரி காண சிற்றம்பலத்தெம்பெருமான் கூத்தாடுகிறார். அந்நல்மாடத்தை 4 தூண்கள் தாங்குகின்றன. தாய் வாழை, பக்கக் கன்றுகளுடன் நிற்பது

அப்பெரிய தூண்களைச் சுற்றி 3 சிறிய தூண்கள் தாங்குகின்றன. அவை பெரும்பாரத்தைத் தாங்காது கொண்டை வளைந்து நிற்கின்றன. உற்ற இடத்து உயிர் வழங்கும் தன்மையோர், மற்றவரைக் கண்டால் பணிவரோ கற்றூண் பிளந்து இறுவதால்லால் பெரும்பாரம் தாங்கின் தளர்ந்து வளையுமோ தான்.

என்ற ஔவைப் பாடலைப் பொய்யாக்கித் தன் கற்பனையை மெய் யாக்கி வடித்திருக்கிறார் சிற்பி! மாடத்துக்கு வெளியே இருபுறமும் தூண்கள். சிறு உடைந்து தாங்குதலால் நிற்கிறது. இணைத்தூணில் புரவிமேலமர்ந்து பிலியைக் குத்தும் வீரன். மறுபுறத் தூணில் தேரை இருந்ததை, சுட்டிப் பார்த்து ஒலியாலறிந்து, சந்தனக் குழம்பைச் சாத்தி அது உலரா இடத்தை உடைத்து தேரையை வெளிப்படுத்தி தந்தை நித்தில் குறை நீருபித்தாளும் சிற்பியின் மகன். அதனால் தான் அவ்விடம் வெற்றிடமாய் இருக்கிறதாம். இதை மெய்யோ பொய்யோ. ஒத்த கதைகள் பேரூரிலும் எங்கும் இங்கும் வழங்குகின்றன.

இனி சேலம்- சங்ககிரிக்கு இடையே ஆன தாரமங்கலத்துக்குச் சென்று, "கட்டி முதலியார்கள்' அதனைத் தலைநகராக்க் கொண்டு நாடுகாவல் புரிந்தபோது உண்டான தலைக்கோவிலில் எஞ்சியன கண்டு மகிழ்வோம். அது அக்காலத்தில் பூவாணிய நாட்டுப் பகுதிக்கு தலைநகர் கட்டி முதலியார் என்ற பட்டப்பெயர் உடைய மரபினரில் 3 தலைமுறையினர் இங்கு திருப்பணி செய்துள்ளனர்.

பல கோவில்கள் உடைய இவ்வூரின் நடுவில் கைலாச நாதர் கோவில். இது 5 அடுக்கு 7 கலசம் கொண்ட இராசகோபுரம் பெற்றுத் திகழ்கிறது. விநாயகர் 'மும்முடி கட்டி விநயாகர்' - காரணப்பெயர் போலும்! நந்தி மண்டபத்தின் விமானத்தில் பாண்டியரது மீனும் கட்டி முதலியார்கள் வண்ணத்தடுக்கு வாடாமாலையும். முன்மண்டபம் 8 தூண்கள் உடையது. முதலும் இறுதியுமான தூண்களின் தளர்ந்து வளைந்தது போன்ற தோற்றம்! மற்றவற்றில் யாளி மீதும், குதிரை மீதும் வீரர்கள். யாளியின் வாயில் உருண்டை! கை நுழையாது. விரல்கள் செல்லும் இடைவெளிதான். அதன் வழியாகக் கடைந்திருக்கின்றது. சிற்றாளி, பேரூரில் போல விதானத்தில் தாமரையும், 8 கிளிகளும், தொங்கும் கற்சங்கிலிகளும் இங்கு உண்டு. ஆனால் பேரூரில் காண முடியாதது இங்குள்ளது போன்று யாளியின்

வாய்க்கல் உருண்டை.

கோயிலின் உள் இடப்புறம் முனிபத்தினி கையில் அகப்பையுடன் நின்று பிச்சாடனருக்கு களை சோர்ந்த நிலையில் சோற்றமுதளித்து காண்போருக்குக் கலையமுது வடிக்கிறள். திருச்சுற்றில் அமைந்தவற்றுள் மோகினி அவதாரம், சித்தேசுவரன் ஊர்த்தவ தாண்டவர், சிவசக்தி கோபம், கங்கா தேவியால் ஏற்பட்ட பார்வதியூடல் நிலை, வாலி சுக்ரீவன் போர்— ராமனேடு ப பார்த்தால் வாலி தெரியும். வாலிக்கு ராமனிருப்பது தெரியாது. மன்மதனும் ரதியும் அவ்வாறே ஒரு குறிப்பிட்ட கோணத்தில் இருந்து பார்த்தால் காணமுடியும் மன்மதனுக்கு ரதி தெரிவது இல்லை. தாரமங்கலச் சிற்பங்கள் பேரூரில் உள்ளவற்றை விட உயரத்திற் சிறியவை. ஆனாலும் நுணுக்கமான வேலைப் பாட்டில் குறைந்தவை அல்ல.

வெளிச்சுற்றின் கடைசியில் பரந்த மேடை மீது கோபுரம் முதல் அடித்தளம் ஈறாக 9 கற்களாலான சிறு கற்கோவில் இருக்கிறது. "உடலுக்குத் தலை போல, உன் கோயிலுக்குச் சுதையாலான என் இராய கோபுரம். அது இல்லை என்றால் கோயில் எங்ஙனம் சிறப்புறும்? என்றாளும் சுதை மண்ணீட்டாளன். கல்லாலேயே கோபுரமும் கோவிலும் எடுக்க முடியும் என்று சிற்பி பதில் மொழிந்தானும். எடுத்துக்காட்டாக, இச்சிறு கோயிலை எடுத்தானும். கலைஞர்களின் போட்டியால் நமக்குக் கிடைத்த பரிசு இது.

சங்ககிரி அடிவாரத்தில் உள்ள பாறைக்குப் பெயர் கெட்டி முதலியார் குண்டு. தாரமங்கலம் கைலாச நாதர் கோவில் கட்டுவதில் வேலை செய்யாது ஏமாற்றியவர்களை அவர் அதன் மீது நிறுத்திக் கட்டி ஒறுப்பாராம். அக்கோவில் கட்டுவதில் சிற்ப நுட்பத்தில் இவர் கொண்ட முயற்சியும், ஈடுபாடும் இதனால் தெரிகிறது.

ஈரோட்டிலிருந்து 12 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பவானியே — நீர்கொள்ளும் நன்னுதல் — திரு நணா. இம்முடி கெட்டி முதலியார் இராச கோபுரம் முதலான சிற்பப் பணி வளமுடி அமைத்திருந்தார். அவை சிந்தந்தன கால வெள்ளத்தில். ஆயினும், வேத நாயகியம்மன் கோவிலுக்குக் கட்டிய மாக மாண்டபத்தில் கற்றூண்கள் உள. அவற்றுள் இறைவியை நோக்கி நிற்கும் இரு பெண்களின் எழிலைக் கண்டு மகிழ்ந்தோர் ஒள்ளறைச் சிரிக்கும் அழகி என்று கூறுவார்கள்.

ந. சுப்புலட்சுமி.

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம் கல்மேல் எழுத்து. கல்லெழுத்துக்கள் கூறும் கருத்தை எழுத்தறிவு இல்லாதார் எங்ஙனம் அறியலாகும்! கண்ணால் பார்த்த அளவில் காணக் கல்லாதாருக்கு என்ன வழி! கற்றச்சன் இவ்வாறு கருதினனோ, அறியேன். கை நிறையப் பொருளை ஈதிசைவர் ஒருவருக்குக் கெட்டி முதலியார் வழங்குவதை அழகாகத் தூணில் செதுக்கி விட்டிருக்கிறான்.

இவ்விரண்டும் இன்று கெட்டி முதலியாரின் பணியை நித்தம் கொட்டி முரசறைகின்றன.

தளவாய் தேவராயன் (1735-1765) நாராயண கவுண்டன் ஆகியோரின் திருப்பணிகளைக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

கொங்கு ஏழு தலங்களுள் நடுவானது கொடிமாடச்செங்குன்றூர். மலையின் பெயர் ஆன திருச்செங்கோடு என்பதுவே இன்று ஊருக்கும் உள்ள பெயர், நிலத்தம்பிரான் என்றும் கைலாச நாதர் என்றும் போற்றப்படும் இறைவர் கோயில் ஊருக்குள் காணப்படுகிறது. 1660 முதல் 1682 வரை ஆண்ட விசுவநாதச் சொக்கலிங்கர் (மதுரை சொக்கநாத நர்யக்கர் போலும்) இக் கோயிலையும் கோபுரத்தையும் அமைத்ததாகக் கல்வெட்டுக் கூறும். இராச கோபுரமும் உடகோபுரமும் நூற்றுக்கால் மண்டபம் பெற்ற கரூர். 1579ல் வெங்கடபதி ராயன் வீரப்ப நாயக்கையன் (வீரப்ப நாயக்கர் 1572-95) இடிற யிலி விட்ட ஈரோடு, முள்ளும் புல்லும் முளைத்து இடிந்த கூடங்களை உடையதாகப் பாழடைந்த வெஞ்ச மாக்கூடல், குலோத்துங்க கொங்குச் சோழன் காலம் முதல் 17ம் நூற்றாண்டு வரை கூட கல்வெட்டுகள் பெற்று விளக்கும் அவிநாசி இவை முதலான இடங்களில் கல்வெட்டுகளை ஆய்ந்தால் இன்னும் பலரின் சிறப்புப் பணிகளை விளக்க முறக் கிடைக்கப்பெறுவோம்.

புளிக்கண்டவர்க்குப் புனல் ஊறுமாப்போல் இன்று எஞ்சியவற்றைக் கண்டே, நமக்கு விழைவு பெருகுகிறது. தொல்பொருள் ஆய்வுக்கழகம் வேட்கையை நிறைவேற்றுமாக!

# தொன்று தொட்டு வரும் தொழில்கள்
## கோவை மாவட்டம்.

கொடுமுடி ச. சண்முகன், பிஇ. டி.எஸ்எஸ்
எம்ஐஇ.,
உதவிப் பொறியாளர், பொபது,
திருச்செங்கோடு-637211

*****

### தொழில் நகரம்:

சுதந்திர பாரதத்தின் தொழில் நகரங்களில் முதல் பத்து இடங்களுக்குள் இடம்பெறும் தகுதி பெற்றது கோவை மாநகரம். 'தென்னகத்தின் மான்செஸ்டர்' என்று நூல் உற்பத்தியால் பெயர் பெற்றது. கோவை மாவட்டத்தின் பிற நகரங்களும் அதற்குத் துணையாக நிற்கின்றன. பனியன் நெய்தலுக்குத் திருப்பூர், கைத்தறிப் போர்வை-களுக்குச் சென்னிமலை, கைத்தறி ஆடைகளுக்கு ஈரோடு, தரை விரிப்பு களுக்கு பவானி என்றவாறு.

இச்சிறப்புகளெல்லாம், இன்று நேற்று வந்தவையல்ல. பருத்தி விளைவிப்பும் நூல் நூற்றலும், நெசவும் பண்டு தொடங்கி இன்று வரை வளர்ந்து வருபவையாகும். நெசவுத் தொழிலைப் போன்றே சிறந்து விளங்கிய பல தொழில்களின் சிறப்பைச் சொல்லுவதே இக்கட்டுரையின் நோக்கம். கோவை மாவட்டத்தின் மிகச் சிறந்த தொழில்களை எண்ணின் முன்னிற்பன மூன்று; நூற்றல், மாடுவளர்த்தல், பொறியியல் ஆகியன.

### பருத்தி:

கோவை மாவட்டம் கரிசல் மண் மிகுந்தது. மழை குறைவாகப்* பெய்யும் சீமை. இவ்விரண்டும் பருத்தி விளைவை ஊக்குவிக்கின்றன. அதன் விளைவாக நூற்றலும் நெசவும் பெருகியுள்ளன. பெரும்பாலும் பெண்களே நூற்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். அதிலும் குறிப்பாகக் கணவனை இழந்த கைம்பெண்களுக்கு இத்தொழில் பாதுகாப்பளிக்கின்றது. கொங்கு நாட்டில் கணவரை இழந்த கைம்பெண்களுக்கு 'பஞ்சு கொடுத்தல்' என்ற சடங்கு நடத்தப்படுகின்றது. 'ஆளில் பெண்டிர் தாளில் செய்த நுணங்குநுண் பனுவல் போல' (1) என்ற சங்கப் பாடலும் இதனை உணர்த்தும்.

கொங்குச் சீனாபுரத்துப் பவணந்தி தான் காணும் நூற்பூப் பணியை புலவர்களின் தொண்டோடு ஒப்பிட்டுக் கூறுதல் உவகையளிக்கும்.

" பஞ்சிதன் சொல்லாப் பனுவல் இழையாகச்
செஞ்சொற் புலவனே சேயிழையா - எஞ்சாத
கையே வாயாகக் கதிரே மதியாக
மையிலா நூல் முடியுமாறு "

பனுவல் என்ற சொல் பஞ்சு கொண்டு நூற்கும் நூலுக்கும் பாடல் கொண்டு யாக்கும் நூலுக்கும் பொதுவானதே. பனுவல் என்ற சொல் பஞ்சு என்ற பொருளிலும் 'பருத்திப் பெண்டிர் பனுவல்' (2) என வழங்குகிறது.

## தறி:

தறியால் நெசவு நெய்யும் பழக்கம் இருந்ததைப் பெருங்கதையால் அறியலாம். விசயமங்கலத்துப் பெரும்புலவர் கொங்குவேள், தழுவல் நூலகத் தமது பெருங்கதையை யாத்தார். கொங்கு நாட்டில் தாம் கண்டு கேட்டவற்றையெல்லாம் பொது வழக்காக அவர் நூலில் பிறர் மீது ஏற்றிப் பாடியுள்ளார். பெருங்கதைத் தறி சான்றுகளைக் கொங்கில் நிகழ்ந்தவைகளாகக் கொள்ளல் சாலும். தறி, குழல், பா, பற்றி கொங்குவேள கூறுவதிலிருந்து அதன் தொன்மை அறியலாம்.

" உருமண்ணு வாவும் யூகியுந் தறியா
கரும மேற்கோ ளெரி நூல் ஆக
பாவிடு குழலின் ஆயிடைத் திரிதர "

## ஆடை வகைகள்:

ஏராளமான ஆடை வகைகளைப் பற்றியும் கொங்குவேள் குறித்துச் செல்கின்றார்.

" புகை நூல் பூந்துகில் அருமடி யுடீஇ ( 4 )

பைங்கண் பாதிரி போது பிரித்தன்ன
அங் கோசிகமும் வங்க சதாரும்
கொழுங்கோர் கொங்கின் தோய்ம் மலரன்ன
பைங்கேழ் கலிங்கமும் பட்டும் தூரதும்
நீலமும் அரத்தமும் வாலிழை வட்டமும்
கோலமொடு புணர்ந்த வேறுவேறு இயற்கை
நூலினும் உலண்டினும் நாரினும் இயன்றன்ன ( 5 )

பல்வேறு வண்ணங்களில் தோய்த்த ஆடைகள் அழகு சேர்க்கின்றன.

**கல்வெட்டு:**

மென்புடவை, பரும்புடவை, நூல் இவைகளை வண்டியிலும், எருதின் மேலும், தலைச் சுமையாலும் நகரத்துச் சந்தைக்குக் கொண்டு சென்று, கிராமத்துக்குத் தேவையான பல சரக்குகளை வந்ததாகச் சர்க்கார் பெரியபாளையம் சுக்ரீவேஸ்வரர் கோயில் கல்வெட்டு கூறுகிறது.

**தொழிலாளர்:**

நெசவுத் தொழிலில் ஈடுபடுவோர் செங்குந்தர் என்றும் கைக்கோளர் என்றும் வழங்கப் படுவர், கொங்கு நாட்டில் கோயில்கள் பலவற்றிற்கு நுந்தா விளக்கு எரிக்க பொன் மூலதனமாக வைத்துள்ள செய்தி கல்வெட்டுகளால் புலப்படும்.

இவர்கள் அரச குலத்தின் அணுக்கத் தொண்டர்களாகவும் அதிகாரிகளாகவும் இருந்துள்ளனர். சேரன் பூர்வ பட்டயத்தில் கூறப்பட்ட புதிய குடியேற்றத்தை செப்பமாக நிறைவேற்றிய பணியில் முன் நின்றனர். தேவையான போது தம் மக்களையே (சென்னிமலையில்) நரபலியாக ஈந்து, மக்களைக் கவர்ந்து வெற்றிகரமாகப் பணியினை முடிக்கின்றனர்.

**பொதுவாக:**

நூற்புத் தொழிலில் கோவை மாவட்டம் தொன்று தொட்டு முன்னணியில் நின்றுள்ளது. கதர்வாரியம் தமது நூற்புப் பணிகளுக்குத் திருப்பூரைத் தேர்ந்தெடுத்தது சாலச் சிறந்ததாகும். கொள்ளேகாலம் பட்டுக் கொண்டு கதர் பட்டுப் புடவைகளும் இங்கு நெய்யப்படுகின்றன. பாரதத்தின் இன்றைய தலைமை அமைச்சர் ஆண்டுதோறும் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட கதர் பட்டுப் புடவைகளை திருப்பூரிலிருந்து விலைக்கு வாங்கி தமக்கும், தம் குடும்பத்திற்கும் பயன்படுத்துவது நமக்கெல்லாம் பெருமை தரும் செய்தியாகும்.

இன்றைக்கு கோவையில் ஒரு நூற்பு ஆராய்ச்சி நிறுவனமும், ஏராளமான நூற்பாலைகளும் சிறந்து விளங்குவது பண்டைச் சிறப்பின் தொடர்ச்சியே எனில் மிகையாகாது.

மாடு வளர்த்தல்:

கொங்கு நாட்டின் மிகப்பெரிய தொழில் மாடு வளர்த்தல் ஆகும். காங்கயம் காளைகள் உழவுக்கும், உழைப்பிற்கும் பேர் பெற்றவை இந்நாட்டு ஊர்ப்பெயர்கள் பட்டி எனவும் தொட்டி எனவும் முடிபவை. கால் நடைகளின் மிகுதியாலேயே ஆகும். அக்காலத்தில் பல ஊர்களில் பெருத்த அளவில் மாடுகள் ஒரே கட்டமாக பண்ணையில் வளர்க்கப்பட்டன. மாடு கட்டும் இடம் தொழுவம் எனப்படும். அதன் அடியாக முருங்கத் தொழுவு, பெருந்தொழுவு, சாரத்தொழுவு போன்ற பல ஊர்கள் கோவை மாவட்டத்தில் உள்ளன.

பழைய கோட்டை ஆனூர் நல்லசேனாபதிச் சர்க்கரை மன்றாடியார் அவர்களின் மாட்டுப் பண்ணை உலகப் புகழ் பெற்றது. மாலை வேளையில் பண்ணை மாடுகள் பெருந்திரளாக மேலிடத்திலிருந்து தொழுவத்திற்கு வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சி ஆகும். பழைய கோட்டையின் பழம் பெயர் ஆனூர் ஆகும். அனூர் எனவும், ஆநூர் எனவும் பலவாறாக வழங்கி வந்துள்ளது. அவ்வூரில் கோயில் கட்டிய சிற்பி சோமசுந்தரன் தனக்குக் கிடைத்த தயிரில் மயங்கி பாட்டாக வடித்துக் கல்லில் வெட்டி வைத்தான்.

- பணியாளர்க்கு

வயிறு நிறையச் சோறும்
வாய்க்கு வெற்றிலை பாக்கும் வாங்கித் தந்து
தயிரோடு மூவேளை யிட்ட தர்மமிது
அழகன் சர்க்கரையதாமே (6)

கொங்கு நாட்டை நினைக்கும்போதே எல்லாப் புலவர்களுக்கும் பசுக்கள் தான் நினைவுக்கு வருகின்றன. 'ஆ கெழு கொங்கர்' (7) என்றும், 'கொங்கர் ஆ பரந்தன்ன செலவின்' (8) என்றும், 'தம் நாட்டு ஆடு பரந்தன்ன மாவின் ஆ பரந்தன்ன' (9) என்றும் பதிற்றுப் பத்து பலவாறாகக் கூறும்.

'பாறைகளை இரும்புளி கொண்டு வெட்டிய ஆழ்கிணற்றில் நீளக்கயிறு கொண்டு சிறிய முகவையில் இறைத்தூற்றும் நீரில் மொய்க்கின்ற மாடுகள்' (10) என்ற வருணனை எக்காலத்திற்கும் பொருந்துமன்றோ?

கொடுமுடி ச. சண்முகன்.



தமிழ் நாட்டின் பிறபகுதிகளில் மாடு வளர்ப்போர் இடையர் எனப்படுவர். அங்கு பாலுக்காக மட்டுமே அவை பயன்படுகின்றன. ஆனால் கொங்கு நாட்டில் வேளாளர்கள் தம் பண்ணைப் பணிகளின் ஒரு கூறாகவே மாடுகளை வளர்த்து வருகின்றனர். உழவுத் தொழிலின் எல்லாக் கட்டங்களிலும் உதவுகின்றன. குடியானவர்களின் பெருஞ் செல்வமாக (மாடாக) அவை விளங்குகின்றன.

பொறியியல்:

ஒரு நாட்டின் அறிவுத் திறத்தின் அளவு கோல் அந்நாட்டின் பொறியியல் பணிகளே ஆகும். அவைகளைக் கட்டுமானப் பகுதிகளாகவும் எந்திரப் பகுதிகளாகவும் பிரிக்கலாம்.

கட்டுமானப் பணிகள்:

கட்டுமானப் பணிகளில் தலையாயவை வேளாண்மைக்கு உதவுபவையே. கோவை மாவட்டத்தில் நொய்யலாறும், வானியாறும் பாய்ந்து வளம் கூட்டுகின்றன. காஞ்சியாறு எனப்படும் நொய்யலாற்றில் பண்டைக் காலத்தில் 96 அணைகள் இருந்தனவாம். அவற்றில் பெரும்பாலான அணைகள் இன்றும் நல்ல நிலைமையில் உள்ளன. இவை ஆற்றில் குறுக்கே கட்டப்பட்டிருக்கும். அதன் தொடர்ச்சியாக ஒரு கால்வாய் வெட்டப்பட்டிருக்கும், வெள்ளப்பெருக்கின்போது, வாய்க்கால் வழியே நீர் ஓடி ஏரி குளங்களை நிரப்பும். உபரி நீர் ஆற்றுப் போக்கிலேயே அணையில் வழிந்தோடி அடுத்த கால்வாய்களை அடையும். பெய்யும் மழையில் பெரும் பகுதியைப் பயன்படுத்திக் கொள்ளத்தக்க சிறந்த ஏற்பாடு, இந்த வறண்ட பகுதிக்குப் பேருதவியாக இருந்தது. இவ்வணைகள் கற்சிறை எனப்பட்டன.

வாய்க்கால் வழியே நீர் ஓடி ஏரிகளையும், குளங்களையும் குட்டைகளையும் நிறைத்தன. அவற்றில் தேங்கிய நீர் கொண்டு நஞ்சை விவசாயம் சிறந்து விளங்கின. கோவை மாவட்டத்தில் பல ஊர்கள் ஏரி, குளம், குட்டை ஆகிய ஈறுகளை உடையனவாக உள்ளன. கோவை மாவட்டக் கல்வெட்டுக்கள் ஏராளமான பழைய ஏரிகள், குளங்கள் பற்றிய தகவல்களைத் தருகின்றது. உடைந்து போன

...6

குளங்களைப் புதுப்பித்துள்ளனர் (11). குளங்களைப் பேணவும், பாதுகாக்கவும் மானியங்கள் விடப்பட்டன. பார்வையிடும் பொறுப்பை எப்போதும் மீன் பிடிப்பதற்காக குளக்கரையிலேயே இருக்கும் செம்படவன் வசம் ஒப்புவிக்கப்படுகிறது. ஆபத்து நேரும் காலத்தில் ஊராருக்கும், தலையாரிக்கும் தெரிவிக்க வேண்டியது அவன் பொறுப்பாகும். அதற்காக மீன் பிடிக்கும் உரிமையும், மானியமும் வழங்கப்பட்டன (12).

அணைகளின் கட்டுமானப் பணிகள் வியக்கத்தக்க அளவுக்குச் செம்மையாக இருந்தன. பாறைக்கால் பார்த்து அமைவிடம் தேர்ந்தெடுக்கப்பட்டது. பெரும்பெரும் கற்களை உடைக்காமல் உருட்டிக் கொண்டு வந்து கட்டப்பட்டது. கற்கள் ஒன்றையொன்று கோர்த்துக் கொண்டு தத்தம் சொந்த எடையாலேயே, தண்ணீரின் உந்தலைத் தாங்கும் வண்ணம் கட்டப்பட்டதாலேயே எக்காலத்திற்கும் நிலைத்து நிற்கும் வண்ணம் உள்ளன. தற்காலத்தில் பெருங்கற்களை உருட்டிக் கொண்டு வரும் நுட்பத்தை தொழிலாளிகள் மறந்துவிட்டனர். கிரேன் போன்ற பொறிகள் தேவையாகின்றன. நமது முந்தையோர் திறனை இழந்து தவிக்கின்றோம். ஓர் அறிவின் தொடர்ச்சி அற்றுப் போய்விட்டது.

பெருங்கற்களின் இடையே செங்கல் சல்லியுடன் சுண்ணாம்பு மற்றும் கடுக்காய் கருப்பட்டி நீர் முதலானவற்றை கலந்து நிரப்பியிருப்பார்கள். தற்போது சுர்க்கி காங்கிரீட்டு என்ற பெயரில் அழைக்கப்படுகின்றது. காலங்காலமாக நீரோட்டத்தின் அரிப்பைத் தாங்கி நின்றுள்ளன.

அரண்மனைகளில் உல்லாச நீச்சல் குளங்கள் இருந்தன. அவை வேண்டும்போது நிறைத்துக் கொள்ளவும், வேண்டாத போது வடித்துக் கொள்ளவும் வாய்ப்பாக பொறியமைப்பு உடையனவாகத் திகழ்ந்தன என்று பெருங்கதையால் அறிகின்றோம்.

" நிறைக்குநீர் நிறைத்துப் போக்குநீர் போக்கும்
பொறிப்படை அமைந்த பொங்கு இலவந்திகை " (13)

இவற்றை எந்திர வாவிகள் என்று 'மணிமேகலை' கூறும்.

மற்றும் மாளிகைகள், எழுநிலை மாடங்கள், நிலா முற்றங்கள், அரண்மனை, பூங்காக்களிலே திருமணி அம்பலம், பொற்கோட்டம்பலம், அத்தாணி மண்டபம், மந்திரமாமம், பொறியமை மாடம், பொதியறை,

..7

இசை மண்டபம், ஆடம்பலம், கத்தப்பள்ளி, உலாவு மண்டபம், விருந்து கோயில், மற்றும் வழிபாட்டிடங்கள் போன்ற எண்சிறந்த கட்டிட அமைப்பு களை பெருங்கதையால் அறியலாம். (14)

திருப்பாண்டிக் கொடுமுடிக் கோயில் ஏழாம் நூற்றுண்டிலேயே செப்பேட்டால் அறியலாகும் (15). கொங்கு நாட்டில் 36 பெருங் கோயிலும் 360 சார்புக் கோயில்களும், 32 அணைகளும் கட்டியதாக சோழன் பூர்வ பட்டயம் கூறும். சிற்பக் கலையில் ஒப்புடையில்லாதக் கூறப்படும் தாடிக்கொம்பு இம்மாவட்டத்தைச் சேர்ந்ததேயாகும். பேரூர் சபா மண்டபத்துச் சிற்பங்கள் மிகச் சிறப்பு வாய்ந்தவை.

பொறிகள். ஊர்திகள்:

பாண்டில், வையம், தேர் போன்ற பல ஊர்திகளைப் பற்றிப் பெருங்கதையால் அறிகின்றோம். அதில் தானே இயங்கும் பொறி ஒன்றினையும் கொங்குவேள் காட்டுகின்றார். ஆனி வையம் என்று அதற்குப் பெயர். யூகி பயன்படுத்தும் அவ்வண்டியை யவன வீரர் வடிவமைத்துச் செய்து தந்ததாகச் சொல்லுகின்றார். இரும்பாலான இறகுகள் கொண்டிருந்தது. குதிரை முதலியன பூட்டப்படாமல் இயந்திரத்திலேயே இயங்கும் தன்மை கொண்டிருந்தது. தக்க பயிற்சியுடன் வண்டியின் விசையைத் தக்கவாறு இயக்கி வேண்டிய திசையில் செலுத்தலாம். வண்டியை வேண்டும் போது பூட்டிக் கொள்ளவும், வேண்டாதபோது உறுப்பு உறுப்பாகப் பிரித்துக் கொள்ளவும் முடியும் (16).

இதுபோன்ற முயற்சிகள் இடைக்காலத்தில் கொங்கு நாட்டில் அவ்வப்போது நிகழ்ந்துள்ளன. பறந்து காட்டும் ஆர்வம் இருந்ததையும் சில பட்டயங்களால் அறியலாம் (17). செம்மப்புலவன் என்பவன் இறகுகள் கட்டிக் கொண்டு, ஒரு மலையின் மேலிருந்து அடுத்துள்ள குளத்தின் மீது பறந்து காட்டியுள்ளதாகத் தெரிகின்றது. பறப்பதற்கு குளத்தைத் தேர்ந்தெடுத்ததிலிருந்து முயற்சியின் உண்மை புலனுகின்றது. பறப்பதில் தோல்வியுற்றுக் கீழே விழுந்தாலும் அடிபடாதன்றோ?

இதுபோன்ற செய்முறை அறிவியலின் தொடர்ச்சியாகவே, இன்று கோவையில் நின்று பொறியியல் கல்லூரிகளும், இரண்டு பல்கலைக்கழகங்களும் தோன்றியுள்ளன என்றால் மிகையாகாது.

...8

## உலோக உற்பத்தி

பொறியியல் பணிகளுக்கும் பொருளாக்கத் திட்டங்களுக்கும், உலோகங்கள் இன்றியமையாதன. பொன், செப்பு, இரும்பு போன்ற மூல உலோகங்கள் பண்டைக் கோவை மாவட்டத்தில் கிடைத்துள்ளன.

பண்டு தொட்டே வாள், வேல் முதலிய போர்க்கருவிகள் இரும்பால் செய்யப்பட்டன. பாறைகள் உடைப்பதற்கான உறிகள் முதலியவையும் இரும்பால் ஆயின. வண்டி முதலியவற்றின் அச்சுகள் இருசுகள், கதவு முதலியவற்றின் கொண்டிகள் முதலான இரும்பால் செய்யப்பட்டன.

கோவை மாவட்டம் மலை வளம் நிறைந்தது. அவற்றில் இரும்புத் தாது நிறைந்திருக்கும். மலையின் மணலைத் திரட்டிக் கொண்டு வந்து தொடர்ந்து அடுப்பில் கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டு ஊதிக்கொண்டே வந்தால், இரும்புத் தாது உருகி ஒன்று சேர்ந்து இரும்புக் கட்டியாகும். பிற மணல் பகுதி பிரிந்துவிடும். கி.பி. 1800 இல் சென்னிமலையில் இரும்பு உருக்குவதை நேரில் கண்ட சர் பிரான்சிஸ் புக்கானன் என்ற ஆங்கிலேயர் இந்தச் செயல்முறையை விளக்கியுள்ளார். இந்தக் கால கட்டத்திற்கு முன்னரும், கிட்டதட்ட இதே முறை கையாளப்பட்டதாக எடுத்துக் கொள்ளலாம்.

இரும்பைப் பதப்படுத்தும் முறையினைத் தமிழர் அறிந்திருந்தனர். தற்காலத்தில் கல்லில் குழி போடுவதற்குப் பயன்படுத்தும் கடப்பாறையில் வைரமுனை பொருத்தப்பட்டிருக்கும். ஆனல் பழைய காலத்தில் இரும்பு முனைகளைக் கெட்டிப் படுத்தும் எளிதான முறை ஒன்றிருந்தது. அந்த நடைமுறை இன்றும் புழக்கத்தில் உள்ளது. பகுக்கக் காய்ச்சிய கடப்பாறை முனையை, சிறிய அளவு மட்டும் குறிர்ந்த தண்ணீரில் நனைத்தால் முனை கெட்டியாகிவிடும். இரும்புத் தொழிலின் எல்லா நுணுக்கங்களும் அறிந்து வைத்திருந்தனர் நம் முன்னோர்.

வாணியாற்றின் மணலில் தாமிரம் கலந்திருந்ததாகவும், அதனை உருக்குவதன் மூலம் கிடைத்த தாமிரத்தை மேலச் சிதம்பரத்தில் செப்புச் சிலைகள் செய்வதற்கு அனுப்பியதாகச் சோழன் பூர்வ பட்டயம் கூறும்.

உலோகக் கலை வளம் மிகுந்தது இந்நாடு. இவ்வுலோகத்திலிருந்து தொழில் செய்வோர் கம்மாளர் எனப்பட்டனர். பொன், வெள்ளி வேலை, இரும்பு வேலை, தச்சு வேலை செய்வோர் அனைவரும் பொதுவாக இப்பெயரில் குறிப்பிட்டாலும் சிறப்பாக இரும்பு வேலைச் செய்வோரைக் குறிப்பதாகத் தோன்றுகிறது.

இடைக்காலத்தில் இவர்களுக்குச் சமூகத்தில் சில உரிமைகள் மறுக்கப்பட்டதாகத் தெரிகிறது. மறுக்கப்பட்ட காரணம் விளங்கவில்லை. அவ்வுரிமைகளாவன: மேலாடை தரித்தல், செருப்பு அணிதல், வீட்டு விசேச காரியங்களுக்கு கொம்பு முதலான வாத்தியங்கள் முழங்குதல் இன்னும் சில. கொங்கு சோழனான விக்ரம சோழன் காலத்தில் அதற்கான தடைகள் நீக்கப்பட்டன. பேரூர், திருமுருகன் பூண்டி போன்ற பல ஊர்க் கோயில்களில் இவை கல்லெழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ளன. இடைக்கால கொங்குச் சமுதாயத்தில் சாதிப் பாகுபாட்டின் கொடுமை அந்தந்த ஊர் மக்களின் பிணக்குகளால் பெரிதடைந்து விடும். பாதிக்கப்பட்டோர் அரசனிடம் முறையிட்டால் தீர விசாரித்து பாதிக்கப்பட்டோர் சார்பாக நல்ல தீர்ப்பு வழங்கப்படும். வேறுபல சாதியினருக்கும் இது போன்ற பாதங்கள் ஏற்பட்டுப் பின்னர் தக்கார் தலையிட்டால் நிவர்த்தியாகியுள்ளன.

## தோல் வேலை:

காலுக்குப் பாதுகாப்பு காற் செருப்பு. இப்பகுதி நடுகல் சிற்பங்கள் பலவற்றிலிருந்து செருப்புத் தைக்கும் வேலை எவ்வளவு சிறப்பாக இருந்தது என்றறியலாம். இத்தொழிலில் ஈடுபடுவோர் மாதாரி எனப்படுவர். உழவு வேலைகளில் வேளாளருக்கு உறுதுணையாக இருப்பர். நீர் இறைக்கும் பறி தைப்பர். பண்ணையில் இல்லா வேலைகளையும், குடும்பத்தினர் அனைவரும் செய்வர். சென்னிமலையில் மலை மணலிலிருந்து இரும்பு தயாரித்தோர் இவ்வினத்தாரே என சர் பிரான்சிஸ் புக்கானன் குறித்துச் சென்றுள்ளார்.

இச்சமூகத்தில் ஒருசில முன்னேற்றிய பழக்கவழக்கங்கள் உண்டு. திருமண முறிவும், பெண்களின் மறுமணமும் எளிதானது. மணமான பெண் தனது கணவனிடமிருந்து விலக உரிமை உண்டு. 'துரும்பறுத்தல்' என்று

அதற்குப் பெயர். மணமுறிவுக்குப் பின் அவர் வேறு ஆடவரை மணந்து கொள்ளுதல் பொருந்தும். இந்தப் பழக்கம் வேறு சில சமுதாயத்திலும் உள்ளதாகத் தெரிகிறது. இதன் சமுதாய விளைவுகள் ஆராய்ச்சிக்கு உரியன என்பதாலேயே இங்கு குறிப்பிட்டோம்.

<u>மட்பாண்டங்கள்:</u>

தொல்லியலார் காணும் தொழில்களில் தொன்மையானது மட்பாண்டத் தொழில். தோண்டும் இடங்களிலெல்லாம் பல புதிய அரிய செய்திகளைத் தருவன அவையே. கோவை மாவட்டம் இன்னும் தொல்லியலார் கடைக்கண் பார்வையில் படவில்லை. அதனால் முறையான அகழ்வரராய்ச்சி இன்னும் ஏதும் நடைபெற்றதாகத் தெரியவில்லை.

சென்னிமலைக்கு அடுத்துள்ள பிடாரியூரில் அருமை வாய்ந்த கருப்பு-சிவப்பு வண்ண ஓடுகள் கிடைக்கின்றன. சுமார் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முந்தியவை. சர்க்கார் பெரிய பாளையத்திலும் பழமை மிகுந்த ஓடுகளும், வண்ண கோலங்கள் எழுதப்பட்டவையாகவும் மிகவும் பழமை வாய்ந்த ஓடுகள் கிடக்கின்றன.

கிராம தேவதைக் கோயில்களில் பல மண் பொம்மைகள், உருவாரங்கள் காண்கின்றீர்கள். கால் நடைகளுக்கு சுகக்கேடு வரும்போது அம்மனுக்கு உருவு செய்வதாக மக்கள் வேண்டிக் கொள்வர். திருவிழாவின் போது அவை செய்து வைக்கப்படும். அவை மண்ணால் செய்யப்படுபவை ஆகும். தேவியின் சுற்றுலாவிற்காக அரண்மனைக் குதிரை என் பெரிய குதிரையும் செய்து அளிக்கப்படும். இது ஊர்ப்பொதுவில் திருவிழாவின் போது பாகமாக அளிக்கப்படுகிறது.

ஐயனார் கோயிலில் 20 அடி உயரத்திற்கு மேற்பட்ட கம்பீரமான ஐயனார் சிலைகளைப் பார்க்கின்றீர்கள், முடி, முகம், கை, நெஞ்சு, இடுப்பு, கால் இவைகளைத் தனித்தனியே செய்து பின்னர் சுதையால் இணைத்து வண்ணம் பூசுவர். இவை அனைத்தும் சுட்டமண். பூசையில் வைக்கப்படும் முத்தாழம்மன் போன்ற அம்மன் சிலைகள் சுடாமல் வண்ணம் பூசி வழிபாட்டில் வைக்கப்படும்.

எட்கர் தர்ஸ்டன் என்ற ஆசிரியர் தனது இந்தியச்சாதிகளும் பழங்குடிகளும் என்ற நூலில் இந்தச் சமுதாயத்தின் தொழில் முறை பற்றிச் சில தகவல்கள் கொடுத்துள்ளார். மண் ஏனங்கள் செய்யும் திருவை பற்றி அவர் கூறியுள்ள குறைகள் கோவை மாவட்டத்திற்குப் பொருந்தாது. அவர் கண்ட திருவை, கொங்கு நாடு தவிர பிற பகுதிகள் புழக்கத்தில் உள்ளவை. வனைபவரே குச்சியால் தள்ளி ஓட்டக் கூடியது. ஓடாத போது நிற்க முடியாமல் சாய்ந்து கொள்ளும். இதை குறையுடையது என்று உயர்திரு தர்ஸ்டன் கண்டித்துள்ளார். இக்குறைகளெல்லாம் கோவை மாவட்டத்துத் திருவையில் கிடையாது. இங்கே திருவையை ஓட்டுவதற்கு தனி ஆள். ஆள் ஒரு பீடத்தில் அமர்ந்து வேலை செய்யலாம். ஓடாதபோதும் திருவை சாயாத வகையில் அடி அச்சு கருங்கல்லால் ஆனது. வீட்டுப் பெண்களே திருவையை ஓட்டலாம்.

மட்பாண்டங்கள் வனைவோர் குயவர் எனப்படுவர். கொங்கு நாட்டிலுள்ளோர் கொங்கக் குயவர் என்றழைக்கப்படுவர். இடைக்கால குடியேற்றத்தில் தெளிவான வருகை இச்சமூகத்தின் மூலமே தெரிகின்றது. இன்றும் அமலில் இருக்கும் மதுக்கரைப் பட்டயம் என்ற சுவடி மூலம் தெளிவான கருத்துக்கள் கிடைக்கின்றன.

இக்குடியேற்றம் நடைபெற்றது, ஒப்பந்தம் எழுதியது கி.பி. 1114 ஆம் ஆண்டு. அக்காலக் கொங்கு நாட்டு வேளாளருக்கு நவபாண்டம் வேண்டும் என்ற ஆர்வம் வந்துவிட்டது. அதனால் சோழநாடு சென்று பானை வனைவதில் சிறந்த 50 குடும்பங்களை அழைத்து வருகின்றனர். கொங்கு நாட்டு எல்லையில் உள்ள மதுக்கரைச் செல்லாண்டியம்மன் கோயிலில் எல்லோரும் ஒன்று கூடி பட்டயம் எழுதப்படுகிறது. வேட்கோவர் தமது சொந்த பந்தங்களையெல்லாம் விட்டுப் பிரிந்து வருவதால் அவர்கள் வேளாளருக்கு சமமாக வைத்துக் கொள்வதாக வாக்களிக்கின்றனர். 'கொள்ளி கோடி ஒன்று, உண்பதுவும் தின்பதுவும் ஒன்று, கொள்வினை கொடுப்பினை பிறதியம்' திருமண உறவு தவிர மீதியில் சம உரிமை ழங்கப்படுகிறது. வேளாளருக்கே உரித்தான திருமணச் சடங்குகளில் பாதியான ஆறு சடங்குகளைச் செய்துகொள்ளும் உரிமை வழங்கப்படுகிறது. குப்பாரி கொட்டி வருதல், காமோதிரம் கோடுதல், , நாட்டுககல்லுக்குப்

**பூசை செய்தல்:**

கொங்கு நாட்டில் ஊர்த்தேவதையின் கோயில்களே மிகுதி. இலக்கியக் கடவுளர்களான பெருங்கோயில்களும் பின்னர் நிறைந்துள்ளன.

அம்மன் கோவில்களின் பூசை உரிமை பண்டாரம், ஆண்டி என்பார் வசம் உள்ளது. ஆடு, கோழி, எருமைக்கிடா முதலியன பலியிடும் பழக்கம் இருந்தது. ஐயனார் கோயில் பூசை குயவர்கள் வசம் சில ஊர்களில் உள்ளது. பெருங்கோயிலின் தேர்த் திருவிழாவிற்கு முதல்நாள் அமாவாசையன்று நடுச்சாமத்தில் நிகழ்த்தும் கிராமசாந்தி குயவர்களின் உரிமையாக உள்ளது. சங்க காலத்திலிருந்து இந்தப் பழக்கம் நிலவுவதாகத் தெரிகின்றது (20).

சிவன் கோயில் பெருமாள் கோயில் போன்ற பெருங்கோயில் பூசைகளைச் சிவபிராமணர் கவனித்து வந்துள்ளனர். கோயில்களைத் திருப்பணி செய்தபோதெல்லாம் பூசைக்கென்று பல்வேறு இடங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட சிவபிராமணர் அமர்த்தப்பட்டனர் என்ற விவரத்தை சோழன் பூர்வ பட்டயத்தால் அறியலாம். பழனியில் மலைக்கோயில் தாபிதம் செய்து, வழிபாடு ஏற்பாடு செய்தபோது பதினெட்டாம் நூற்றாண்டில் கொடுமுடியிலிருந்து குருக்களை ஏற்பாடு செய்ததாக அக்-கோயில் கல்வெட்டுக் கூறுகின்றது. கி.பி. 1800-இல் பயணம் செய்த உயர்திரு புக்கானன் அக்காலக் கோயில் நிலவரங்களைத் தெளிவாக குறித்து வைத்துள்ளார்.

திருக்கோயில்களுக்கு அளிக்கப்படும் நன்கொடைகளைப் பெற்று தர்மங்களை நிறைவேற்றும் அதிகாரிகளாக செயல்பட்டமை கோவை மாவட்டக் கல்வெட்டுக்களால் புலப்படும். நந்தா விளக்கு எரிக்கப் பொருள் வைப்போர் இவர்களிடமே மூலதனமாக வைத்துள்ளனர். தீர்த்தமும் தெர்ப்பையும் கொண்டு கருவறைக்குள் நுழைந்து பூசை செய்வார்களானதால் குடம் கொண்டு, குச்சி கொண்டு கோயில் புகுவோர் என்று கல்வெட்டுக்கள் இவர்களைக் குறிப்பிடும். ஊரின் முதன்மைக் குடிகளாக மன்னரும் வணங்க வாழ்ந்துள்ள பெருமை மிக்கார் (21).

*****

## அடிக்குறிப்புகள்.

1. நற்றிணை 353.
2. புறம் 125.
3. பெருங்கதை வத்தவ காண்டம், நான்காம் படலம்.
4. பெருங்கதை 1-54-164.
5. பெருங்கதை 1-42-204 ; தான்டெக்ஸ் வெள்ளிவிழா சிறப்பு மலர் 1947.72.
6. கொங்கு 3/75 நூல்முகம் தொகுதி.
7. பதிற்றுப் பத்து 22.
8. பதிற்றுப் பத்து 77.
9. பதிற்றுப் பத்து 78.
10. பதிற்றுப் பத்து 22.
11. கொடுமுடிக் கல்வெட்டு: வெதிரி மந்தை வெள்ளோக்குளம்.
12. தேனோலை - அக்டோபர் 1976.
13. வெருங்கதை பெருங்கதை.
14. பெருங்கதை ஆராய்ச்சி-சிலம்பொலி செல்லப்பன் பக்கம் 363-83
15. தேனோலை ஜூலை 1976.
16. பெருங்கதை ஆராய்ச்சி பக்கம் 390.
17. தேனோலை (5) ஜூலை 1975 - செம்மப்புலவன் பட்டயம்.
18. தேனோலை அக்டோபர் 1976.
19. அகம் 159.
20. நற்றிணை.
21. பதிற்றுப் பத்து 63.

*********

பானு*

# காரமடையின் கலைச்செல்வங்கள்

## ஒரு முன்னோட்டம்.

(அர. நித்தியானந்தன், எம்.ஏ.,
22.எ, ஆர்கஸ்,
பீளமேடு,
கோவை - 4.

**தோற்றுவாய்:**

கோவை மாவட்டத்தில் அரங்கநாதனுக்காகப் பெருந் திருவிழாக் கொண்டாடப்படும் புண்ணியத்தலம் காரமடை என்ற ஊராகும். இது கோவையிலிருந்து வடக்கே சுமார் 20 கல் தொலைவில் உள்ளது. கோவை-மேட்டுப்பாளையம் நெடுஞ்சாலையில் உள்ளது. அங்கு அமைந்துள்ள சிற்பக்கலைச் செல்வங்கள்பால் நம் கவனத்தைத் திருப்புவது இக் கட்டுரையின் நோக்கமாகும்.

**களம்:**

காரமடையும், அதன் வடகிழக்கில் 3 கல் தொலையில் அமைந்துள்ள பெள்ளாதி என்ற ஊரும், அதன் சுற்றுப்புறமும் இக்கட்டுரைக்கான ஆதாரங்கள் அமைந்துள்ள இடங்களாகும்.

**களஆய்வு:**

கோவை வரலாற்றியல் ஆய்வுக் கழகத்தின் முயற்சியால் திரு. பாலகுமார் (அரசுக் கலைக் கல்லூரி மாணவர்) அவர்கள் துணையால் பேராசிரியர் டாக்டர். கு. இரா. நஞ்சுண்டன், டாக்டர். இரா. சந்திர சேகரன் ஆகியோருடன் இப்பகுதியை நான் சென்று காணும் வாய்ப்புக் கிடைத்தது.

**கருத்து முடிவுகள்:**

இப்பகுதிகளைப் பார்க்கும்போது கீழ்வரும் கருத்து முடிவுகளை நாம் அடையலாம்.

1. மீன் வடிவம் பொறிக்கப்பட்ட பல நூற்றுக் கணக்கான கற்பலகைகளால் கட்டப்பட்ட பழைய கோவில் ஒன்று இருந்து அழிந்திருக்கலாம்.

2. நடுகல் நாட்டும் பழக்கம் இப்பகுதியில் நெடுங்காலமாக இருந்திருக்கிறது.

3. செழுமையுறாத - தொடக்க காலக் கலைத் தன்மை ( ) பெற்ற சிற்பங்கள் காணப் படுகின்றன.

4. நாக வழிபாடு மேலோங்கி இருந்திருக்கிறது.

5. வைணவ மதத்தின் தென்கலை, வடகலை என்னும் இரு-பிரிவினரிடையே ஒற்றுமை மலர்ந்திருக்கிறது.

6. புடைப்புச் சிற்பக்கலை இப்பகுதியில் வளர்ந்திருக்கிறது.

7. மிகச் சீரிய கலைத்தன்மை கொண்ட கட்டடக் கலையும், சிற்பக்கலையும் செழுமையுற்றிருக்கின்றன.

பழைய கோவிலின் அழிவு:

காரமடையில் அமைந்துள்ள தெப்பக் குளத்தின் படிக்கட்டு-களில் அமைந்துள்ள கற்கள் எல்லாவற்றிலும், அவ்வூரில் அமைந்துள்ள கோவில்கள் சிலவற்றில் காணப்படும் கற்களிலும் மீன் உருவம் கோடுகளாக-வும், புடைப்பாகவும் அழகு செய்யப்பட்டுள்ளதைக் காணலாம்.

இக்கற்கள் எல்லாம் ஒரு பழங்கோவில் இருந்து அழிந்ததின் அடையாளங்களாகும். அக்கோயில் அழிந்தபின், அக்கற்களைத் தெப்பக் குளத்தின் படிகளாகவும், சில கோவில்களின் சுவர்கள் மற்றும் விமானக் கூரையாகவும் அமைக்கப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்று கருத இடம் உள்ளது.

நடுகற்கள்:

இப்பகுதியில் மூன்று நடுகற்களைக் காணுகிறோம். மூன்றும் புலியுடன் ஒரு மறவன் போரிடும் பெருமிதமான வீரக்காட்சியைச் சித்தரிக்கின்றன.

ஒன்று பொள்ளாதியில் அமைந்துள்ள தர்மராஜர் கோவிலின் முன் அமைந்துள்ளது. இதன் கீழ்க் கல்வெட்டுகள் இருக்கும் எனக் கருத இடம் உண்டு. அப்பகுதி மணலில் புதைந்துள்ளது.

மற்றொன்று, திப்புசுல்தானின் கோட்டை இருந்து அழிந்த பகுதி எனப் பொது மக்களால் சொல்லப்படும் பகுதியில் உள்ள கோட்டை மாரியம்மன் கோவிலுக்கருகே உள்ளது. இந்த நாடு கல்லின் அடிப்பகுதியில் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

நாகவழிபாடு:

பொள்ளாதியின் கிழக்குப் பகுதியில் ஒரு பள்ளம் ஓடுகிறது. முன்காலத்தில் அது தொடர்ந்து நீர் ஓடிக் கொண்டிருந்த ஒரு சிற்றோடை என்றே அங்கு வாழும் பெரியோர்கள் கூறுகிறார்கள்.

அந்த ஓடையில் 20 அடி உயரமுள்ள பெரிய கருங்கற்பாறை ஒரு செங்குன்று போலக் காணப்படுகிறது. அந்தக் கற்பாறையில் சுமார் 4' முதல் 5' வரையிலான பரப்பில் பெரிய 5 தலைப்பாம்பு, உடலை ஒரு சுருட்டு சுருட்டிக் கொண்டு, வாலைத் தொங்கவிட்டபடி நிமிர்ந்து நிற்கும் நிலையில் உள்ளது. மற்றும் அப்பகுதியில் காணப்படும் பலகோவில்களில் நாகப்பாம்பு சிறிய பெரிய வடிவங்களில் பல இருப்பதைக் காணலாம். ஆகையால் அப்பகுதியில் நாகவழிபாடு மேலோங்கி இருந்தது எனக் கருத-லாம். (பிள்ளைப் பேற்றிற்காக நாக தோசத்தை நீக்கும் வழிபாடாக இது வளர்ந்தமைந்திருக்கலாம்).

தொடக்ககாலக் கலைத்தன்மை:

பொள்ளாதியின் வடகிழக்குப் பகுதியில் திப்பு சுல்தான் கோட்டை அழிபாடுகளுக்குப் பக்கத்தில் அமைந்துள்ளன. சிவன், அம்பிகைக்கான இரு கோவில்கள்.

இக்கோவிலின் சுவர்களில் வட்டவடிவமான முகங்கள் புடைப்புச் சிற்பங்களாக அமைந்துள்ளன. மற்றும் அப்பகுதிக்குச் சற்றுக் கிழக்கே அமைந்துள்ள மாரியம்மன் கோவிலில் ஒரு உருவச் சிலை காணப்படுகிறது. அச்சிலையின் முகமும் சீரிய கலை அமைப்பு உடையதன்று. இவை எல்லாம் கிராம, மலைப்பகுதி மக்களின் எளிய சாயல்களைப் புலப்படுத்துகின்றன.

புடைப்புச் சிற்பங்கள்:

இப்பகுதியில் காணப்படும் புடைப்புச் சிற்பங்கள், மீன்வடிவம், முனிவர் உருவங்கள், சில புராணக் கதைகள் ஆகியவற்றைப் புலப்படுத்துகின்றன.

அவற்றுள் இங்கு சிறப்பாகக் குறிக்கத் தக்கது ஒன்றுண்டு. இராமன் மராமரத்தின் பின் மறைந்து நின்று, சுக்கிரீவனுடன் போரிடும் வாலியை நோக்கி அம்பெய்யும் காட்சி ஆகும். இராமன் நிலைக்கு வாலி நேராக இருப்பது போலவும், மரம் மறைப்பது போலவும், வாலி நிற்கும் இடத்திலிருந்து பார்க்கும்போது, அவனுடு போரிடும் சுக்கிரீவன் உள்ளொடுங்கி இராமனின் அம்பு சுக்கிரீவனைத் தாக்காதபடி நிற்பது போலவும் செதுக்கப்பட்டுள்ளது. இந்த நுட்பம் மிகவும் போற்றத் தக்கது. இராமனின் முகம் அழகு வடியத் தீட்டப்பட்டுள்ளது.

**மிகச் சீரிய கலைப்படைப்புகள் சங்கமேஸ்வரர் கோவில்:**

காரமடையில் சங்கமேஸ்வரர் ஆலயம் உள்ளது. அக்கோவில் முற்றுப்பெறவில்லை. ஆனால் கலைவேலைப்பாடு மண்டிக்கிடக்கிறது. அது மக்களின் மற்றும் ஆய்வறிஞர்களின் கவனத்தில் படியாமல் இருப்பது மிகுந்த வியப்பைத் தருகிறது.

பதினொரு அமைப்பு என்று சொல்லப்படும் கோவில் உறுப்புகளில் ஏழு உறுப்புகள் மட்டுமே நிறைவெய்தியுள்ளன. அந்த 7 அடுக்குகளும் அற்புதமான அழகிய வேலைப்பாடு மிளிர அமைந்துள்ளன. கருவறையும் முன்மண்டபமும் உடையது அக்கோவில். அதன் வடபகுதியில் அம்பிகை கோவில் உள்ளது.

கருவறையின் தெற்கு, வடக்கு, மேற்கு ஆகிய மூன்று பக்கங்களிலும் ஆறு யானைகள் நிற்கும் பெருமிதத் தோற்றம் கண்கொள்ளாக் காட்சியாகும். ஆறு யானைகளும் நிற்கும் நிலை ஆவேசமாக ஆனால் மிகுந்த பெருமிதத்துடன் அமைக்கப்பட்டுள்ளன. யானைகளின் கால்கள், மத்தகம், முகம், உடல் ஆகிய பகுதிகள் அழகிய வேலைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த யானைகளை இணைக்கும் சுவர் கருவறையாக இமைகிறது. அங்கு அமைந்துள்ள நூற்றுக்கணக்கான சிறிய சிற்பங்களைக் கலை மனம் படைத்தோர் வியந்து பாராட்டாமல் இரார்.

கருவறையின் உள்ளே அமைந்திருக்கும் நிலப்பரப்பு வட்ட வடிவமாகச் செதுக்கப்பட்ட பாறையாகும். அதன் நடுவில் லிங்கம் அமைந்துள்ளது. அந்த வட்ட அமைப்பு புதுமையானது ஆகும்.

இக்கோவிலில் அமைந்துள்ள அம்பிகை பிரதிமம் எழில் மிகுந்தது.

**அரங்கநாதர் கோவில்:**

திருவரங்க நாதனின் கோவில் அடுத்து நமது கவனத்தை ஈர்க்கிறது. அங்கும் பல அழகிய சிற்பங்களைக் காணலாம். அவற்றுள் மூன்றினை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

வேணுகோபாலன் குழலூதும் காட்சியும், கந்தருவப்பெண் வீணை மீட்டும் காட்சியும் இருசுவர்களில் காணப்படுகின்றன. நின்றநிலையில் அச்சிற்பங்கள் புடைப்புச் சிற்பங்களாகக் காணப்படுகின்றன. அவற்றில் கம்பீரம் வேறெங்கும் காணக் கிடைக்காதது. அச் சிற்பங்களின் அழகே அவற்றின் கம்பீரம்தான்.

அர. நித்தியானந்தன்.

வடக்குப் பக்கத்தில் ஒரு தூணின் கீழ்ப் பகுதியில் நடுகல் (மறவன் புலியுடன் போரிடும் காட்சி) செதுக்கப்பட்டுள்ளது.

<u>பெள்ளாதி தர்மராஜர் கோவில்:</u>

பெள்ளாதியில் தர்மராஜர் கோவில் ஒன்று உள்ளது. தர்மராஜர் சிலை மிகுந்த அழகுடைய சிலையாகும். எதிரில், வெளியில் போத்தராஜன் உருவம் ஒன்றுள்ளது. இரண்டடி உயரம் உள்ள அந்தச் சிலை அவனது பெருவுத்தைக் காட்டுகிறது. போத்தராஜனது இடக்கை அக்குளில் யானையொன்று இடுக்கிக் கொள்ளப்பட்டு ஒரு காட்டுப் பன்றியை போலத் தொங்குகிறது. இப்பெரிய யானை வலிமையற்றுத் தொங்குவதைக் செதுக்கியதன் வாயிலாய், போத்தராஜனின் பெருவுத்தைக் கலைஞன் உணர்த்தியிருக்கிறன். இது எழில் மிகுந்த சிற்பமாகும்.

<u>பெள்ளாதி துளசி மாடம்:</u>

மேற்சொன்ன கோவிலுக்குக் கிழக்கே ஒரு துளசி மாடம் உள்ளது. முன்னர் சொல்லப்பட்ட சிற்றோடையின் மேல் கரையில் உள்ளது. எதிரிலுள்ள கீழ்க்கரையில்தான் முன்னர் சொல்லப்பட்ட நாகப்பாம்பின் உருவம் தீட்டப்பட்டுள்ளது.

இத்துளசிமாடம் ஒரு கற்றூண் போல் காணப்படுகிறது. சுமார் நான்கு பகுதிகளாகச் செதுக்கி அமைந்துக்கொண்டு, ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி நிறுத்தி யல் துளசி மாடம் அமைக்கப்பட்டுள்ளது, நடுவில் மண்ணிட்டு துளசிச் செடி வளர்க்க வசதி உள்ளது.

இதன் மேற்கு, கிழக்குப் பக்கத்தில் தென்கலை, வடகலை நாமக் குறிகள் காணப்படுகின்றன. ஆகவே இத்துளசிமாடம் அப்பிரிவினரிடையே ஒற்றுமை வளர்ந்த காலத்தில் அமைக்கப்பட்டது எனக் கருதலாம்.

இத்துளசி மாடத்தின் மேல் பகுதியில் 6" விட்டமுள்ள 12 வட்டக் கற்கள் அமைந்துள்ளன. அவற்றில் திருமாலின் தசாவதாரங்களும், அனுமன் சிலையும், இராமன் திருவுருவும் பொறிக்கப்பட்டுள்ளன. எழில் கொஞ்சும் சிற்பக்கலைச்செல்வமான இத்துளசி மாடம் ஒரு புராமையான கலைச்செல்வமாகும், காணத்தக்கதுமாகும்.

இறுவாய்: இதுகாறும் கூறிவந்த செய்திகளிலிருந்து காரமடையின் சுற்றுப் பகுதிகள் கலைசெல்வங்கள் மண்டிக்கிடக்கும் பகுதி என்றும் சமயம் வரை அந்த ஊர் ஒரு மையமாக இருந்திருக்கவேண்டும் என்றும், இந்தக் கலைகள் எல்லாம் தோன்றிய வகைபற்றியும், தோற்றுவித்தோர் பற்றியும் ஆராய விரிவான இடம்தருகின்ற பகுதி என்றும் தெளிவாக உணரலாம்.

# ஈரோடு கோபி வட்ட வரலாறும், சமயமும்

(பி.எம். கொளந்தசாமி,
பட்டதாரி ஆசிரியர்,
அரசுயர்பள்ளி,
நம்பியூர்).

**

"தமிழக சிந்தாமணி" என்ற தலைப்பில் ஒரு நாடகம் எங்கள் வீட்டில் இருக்கிறது. அது மிகப் பழம் ஓலைச்சுவடி. எனது பாட்டன் சிறுவனாக இருந்த காலத்திலிருந்து உள்ளது. அது எந்தக் காலத்தில் யாரால் இயற்றப்பெற்றது என்பது தெரியவில்லை. மெய்யெழுத்துக்கள் புள்ளியில்லாமல் எழுதப்பட்டுள்ளன. ஓலையேடுகள் படிக்கத் தெரிந்த ஒருவரைப் படிக்கச் சொல்லி முழுவதையும் கேட்டேன்.

கோவை மாவட்டத்தில் உள்ள சத்தியமங்கலம் அதில் சந்திர சேகர பட்டிணம் என்றும், அளுக்குளி என்ற ஊர் அழகாபுரிப்பட்டணம் என்றும், கோசணம் என்ற ஊர் கோசலாபுரிப் பட்டணம் என்றும் அந்த ஓலைச் சுவடியில் வருகின்றன.

அழகாபுரிப் பட்டணத்து அரசன் வேட்டைக்குச் செல்கிறான். காட்டில், தண்ணீர் அருந்துவதற்கு ஒரு பள்ளத்தாக்கில் இறங்குகிறான். தக்கசமயம் பார்த்த தளபதி ஒரு பெரும் பாறையைத் தள்ளி விடுகிறான். அரசன் இறந்து விடுகிறான். இந்தச் செய்தி கர்ப்பிணியான அரசிக்கு எட்டுகிறது. தளபதியால் தீங்கு நேரும் என்று பயந்து, அரசி காட்டிற்குள் ஓடிவிடுகிறாள். 15 கல் தொலைவு நேர் மேற்கில் சந்திரசேகரபட்டணம் செல்கிறாள். அங்கு விறகு ஒடித்து விற்றுப் பிழைக்கிறாள். நந்தன் என்ற ஆதி-திராவிடன் உறைவிடம் கொடுக்கிறான். சின்னாட்களில் வீரமாறன் என்ற மகனைப் பெற்றெடுக்கிறாள். நந்தன் வீட்டில் வளர்கிறான் வீரமாறன்.

மிகச் சிறுவயதிலேயே சிலம்பாட்டம், கத்தி வீச்சு, முதலியவைகள் கற்றுக்கொள்கிறான். இவனுக்குச் சமமான போர்வீரன் அப்பகுதியில் யாருமிலர் என்று அனைவரும் பேசிக் கொள்கிறார்கள். கட்டிளங் காளையாக மாறும்பொழுது இவன் கையில் ஒரு சிறந்த படையே உருவாகிவிட்டது.

படையுடன் அழகாபுரிப்பட்டணம் வந்து, தந்தையைக் கொன்று விட்டு, அரசனாக இருக்கும் தளபதியை வென்று, வீரமாறன் அரசனாகிறான். இதே நேரத்தில் கோசலாபுரிப்பட்டணத்து அரசி தமிழக சிந்தாமணிக்கு இன்னும் திருமணமாகவில்லை. அவள் தனது விடுகதைக்குச் சரியான விடை

அளிக்காத பல அரசர்களை வேலைக்காரர்களாக்கிக் கொண்டிருக்கிறள். இதையறிந்த வீரமாறன் தனது நண்பர்களுடன் கோசாபுரிப்பட்டணம் வந்து தமிழக சிந்தாமணியின் பந்த விடுக்கதைக்கும் சரியான விடையளித்துத் தமிழக சிந்தாமணியைத் திருமணம் செய்து கொள்கிறான். இது அந்த நாடகத்தில் வரும் கதை. இது இயல், இசை இரண்டும் கலந்து வருகின்றது.

தமிழக சிந்தாமணி அரசாண்ட இடம் இன்னும் கோட்டைத் திட்டு என்று அழைக்கப்படுகிறது. அந்த இடத்தில் பலகைக் கல்லில் அழகான தமிழ் எழுத்துக்கள் செதுக்கப்பட்ட ஒரு கல்வெட்டு உள்ளது. நிலத்திற்கு மேல் சுமார் ஆறு அடி உயரம் 2 அடி அகலத்தில் அந்தக் கல்வெட்டு உள்ளது. படிக்க, நல்ல நிலையில் கல்வெட்டு உள்ளது. ஐந்து ஊரும் நகரங்களும் இருந்த இடங்கள் இன்று கிராமங்களாக உள்ளன. சத்தியமங்கலம் மட்டும் நகராட்சியாக விளங்குகிறது. அந்த இடங்களில் புதிமண் நிறைந்து காணப்படுவதால் பழைய வரலாறு உள்ள கிராமங்கள் என்பது தெரிகிறது. இதே சத்தியமங்கலத்தில் கி.பி.1799ல் இறந்த திப்பு சுல்தானின் கோட்டை அழிந்த நிலையில் பவானி ஆற்றங்கரையில் உள்ளது. இந்நகரைச் சுற்றி இன்னும் வர்கள் உள்ளன. அரசி விறகு விற்றுப் பிழைத்தாள் என்பதற்குச் சான்றாக இது உள்ளது.

என்னிடம் உள்ள இந்த ஓலைச்சுவடியும் கோசனத்தில் உள்ள இந்தக் கல்வெட்டும் ஆராய்ச்சிக்குரியவையாகும். இரண்டுக்கும் தொடர்பு உண்டென்பது தெரிகிறது.

கோசனத்திலிருந்து சுமார் பத்துக்கல் தொலையில் அப்பிச்சிமார் மடம் என்ற கோவில் இருக்கிறது. சுற்றிலும் கோட்டைச் சுவர் மாதிரி மண்சுவர் உள்ளது. இதில் அஹிம்சை வழியில் நிற்கும் சில துறவிகள் உள்ளனர். யார் அந்தக் கோவிலுக்குச் சென்றாலும் அன்புகொண்டும் உணவு தயாரிக்கக் கொடுக்கிறனர். இக்கோவில் ஒரு சமணக் கோவிலாக இருந்திருக்கலாம்.

அங்கிருந்து இரண்டுகல் தொலைவில் அரளிமலைக்கோவில் உள்ளது. இது அரைக் கோள வடிவத்தில் அமைந்துள்ளது. ஏறத்தாழ சாஞ்சி ஸ்தூபி போலவே உள்ளது. இது இன்று சிவன் கோயிலாக உள்ளது. இக்கோவிலுக்கு முன்னால் தோரணவாவி என்ற கிராமம் உள்ளது. இது தோரணவாயிலை நினைவூட்டுகிறது. இரு மருங்கிலும்

பி.எம்.குளந்தசாமி.

ராசாவூர், மந்திரியூர் என்ற இரு கிராமங்கள் உள்ளன. இங்கு பண்டைக் காலத்தில் சமணத்துறவிகள் தங்கி வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது.

அருகில் சீனபுரம் என்ற ஊர் உள்ளது. இந்த ஊரில் வாழ்ந்தவர் தான் நன்னூல் ஆசிரியர் பவணந்தி முனிவர். ஆகவே ஈரோடு வட்டத்தில் சீனபுரத்திலிருந்து அரளிமலை வரை சமணத்துறவிகள் வாழ்ந்து சமண சமயத்தைப் பரப்பினர். இன்னும் சிறிது தெற்கில் விஜயமங்கலம் உள்ளது. அங்கு அழகான சமணக்கோயில் ஒன்று உள்ளது. இது அனைவரும் அறிந்த ஒரு செய்தி ஆகும். வரலாற்றாசிரியர்கள் பலர் இதைப் பற்றி பார்த்திருக்கக்கூடும்.

ஆகவே ஈரோடு வட்டத்தில் பல இடங்களும் சமண சமயத்தை வளர்த்தன என்பது நன்கு தெரிகிறது. அப்பிச்சிமார் மடம் பார்க்கவேண்டிய ஒன்று. இது ஆய்வுக்குரிய ஒரு சமணக் கோயில்

*****

## திங்களூர் - அருள்மலை முருகன்
## திருவருள்பெற்ற
## கவிஞர். நஞ்சைய்யன்

புலவர். ஆ. வேலுமணி,
தமிழன் இல்லம்,
கவுண்டம் பாளையம்
அம்மன் கோவில் (அ.நி)
சிவகிரி (வழி) ஈரோடு (வட்)

****

வான் வழங்க பூ மலர்ந்து தேன் சிந்தும் கொங்குதனில், இருபத்து நான்கு நாட்டினுள் தென்குறுப்ப நாடு பெருமை பெற்ற சால் புடைத்ததாகும். மதியூர் சூழ்ந்த தோரணவாவி என்னும் திருத்தலத்தில் தோன்றி, வளர்ந்த பெருமான் முருகன் அருள் பெற்ற அருள் கவிஞர் நஞ்சைய்யன். நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து, வாழ்வு பெற நிற்கும் காலை, தன்னறிவால் கல்வி பெற இயலாமல், அறிவிலியாய்த் திரிந்த மகனுக்கு ஆறுமுகம், கருணையம்மாள் என்ற திருநாமம் கொண்ட பெற்றோர்கள், தங்கள் மகனுக்கு எருமைக்கன்று ஒன்றினை, வாங்கித் தந்து மேய்க்கும்படி செய்வித்தனர். அதனை அவர் அனுதினமும் அருள்மலைக் குன்றிடை மேய்த்து வருங்காலை, சரவணப் பொய்கையிலே, கார்த்திகைப் பெண்களின் முலைப்பாலுண்ட முத்தமிழ் வித்தகனை முருகப் பெருமான், தோரண வாவியிலே, கருணையம்மாளிடம் பாலமுதுண்ட கவிஞர் நஞ்சைய்யனுக்கு, மாடு மேய்க்கும் சிறுவன் வடிவாய் காட்சி தந்து, விளையாடி, எருக்கம் செடியின் இலையில், எருக்கம் பால் கறந்து கொடுத்து, இருவரும் உண்டு மகிழ்ந்து களித்திருந்து, திருமுருகன் பேரருள் பெற்ற ஐயன் நஞ்சைய்யன் அவர்கள், அகர உகர சொற்கள் அறியாது, அருள்மலை முருகனிடம் சென்று பாடுகிறார். உயிருக்கு நிகராய் வளர்த்த எருமைக் கன்று, தொலைவில் *ஓடிவிட, அதனை வரவழைக்க வேண்டி பாடுகிறார்.

" மருமைக் கன்னியின் மகேஸ்வரி மைந்தனே!
பெருமைச் சந்ரம நானுனைப் பாடுவேன்;
அருமைக் கந்த குகா கந்த ஐயனே,
எருமைக் கன்றையே நீ தா வைப்பயே! "

எருமைக் கன்று ஓடிவந்து அருகே நின்றது. முருகப் பெருமானாகிய தாயிடம், நஞ்சைய்யனாகிய கன்று ஓடி வந்து, பாடிக் கதறுகிறது. பேசுகிறது, பெருமை உரைத்துப் பாடுகிறது.

அருணகிரிநாதர் வழியில் சந்தத் திருப்புகழ்.

" அருணகிரிநாதர் சொலும் புகழ் வாழ்த்திடும்" -
- எளியேனே
(அருள் மலைத் திருப்புகழில் )

பன்னீராயிரம் பாடியருளினார். பல சந்தங்களில் பாடிவிட்டு, தனது பெயரை ஒரு திருப்புகழில் வலியுறுத்துகிறார்.

" சென்றருளின்ப முற்றே பனித்துளி,
என்றதிலும் சிறந்தே பெருத்தொடு,
சிந்தையில் வந்து நற்றாய் வயிற்றினில் - உருவாகி

திங்களீரைந்து நின்றுன் வெளிப்பட
வந்திரு கொங்கையில் பால் படித்துயர்
என்றும் குறில் பேலலெடுத்தனர் - கையிலேதான்

நன்றி செய் முருத்தினர் தந்தனர்
என்றுமே நட்பாய் வளர்த்தனர்,
ரம்பு வருந்தி மெய்ப் பார்வையுற்றனர் - அதனாலே

நன்பு சதங்கை மெய்க்கரையிட்டனர்
தண்டை விளங்க கைக்கே தரித்தனர்
நஞ்சையையன் என்றெனைப் பேருமிட்டனர் - மனதாக "

(அருள் மலைத் திருப்புகழில் ஒரு பகுதி)

(ஆதாரம் - ஏட்டுப்பிரதி)

பன்னீராயிரம் திருப்புகழில் ஏட்டுப் பிரதியிலிருந்து, எமக்குக் கிடைத்த சந்தத் திருப்புகழ் நூறு பாடலாகும். (ஆதாரம் - ஏட்டுப்பிரதி). அதன் பிறகு, அப்பிச்சிமார் மடம் - திங்களூர் (மதியூர்) - தெய்வங்கள் மீது நூற்றுக்கணக்கான பாடல்களைப் பாடி, மேல் கரை அரைய நாட்டில் தலைய நல்லூர் என்னும் தலைசயம்பதிக்கு ஸ்ரீ கவிஞர் நஞ்சையையன் வந்து சேர்கிறார். இறைவி பொன் காளியம்மன் திருக்கோயில் கொண்டு, எழுந்தருளி, சுற்றிலும் கள்ளிச் செடிகள் சூழ வீற்றிருக்கிறாள். கோயிலுக்கு சற்று தொலைவில், தலையநல்லூர் - கோட்டைமேடு (புதைபொருள் ஆய்விடம்) கருப்பணன் என்பான் ஆட்சிபுரிகிறான். (வண்ண ஆரக் கருப்பண்ணன்) (ஆதாரம் - ஏட்டுப்பிரதி) நஞ்சையையனை [illegible] [illegible] கொடிய நாகம் தீண்ட, திருவெண்ணீறு மருந்தாக்கி, வழிபடுகிறார். ஆட்சிப் பொறுப்புடைய கருப்பண்ணன் நஞ்சையையன் சிறப்பை அறிந்து, காய்ந்து, கிடக்கின்ற அப்பகுதியில் மழை பெய்விக்க வேண்டி நிற்கிறான். அதோ. அருள் கவிஞர் நஞ்சையையனின் நாவிலே பாமழை; இதோ தலைசயம் பதியின் மண் மகள் குளிர வான் மழை;

...3

"தந்தைக்குதவும் மைந்தன்
இன்பத்தில் உடன் உளது
தந்தைக்கு எரு குரிசிலே
இந்துக்கள் எளிய மொழி
கண்டுற்ற மகிமைபுரி
இன்றைக்கு மழை பொழியவே
சொந்தத்தில் உலகமது
நன்புற்ற அறிவினொடு
துக்கத்தில் உலை நிளையவே
மைந்தர்க்கு மனம் மகிழ
உறுகுற்ற சிவகிரியில்
வந்துற்ற குமரகுருவே"

விடாது மழை பொழிகிறது. காவலன் மறுமொழி புகல்கிறான். உன் அருள் கவியால் பெய்வித்த இம்மா மழையை நிறுத்திக் காட்டுக, என்க கூற அவ்வாறே,

"வெட்டாப்பூக் காட்டியே மாதர்கள் அபிநாளும்
கட்டாப்பூக் காட்டிய காந்தி நெருந்த
நெட்டாப்பூக் காட்டி வானின் கருக்களை நீக்கி
செட்டாப்பூக் காட்டையா பொன் அருள் மாமலை
- வேலனே!"

என்று பாட, மழை ஓய்ந்தது. மனம் ஓயவில்லை. பரிசில் தர விழைந்தேன். மறுத்து மண்ணைக் காட்டினார்; இனம் பூமி வழங்கப்பட்டது. (பூமி கல்வெட்டு) சிவகிரி முருகன் மீது திருப்புகழும், ஒற்ற கல் சந்தத் திருப்புகழ் ஆறும், விருத்தம் மற்றும் பிள்ளைத் தமிழ் பாடி அருளினார் (ஆதாரம் - ஏட்டுப்பிரதி). சென்னிமலை முருகன் மீது, திருவாசக முறையில், காட்சிப்பத்து, தெரிசனைப் பத்து, அருள் பத்து போன்றும் வள்ளியம்மன் மீதும் பாடல்கள் பாடியருளினார். (ஆதாரம் - ஏட்டுப்பிரதி). பவானி அம்மன் - அந்தியூர் குருநாத சுவாமி - எழுமாத்தூர் குலவிளக்கு - இளையபெருமாள் மலை - வெங்கரையம்மன் வகுப்பு - பொன்காளி அம்மன் வகுப்பு (ஒரு பாடலில் ஈடு சந்தங்கள் மெய்சிலிர்க்க வைக்கும் பாடல்கள்) இதுபோல் திருச்செங்கோடு - மோளிப்பள்ளி - காளிபட்டி - ஏழூர் - நைனாமலை - போன்ற இடங்களுடன், கொங்கு நாட்டில் பல தெய்வங்கள் மீது (இன்னும் ஏட்டுப் பிரதி ஆய்வு நடத்துகிறேன்) பல ஆயிரக்கணக்கான பாடல்களையும் - அற்புதங்களையும் நிகழ்த்தியுள்ளார். தெய்வத் திருவருள் பெற்று கொங்கு நாட்டிலே தோன்றிய மாமணி நஞ்சையையன் அன்னவரின் நேரடி வழியினர் கோவை மாவட்டம், ஈரோடு வட்டம், சிவகிரி - கவுண்டம் பாளையத்தில் வசிக்கிறார்கள். (இதன் ஆசிரியர் உட்பட). ஆயிரக்கணக்கான பாடல்களை படியெடுத்துள்ளார்.

நஞ்சையன் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பூமியே இவர்கள் அனுபவித்து வருவது. தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் அவர்கள் 1939-ம் ஆண்டு இவர்கள் வீட்டிற்கு வருகை தந்து, சில பல ஏட்டுப் பிரதிகளை எடுத்துச் சென்றுள்ளார்கள். (ஆய்வு - பழைய கோட்டை). கோயில் தெய்வ மணம் பரப்ப ஒரு கவிஞன் குறுப்பு நாட்டில் உருவாகி அரைய நாட்டில் நிலையாகி இருபத்து நான்கு நாட்டிடை உலா வந்த பெருமை முருகனருள் கவிஞர் நஞ்சையனுக்கே உரித்தாகும்.

தஞ்சி-வ-பி- ********

நலம் வாழ்! புகழ் வாழ்!

# SOMEKREMINISCENCES OF THE BRITISH RULE IN COIMBATORE (1799-1900)

(P.C.Chinnian,M.A.,
Asst. Prof. of History,
Sri.Vasavai College,
Erode.

**

## Introduction:

### Coimbatore District, a part of "Kongu Country"

The Kongu country extended from Talaimalai in the north to Palani Hills in the South and from Vellimalai in the west to Kulithalai in the east. Kongu country remained a separate state from the early part of the Christian Era, but its size varied according to the invasions and conquests made in the later years. It comprised of the modern Coimbatore District, Omalur, Salem, Tiruchengode, Namakkal, Karur, a part of Kulithalai Taluk and portions of Dindigul and Palani Taluks of the Madurai District. "Kongu Country" was established by the Kongas, who were pastural Tribe emerged from the uplands of "Kodagu" or "Coorg". They moved towards the south in search of new pastural lands. In Silappathikaram, they were referred to as "Kodagu Kongar". They moved to the region of modern Coimbatore and Salem. As mentioned in the Sangam Literature, people who inhabited this region belonged to different groups as Vedas, Eyinars etc. There is evidence to show that three great tribes known as the Malavar, the Kosar, the Kongar.

These tribes had their own kings. The kings possessed armies of corps horses, elephants, and charists. They not only fought with one another but also with the Charas and the Pandyas. The main occupation of the people was agriculture. During the first three centuries

of the Christian Era a brisk trade was carried on between Kongu and Rome, Egypt and Greece. A large number of Roman coins have been unearthed in Coimbatore District. During the 3rd century the whole of the Kongu country came under the control of the Rastragutas. From 405 AD to 870 AD. the country was ruled by the Ganga Dynasty. The rule of the Ganga Dynasty lasted about 500 years. After them the country passed under the control of the Cholas. The Chola viceroys ruled the parts of the country. The rule of the Chola Viceroys lasted till 1275 A.D. During the Chola rule a strong administration was set up. Trade and Industry were developed. From the last quarter of the 13th century to the half of the 14th century the country was passed into the hands of the Pandyas, the Hoysalas and the Cheras. These rulers divided the country and ruled through Viceroys.

Early Muslim invasion was made by Alland-in-Khilji's general Malik Kafur. After the muslim invasion, the Pandya Kings started civil wars inviting fresh dangers. Under this circumstances, the Cheras conquered the Pandyas and the Kongu country came under the Cholas. During the Medieval period the Kongu country was ruled by the Vijaya nagar Empire. The country became a part of the Madurai country, and was ruled by the Nayaks of Madurai, the vassels of Vijayanagar Emperors. Kongu was under the Nayaks from 1530 AD to about 1700 AD. The Nayak rulers established on efficient administration in the country. The country was annexed gradually to Mysore Kingom during the period of 1714-1732. In 1759, "Hyder Ali" the Punjabi Military Officer in the Mysore Army was sent to Coimbatore to collect the revenues of Kongu country. In 1760, he was kept in Coimbatore in complete charge of administration of the district. Only from here, Hyder became the ruler of Mysore, when the

King of Mysore Nanja Rajiah died in 1761.

BRITISH RULE:

Economic and Social Condition:

After the Tipu Sultan at Srirangapatna, Lord Wellesley made a series of political arrangements. Tippu's sons and dependents were pensioned off. The Hindu King Krishna Raja Wodeiyar was placed on the throne of Mysore. Mysore kingdom was more reduced in area and the rest of the territories were taken by the British and the Nizam. Coimbatore and Salem, the Kongu country came under the British rule in 1799 AD.

Coimbatore district is well placed in the field of agriculture. Various food crops and commercial crops were grown in the district. From the earliest time, the main occupation of the people is agriculture. Only during the present century Coimbatore became an industrical district. During the British rule the district remained simple as an agricultural district. There was no much importance to this district. The general condition of the people was very poor. The district was reduced to a state that a rich farmer was nowhere to be found. The farmers were composed of three dases. The first contains the small number of those who are able to give their lands the highest degree of cultivation. The second contains those who can give them sufficient to produce an ordinary or moderate crops. The third, which is numerous, as the second, contains those who from want of cattle, cannot half plough their lands and never manure or weed them at all. It is among this last class that failures generally happen, many of them have not a single bullock, but borrow or hire a pair for a short time during the ploughing season. As a result a general level of poverty prevailed among the peasants. Many of

the farmers sink to the level of agricultural labourers. After the deep study of the social and economic condition of the people, Munro suggested that a lighter level of assessment alone would improve the condition of the people. The famous Collectors Mr.Macbeod and Mr.Hudis introduced the Ryotwari system in Coimbatore. The surveys were conducted and the lands were classes according to their productive powers. Frequent failures of seasons and the wide-spread of epidemic diseases paralysed the general condition of the people. In 1807 village settlement system was adopted. Under this system the assessment on each village was fixed for a period of three years. Socail and religious customs of the people have remained the same through centuries.

Local Administration

Local Administration in the district begam in 1863 when the education cess act and the district road cess Act III of 1866 were passed. The scope of the local adminstration was expanded after 1865 when the towns Improvement Act X and Local Funds Act IV of 1871 were passed. The Municipalities and the local boards were created. The local Boards Act of 1871 divided the whole state into a number of circles and a local fund board was created for each circle. This local fund board was consisted of 3 or more non-official members nominated by the Government, and an equal muber of members appointed by the Government. The term of office to the members to be three years. The Collector of the district was made ex-officio president of the each board.

The district was divided into two circles namely the northern and the southern circles. The northern circle consisted of the Coimbatore, Perundurai, Pollachi, Bharani, Satyamangalam and Kollegal. The southern circle comprbsed of the Karur, Palladam, Dharapuram, and Udamalpet divisions. In each of these circles a local fund board

was constituted consisting of official and non-official members. The Board was presided over by the Collector of Sub-Collector. In 1872, boths these circles were amalgamated and a single Local Fund Board was constituted consisting of 17 official and 17 non-official members. The tax amount collected was spent on roads, schools, hospitals, dispensaries, sanitation vaccination, markets, choultries, and travellers' Bungalows. In subsequent years local self Govt. gradually gathered momements and made steady progress. According to the local boards Act V of 1884 the control over the local boards was assumed by the Govt. and the administration of local arrairs was rested in a single district board constituted for each revenue district. The Revenue Divisional Officers were made ex-officio members. Under this new act the local boards were empowered to levy with the approval of the Govt. any of the taxes authorised by the Act. Under this new Act, the President of the district Board might be elected from among the members of the District Board if the Governemt so directed. The Taluk Boards were formed for each taluk or group of taluks consisting of a president with not less t an 12 members. The revenues of the dist. board and the taluk boards were divided from tax not exceeding two annas in the Rupee on the annual rent value of all occupied lands, from tolls, from fees for the use of cart stand, markets etc. The duties and responsibilities of these boards were the maintenance of roads, bridges, and other means of communications, the maintenance of hospitals, education, sanitation, and public health and relief works in times of famine and Scarcity.

In 1895, the Coimbatore taluk baorad was created. In 1910, the Coimbatore taluk Board was bifurcated into the Coimbatore and Gobi Taluk Boards. Around 1900

A.D., the demand for Local self Govt. was made by the people and political agitation had come.

Revenue Administration

Local Revenue Administration in Coimbatore begam with the acquisition of the district from Tipu by the east India company in 1799. The district was divided into two classes. The Northern taluks, Erode, Bhavani, Gobi, Coimbatore, the Nilgiri Hills, Avanashi, a part of Palladam and Kollegal were placed under Mr. Macleod. The rest of Palladam, Karur, Dharapuram, Udamalpet and Pollachi were separated and placed under Mr.Hurdis. In 1868, the Nilgiris were separated. In 1910, Karur was transferred to Trichy Dist. In 1956, Kollegal was added to the Mysore state. In the begining, Ryotwaris system was introduced. In 1807 the village system was introduced. Under this system, the whole country was divided into villages with generally fixed boundaries. It was a familiar system to the people. The assessment on each village was fixed for a period of three years with reference to the accouns of cultivation and the assessment and actual collection of past years. In villages suffering under adverse seasons or other drawbacks, a progressive rent was fixed or base was deferred for a term of one year. Ordinary repairs were to be done by the ryots but the repairs of magnitude or new works it was declared to be ~~done by the ryots but the repairs of magnitude of new work it was declared~~ undertaken by the Govt. The ryots were held jointly responsible for the assessment and pattas were to be issued by them to the tenants. The village bases, had failed because of unfavourable seasons, the low price of grain etc. In 1815 a special commission consisting of Mr. Munro and Mr.Sullivan exposed a series of abuses committed in Coimbatore dist. by the subordinate revenue officers. As soon as Mr.Sullivan took charge of the dist. from Mr. Garrow, he cancelled all the village leases on the gound of

universal trand and re-introduced the Ryotwari system. From that date the Ryotwari system continued in the Coimbatore dist. with many modifications from time to time. From 1815, to 1878 modern Ryotwari system was introduced. During this period the Pakkat system, the Garden Assessments. The second crop assessment. The takavi and the Dittam systems etc. were introduced.

Law and Order

In 1802, the Cornwallis system was introduced into Madras State. Under this system a series of Regulations were passed for establishing a hierarchy of civil x and criminal courts and for defining their powers. There was the "Sadr" and "Fanidari Adalat" having jurisdiction over a group of districts and below these courts, the Xillah courts existed. The higher courts had both civil and criminal jurisdiction. The Sadr Adalat was so called when it sat as a Civil court, but when it sat as a criminal court it was called the Fanidari Adalat, Similarly the provincial court was so called when it sat as a civil court but when it as a criminal court it was called t e court of circuit. The Xillah court was bot a civil and a Magisterial court. Cornwallis system underwent many changes afterwards. According to the recommendations of Sri.Thomas Munro, the Magisterial powers and the control of the police were transferred from the Zillah Judges to the Collector. In 1843, the provincial and circuit courts were abolished and their powers were vested in a new Xillah Judge called the civil and sessions Judge. In 1862, the Sadr and Fanjdari Adalat as well as the Supreme court were abolished and their powers were transferred to the "High Court ".

From 1799 to 1806 the Collector of Coimbatore administered Civil as well as criminal justice and

controlled the police assisted by his revenue subordinates. In 1806 the Cornwallis code was introduced in the District. These duties were transferred to the Zillah Judge, whose xourt was established at Dharapuram. The Zillah Judge came under the control of the provincial and circuit court of the southern division which then had its headquarters at Trichy. The village Munisifs and the Village Panchayas have all along continued to exercise petty civil powers. In 1806 the old village police system was abolished and the "Tana" or "Station" system was introduced. The whole Zillah was divided into Superintendencies in charge of Darogahs. Each Superintendency was divided into Holslives in charge of Hobbidars or Duffadars and each Duffadars and each hobby was divided into Tanahs or Police stations in charge of Tanahdars. The Zillah Judge was responsible for the maintenance of public peace. The police reforms were introduced in all districts in 1816. The control of police was passed from the Zillah Judge to the Collector. The changes in the Police system were found to be inadequate The Collector Magistrate was burdened with morework. The Talayaries who were backbones of the Police system were never properly paid. In 1859, the Police system was reorganised and made into a separate department. Inspector-General of Police was appointed as the Head of the Departmentx and under him 5 Deputy Inspectors General in-charge of a group of districts and district Superintendent of Police in charge of a district were appointed. Each Superintendent of Police was provided with a separate Police staff of Inspectors, Constables and village police. In 1860, one Superintendent, 24 Inspectors, 1074 Constables, 275 Village Inspectors, 1947 village Talayaris were provided in Coimbatore dist. Separate Police establishments were stationed in the towns of Coimbatore, OOty, and Wellington. Separate Police establish.

ments were also provided for jails, treasureis and courts. Some parties were kept as Reserve Police. These changes remained the same in essentials to this day. In 1868, the Central Jail in Coimbatore was constructed at a total cost of Rs.3,42,690. Mr.Grunies was the first Superintendent of the Jail. It was constructed in the North-Eastern Part (in those days) of Coimbatore Town covering about 204 acres.

## Education

In the early period of the British rule education was in the hands of the people. In 1813, the British Parliament sanctioned a lakh of rupees for encouraging education in India. In 1822, Sir.Thomas Munro started a state wide educational enquiry in Madras. The early schools were nothing more than Pial Schools and Colleges no other than Sanskrit and Tamil Veda Patasalas. The pupils were taught reading, writing, and arithmatics. The popular books like Ramayana and Mahabaratha were read. The pupils entered at 5 and studied till the age of 13 or 14. The fees were collected from Rs.3 to 114 per annum. According to the plan proposed by Monro's enquiry Commission, in every Collectorate there were to be collectorate schools. One for the Hindus and the other for the Muslims. A school was established for training of theteachers. A board of Public Instruction was created in Madras for Supervising the schools. The school Book Society was formed to translate good books into Indian languages. The famous minutes of Lord Macaulay of 1835 observed that the great object of the British Govt. ought to be the promotion of European literature and science. All funds for the purpose of education was best spent on Education through

English medium. As a result the Collectorate and Thashildary schools in Coimbatore were abolished in 1836. Committee of Native Education was created and it was directed to organise a normal school for Training teachers for the new English Schools. The Committee of Native Education was shortly afterwards replaced by the University Board constituted in 1840 by Elphinstone for governing an institution to be styled as the Madras University. The University was to consist of a High School and a College.

In 1854, the theory of Mass Education was established. In August 1852, Mr.E.B.Thomas, the then Collector, established the Anglo-Vernacular School at Coimbatore. In 1858, a normal and a taluk school were opened at Cheyur which was then a taluk headquarters. The curriculam consisted of a grammatical study of English and Tamil, Arithmatics, Geoggaphy, History, Geometry etc. was provided. In April 1859, one taluk school was opened at Pollachi. In the same year taluk schools were opened at Udamal Cottai (Udamalpet) and at Dharapuram. In 1860, three more schools were opened at Anamalai Erode and Satyamangalm. In 1868 the London Mission opened two Anglo-Vernacular schools, one at Coimbatore and the other at Mettupa layam. In the meantime, several other Missionary and private schools also came to be aided by the Govt. During 1867-68, the Coimbatore Anglo-Vernacular school sent up candidates for the first time for the Matriculation examination.

In 1868-69, the Anglo -Vernacular School at Coimbatore was raised to the tank of a second grade college. In 1947-48 the degree classes were opened. In 1891 the Romal Catholic High School at Coimbatore was made a second grade college under the name of St.Michaels' College. In 1907, the F.A. classes were abolished and since then the institution continued to be

Michale's High school. In 1947, the P.S.G.Arts College was opened. In 1887 the Mahajana College, Erode was opened. In 1948, the first women college known as the "Nirmala College was established in Coimbatore town. Since 1948 large number of schools and college were opened in the district and have been imparting good education.

To 'Conclude' this paper, there must be special mention to be made about the beautiful town "Coimbatore" which is popularly known as the "Poorman's Oty" for its pleasant climate. Coimbatore is a town of importance and antiquity. It was formerly a great strategical importance. It originally formed a part of the Chera Kingdom but was captued by the Nayaks of Madurai. Later it fell into the hands of the rulers of Mysore. During the war with Hyder Ali and Tipu Sultan it changed hands many times. In 1768 the British took it and loss it. In 1783, it was recaptured and was lost. In 1790, it was again captured a third time but tipu after a siege of fivemonths compelled the British to surrender it. In 1799, finally it came under the control of the British after the final defeat of Tipu at Srirangapatnam. From that time it ceased to be amilitary station.

Hyder and Tipu frequently stayed here occupying a palace situated the street now known as Madaraja Mahal street. This Madaraja or Madayya is said to have been a local chief under the Mysore King Chikka Deva Raya. Sir.Thomas Munro owned a garden with a tank in the same street. This garden ~~withxaxtankxix~~ was presented to Govinda Rao by Munro. There was a fort in the town but the same was destoryed during the wars. The site of the fort continues to be known as Kotta-medu. A mosque which stands near the temple of Koni-

Amman is believed to have been built at the time of Tipu.

--

Bibliography:


1. "The Kongu Country - By M.Arokyasamy, 1956.
2. History of the Nayaks at Madurai - By R.Satyanatha Iyer 1924.
3. The Nayaks of Tanjore-By.V.Vridhagirison 1949.
4. Madras Dist. Gazettees, 1966 Coimbatore.
5. Madras Dist.Gazetteers, Salem.
6. 'Studies in Madras Administration - By.B.S.Baliga Vol.II.1949.
7. Manual of Coimbatore Dist. - Vol.II.
8. Manual of Madras Administration by Vol.I.1885 C.D. Maclean.
9. Manual of the Coimbatore Dist. By F.A.Nicholson 1887.
10. Madras Presidency 188-1931 - By.G.T.Biag 1933.


--

# கோவை மாவட்டமும் தமிழ்நூல்களும்

(புலவர். செ. இராசு, பி.லிட்.,
ஈரோடு).

எண்ணிறந்த தமிழ்நூல் தொகுதிக்குள்ளே கோவை மாவட்டம் கொடையாக அளித்தவை எவை என ஓரளவு தொகுத்தளிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**சங்க இலக்கியத்தில் கோவை. (1) புலவர்கள்:**

அந்திஇளங்கீரனார், உரோடகத்துக் கந்தரத்தனார், ஆவூர் கௌதமன் சாதேவனார், பொன்முடியார், பெருந்தலைச் சாத்தனார், ஆவூர் மூலங்கிழார் ஆகிய சங்கப் புலவர்கள் கோவை மாவட்டத்தினர்.

**2. ஊர்கள்:**

வாகைப் பெருந்துறை (பெருந்துறை) அவினி (அவிநாசி) பேரூர் முன்துறை (பேரூர்) அன்னி (அன்னூர்) வெள்ளியம் (வெள்ளியம்பதி) திருப்போர்-புறம் (திருப்பூர்) கழுமலம் (கொழுமம்) கொடுமணம் (கொடுமணல்) அரையம் (அரையநாடு) உம்பற்காடு (யானைமலை) ஆகிய ஊர்கள் சங்க இலக்கியங்களில் குறிக்கப்பெறும் கோவை மாவட்டத்து ஊர்களாகும்.

**3. வேளிர்கள்:**

குமணன், புன்துறை, கொடுமுடி, பிட்டங் கொற்றன், பழையன், கலையன், நன்னன் எற்றை, கோசர், அகுதை ஆகிய குறுநில மன்னர்கள் சங்க காலத்தில் கோவை மாவட்டப் பகுதியில் வாழ்ந்தவர்களே!

**4. மலைகள்:**

செல்லிக்கோடு (செல்லிமலை) நன்றா (நணா-ஊராட்சிக் கோட்டைமலை) உதியம் (ஊதிமலை) குறும்பொறை (குட்டிக்கரடு) நாகம் (நாகமலை-அறச்சலூர்) குதிரைமலை, முதிரம் (குதிரைமலை) ஆகிய சங்க இலக்கியம் கூறும் மலைகள், கோவை மாவட்டத்து மலைகளே.

**5. ஆறுகள்:**

காவிரியும், வானியும் (பவானி) காஞ்சியும் (நொய்யல்) ஆன்பொருநையும் (அமராவதி) சங்க இலக்கியம் புகழும் கோவை மாவட்ட ஆறுகளாம்.

**தமிழ்ச்சங்கங்கள்:**

கோவை மாவட்டத்தில் விசயமங்கலம், களந்தை, கவசை, (கோயில்பாளையம்) காடையூர் போன்ற இடங்களில் பிற்காலத்

தமிழ்ச்சங்கம் இருந்தமை பல இலக்கியங்களில் சுட்டிக்கூறப்பெற்றுள்ளது. விசயமங்கலத்தில் சங்கப்புலவர்கள் சிலைகள் உள்ளன. கொங்கு வேளிரும், பவணந்தியும் சிலைவடிவில் உள்ளனர். விசயமங்கலம் "தமிழ் மங்கை", "செந்தமிழ் மங்கை" எனப்பட்டது. புலமைப் போட்டிகள் பல நடைபெற்றன. பாண்டிய நாட்டுத் தோயனும், படிக்காசுப் புல-வரும் கோவைப் புலவரிடம் தோற்று ஓடினர் என்று பாடல்கள் கூறும். கம்பர் வாரிசுகள் பல்லாயிரவர் இருந்ததாகக் கொங்கு மண்டல சதகம் புகழ்ந்து கூறும்.

வேளாள குலத்தலைவர்களும், புலவர்களும்:

கொங்கு வேளாள குலத்தலைவர்களில் சர்க்கரை மன்றாடியார் மசக்காளி மன்றாடியார், வாணவராயர், பல்லவராயர், காடையூர் மன்றாடியார், உலகில் மன்றாடியார், வேணாவுடையார், வாரணவாசி மன்ற-டியார், செங்கண்ணன் ஆகியோர் புலவர்களை ஆதரித்த புரவலராக விளங்கினர். கொடை அளித்தமையோடு புலவர்களிடம் மிகவும் மதிப்பும் வைத்திருந்தனர். புலவர் தாம் முதலில் ஏற ஒருவள்ளல் பொறுத்தார். ஒலி முதலில் புலவருக்கு ஒருவள்ளல் சோறிட்டான். புலவர் சவுக்கால், அடிக்கவும், மடியைப் பிடித்திழுக்கவும், விலை கூறவும் பொறுமையாக இருந்தனர். புலவர்க்கு அடிமையாயினர். பல்லக்கும் சுமந்தனர். முளைவாரி அன்னமிட்டதுடன், தாலியையும் புலவர்க்கு ஈந்தனர். அதனால் புலவர்கள் கவலையற்று வாழ்ந்து பாடல் இயற்றினர். தமிழ் வளர்ந்தது.

சமணர் தமிழ்த்தொண்டு:

கங்க மன்னர்கள் ஆதரவுடன் கோவை மாவட்டத்தில் வாழ்ந்த சமணர்கள் இலக்கிய, இலக்கணத் தொண்டுகள் பல செய்தனர். கி.பி. 7-ம் நூற்றாண்டில் கொங்கு வேளிர் விசயமங்கலத்தில் பெருங்-கதையை எழுதினர். வச்சணந்தி மாலை என்னும் வெண்பாப் பாட்டியலையும், நேமிநாதத்தையும் இயற்றிய குணவீரபண்டிதர் களந்தையில் வாழ்ந்தவர். அவரது ஆசான் வச்சணந்தி முனிவரும் களந்தைப் புலவரே!1

வன்னபருவத்தில் பொய்யாமொழி அரசனால் பாராட்டப் பெற்ற திருத்தக்கத்தேவர் கோவை மாவட்டத்துச் சோழியக்குடியைச் சார்ந்தவர். நன்னூலாசிரியர் பவணந்தி ஈரோடு தாலுக்கா சீனாபுரத்தைச் சேர்ந்தவர். முத்தமிழ்க் காப்பியமான சிலப்பதி-காரத்திற்கு உரை இயற்றிய அடியார்க்கு நல்லார் விசயமங்கலத்திற்கு

அண்மையில் இருந்த நிரம்பை எல்லம் ஊரினர். கொங்கு மண்டல சதகத்தில் ஒன்றைப் பாடிய கார்மேகக் கவிஞர் விசயமங்கலத்துச் சமணரான ஜினேந்திரர் ஆவார்.

## சைவ இலக்கியங்களில் கோவை:

கொங்கில் தேவாரப் பாடல் பெற்ற 7 தலங்களில் நான்கு கோவை மாவட்டத்தில் உள்ளன. கொடுமுடி, பவானி, திருமுருகன் பூண்டி, அவிநாசி ஆகியன அவை. தேவார வைப்புத் தலங்களில் பேரூர், அன்னியூர், சேவூர், குரக்குத்தளி, பூந்துறை, மூலனூர் ஆகியவை கோவை மாவட்டத்து ஊர்கள். திருவிசைப்பாத்தலம் களந்தை ஆகும். மணிவாசகர் குறிக்கும் ஊர்களில் கொடுமுடி, அவிநாசி, மொக்கணீச்சுரம் ஆகியவை கோவை மாவட்டத்து ஊர்களே! அருணகிரிநாதர் ஒரு முறை கோவை மாவட்டப் பகுதிக்கு வந்து ஊதிமலை, தென்சேரிகிரி, சேவூர், கொடுமுடி, விசயமங்கலம், காங்கேயம், பட்டாலி, பவானி, திருமுருகன்பூண்டி, அவிநாசி, பேரூர், சென்னிமலை, சிவன்மலை, கதித்தமலை, கனகமலை ஆகிய ஊர்களில் அந்தப்பாடல் பாடினார்.

சித்தர்களில் பாம்பாட்டிச்சித்தர் மருதமலையையும், இடைஞானியார் தென்கரை நாட்டுக் கொற்றனூரையும், கொங்கணர் ஊதியூர் மலையையும் சார்ந்து வசித்ததாகத் தெரிகிறது.

## வைணவத் தொடர்பிலக்கியங்கள்:

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் 'கொங்கர்' குறிக்கப்பெறுகிறது. இராமானுஜர் தங்கியிருந்த கொங்கு-பிராட்டியார் கோவை மாவட்டத்தினரே என்பது ஆய்வுக்குரியது. வேதாந்த தேசிகர் பவானியின் வடக்கே வடகரை நாட்டில் வாழ்ந்தார். அங்கிருந்தே 'பரமபதபங்கம்' என்ற நூலைப் பாடினார். இராமானுஜரின் ஸ்ரீபாஷ்யத்திற்கு அவர் எழுதிய 'ஸ்ருத பிரகாசிகை' என்ற உரையை முஸ்லீம் படையெடுப்பிற்கு அஞ்சி கி.பி.1327-ல் கோவை மாவட்டப் பவானிக்கரை சத்தியமங்கலத்தில் மறைத்து வைத்திருந்தார் என்பர்.

கோவை மாவட்டத்தில் காரமடை அரங்கநாதர் சந்நிதி புகழ்பெற்றது. கரடிவாவி இராமானுஜ நாவலர் காரமடைப் புராணம் பாடியுள்ளார். நடுப்பட்டி வெங்கடரமண ஐயங்கார் 16 வைணவ நூல்கள் எழுதியுள்ளார். சீழ்க்கண்ட நூல்கள் கோவையில் வெளியிட்ட வைணவ நூல்கள்.

| ஆசிரியர் | நூல் |
|---|---|
| வெங்கட்டராயலுநாயுடு | திருமால் திருச்சந்நிதி முறையீட்டு வருக்கக் கோவை (1890) |
| சுந்தரராசக் கவிராயர் | இரணியாசுரன் கதை (1890) |
| பகடால நரசிம்மலு நாயுடு | உத்தர மதுரா கோகுலம் கோவர்த்தன பிருந்தாவன மகத்துவம் (1880) |
| கோவை. கோவிந்தசாமி முதலியார் | தசாவதாரத் திருவிளையாடல் (1882) |
| கோவை கோவிந்தசாமி முதலியார் | கிருஷ்ணலாலி (1885) |
| வெங்கடராம நாயக்கர் | கிருஷ்ணநாடகம் (1890) |

திருமடங்களும் தமிழும்:

பேரூரில் முக்கியமான தவத்திரு சாந்தலிங்க சுவாமிகள் அவிரோத உந்தியார், கொலை மறுத்தல், வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம் ஆகிய நான்கு நூல்களை எழுதினார். அவை வீர சைவ நூல்களாகும். சிரவணம்பட்டி கௌமார ஆதீனத் தலைவராக விளங்கியவர்கள் சிறந்த தமிழ் நூல்களை இயற்றினார்கள். அவ்வகையுள் தவத்திரு கந்தசாமி சுவாமிகள் மிகச் சிறந்த புலவர். அவ்வூர்த்தலபுராணம், கௌசைப் புராணம் உட்பட 66 நூல்களை இயற்றினார் என்பர். [illegible]ளம்பட்டி மணிவாசகர் திருமத்திடம் பல புலவர் தங்கிப் பாடல்கள் இயற்றினர்.

கல்வெட்டுக்களில் இலக்கியம்:

பேரூர்க் கல்வெட்டிலும் வேறு சில ஊர்களிலும் 'பாரதப்புரம்' 'திருப்பதியம் பாடுதல்' 'திருப்பள்ளி எழுச்சி' என்ற தொடர்களைக் காணுகின்றோம். பிடாரியூர், குன்னத்தூர், பழமங்கலம், வெள்ளோடு, கண்டக்காமுத்தூர் ஆகிய இடங்களில் அழகிய வெண்பாக்களைக் கல்வெட்டில் காணுகின்றோம். வெள்ளோடு கல்வெட்டில் அழைப்பிச்சான் கலம்பகம் என ஒரு இலக்கியம் வருகிறது.

கலைத்தொடர்பு நூல்கள்:

கி.பி.17-ஆம் நூற்றாண்டில் அறம்வளர்த்தான் என்ற நாட்டியப்புலவர் 'பரத சங்கிரகம்' என்ற இசை நாட்டிய நூலைச் செய்தார். கோவை மாவட்டத்து அடியார்க்கு நல்லார் உரையே இசை, நாடகத்தமிழினைக் காத்து வருகிறது. அண்மையில் பொள்ளாச்சி வள்ளல் நா. மகாலிங்கம் அவர்கள் உதவியால் பெரும்புலவர். அமரர். வே. ரா. தெய்வசிகாமணிக்கவுண்டர் வெளியிட்ட சங்க கால இசை நூலாம்

"பஞ்சமரபு" தாராபுரம் தாசை, க்காவிலேயே கிடைத்தது. அதன் உரையாசிரியரும் அப்பகுதியிரே! கோவையில் 1886-ஆம் ஆண்டு பத்மநாபாச்சாரியார் 'மெய்ஞ்ஞான கீத ரசம்' என்ற நூலையும், 1887-ல் நாககப்ப கவுண்டர் 'பஞ்சரத்தினப் பத ஜாவளி' என்ற நூலையும் 1894-ல் நித்தியானந்த சுவாமிகள் சுப்பிரமணியர் பஞ்சதசக் கீர்த்தனையையும், 1885-ல் காளிந்தி தாசர் இயற்றிய சபா சங்கீத கீதம் என்ற நூலைப் பிறகு இருஞ்சையரும் வெளியிட்டனர்

__வேளாண்மை, மருத்துவ நூல்கள்:__

கோவை கு. அண்ணுசாமி முதலியார் 100 ஆண்டுகட்கு முன் 'புலிப்பாணி வைத்தியம்-500' என்ற நூலை வெளியிட்டார். 1892-ஆம் ஆண்டு ஈரோட்டில் ஒட்டியம், சல்லியம் என்ற மருத்துவ நூல்களை உலகநாதபிள்ளையும், அர்த்தபளி முதலியாரும் வெளியிட்டனர். 1900-ஆம் ஆண்டு பகடால நரசிம்மலு நாயுடு விவசாயம் அல்லது கிருஷி சாஸ்திர சார சங்கிரகம் என்ற நூலை வெளியிட்டார்.

__நீதி இலக்கியம்:__

1885-ஆம் ஆண்டு 'நீதி அம்பலக்கும்மி'யும், நீதி நெறி விளக்கக் கீர்த்தனையும் வெளியிடப் பெற்றன. 1894-ல் கோவை ஈஸ்வர ஐயர் ஆத்திசூடிக்கு விளக்கவுரை எழுதிவெளியிட்டார். 1900-ல் ஞானரத்தினக் களஞ்சியமும், பகடால நரசிம்மலு நாயுடுவால் கோயமுத்தார் 'கற்ற காரிகையர்க்கான நீதிச் செய்யுள்' என்ற நூலும் வெளிவந்தன. பவானி வேதநாயகியம்மன் நீதிச் சதகம், நத்தக்காரியூர் நல்லமங்கையம்மன் சதகம் ஆகியவை சிறந்த நீதி நூலவை.

__வரலாறு பூகோள நூல்கள்:__

கார்மேகக் கவிஞர், வாலசுப்பக் கவிராயர், கம்பநாதசுவாமி ஆகியோர் மூவர் கொங்குமண்டல சதகம் பாடியுள்ளனர். வேறு நாட்டுக்கு இல்லாத சிறப்பாகும் இது. சோழன் பூர்வ பட்டயமும், கொங்கு தேச ராசாக்கள் சரிதமும் வரலாற்று உண்மை பொதிந்த நாட்டு நூல்கள். வாரணவாசிக் கவிராயர் பாடிய 'பொன்னர் சங்கர் அம்மானையும்' குன்றுடையான் கதையும், தீரன் சின்னமலைக் கும்மியும் வரலாற்றுச் செய்திகள் கூறும் பாடல்கள். கோவை மாவட்ட பூகோளம் ப. நரசிம்மலு நாயுடு (1875) சி. கோபலய்யர் (1876) சுப்பராயஐயர் (1880) கஸ்தூரி ரங்கநாவி (1887) செப்ப முதலி (1894)

ஆகியோரால் எழுதப்பெற்றன. சிவசேத்திர மான்மிய சங்கிரகம் (1882) திவ்விய தேச யாத்திரைச் சருக்கம் (1889) ஆகியவை சிறந்த வரலாற்று நூல்கள். அண்மையில் கொடுமுடி. ச. சண்முகம் அவர்கள் முயற்சியால் வெளிவரும் பட்டய வரிசையில் 'கொங்குப் புலவர் பட்டயம்' காலிங்கராயர் அணைகட்டின பட்டயம்' 'வேட்டுவர் பூர்வ பட்டயம்' 'மொடவாண்டி பட்டயம்' 'மதுக்கரைப் பட்டயம்' ஆகியவை மாவட்ட வரலாற்றுக்குப் பெரிதும் துணை புரிவன.

மொழிபெயர்ப்பு நூல்கள்:

பெருங்கதையே 'பிருகத் கதா'வின் மொழி பெயர்ப்பு. ஆனைமலை சீனிவாசமுதலியார் 'ரோமியோ ஜூலியட் கதைச் செய்யுள்' எழுதினார். வடவழி அருணாசலம் கவிராயர் 'யவன காவியத்தை' மொழிபெயர்த்தார். பகடால நரசிம்மலு நாயுடு கேசவ சந்திரசேனர் எழுதிய 'நவ சம்உறிதை' (1894) பாபு நவீன சந்திராய் எழுதிய 'உபநிஷத்சாரம்' (1884) ஆகிய நூல்களை மொழி பெயர்த்தார். மாணி பாலபாரதி முத்துசாமி ஐயர் 'மகாபாகவதம் (1891) 'துவாதசிச் சரித்திரம்' (1890) ஆகியவைகளை மொழி பெயர்த்தர். சடகோபாச்சார்லு காதம்பரி சார சங்கிரகத்தை (1887) மொழி பெயர்த்தார்.

சித்தாந்தமும் தத்துவமும்:

பகாடல நரசிம்மலு நாயுடுவாய் ஆஸ்திக மத சித்தாந்தம் (1882) 'மத விருட்சம்' அல்லது இந்து சமயம் (1883) 'பிரம்மோபதேசபத்ததி' (1884) அத்வைத துவைத விஷிட்டாத்வைத சித்தாந்த சார சங்கிரக வினு விடை (1898) ஆகிய நூல்கள் எழுதி வெயியிடப் பெற்றன. ஒப்பிலாமணி தேசிகரின் சிவரகசியம் (1894) சிங்கார லட்சணம் (1898) என்ற நூல்கள் கோவையில் வெளிவந்தன. தாண்டவ ராய சுவாமிகளின் சிவயோகநிலையும் (1890) உறரிஹரமீசரின் உண்மை உபதேச வெண்பாவும் (1896) இராமபத்திராச்சாரியாரின் சங்கர மத நிர்ணயம் (1884) இங்கு வெளியான நூல். தேடச் சிறந்த தெரிசனம் (1894) என்பதும் கோவையில் வெளியான நூலே.

சிறித்துவ இலக்கியங்கள்:

| ஆசிரியர் | நூல். |
| --- | --- |
| கோவை சாமிநாதப்பிள்ளை | பிள்ளை விருத்தம் |
| கணுவக்கரை சவரிப்புவலர் | தனிப்பாடல்கள் |
| பகடால நரசிம்மலுநாயுடு | ஏசுவை இகழேல் |

| ஆசிரியர் | நூல் |
|---|---|
| அருளானந்தம் (1885) | இயேசு ராஜாவின் கீர்த்தனை |
| சாமுவேல் பிள்ளை (1896) | வேதாகம மாலை |
| அ. லெவோ சுவாமிகள் (1897) | பிராத்திக்கும் ஜெபங்கள் |
| ஞானப்பிள்ளை (1898) | சற்குருவின் மரண சாசனம் |
| ஞானப் பிரகாசம் | அர்ச் ஜெபமாலை |
| ஜே. ரூத் (1899) | ஆதியாகமம் |

இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆங்கிலேயரான எச். ஏ. பாப்லி ஈரோட்டில் சிறந்த தமிழ்ப்புலவராக விளங்கினார்.

முஸ்லீம் புலவர்கள்

| நூல் | புலவர். |
|---|---|
| தனிப்பாடல்கள் | சந்தியமங்கலம் பக்கீர்சாயபு |
| சில நாடகங்கள் | ஐம்பை காசி புலவர் |
| முகியித்தீன் மாலைப்பாட்டு | முகம்மது மூப்பன் (1882) |
| 'இஸ்திக்பார்' | முகம்மது முத்து ராவுத்தர் (1882) |
| மிஸ்பாகுல் இர்பான் என்னும் ஞானோதய தீப அலங்காரம் | ஷைகு உறபீபு முகம்மது (1886) |
| திருப்பதப் புஸ்தகம் | செயிது முகம்மது மக்காம் (1894) |
| ஜெமேசா ஒலியுல்லா பவனிச் சிறப்பு | காதிர் சாகிப் (1888) |

ஐம்பை காசிம்புலவர் இரு கண்ணும் அற்றவர். ஈரோட்டில் வாழ்ந்தவர்.

புராணங்கள்:

பெரிய புராணத்திற்கும், கந்தபுராணத்திற்கும் பாடலிலேயே சுருக்கம் பாடி மகிழ்ந்த பகுதி கோவைப்பகுதி. பல்வேறு புராணங்கள் இங்கு எழுந்தன.

| பெயர் | ஆசிரியர் | பாடல்கள் |
|---|---|---|
| கொடுமுடிப்புராணம் | சாமக்குளம் வெங்கடரமணதாசர் | 819 |
| பேரூர்ப்புராணம் | கச்சியப்ப முனிவர் | 2220 |
| பிறவாநெறிப்புராணம் | | 342 |
| திருமுருகன்பூண்டிப்புராணம் | வாசுதேவமுதலியார் | 618 |
| பவானிப்புராணம் | மேலவர் | 901 |
| அவிநாசிப்புராணம் | குண்டடம் இளையான் கவிராயர் | 1020 |
| தாராப்புராணம் | வேலாயுத பண்டிதர் | 243 |
| பூந்துறைப் புராணம் | காளியண்ணப்புலவர் | |
| சேவூர்ப்புராணம் | கொடுமுடி சிவஞான தேசிகர் | |

| | | |
|---|---|---|
| குரக்குத்தளிப்புராணம் | | |
| ஜாடிசைப்புராணம் | | 516 |
| நாட்டாற்றீசர் தலபுராணம் | | |
| அப்பிரமேயர் தலபுராணம் | இளையான்கவிராயர் | 490 |
| சிவன்மலைப்புராணம் | அம்பலவாணக்கவிராயர் | 497 |
| தென்சேரிப்புராணம் | அம்மையப்பர் | 255 |
| திருமூர்த்திமலைப்புராணம் | வேலாயுதபண்டிதர் | 963 |
| சென்னிமலைத்தலபுராணம் | சரவணமாமுனிவர் | |
| சைவபுராணம் | வேலாயுதபண்டிதர் | |
| வக்ஷத்திரிய புராணம் | கரடிவா இராமானுஜ நாவலர் | |
| வேளாள புராணம் | வீராட்சிமங்கலம் கந்தசாமிக் கவிராயர். | |

<u>நாடகத்தமிழ் இலக்கியங்கள்:</u>

கிழான்பாடி பாம்பண்ண கவுண்டன் குறவஞ்சி, பாரியூர் அமரவிடங்கர் குறவஞ்சி, பிரமயனப்புலவரின் பொங்களூர்க் குறவஞ்சி, சிவன்மலைக்குறவஞ்சி, சந்துறைக் குறவஞ்சி, இவை குறவஞ்சிகளுட் சில.

இரணிய நாடகம், வாணாசுர நாடகம், தொண்டனூர் அரக்கி நாடகம், பூர்வச் சக்கரவர்த்தி நாடகம், இராசகுமார நாடகம், அதிசய நாடகம் இவை நாடக இலக்கியங்கள்.

ஈரோடு [illegible]யவரப்பன் பள்ளு, சித்தாண்டீசர் மோகினி விலாசம், சிவன்மலை முருகர் மோகினி விலாசம், அவிநாசிப்புலவர் பாடிய திங்களூர் நொண்டி நாடகம் ஆகியவை நாடகப்பாங்கு இலக்கியங்களாம்.

<u>பிற பிரபந்தங்கள்:</u>

பிள்ளைத்தமிழ்:-

மருதாசலக்கடவுள் பிள்ளைத்தமிழ் (அருணாசலக்கவிராயர்)

பேரூர் பச்சை நாயகி பிள்ளைத்தமிழ் (முத்து-நெலுத்தை மு[illegible]லியார்)

வேதநாயகியம்மன் பிள்ளைத்தமிழ் (கந்தசாமிக் கவிராயர்)

யவனும்பிகை பிள்ளைத்தமிழ் (பலராம ஐயர்)

சென்னிமலையாண்டவர் பிள்ளைத்தமிழ் (சாமிநாதக் கவிராயர்)

சிவன்மலைப்பிள்ளைத் தமிழ்

வெள்ளோடு பாடகவல்லியம்மன் பிள்ளைத்தமிழ்

காதல் :-

புதுநகர் நல்லணவேள் காதல் - சாமிநாதக்விரூர்

சர்க்கரை மன்றாடியார் காதல் - வீரபத்திரக் கவிராயர்

சென்னிமலையாண்டவர் காதல் - அங்கண செட்டியார்.

<u>சதகம் :</u>

கருணாம்பிகை சதகம் (1892)

மருதாசல மூர்த்தி சதகம்

நட்டாற்றீசர் சதகம்

கார்மண்டல சதகம் (கார்காத்த வேளாளர்க்குரியது)

ஊஞ்சலூர் செல்லாண்டியம்மன் சதகம்

செயங்கொண்டேசர் சதகம்

ஊதியூர் சோழீசர் சதகம்.

<u>கோவை :-</u>

பேரூர்ப் பட்டீச்சுரர் கோவை

உலகுடையாள் கோவை

கோப்பண மன்றாடியார் கோவை

பட்டிக் கோவை

திருப்பேரூர்க் கோவை

பாம்பலங்காரர் வருக்கக் கோவை

அம்மானை :

கள்ளழகர் அம்மானை

தொட்டராயர் அம்மானை

உலா :-

பேரூர் உலா, அவிநாசி உலா.

அந்தாதி :- பேரூர் அந்தாதி, பவானி பதிற்றுப்பத்தந்தாதி, சென்னிமலை யமக அந்தாதி

கும்மி:. ஆரிய தேசாபிமானக்கும்மி, சிங்காரக்கும்மி, விலைமாதர்கும்மி (1886) தசாவதாரக் கொம்மி(1882) கோட்டைமாரியம்மன் கும்மி.

மாலை :-

மருதாசலபதி மாலை(வீராசாமிப்பிள்ளை(1896), ஏமனேஸ்வரமாலை (திருமலை தாசர் 1887), கோவை சவுடாம்பிகை மாலை(சபாபதிப்பிள்ளை) பட்டி விநாயகர் மாலை (போ[illegible]ம்மாம்பட்டி ஆறுமுகம் பிள்ளை 1896), சென்சேரி மாலை (பழனிமாலை உபாத்தியாயர்), பொள்ளாச்சி நடராசர் மாலை (சபாபதிப்பிள்ளை), காங்கயமாலை (காசிச் செட்டியார்), கோவை வரசித்தி விநாயகர் வெண்பாமாலை (வீராசாமி 1896) முருகன் உயிர் வருக்க மாலை (பழனியப்ப குருக்கள்), மதுக்கரை முத்து விநாயகர் தோத்திரப்பாமாலை - சபாபதிப்பிள்ளை (1893), திருநாவுக்கரசு வெண்பாமலை - கோவை சந்தசாமி முதலியார்.

தூது:-

பூந்துறை வாரணவாசி வண்டுவிடு தூது, சிவகிரி மயில்விடுதூது, பள்ளும் சிந்து, ஊஞ்சல்பாட்டு, பதிகம், பராக்கு, எச்சரிக்கைப் பாடல்கள் பல இருக்கின்றன. கீழ்க்கண்ட புலவர்களும் தனிப்பாடல்களும், பிரபந்தங்களும் பாடியிருக்கின்றனர்.

மடவிளாகம் - லட்சுமண பாரதி, பேரூர் - ஞானசித்தசுவாமிகள், பேரூர் - நடராஜபிள்ளைகள், திருப்பூர்-கோவிந்தசாமி ஆச்சாரியார், காஞ்சிக்கோயில் - தெய்வசிகாமணிபுலவர், கவுந்தப்பாடிபுதூர்-நஞ்சயப்புலவர், பூந்துறை - அம்பிகாபதிப்புலவர், பூந்துறை-காணியன்னபிள்ளை, முள்ளூர்-முத்துராயக்கவுண்டர், கொடுமுடி-மலைக்கொழுந்துக்கவிராயர், திங்களூர்-நஞ்சயப்புலவர், வடவள்ளி-கந்தசாமிக்கவிராயர், ஆனைமலை-சுவாமிநாதப்புலவர், சிறுவணம்பட்டி-தொட்டைய கவுண்டர், உடுமலை-ஆண்டியப்பய்யர், தேவனம்பாளையம்-கண்டிக்கவுண்டர், விசயமங்கலம்-சாமிநாதப்புலவர், காரையூர்-செயங்கொண்டய்யர், சிவன்மலை-சிவகிரி பண்டிதர், காரையூர்-குருநாத நட்டுவன், பழையகோட்டை-கருங்குமரப் புலவன், சிதம்பரகவுண்டன்பாளையம்-நடேச பாஸ்கர தீட்சிதர், கொங்கார்பாளையம்-அரசப்பிள்ளை, மடவிளாகம்-சிவராமதேசிகர், பூந்துறை -பாலதண்டாயுதபாணிக்கவிராயர், ஆனூர்-கொற்றவேல் சர்க்கரை, கன்னிச்சரபகவி வெற்றிவேல் கவிராயர், ஊலகுடையாபாளையம்-ஆறுமுகக் கவிராயர், பூந்துறை - அவிநாசிலிங்கப்புலவர்.

கோவை மாவட்டத்து இலக்கியம், புலவர்களில் ஒரு பகுதியே இவை.

முழுமையான தமிழ் ஆய்வுக்கு முதற்படியே இச்சிறு கட்டுரையாகும்.

**

துணைநூல்கள்:

அகநானூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து, நற்றிணை, சிறுபாணாற்றுப்படை, ஐங்குறுநூறு, கொங்குமண்டல சதகம், பஞ்சமரபு, கொங்குதேசோலை இதழ்கள், மேழி விளக்கம், மன்றாடியார் மரபுப்பாடல்கள், தமிழ்நூல் விவரஅட்டவணை 1-5, கொங்குநாட்டுப் புலவர்கள், வெள்ளியங்கிரி தலவரலாறு, தென்னிந்தியச் சாசனங்கள்-5, எங்கள் பவானி, அவிநாசித் தல வரலாறு, சோழன் பூர்வபட்டயம், பேரும் ஊர்கள்.

***

# கொங்கு நாட்டுக் கல்வெட்டுக்கள் காட்டும் கவின் தமிழ் வழக்கு

புலவர். பொ. முனியப்பன்,
காந்திகல்வி நிலையம் உயர்நிலைப்பள்ளி
கவலூர். 638313,

1.0. முகிழ்ப்பு

1.1. கொங்கு நாட்டில் இதுவரை படியெடுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் பல. அண்மைக்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டவைகளையும் சேர்த்தால் அவற்றின் எண்ணிக்கை மிகுதியாகும். இவற்றில் 100 கல்வெட்டுகள் மட்டுமே யான் ஆய்வுக்குக் கொண்டவை.

1.2. எடுத்துக்கொண்ட நூறு கல்வெட்டுகளில் மட்டுந்தான் கவின் தமிழ் வழக்கு உள்ளது என எண்ணவேண்டா. ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளாத அவைகளிலெல்லாம், சிறந்த தமிழ் வழக்குகள் உள்ளன என்பதில் ஐயமில்லை.

1.3. அனைத்தையும் இத்தலைப்பின் கீழ் ஆய்வு செய்யப் போதிய காலமின்மையோடு, கட்டுரை வழங்கக் கொடுத்த கால அளவோ மிகக் குறைந்த 10 நிமையங்களே! எனவே தான், என் ~~ஆய்வின் வரைவை~~ 100 கல்வெட்டுகள் என்ற அளவிற்குள் சுருக்கிக் கொண்டு இக்கட்டுரையை பணிவுடன் வழங்குகின்றேன்.

2.0 தொகையும் வகையும்

2.1. இக்கட்டுரை கல்வெட்டுகளில் காணப்படும் சில சொற்களையும், சொற்றொடர்களையும் தொகுத்தும், இலக்கியங்களில் அவை எவ்வண்ணம் ~~கவினுற இடம்~~ பெற்றுள்ளன என்பதை வகுத்தும் காட்டும் முறையில் அமைக்கப்பட்டுள்ளது. முதற்கண் சொற்களையும் பின் சொற்றொடர்களையும் முறையே காண்போம்.

3.0. சுவைமிகு தமிழ்ச்சொற்கள்

3.1. கல்வெட்டுக்கள் பல்துறை பற்றியன. எனவே நாம் கல்வெட்டை ஆராய்ந்தால் பல்துறை பற்றிய கவின்மிகு தமிழ்ச்சொற்களைக் காணமுடியும். இங்கு, இலக்கியங்களால் விளக்கத்தக்க சொற்கள் சேர்ந்தெடுக்கப்பட்டு அவைகளுக்கு இலக்கியச் சான்றுகளும் தரப்படுகின்றன.

3.1.0. அமுது.

3.1.1. அமுதுப' என்ற சொல் பல்வேறு கல்வெட்டுகளில் பரவலாக காணப்படுகின்றன. திருக்குறளில் அமிழ்தம் (' ') என்ற இச் சொல் 'சாவாமைக்கு உதவும் மருந்து-உணவு' என்ற பொருளில் எடுத்தாளப்பட்டுள்ளது. உயர்ந்தோர் உணவு தேவருணவு என்ற

பொருளில் குறளில் மற்றும் மூன்று (64,720,1106) இடங்களில் வந்துள்ளன. 'அமிழ்தம்' 'அமிர்தம்' என்ற பல்வேறு வடிவங்களில் இச்சொல் பல பொருள் அடிப்படையில் இலக்கியங்களில் வழங்குகின்றன. எனினும் இச்சொல் கல்வெட்டில் வழங்குப்படுவது போன்று 'உணவு' என்ற பொருளில் இலக்கியங்களிலும் வழங்கப்படுகின்றன. அச்சான்று களைமட்டும் இங்கு நோக்குவோம்.

3.1.2. 'நகைசயமுது' எனப்புற நானூற்றிலும் (399) 'அதுதினன்ன அருசுவை வடிசில்' எனப் பெருங்கதையிலும் (இலாவண 2.80) 'தவித்தகை யாழினே டமுதம்' எனச் சீவகசிந்தாமணியிலும் (2978) 'அருங்கடித்தீஞ்சுவை அமுதொடு பிறவும்' எனப் பெரும் பாணாற்றுப்படையிலும் (475) வழங்கிவந்த வழக்கு கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ள கவின் கண்டு களிப்புறத்தக்கது.

3.2.0. அருளாநின்ற செல்லாநின்ற.

3.2.1. இச்சொற்கள் பெரும்பாலும் பாக்களிலேயே வருபவை, இதனை இலக்கணத்தில் செய்யா னென்னும் வாய்ப்பாட்டுவினை எச்சம் னக் கறுவோம். கல்வெட்டுகளில் கவின்தமிழ்ச்சுவை கட்ட இவ்விரு சொற்களில் ஒன்றைச் சில கல்வெட்டுகளும், மற்றுஞ்சில கல்வெட்டுகள் இவ்விரண்டையும் பெற்று விளங்குகின்றன. இதற்கான எடுத்துக்காட்டுகளை எல்லா இலக்கியங்களிலும் காணலாம்.

3.3.0. இட்டேறி.

3.3.1. இட்டேறி (இட்டெேறி) என்னும் இச்சொல் கொங்கு நாட்டிற்கே உரிய சொல் எனக் கூறின் தவறாகாது. காடு, வயல்களிடையே செல்லும் வரப்பு போன்ற பாதைக்கு இட்டேறி என்று பெயர். இன்றும் இவ்வழக்கு கொங்கு நாட்டில் உள்ளமை யாவரும் அறிந்ததே. இது ஐக வழக்கிலுள்ள அருமையான இலக்கியச் சொல், இதனை இலக்கியங்கள் காட்டும் எழிலைச் சிறிது நோக்குவோம்.

3.3.2. 'எடுத்து நிரைத்தன்ன இட்டருஞ் சிறு நெறி' என்று மலையடுகடாமும் (1பி) 'முட்டும் முடுக்கும் இட்டை கழியும், கரப்பறை வீதியும் கள்ளப் பூமியும' என்று பெருங்கதையும் (உஞ்சை 33.16-17) இதுபற்றிப் பேசுகின்றன. ('இட்டை என்ற சொல் சீவக சிந்தாமணியில் ஏழு இடங்களில் (பாட்டெண். 1107, 1145, 1305, 2004, 2040, 205?, ?80) இடம் பெற்றுள்ளன.

3.3.3. மேலும் இட்டு என்பதற்கு சிறிய எனப்பொருள்படும். இதனைக் காட்டும் இலக்கியச் சான்றுகளாக 'கவிவிடித் தியற்றிய இட்டுவாய்க் கிடங்கு,'

'கல்பொளிந்தன்ன இட்டுவாய்க் கரண்டை' என மதுரைக் காஞ்சியும் (730,482) 'இட்டுவாய்ச் சுனை' எனக்குறுந்தொகையும் (193) குறிப்பிட்டுக் காட்டுகின்றன.

3.3.4. ஒற்றையடிப்பாதை எனப்படும் இந்த இட்டேறியை விசும்பினுக்கு வைக்கப்பட்ட ஏணியுடன் ஒப்பிடுகிறது ஒரு இலக்கியம். ஆம்! திருச்சிற்றம்பலக் கோவையார் 'விசும்பினுக்கு ஏணி நெறியன்ன சிறுநெறி' (149) எனக் குறிப்பிடுகிறது. சீவக சிந்தாமணி 'அஃகு நெறி' (1416) என்றும் இதனைச் சிறப்பிக்கிறது.

3.4.0. இறை.

3.4.1. இச்சொல் அரசன், கடவுள் ஆகியவற்றோடு அரசனுக்குச் சேரவேண்டிய வரியையும் குறிக்கும். அரசன்,கடவுள் என்ற பொருளில் இச்சொல் சில இலக்கியங்களில் பரவலாகக் காணலாம். ஆயின், கல்வெட்டுகள் காட்டுகின்றவாறு அரசனுக்குரிய வரி என்ற பொருளில் அரிதாகச் சில சான்றுகள் மட்டுமே காணக்கிடைக்கின்றன. அவற்றில் முதன்மையானது 'இறைவர்க்கு இறையொருங்கு நேர்வது நாடு' (733) என்னும் திருக்குறளாகும்.

3.4.2. மேலும் இப்பொருளில் 'இறை கெழுபெருவிறல் ஏஞ்சிய பின்றை' ஏதமின்றி இறைக்கடங்கழிந்து' எனப்பெருங்கதையிலும் (உஞ்சை 33.46) நரவாண.15.49) கூறப்பட்டுள்ளது.

3.5.0. உகவை.

3.5.1. இது கொங்கு நாட்டுக் கல்வெட்டுகளில் காணப்படும் ஓர் அருமையான சொல்லாகும். இச்சொல்லின் பொருள் உவகை, மகிழ்ச்சி என்பதே. சில கல்வெட்டுகளில் இது 'உகப்பார் பொன்' என்றும் கூறப்படுகிறது. அஃதாவது திருமணம் போன்ற மகிழ்வான காரியங்களுக்காகச் செலுத்தும் வரிக்கே உகவை என்று பெயர். 'கண்ணாலக் காணம்' என்று குறிக்கப்படுவதும் இதுவே. இச்சொல் இலக்கியங்களில் காணப்படுவது பெரிதும் உவகை தருகிறது.

3.5.2. 'முகவை இன்மையின் உகவை இன்றி' என்று புறநானூற்றில் (368) வருகிறது. கொங்கு நாட்டில் தோன்றிய இலக்கியமான பெருங்கதையில் இச்சொல் மூன்றிடங்களில் வந்துள்ளன. 'உகவை உள்ளமொடு பகையில விளைதல்' எனவும் 'மகத மன்னற்கு உகவையாக' எனவும்

'மகத மன்னற்கு உகவை போக்கலின்' எனவும் மகத காண்டத்தில் (17,78, ..10,20.12..) இடம் பெற்று நமக்கு மகிழ்வு தருகின்றது.

3.6.0. குளம.

3.6.1. இச்சொல் பொதுவாக, ஊரிலுள்ள மக்கள் குளிக்கப் பயன்படும் நீர்நிலை எனப்பொருள்படும், மேலும், இந்நீர் வயல்களுக்கும் பாய்ச்சப்படுவதால் ஏரியாகவும் விளங்குகின்றது. கொங்கு நாட்டில் பெரும் பாலும் ஏரிகள் யாவும் குளம் என்றே வழங்கப்படுகின்றன. இவ்விரு வகைப் பொருளிலும் இச்சொல் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன.

3.6.2. 'நிறை குளப்புதவின் மகிழ்ந்தனனாகி' எனப் புறநானூற்றிலும் (376) 'நிவந்து செல் நீத்தம் குளம் கொளச்சாற்றி' என மதுரைக் காஞ்சியிலும் (246) 'குளந்தொட்டு வளம் பெருக்கி' எனப் பட்டினப்பாலையிலும் (284) 'குளந்தொட்டு..... வளந்தொட்டு' எனச் சிறபஞ்ச மூலத்திலும் (66) 'கோடை நீடினும் குறைபட லறியாத, தோடாழ் குளம்' எனப் பெரும்பாணாற்றுப்படையிலும் (272.273) இதுபற்றிப் பேசப்படுகின்றன. 'குளங் கரை' (1409)'குளந்தூம்பு விட்டு' (2760) 'குளநெல்' (355,2491, 2602) பற்றிச் சீவக சிந்தாமணி செப்புகின்றது.

3.6.3. இக்குளத்தில் மக்கள் நீராடி மகிழ்வர் என்பதை மதுரைக் காஞ்சியும் மணிமேகலையடி குறிப்பிடுகின்றன. 'கனவுருவப்பப் பிதல்வர்ப் பயந்து, பனிந்தேந்திளமுலை யமுத மூறப்புலவுப்புனிறு தீர்ந்து பொலிந்த சுற்றமொடு, வளமனை மகளிர் குளநீரயர' என்பது மதுரைக்காஞ்சி (600.603) 'புதல்வரைப் பயந்த பிணிறுதீர் கயக்கந், தீவினை மகளிர் குளனாடரவமும்' என்பது மணிமேகலை (7.75-76).

3.6.4. மேலும், வரைப்பகம், குழித்த அகழ் என்ற சொற்களும் குளம் என்ற பொருளில் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. 'நுரைதலை குரைபுனல் வரைப்பகம் புகுந்தொறும்' எனப்பொருநராற்றுப்படையும் (240) 'வான்மடி பொழுதில் நீர் நசை இ குழித்த அகழ்' எனப் பெரும்பாணாற்றுப் படையும் (107-109) பேசுகின்றன.

3.7.0. சுங்கம.

3.7.1. இச்சொல் இவ்வண்ணமே பிற்கால இலக்கியங்களில் உள்ளன. முற்கால இலக்கியங்களில் இது 'உல்கு' என வழங்கப்பட்டுள்ளது. 'உறுபொருளும் உல்குபொருளும் தன் ஒன்னார்த்தெறுபொருளும் வேந்தன் பொருள் (756) என்பது

தமிழ்மறையன்றோ. இதனையே 'புலிபொறித்துப் புறம்போக்கி' (135) 'லீகு செய' (125) எனப் பட்டினப்பாலை பகருகின்றது. மேலும், 'கழுதைச் சாத்தொடு வழங்கும் உல்குடைப் பெருவழி கவலை காக்கும்' எனப் பெரும்பாணாற்றுப்படை (80-81) பேசுகிறது.

3.7.2. பிற்கால லெக்கியங்களான உலாக்களில் இக்கல் வெட்டுச் சொல் அப்படியே எடுத்தாளப்பட்டுள்ளன. 'மறக்கலியும் சுங்கமும் மாற்றி' என்பது விக்கிரம சோழன உலா (26) 'தவிராத சுங்கம் தவிர்த்தோன்' என்பது குலோத்துங்க சோழன் உலா (26) 'கலகமுஞ் சுங்கமும் காய்கலியும் மாற்ற' உலகை முன் காத்த உரவோன்' என்பது இராசராச சோழன் உலா (26).

3.8.0. துரவு, தொடிகை.

3.8.1. தோட்டம் துரவு, தொடிகை இச்சொற்களை இன்றும் பேச்சு வழக்கில் நீ கேட்கிறோம். இதில் துரவு என்ற சொல் கிணற்றைக் குறிக்கிறது என்பது யாவரும் அறிந்ததே. இதே போல் தொடிகை என்ற சொல்லும் கிணற்றையே குறிக்கின்றது. ஆயின், இக்கிணறு மற்றக் கிணறுகளைப் போன்றதன்று. பாறைக் கிணறுகளில் படியாக வெட்டப்படும் சுற்றுவட்டம் உள்ள கிணற்றுக்கே தொடிகை என்று பெயர். இப்பொருள் பொதிந்த அருமையான சொல்லைப் பெருந்துறை வட்டத்திலுள்ள பெரியபாளையம் வரதராசப் பெருமாள் கோவில்கல் வெட்டுதான் நமக்கு அழியாமற் காத்துத் தந்துள்ளது. (தெ.கோ.சா.265. பக்.246,

3.8.2. தொடி என்றால் வட்டம், வளையம், வளையல் என்ற பொருளில் எல்லா இலக்கியங்களிலும் வருவதைக் காணலாம். ஆயின் தொடிகை என்ற சொல்லை எவ்விலக்கியத்திலும் காண இயலவில்லை. என்றாலும், மலைபடுகடாம் என்னும் பத்துப்பாட்டின் பத்தாம் பாட்டு இலக்கியத்தில் மட்டும் தொடிகை என்ற சொல்லை நன்கு விளக்கிக் கொள்ளும் முறையில் ஒரு சொல் வருகின்றது. அதுவே 'தொடித்திரி வன்ன தொண்டுபடு திவவு (மலைபடு.21) என்பது. இதில் உள்ள 'தொடித்திரிவு' என்னும் தொல்தமிழ்ச்சொல்லே தொடிகை என்னும் கல்வெட்டுக் கவின் தமிழ் வளர்ச்சிற்குக் கால்கோள் ஊன்றியுள்ளது என்பதை எண்ண உள்ளத்தே இறும்பூது எழுகின்றது.

3.9.0. நண்பகல்.

3.9.1. மத்தியானம் என்றும் மதியம் என்றும் இன்று பொருத்தமின்றி வழங்கும் காலப் பெயரைக் கல்வெட்டுகள் நண்பகல் என்றே நற்றமிழால் குறிப்பிடுகின்றன. இலக்கியங்களிலும் இச்சொல் நண்பகல்- நண்பகால் - நல்லபகல்-நடுப்பகல்- உச்சிப்பொழுது என்றும் வழங்குகின்றது.

3.9.2. 'நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே' என்பது தொல்காப்பியம். (அக.நூ.9) 'முன்னுள் நண்பகல் அமையத்து' என்பது பதிற்றுப்பத்து (22.34) 'நண்பகல் பலவுடன் கழிந்த வுண்டியர்' என்பது திருமுருகாற்றுப்படை (130-131) 'நண்பகல் அந்தி நடையிடை விலங்கலின்' என்பது பொருநராற்றுப்படை (46). 'சென்ற் ஞாயிறு நண்பகற் கொண்டு ' என்பது மதுரைக் காஞ்சி (546) 'வளைவாய்க் கூகை நண்பகற் குழறவும்' என்பது பட்டினப்பாலை (260) 'பின் பகலே யன்றியும் பேரு ரகநாட்டு நண்பகலுங் கூகை நகும்' என்பது புறப் பொருள் வெண்பாமாலை (39) நண்பக லிரவு செய்யும்' என்பது சீவக சிந்தாமணி (114) 'நகை நாணி நீ நின்னை நண்பகலே மறைக்கின்றும்' என்பது நீலகேசி (309).

3.9.3. மற்றும் கலித்தொகையிலும் (74.10) இச்சொல் வழக்கு உள்ளது, நண்பகலை 'அடியொத்த காலம்' என்று நச்சினார்க் கினியர் தம் பட்டினப்பாலை உரையிலே குறிப்பிடுகின்றார். 'நிழலும் அடி யகத் தொளிக்கும் ஆரழற் காளத்து' என்று இச்சொல் திருவாரூர் மும்மணிக் கோவையிலும் (13) வந்துள்ளது.

3.10.0. பிடிபாடு.

3.10.1. இச்சொல் இலக்கியங்களில் பயின்று வாராவிடினும் பெரும்பான்மையான கல்வெட்டுகளில் வரும் ஓர் அருமையான சொல்லாகும். இது. அரசின் கட்டளை தாங்கிய ஓலையையே பிடிபாடு என்கின்றனர். இன்று ஆங்கிலத்தில் என்றும் வடமொழியில் சாசனம் என்றும் பத்திரம் என்றும கூறும் சொற்களுக்குரிய கவின் தமிழ்ச் சொல்லே பிடிபாடு என்பது. ஒருவருக்குச் சான்றோலையாகவும், நில உரிமை, பிற உரிமை பற்றிய பற்றுக் கோடாகவும் விளங்குவதே இப்பிடிபாடு ஆகும்.

3.11.0. புரவு.

3.11.1. அருமையான இச்சொல் நிலவரியைக் குறிக்கிறது. புற நானூற்றில் 75-ஆம் பாடலில் இதனை இறை என்றே பழைய உரையாசிரியர்

விளக்குகிறார். புறநானூற்றில் இச்சொல் மூன்றிடங்களில் இடம் பெற்றுள்ளன.

3.11.2. 'புரவுத் தொகுத்இன்குலை யாயினும்' '...சீறூர்க், கோளிவன் வேண்டேம் புரவே' என்று ஈரிடங்களி சிற்றூர் என்னும் பொருளில் 'புரவிற் காற்றுச் சிற்றூர் என்றும் புறநானூறு (330) புகல்கின்றது.

3.12.0. புன்புலம்.

3.12.1. புன்செய், காடு (முல்லை நிலம்) என்ற பொருளில் இச்சொல் கல்வெட்டுகளிலும், இலக்கியங்களிலும் இடம் பெற்றுள்ளன. 'புன்புலந்தழீஇய அங்குடிச் சீறூர்', 'புன்புலச் சீறூர் நெல்விளை யாதே; வரகுந் தினையு முள்ளவை யெல்லாம்' என்று புற நானூறு (324-329) புன்புலத்தின் தன்மையை வன்மையுறச் சாற்றுகின்றது. 'குன்றுதலை மணந்த புன்புல வைப்பு,' புன்புலந் தழீஇய புறவணி நல்லப்பு' என்று பதிற்றுப் பத்து (30.13; 30.25) இதனைப் பறை சாற்றுகின்றது.

3.12.2. குறுந்தொகை புன்செய் என்ற பொருளில் 183 ஆம் பாடலிலும் முல்லை நிலம் என்ற பொருளில் 202 ஆம் பாடலிலும் இதனைக் கூறுகிறது. ஐங்குறுநூறு புன்புல நாடன் என்று (421) அறைகின்றது.

3.12.3. சீவக சிந்தாமணி வத்தவ காண்டம் 'புன்புல வுழவர் படைமிளிர்ந்திட்ட (2.65) என்றும்; உஞ்சைக் காண்டம் ' ..... பரற்றலை முரம்பிற் புன்புலந் தழீஇய புகற்சித் தாசி' (48.174-175) என்றும் புகல்கின்றன.

3.13.0. பொய்கை.

3.13.1. இச்சொல் இயற்கையாய் அமைந்த நீர்நிலை யைக் குறிப்பது. தாமரை, குவளை, ஆம்பல் போன்ற தேம்பிழி மலர்கள் மண்டிக் கிடக்கும் தடாகம் என்பதும் இதுவே. பெரும்பாலும் இப்பொய்கைகள் நீண்டு கிடக்கும் என்பதையும் இலக்கியங்கள் காட்டு கின்றன. கல்வெட்டுகளைப் போன்றே இலக்கியங்களும் இப்பொய்கைகள் கால்வாய்களுடன் விளங்கி வயல்களுக்கு நீர்பாய்ச்சும் வளம் பெற்றவை எனக் கூறுகின்றன. இப்பொய்கை பற்றிய செய்மைகளைத் தமிழ் இலக்கயங்கள் தக்க முறையில் விளங்குகின்றன.

3.13.2. 'நெடுநீர்ப் பொய்கைப் பிறழிய வாளை' என்றும், 'தெண்ணீர்ப் பொய்கை மேய்ந்த செவ்வரி நாரை' என்றும், 'வயமலர் கழனி வாயிற் பொய்கை' என்றும் புறநானூறு (287,351,354) போற்றியுரைக்கின்றது. அகநானூறு 'பரந்த பொய்கைப் பிரம்பொடு நீடிய' (306) எனப் பாங்குடன் விளக்குகின்றது. 'புனல் வாயிற் பூம்பொய்கைப், பாடல் சான்ற பயங்கெழு வைப்பு' (13.8-9) என்றும் 'பழனக் காவிற் பசுமயிலாலும், பொய்கை வாயற் புனல்பொரு புதவின்' (27.8-9) என்றும் பதிற்றுப்பத்து பரைகின்றது.

3.13.3. பொய்கையின் இருப்பிடத்தைக் குறுந்தொகைப் பாட லொன்று மிக அருமையாய்க் கூறுகிறது. 'ஊர்க்கு மணித்தே பொய்கை, பொய்கைக்குச் சேய்த்து மன்றே சிலகான் யாறே' (113) என்பதோடு 'பொய்கை அம்பல்' என்றும் (370); 'பொய்கை ஊரன்' (61) என்றும் புகழ்ந்தெடுத்துரைக்கின்றது. இதனையொப்பவே, பொய்கையில் வாழும் நீர்நாய் பற்றி, 'பொய்கைப் பள்ளி புலவு நாற நீர் நாய்' (63) என்றும் 'பொய் கப் பூத்த' (34) என்றும் 'பொய்த லாடிய' (101) என்றும் ஐங்குறுநூறு அறிவிக்கின்றது.

3.13.4. பொய்கையில் கமழும் நறுமணத்தையும் அதன் பெரும் பரப்பையும் பத்துப்பாட்டு இலக்கியங்கள் மொத்தமாய் மொழிவதை நோக்க உள்ளத்தே மகிழ்வு முகிழ்க்கின்றது. 'கமழ்பூம்பொய்கை' (253) என்றும் 'கமழ்நறும்பொய்கை' (654) என்றும் 'கழுநீர் பொலிந்த கண்கவர் பொய்கை' (171) என்றும் மதுரைக் காஞ்சி அழகுத்தோடுரைக்கின்றது. 'நறுநீர்ப்பொய்கை யடைகரை நிவந்த (68) எனச் சிறு பாணாற்றுப்படை செப்புகின்றது. 'வரியணி சுடர் வான் பொய்கை' (38) எனப் பட்டினப்பாலை வானளாவப் புகழ்ந் துரைப்பதோடு 'கராஅம் கலித்த கண்கவர் பொய்கை' என்பதால் (242) பொய்கையில் முதலையும் வாழும் என்ற உண்மையையும் எடுத்து மொழிகின்றது.

3.13.5. கொங்கு நாட்டுக் கல்வெட்டுகளில் பொய்கை என்ற சொல் பரவலாகக் காணப்படுவதைப் போன்றே கொங்கு நாட்டில் தோன்றிய இலக்கியமாகிய பெருங்கதை 'புள்ளொலிப் பொய்கைப் பூந்துறை முன்னி' (உஞ்சை 30.277) என்பது முதலாக 20 இடங்களில் பொய்கை பற்றிய சிறப்புகளையெல்லாம் புகழ்ந்தெடுத்துரைக்கின்றது. அப்பெருங்கதை ஓரிடத்தில் 'வாவியும் பொய்கையும்' (3.3.5) எனப் புகல்வதைப் போன்றே சீவக சிந்தாமணியும் 'வண்டார் குவளைய வாவியும் பொய்கையும் (337) எனப்

புகல்கின்றது. சிலப்பதிகாரமும் (11:96-103) மணிமேகலையும் (11:4) இப்பொய்கை பற்றிக் கூறத் தவறவில்லை. வில்லிபாரதமும் (11 ஆம் போர் 68) இதுபற்றி விளக்குகிறது. 'பாசடை கலந்த பொய்கை' எனச் சூளாமணியும் (758) இதன் சிறப்பை யுரைக்கின்றது. 'நன்னுதற் கரியன நாடும் பொய்கையும்' (1175) எனச் சீவகசிந்தாமணி இதன் அருமையையும் அறிவிக்கின்றது.

3:14:0: மண்டகம்

3:14:1 பெருவாரியான கல்வெட்டுகளில் இச்சொல் இடம் பெற்றுள்ளதைக் காணலாம். இன்று நாம் 'மண்டபம்' என்று சொல்வதைத் தான் கல்வெட்டுகள் மண்டகம் எனக் கூறுகின்றன. பேச்சு வழக்கில் மண்டகம் என்ற சொல்தான் இன்றும் தென் மாவட்டங்களில் வழங்குவதைக் காதாரக் கேட்கலாம்.

3:14:2 மண்டகம் என்ற தமிழ்ச் சொல்தான் வடமொழியில் மண்டபம் எனத் திரிந்து வழங்கி அச்சொல்லே இலக்கியங்களிலும் இடம் பெற்றுள்ளன. மண்டகம் என்ற தமிழ்ச் சொல்லிலிருந்து தான் மண்டபம் என்று வடமொழியில் திரிக்கப்பட்டது என்ற உண்மையை மொழிஞாயிறு. தேவநேயப் பாவாணர் அவர்களின் 'முதல் தாய்மொழி' என்ற நூலில் தெளிவாகக் காணலாம்.

3:15:0 மன்றம்:

3:15:1 மன்றம், மன்றுபாடு என்ற சொற்கள் கல்வெட்டுகளில் ஆங்காங்கே காணப்படுகின்றன. இம்மன்றம் பற்றி ஆராயத் தொடங்கின் அது ஒரு தனிப் பெருங் கட்டுரையாய் விரியுமளவிற்கு மிகுந்த செய்திகளை வாரி வழங்குகின்றன. தமிழ் இலக்கியங்கள் அத்தனையும் இங்கு காட்ட இயலாதாகையால் ஓரளவிற்கு மன்றம் பற்றிய செய்திகளைக் காண்போம்.

3:15:2 மன்றம் என்பது பொதுவிடம். ஊர்மக்கள் கூடும் பொதுவான மரத்தடி என்பதை அறிவோம். மன்றத்தில் என்னென்ன மரங்கள் இருந்தன என்பதையும் இலக்கியங்கள் காட்டுகின்றன. 'மறுகுடன் கமழு மதுகை மன்றத், தலைந்தலை யிரத்தியலந்துபடு நீழல்' (325) என்றும், 'மன்ற வேம்பு (371) என்றும், 'மன்றப் பலவு' (374 என்றும் புறநானூறு பொய்யாதுரைக்கின்றது, 'மன்ற வேங்கை' (241) பற்றிக் குறுந்தொகையும், ஐங்குறுநூறும் (259) அகநானூறும் .10

அழகுற எடுத்துக் காட்டுகின்றன, 'மன்ற மராஅத்த பேஎமுதிர் கடவுள்' பற்றிக் குறுந்தொகையும் (87) தஞ்சைவாணன் கோவையும் (30) தாமா-தியம்புகின்றன. 'மன்றப் பெண்ணைப்' பற்றியும் குறுந்தொகை (177) கூறுகிறது.

3:15:3 ஊருக்குப் பெருமை தருவது மன்றம் என்பதைப் புற-நானூறு 'பேரிசை மூதூர் மன்றங் கண்டு' (220) எனப் பேசுகின்றது. பெரிதும் மன்றம் ஊருக்கு நடுவில் அமையும் என்பதை 'மன்றம் பொருட்டா மதிலிதழ...' எனச் சிதம்பரமும் மணிக்கோவை செப்புகின்றது. மலையருகிலும் மன்றம் அமைத்த செய்தியை 'மன்றம் நண்ணிய மலை' என்று குறுந்தொகை குறிப்பிடுகின்றது.

3:15:4 மன்றத்தை அடைந்த செய்தி ஊருக்கெல்லாம் தெரிந்து விடும் என்பது பற்றியும் இலக்கியங்கள் கூறுகின்றன. 'காமம், மறையிறந்து மன்றுபடும்' எனத் திருக்குறளில் ஈரிடங்களில் (1138,1254) கூறப்பட்டுள்ளன. 'மறையலராகி மன்றத் தஃதே' என்று குறுந்தொகையும் கூறுகிறது. 'அலரும் மன்று பட்டன்றே' என்று அகநானூறும் (201) அறைகின்றது.

3:15:5 இனி இம்மன்றங்களில் நிகழ்வதைச் சிறிது நோக்குவோம் 'மலர் தலை யுலகத்துப் பலருடன் கழீஇய' என்று பட்டினப்பாலை (67) பகருகின்றது. 'மன்றம் போந்து மறுகு சிறை பாடும்' என்றும், 'மன்றம் படர்ந்து மறுகுசிறைப் புக்கும், கூடி நுண்கோல் கொண்டு களம் வாழ்த்தும் அகவலன்..' என்றும் பதிற்றுப் பத்து (23:5) 43: 26-28) பாங்குடன் மொழிகின்றது. பாடலுடன் மன்றத்தில் ஆடலும் நிகழும் என்பதை மதுரைக் காஞ்சி 'மன்று தொறும் நின்ற குரவை' (615) என்றும், சிலப்பதிகாரம் இடுமுள் வேலி எயினர் கூட்டுண்ணும், நடுவூர் மன்றத் தடிபெயர்த் தாடி (வேட்டுவவரி-10-11) என்றும் சிறப்பித்துச் செப்புகின்றன.

3:15:6 மன்றத்தில் விலங்கும் புள்ளும் விளங்குவதுண்டு என்பதையும் இலக்கியங்கள் காட்டுகின்றன. 'மன்ற மரையா விரிய வேறட்டு' (321) என்றும் 'மன்றப் ~~பெண்ணையில் அன்றில் நரலுதல்'~~ (177) என்றும் குறுந்தொகை குறிப்பிடுகின்றது. 'மரை சேர் மன்றத்து' என்று அகநானூறும் (373) 'மல்லன் மன்றத்து மதவிடை கெண்டி' என்று பெரும்பாணாற்றுப்-படையும் (143) 'மன்றும் பொதியிலும் மாமயில் சேர்' என்று தஞ்சை வாணன் கோவையும் (34) 'தாதெரு மறுத்த கலியழி மன்றத்து' என்று பதிற்றுப் பத்தும் (13:17) விளம்புகின்றன.

3:15:7 மன்றத்தைக் கைக் கொள்ளப் பெரும்போர் புரிவது உண்டு என்பதை 'வென்றிடு வேட்கையர் மன்றம் கொண்மார், பேரம ருழந்த வெருவரு பறந்தலை' எனப் புறநானூறு (270) புரியுமாறு எடுத்துரைக்கின்றது. போர்க்களத்தின் நடுவிடத்திற்கும் மன்றம் என்று பெயர். 'இதனைப் புறநானூறு மன்று என்பது கெட' (283) என்றும், பதிற்றுப் பத்து 'செஞ்சடர் கொண்ட குருதி மன்றத்து' (35:8) என்றும் நன்குயம்புகின்றன. வெற்றி பெற்றோர் தோற்றோர் மன்றங்களை அழிப்பர் என்ற செய்தியினை 'நின்படைஞர் சேர்ந்த மன்றம் கழுதை போகி' எனப் பதிற்றுப் பத்தும் (25:4) 'மலைந்தோர் தேஎ மன்றம் பாழ்பட' என்று பெரும்பாணாற்றுப் படையும் (423) பேசுகின்றன.

3:15:8 அடுத்து, மன்றத்தில் தங்குபவர்கள் பற்றிய செய்திகளையும் அறிய முடிகிறது. 'மன்றில் வதியுநர் சேட்புலப் பரிசிலர்' என்று மலைபடுகடாமும் (492) 'வயிரிய மாக்கள்... மன்ற நண்ணி' என்று பதிற்றுப் பத்தும் (29:8-9) (மன்றுபடு பரிசிலர்' ன்று புறநானூறும் (135) 'மாதவரிடங்களும் மன்றம் பொதியிலும்' என்று மணிமேகலையும் (20:30) 'மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்' என்று திருமுருகாற்றுப் படையும் (226) திறம்பட மொழிகின்றன.

3:15:9 மற்றும், மன்றம் பற்றிய பொதுவான செய்திகளைச் சிறிது நோக்குவோம். 'மென்றோள் மகளிர் மன்றம் பேணார்' (373) என்றும், 'தொள்ளை மன்றத் தாங்கட் படரின்' (333) என்றும், 'பின்றலைச் சிறுஅர் மன்றத் தார்ப்பில்' (334) என்றும் புறநானூறு புகல்கின்றது. 'மன்றம் பொழும் நாடன்' பற்றியும் 'மன்றம் போழுந் தேர்' பற்றியும் குறுந்தொகை (301,346) குறிப்பிடு-கின்றது. 'இரும்பே ரொக்கல் கோடிய ரிறந்த, புன்றலை மன்றங் காணின்' என அகநானூறும் ஓர் செய்தியை அறிவிக்கின்றது.

3:15:10 'மன்றுஞ் சந்தியும் ஒன்று கண்டனன்' என்பது முதலாகப் (இலாவண 8:70) பெருங்கதையில் 9 இடங்களில் மன்றம் பற்றிய செய்திகள் வந்துள்ளன. மற்றும் பல இலக்கியக் குறிப்புகளை எடுத்துக் காட்டத் தொடங்கின் இது இறுதியின்றி நீளும். ஆகையால், இதனை இத்துடன் நிறுத்தி இடுகாட்டிற்கும் மன்றம் என்ற பெயர் உண்டு என்பதை மட்டும் நோக்கி இதனை நிறைவு செய்வோம் 'துளங்குநீர்

வியலகம் ஆண்டிவிது கழிந்த, மன்னர் மறைத்த தாழி, வன்னி மன்றத்து விளங்கிய காடே' என்ற பதிற்றுப் பத்தின் கூற்று (44.21-23) மன்றம் பற்றிய வியப்பான தொருசெய்தியை எடுத்துரைத்துள்ளது என்பதில் ஐயமில்லை.

3.16.0 வாவி.

3.16.1 வாவி என்பது குளம், நீர்நிலை, நடைகிணறு, ஆற்றுநீர் அல்லது தன் ஊற்று நீரால் நிரம்பி மறுகால் வழி மிகைநீர் வெளிச் செல்லுமாறு அமைக்கப்பட்ட நீர்நிலை; ஆற்றிலோடை ஆகிய பல பொருள்களைக் கொண்டது. இப்பல்வகைப் பொருள்களிலும் கல்வெட்டுகளில் வாவி என்ற சொல் வழங்கியுள்ளது. பொய்கையை யொட்டி இச்சொல் கல்வெட்டுகளில் வழங்கப்படுவதால் இதைச் செயற்கை நீர்நிலை எனக் கொள்ளலாம்.

3.16.2 இவ்வாவியில் மக்கள் சென்று மகிழ்ந்திருப்பர் என இலக்கியங்கள் இயம்புகின்றன. 'வளநீர்ப் பண்ணையும் வாவியும் பொலிந்த தோர், இளமரக் கானத் திருக்கை புக்குழி' எனச் சிலப்பதிகாரம் (காடுகாண் காதை 13-14) கூறுகிறது. சீவகசிந்தாமணியோ 'அருங்கலச் சேய்தந் ஆர்ந்த வாவி' (1204) என்றும், 'விழைதகைய வாவியொடு காவிவிடை மாந்தர் பதிகொண்டார் (1781) என்றும் விளம்புகிறது. 'வாவியும் மண்டபமும்' என்று சூளாமணி (177) சொல்லுகின்றது. பெருங்கதையும் வாவி பற்றி ஆறு இடங்களில் அருமையாகக் கூறுகின்றன.

4.0 சுவைமலி சொற்றொடர்கள்:

4.1 கொங்கு நாட்டில் சுவைமலிந்த பாடல் கல்வெட்டுகளும் கிடைத்துள்ளன. அவையன்றி, இங்கு கூறப்படுபவை பொருட்சிறப்பும் எதுகை மோனை எழிலும் இலக்கியச் சீர்மையும் பெற்றவை. இங்கு காட்டப்படுபவை யன்றி மேலும் சுவையார்ந்த சொற்றொடல்கள் உள்ள என்றாலும், முதற்கண் கூறப்பட்டவாறு 100 கல்வெட்டுகள் என்ற வரம்பிற்குள் நின்று இவை காட்டப் படுகின்றன.

4.2.0 உடும்பும் ஊழையும்.

4.2.1. உடும்போடி ஆமைதவழ்ந்த நிலம் என்னும் அரிய சொற்றொடர் கொங்கு நாட்டுக் கல்வெட்டுகளிலன்றி, தமிழ்நாட்டில் உள்ள

...13

கல்வெட்டுகளில் எல்லாம் காணப்படுகின்றன. இதற்கு மேடும் பள்ளமுமான நிலம் என்பது பொருள் என முன்பே நம் அறிஞர்கள் கண்டு உரைத்துள்ளனர். இலக்கியச் சான்றுகளோடு இதனைச் சிறிது நோக்குவோம்.

4.2.2 உடும்பு எத்தகைய செங்குத்தான உச்சிகளிலும் பற்றி ஏறும் பெற்றியுடையது. உடும்பின் இத்தன்மையை 'உடும்பெறிந்ததுபோல் கடுங்கணை முள்க' எனப் பெருங்கதையின் உஞ்சைக்காண்டம் உரைக்கின்றது. மேட்டுப் பகுதியில் மட்டுமின்றி தனக்குரிய வளையில் இது தங்கும் போதும் இதனைப் பற்றியிழுத்திடல் எவர்க்கும் எளிதல்ல என்பதை 'தலைச்சிறப் பறித்த போதுந் தாளினை விடுத்தல் எசல்லா, நிலைப்புடை உடும்பு' எனச் சீவகசிந்தாமணியும் (2837) 'வன்சினைப் பற்றிப் போதா வல்லுடும்பு' எனப் பெரியபுராணமும் (கண்ணப்ப 116) பேசுகின்றன. வெற்றியுடன் இவ்வாறு பற்றியதை விடாது பற்றும் பாங்குடைய உடும்பின் கால்கள் பெரியனவல்ல, சிறியனதான் என்பதை 'படுமடைக் கொண்ட குறுந்தாள் உடும்பு' என்று புறநானூறு (326) புகல்கின்றது.

4.2.3 கல்வெட்டில் 'உடும்போடல்( என்பதற்கு மேட்டுநிலம் என அறிஞர்கள் பொருள் கொண்டது மிகப்பொருத்தம் என்பது யாவரும் அறிந்ததே. மேட்டு நிலம் என்கின்றபோது மண்பாங்கான மேட்டுநிலம் மட்டுமல்ல பரற்கற்கள் நிறைந்த மேட்டுநிலத்தையும் குறிக்கும் என்பதை 'பரற்றவழ் உடும்பின் கொடுந்தாள் ஏற்றை' என மலைபடுகடாம் (508) மான்போடுரைக்கின்றது.

4.2.5 ஆமை எமதுவாய் பள்ளம் நோக்கி ஊர்ந்து செல்லும் என்பதை 'கழனிக் கரும்பின் சாய்ப்புறம் ஊர்ந்து, பழனயாமை பசுவெயிற் கொள்ளும்' என அகநானூறு (306) ஆமையற்றிய கல்வெட்டிற்கோர் அரிய சான்றைத் தருகிறது. 'ஒழுகுநீர் ஆமை' எனப் பெருங்கதை (இலாவாண. 15.57) பேசுகின்றது. ஒழுகும் நீர் பள்ளத்தை நோக்கித்தானே செல்லும்! சீவகசிந்தாமணியோ '...தவழ்நடை ஆமை' (2878) என்ற தகுந்த சான்றுரைக் கூறிக் கல்வெட்டிற்குச் சிறப்பை வழங்குகின்றது.

## 4.3.0. எச்சமறுவான்.

4.3.1 'இவ்வறங் காத்தான் அடிஎங்கள் தலைமேலே. இது இறக்குவான் வழி எச்சமறுவான்' என்ற சொற்றொடர் பல கல்வெட்டுகளிலும் காணப்படுகின்றன. இதில் குறிப்பிடப்பெறும் எச்சம் என்ற சொல்

....14

இலக்கியப்புகழ் பெற்றது என்பதை அறிந்திருக்கலாம் திருக்குறளில் இது ஈரிடங்களில் இடம் பெற்ற மக்கட்பேற(114) எச்சி சிற்பது(238) என்ற இருபொருளையும் கூறி எச்சம் பற்றிய நிறைபொருளை எஞ்சாது வழங்குகின்றது.

4:3:2. நாலடியார் எச்சம் என்ற சொல்லிற்கு ஓரிடத்தில் 'மரவு' (299) என்றும் மற்றோரிடத்தில் 'சேர்த்த பொருள்' (134) என்றும் பொருள் கூறுகிறது. மக்கள் தம் வாழ்வில் செச்சம் பெறுவது இன்பத்தையும், பெறாதது எவ்வத்தையும் தரும் என்பதைப் பெருங்கதை '...நிலமிசை யுறைநர்க்கு, எச்சம் பெறுதல் இன்பமாதலின்' (நரவாண:3:143-144) என்றும், 'வியாச் செங்கோல் விக்கிரன் ஒரு நாள் எச்சமின்மையின் எவ்வங்கூர' (இலாவண:11:123-124) என்றும் எழிலுற இயம்புகின்றன.

4:4:0 காடழித்தல்

4:4:1. 'இந்த நாட்டில் காடுபிடித்த தழித்துக் கொண்டு' என்ற சொற்றொடல் சில கல்வெட்டுகளில் உள்ளன. இது 'காடு கெடுத்து நாடாக்கி' என்ற பட்டினப்பாலையின் (285) கூற்றைக் கல்வெட்டுகள் தன் கவின்தமிழாய்க் கொண்டதைக் காட்டுகின்றது.

4:5:0 குடமும் குச்சியும்.

4:5:1 'குடமும் குச்சியும் கொண்டு கோயில் புகுவான்' (தெ.கோ.சா:196 பக்.189) 'கோயில் ஆண்டு குச்சியும் கொண்டு (தெ.கோ.சா.293 பக்.201) போன்ற சொற்றொடர்கள் சில கல்வெட்டுகளில் உள்ளன. இவை கோயிலின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொள்பவர்களைப்பற்றித் தெரிவிக்கிறது என்பதில் ஐயமில்லை. ஆயின், குடமும் குச்சியும் என்பன யாவை? என்பதே நம் உள்ளத்தில் எழும் வினா-

4:5:2 இவ்வினாவிற்குத் தக்க விடையாக கொங்கு நாட்டு இலக்கியமாகிய பெருங்கதையில் சில சான்றுகள் கிடைத்துள்ளன. கோவிலின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றவரை முதல் முதலில் கோவிலில் வரவேற்றுச் சிறப்பிக்கும் முறையே குடமும் குச்சியும் கொண்டு கோயில் புகுதலாகும் என அறிய முடிகிறது. பெருங்கதை கோவில்பற்றிக் கூறுவிடினும் குடங்கொள்ளுதல்பற்றித் தெளிவாகவே விளக்குகிறது.

4:5:3. அதாவது, பெருங்கதையில் 'வாயிலுள் வருமிடத்து எதிர்கொள் பொருட்டாக், கோயிலுள் இருந்த கோப்பெருந்தேவிக்குப், பொலப்பூங் குடத்திற் போற்றித் தந்த, தலைப் பூ நறுநீர்ச் சிறப்பு முந்துறீஇ' என உஞ்சைக் காண்டத்தில் இவ்வுயர்வழக்கு நயமுடன் கூறப்படுகிறது, மற்றும் இலாவணகாண்டத்தில்,

'நூல்வழி நுனித்த நுழைநுண் ணுணர்வினர், நால்வகைக் கோலத்து நால்வகை மாக்கள், தாமரை மூய தனனியக் குடநீர், தாமுறை சொரிந்து....." என்றும் (5:102:105) ஏற்ற முற இச்செய்தி போற்றியுரைக்கப்படுகிறது.

4:5:4 இவ்வருமையான சான்றுகளின்வழி 'குடங்கொண்டு கோயில் புகுதல்' என்பது தலையிலே தாமரைப் பூவையுடைய தனனிய நிறை குடத்தைக் கொண்டு கோயில் புகுந்து அக்கோவிலின் நிர்வாகப் பொறுப்பினை ஏற்பதாகும் என்பதை அறிய முடிகிறது. அடுத்த குச்சி என்பது பற்றி விளக்கத்தக்க சான்றுகளை இலக்கியங்களில் காண இயலவில்லை. என்றாலும், 'குச்சம்' என்பது தலையில் அணியும் ஒருவகை அணியாகும். இவ்வணியைத் தலையில் அணிந்து குடங்கொண்டு கோயில் புகுதலே வழக்காக இருந்திருக்கும் எனக் கொள்ளலாம். இன்றும் கோவிலுக்கு வரும் சிறப்புடைய பெருமக்களுக்கு 'பரிவட்டம்' கட்டும் வழக்கும் உள்ளமை 'குச்சம்' பற்றி நாம் கொண்ட கருத்தை மறுத்தற்கியலாத மதிப்புடைய சான்றாகும்.

## 4:6:0 நீர்ப்பயிர், வான்பயிர்.

4:6:1 கல்வெட்டுகளின் வழி பல்வேறு துறைகள் பற்றிய நல்ல தமிழ்ச்சொற்கள் மிகுதியாகக் கிடைக்கும் வாய்ப்புள்ளது. இது பற்றித் தனி ஆய்வு மேற்கொண்டால் தக்கபயன் விளையும் அதற்கு ஓர் சிறு எடுத்துக் காட்டாய் நீர்ப்பயிர், வான்பயிர் என்ற இரு சொற்களையும் கூறலாம்.

4:6:2 சொங்கு நாட்டுக் கல்வெட்டு ஒன்றில் 'நெல்விளைச்சல், கமுகு, தென்னைமரம், வெற்றிலை, வாழை, மற்றுமுண்டான நீர்ப்பயிர்' (தெ.கோ.சா.204 பக்.197) என்றும், மற்றொன்றில் 'இந்த நிலத்தில் கமுகு, தெங்கு, வாழை, கரும்பு, வான்பயிர்களுமிட்டுப்பயிர் செய்து' (தெ.கோ.சா:326 பக்.298) என்றும் வருகின்றது. இதில் வான்பயிர்களும் இட்டு என்ற உம்மையால் வான்பயிர் என்பது நீர்ப்பயிருக்கு மாறான, மழையைமட்டும் நம்பிப்பயிரிடப்படும் புன் செய்ப் பயிர்கள் என்பது தெரிகிறது. நன்செய்ப்பயிர், புன்செய்ப்பயிர் என்ற சொற்களுக்கு மாற்றாக இச்சொற்கள் அப்பயிரின் தேவை, வளர்ச்சிமுறை பற்றிய கருத்துக்களை உள்ளடக்கிய பொருள் பொதிந்த சொற்கள் என்பதை எண்ணிப்பார்த்து மகிழ்க.

## 4:7:0 பல்வகை.

4:7:1 இவ்வாறு ஒவ்வொரு சொற்களையும் சிறிதிதளவு விளக்கினால் கூட இக்கட்டுரை மேலும் விரியுமாதலால், மற்றும் சில சுவையான சொற்றொடல்களை மட்டும் கூறி இக்கட்டுரையினை நிறைவு செய்கின்றேன். .....16)

4:7:2 'நிறைவற நிறைந்து குறைவறக் கூடி வாட்டமின்றிக் கூட்டம் பெருகி மகிழ்ந்திருந்து' (தெ.கோ.சா: 300 பக் 276) என்பது சிற்றூர் மன்றத்தில் நிறைந்த கூட்டம் கூடுவது பற்றிய சொற்றொடர்.

4:7:3 'மங்கலம் தந்தும் செங்கலம் பறித்தும் கொள்வார்களாகவும்' இது வரி கொடுக்காதிருப்பவர்கள் செய்ய வேண்டிய கடமை பற்றித் தாங்களே ஒப்புதல் ஓலை கொடுத்தது பற்றிய சொற்றொடர் (தெ.கோ.சா. 316 பக்: 291).

4:7:4 'உறவற உலர்த்தி பதரறத் தூற்றி' (தெ.கோ,சா. 200 பக். 193) இது தவசங்களைக் காயவைத்துத் தூற்றும் முறை பற்றிய தொடர்மொழி.

4:7:5 'கல்லுங் காவிரியும் புல்லும் புவியும் உள்ள வரை' (தெ. கோ. சா. 203 பக்: 196) என்பது அறச் செயல்கள் நடக்க வேண்டிய காலம் பற்றிய கருத்துரை.

4:7:6 'கண்ட நாடு கொண்டு கொண்ட நாடு குடாதவன்' (தெ. கோ. சா 204 பக் 196) என்பது ஆற்றல் மிகு வேந்தன் பற்றிய ஏற்றமிகு சொற்றொடர்.

4:7:7 'நான்கெல்லைக் குட்பட்ட நன்செய் புன்செய் தோட்டம் தொடிகை .... மேல் நோக்கிய மரம் கீழ்நோக்கிய கிணறு, மான்படு காடும், மீன்படுசுனையும், தேன்படு கரடுமான' (தெ. கோ. சா 330 பக். 301) என்னும் இது எதுகை மோனையும் தொடைநயமும் இணைந்து நிலம் பற்றிய நலமிகு தமிழின் வளம்பற்றி கருத்துச் செறிந்த கவின் தமிழ்ச் சொற்றொடராய்க் கல்வெட்டுகளில் காணக் கிடப்பது.

5:0: முடிப்பு:

5:1 கொங்குநன் மண்டலத்துக் குன்றுத் தமிழ் வழக்கை கொங்கு தனிப் பாலாகப் போற்றிநின்ற - மங்காமத் காட்டும் கவின் தமிழ்க் கல்வெட்டு மாட்சியினை நாட்டினேன் இவ்வரங்கில் நான்.

******